# வீரசோழியம்

பதிப்பு

சி.வை. தாமோதரம் பிள்ளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# வீரசோழியம்

பதிப்பு

சி.வை. தாமோதரம் பிள்ளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Vīracōḻiyam |
| Author | : | Puttamittiraṉār |
| Commentatc | : | Peruntēvaṉār |
| Editor | : | Ci. Vai. Dhamodharam Pillai |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Taramani Post<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 588 |
| Language | : | Tamil |
| Edition | : | 1895 |
| Year of Reprint | : | 2008 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xxxvi+260 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.85 /- (Rupees Eighty Five Only) |
| Printed by | | United Bind Graphics<br>189, (101-D) Royapettah High Road, Mylapore,<br>Chennai - 600 004. Ph. 044 - 24661807, 24987562 |
| Subject | : | Grammatical Treatise with Commentary |

தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறையின் அரியநூல்கள்
அச்சிடுதலுக்கான நிதியுதவி பெற்று அச்சிட்ட நூல்

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# முகவுரை

சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த தமிழரசர்கள் காலத்திய தொல்காப்பியம் அதன்பிற்காலத்திய இலக்கிய, இலக்கண நூல்களுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளது. இருண்டகாலம் எனக் கருதப்பெறுகின்ற அந்நிய ஆட்சியாளர்களின் காலத்தில் தமிழ் கூறு நல்லுலகைச் சமயச் சிந்தனைகளும் சமத்கிருதமும் தழுவிக் கொண்டன.

அந்நிய ஆட்சியரிடமிருந்து தமிழ் கூறு நல்லுலகின் ஒரு பகுதியை மீட்டெடுத்த பாண்டியர்கள் தொல்காப்பிய அகக் கோட்பாடுகளை இறையனார் அகப்பொருள், நம்பியகப்பெருள், திருக்கோவையார் போன்ற அகப்பொருள் நூல்கள் மூலம் புதுப்பித்தனர்.

தொல்காப்பியப் புறக்கோட்பாடுகள் பன்னிருபடலத்தின் வழிநூலான புறப்பொருள் வெண்பாமாலையின் மூலம் புதுப்பிக்கப்பட்டன. இதனைச் சேரகுல ஐயனாரிதனார் உருவாக்கினார் என்பர். தொல்காப்பியம் கூறும் ஐந்திலக்கணக் கோட்பாடுகளைத் தனியாகவும் கூட்டாகவும் புதுப்பித்த பெருமை பிற்காலச் சோழர் காலத்துக்குரியதாகும். சமத்கிருதத் தாக்கம் இவ்விலக்கண நூல்களில் தவிர்க்க இயலாததாகியது.

இச்சோழர்களில் ஒருவனான வீரராசேந்திர சோழன் பெயரால் அவன் கீழ் அரசியற்றிய புத்தமித்திரன் எனும் ஆட்சியாளனால் ஆக்கப் பெற்றது வீரசோழியம் எனும் ஐந்திலக்கணத் தமிழ் நூல். சமத்கிருதச் சார்புடன் திகடச் சக்கரம் போன்ற புதிய வழக்குகளை அறிமுகப்படுத்திய வீரசோழியம் அதன் அருமை காரணமாக அண்மை வரை பரவலாகக் கற்கப்படாதிருந்தது. இதற்கு நன்னூலும் தொல்காப்பிய உரைகளும் காரணங்களாகலாம். ஓலைச்சுவடிகளில் இடம்பெற்றிருக்கும் தமிழ்நூல்கள் அச்சுவாகனம் ஏறிய காலக்கட்டத்தில் தொல்காப்பியத்தின் முழுமையையும் உரையுடன் பதிப்பித்து வெளியிட்ட யாழ்ப்பாண நல்லூர் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களே வீரசோழியத்தை அதன் பெருந்தேவனார் உரையுடன் 1895இல் பதிப்பித்து வெளிப்படுத்தினார்.

அதன் பிறகு ஒருசிலர் அந்நூலின் மூலத்தையோ மூலத்துடன் பிறவற்றைச் சேர்த்தோ வெளிப்படுத்தியுள்ளனரே அன்றி, சி.வை.

தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல் அடுத்து வெளியிடப்படவில்லை. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தற்போது அம் முயற்சியை மேற்கொண்டு அந்நூலை மறுபதிப்பாக வெளியிடுகின்றது.

இப்பதிப்புக்குரிய மூலநூலை அளித்துதவிய நாமக்கல் அன்பர் நா.ப. இராமசாமி அவர்கள் பாராட்டுதற்குரியவர். அதனுடன் ஒப்பிடுவதற்காக மற்றொரு நூலைக் கொடுத்துதவிய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்தாரும் பாராட்டுதற்குரியவராவர். அமரர் கோபாலையர் அவர்களால் வீரசோழியத்தின் காகிதச் சுவடிகளுடன் ஒப்பிட்டு எழுதிய குறிப்புரை மற்றும் ஆய்வுரைகளுடன் கூடிய பதிப்பு நூலும் இம்மறுபதிப்புக்கு மிகவும் பயனுடையதாக இருந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

அறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளையவர்களின் பதிப்பு நூலில் பெருந்தேவனாரால் காட்டப்பெற்றுள்ள மேற்கோள் பாடல்கள் மற்றும் விளக்கங்கள் உரையுடன் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப் பெற்றிருந்தன. படிப்போரின் நன்மை கருதி இம்மேற்கோள் பாடல்கள் தனியாகப் பிரித்தெடுக்கப் பெற்று இடம்பெற்றுள்ளன. வீரசோழியச் செய்யுள்களினின்று சாய்ந்தெழுத்து அச்சுக்களால் வேறுபடுத்திக் காட்டப்பெற்றுள்ளன. கூடவே செய்யுளின் கீழ் அமைந்த தமிழ் எண்கள் தற்கால நடைமுறைக்கு ஏற்ப மாற்றம்பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழிநடத்தி வருகிறார்கள். நிறுவனத் தலைவராக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நெறிப் படுத்தி வரும் பாங்கினைத் தமிழகம் என்றென்றும் நன்றியுடன் போற்றும்.

தமிழ் மற்றும் தமிழர்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு நிதிஅமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும் நன்றி.

இந் நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு கோ. சந்தானம் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

அரிய நூல்பதிப்புக்கு நிதிவழங்குதல் திட்டத்தின் கீழ் இப்பதிப்புக்கு நிதி வழங்கிய தமிழ்வளர்ச்சித் துறைக்கும் நன்றி உரித்தாகும். இம்மறுபதிப்பு நூலை மெய்ப்பு திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனும், கணியச்சிட்ட திருமதி பி. கௌசல்யாவும், இந்நூலை அச்சிட்டுத் தந்த அச்சகத்தாரும் பாராட்டிற்கு உரியவர்கள்.

**இயக்குநர்**

உ

கணபதிதுணை

பொன்பற்றிகாவலன்

புத்தமித்திரனார்

இயற்றிய

# வீரசோழியம்

******

இஃது

யாழ்ப்பாணம்

**சி.வை. தாமோதரம்பிள்ளையால்**

பெருந்தேவனாருரையோடு

பலதேசப்பிரதிருபங்களைக்கொண்டு

பரிசோதித்துச்

சென்னை
சின்னையநாடார் அச்சக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

ஜயஹூ மார்கழிமீ

Registered Copyright
1895

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| முகவுரை | v |
| சி.வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புரை | ix |
| சிறப்புக் கவிகள் | xxxvi |
| பாயிரம் | xxxviii |
| வீரசோழியம் | 1-255 |
| செய்யுளகராதி | 256-259 |

# பதிப்புரை

## *தெய்வாசாரிய வணக்கம்*

யானை யானனப் பிரணவச் சிகரனை யிதயத்
தான மேயவாஞ் சண்முகன் றனைமறை மூல
மான வாதியை யருட்கயி லாயநா தப்பேர்
ஞான சற்குரு நாதனை நாடொறு நவில்வாம்.

## *சரஸ்வதி வணக்கம்*

வெள்இதழ்த் தாமரை நள்ளணங் கிணையடி
உள்ளுதூஉந் தமிழ்வளம் கொள்ளுதல் குறித்தே.

## *தமிழாசிரிய வணக்கம்*

எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக் குமார
வித்தக னடிதலை வைத்து வாழ்த்துவனே.

## *அவையடக்கம்*

செந்தமிழ் விந்தைகை வந்தபா வாணரென்
சிந்தையிற் சந்தத முந்தி வாழ்குநரே.

*மலர்தலை யுலகிற் குலவுபற் பலவள-நலமெலா மிலகிய தலமெனா நிலவிய-பொலிவுடைப் புண்ணிய பூமி யாகிய பரதகண்டத்தில் வழங்கும் பாஷைகளுள் ஆதிகாலந் தொட்டுள்ளன சமஸ்கிருதமுந் தமிழுமாம். இவற்றில் ஒன்று சிவபெருமானிடத்தும் மற்றது சுப்பிரமணியக் கடவுளிடத்தும்*

உற்பவித்தன என்னும் ஆகம ஐதீகப் பிரமாணங்களே இதற்குச் சான்றாகும். "ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய மாதொரு பாகனை வழுத்துதும்" எனவும் "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்- தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தக்- குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" எனவுந் தமிழிற்கும் ஈசுவரோற்பத்தியே கூறுவாருமுளர். சமஸ்கிருதத்திற்குப் பாணினீயம்போலத் தமிழிற்கு ஆதியிலக்கணஞ் செய்தவரன்றித் தமிழ்மொழியைத் தந்தவர் அகத்தியரல்ல ரென்றறிக. அழகினானும் வலிமையானுமன்றிக் காலத்தினானும் ஒன்றற்கொன்று சமத்துவமுடைய தென்றொப்பித்தற்கன்றே ஒன்றை வட மொழியென்பார் மற்றதைத் தென்மொழியென்பதூஉம் ஒன்றைச் சிவபெருமான் தந்ததென்பார் மற்றதைச் சுப்பிரமணியக்கடவுள் தந்தருளியதென்பதூஉம்! வடக்குக்குத் தெற்குஞ் சுவாமிக்குச் சக்தியும் பிந்தியவென்றாற் சமஸ்கிருதந் தமிழிற்குமுந்தியதென்க. சமஸ்கிருத தமிழ்க்கடல்களின் கரைகண்ட பேராற்றலுடைய சிவஞானயோகீசுவரர்

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ

என இரண்டனதும் ஒப்புமையை மெய்ப்படுத்தினர்.

ஆதிகாலத்தாரியரோடு சமஸ்கிருதம் இமயமலைக்கப் பாலிருந்து வந்ததென்றும், ஆரியர் வடபாலிற் புக்குக் கங்காதீரதேசங்களை வென்று கைப்பற்றியபோது அங்கே வசித்தவர்கள் தமிழரென்றும், ஆரியரைச் செயிக்க முடியாமை யானும் அவர்க்குக் கீழ்ப்பட்டிருக்க மனமொவ்வாமையானுஞ் சுயேஷ்டபங்கம் உறுவதினுந் தமது நாட்டைக் கைவிட்டுப் பிறவிடஞ்சேர்ந்து சஞ்சரித்தலே தமக்குச் சிறப்பென்று கருதித் தமிழர் தென்றிசைச்சென்று வதிந்து தமக்குள்ளே சேரசோழபாண்டிய இராச்சியங்களை ஏற்படுத்தினார்களென்றுந் துணிவார் பலருளர். இவர் மதத்திற் குச்சார்பான அயற்சாட்சிகளும் பலவுள. இஃதுண்மையாயின் இந்தியாவிற்கு ஆதிபாஷை தமிழென்றேமுடியும்.

காசியிலிருந்த வடமொழிச்சங்கத்தாரோடு மாறுகொண்டு, அவரிறுமாப்பை அடக்கும்பொருட்டு அகத்தியர் நெடுநாட் பொதியமலையிற் தவம்புரிந்து, சுப்பிரமணிய சுவாமி வரத்தினாற் தமிழுக்கிலக்கணஞ் செய்து, சமஸ்கிருத நூலாரைத் தலைகவிழச் செய்தாரெனிற் தமிழின் மான்மியம் வேறுசொல்லவும் வேண்டுமா? கலைக்கியான நூல்களுஞ் சாஸ்திரப்பயிற்சியுஞ் சமஸ்கிருதத்தில் முற்பட்டதும் அதிலிருந்து பல நூல்களும் அவற்றோடு பல்லாயிர மொழிகளுந் தமிழில் வந்ததும் மெய்யே. அதனாற் தமிழ் பிந்தியதென்றெங்ஙனம் போதரும்! வடமொழிமந்திரத்து வாழ்ந்தார் கொண்ட அகந்தையை ஆண்டுச் சிற்றில் நிகர்த்த தென்மொழியைச் சிறப்பித்துக் கூடகோபுரம் வகுத்து மாடமாளிகையாக்கி அடக்கினமையால் வடமொழி முந்தியதா? ஒரு காலத்திற் குடிசையாயிருந்து பின் மண்டபமாயினதால் அக்குடிசை தோன்றியகாலம் அயலில் வகுத்த மண்டபத்திற்குப் பிந்தியதென்று சாதிப்பது தர்க்கலக்ஷணமாகுமா? விபரீதம்! விபரீதம்!!

இகழ் இமிழ் உமிழ் கமழ் கவிழ் குமிழ் சிமிழ் என ழகரப்பேறு பெற்ற பதங்கள் போலத் தமிழ் என்னுஞ் சொல் தனிமைப் பொருள் குறித்த தமியென்னும் வினை அடியாற் பிறந்து, வினைமுதற் பொருண்மை உணர்த்திய விகுதி குன்றித், தனக்கிணையில்லாப்பாஷை என்னும் பொருள்பயப்பது. அங்ஙனமாயின் தமியேன் என்பது போல இழிவுபொருளன்றோ பயக்குமெனின்; அற்றன்று, ஒரே தாதுவிற் பிறந்தும் அடியேன் அடிகள் எனவும் அளியேன் அளியாய் எனவும் நிற்பனவற்றுள் ஒன்று இழிவுபொருளும் மற்றையது உயர்வுபொருளும் உணர்த்தினவென்க. செவிக்கினிமை பயத்தலான் மதுரம் என்னும் பொருட்பேறுடைத்தாகித் தமிழென வழங்கிய தென்பாருமுளர். அஃதெவ்வாறாயினும் ஆகுக. தமிழ் என்பது தென்மொழிக்குத் தென்சொல்லாகிய பெயரேயாமெனக் கொள்க. இதை ஒழித்துத் திராவிடமென்னும் வடமொழியே தமிழென்றாகியதெனச் சற்றும் ஆலோசனையின்றிக் கூறுவாருமுளர். அவர்மதஞ் சாலவு நன்றாயிருந்தது!! தமிழிற் தமிழ் என்னும் பதம் வருமுன்னர்ச் சமஸ்கிருதத்திற் திராவிடம் என்னுமொழி உளதாகில் அப்பெயர் எப்பொருளை உணர்த்திற்றோ? உலகத்தில் எஞ்ஞான்றும் பெயரா பொருளா முந்தியது? பொருளெனில் அப்பொருள் இருக்கும் இடத்தா அஃதில்லாத பிறிதுதேயத்திலா அதன்பெயர்

முன்னர் நிகழும்? இஃதுணராது தமிழ்வழங்கிய இடத்திற் தமிழுக்கோர் பெயரிருந்ததில்லை யென்றுஞ் சமஸ்கிருதத்திலிருந்து அதற்குப் பெயர் வந்ததென்றுஞ் சொல்வது யார்க்கும் நகைவிளைக்குமே. இஃதொன்றோ! யாதொரு தமிழ்மொழியில் இரண்டொரெழுத்துச் சமஸ்கிருத மொழிக்கொப்ப நிகழுமாயின் அது சமஸ்கிருதத்தினின்று பிறந்ததெனச் சாதிக்கின்றனர். மேலைத் தேசவாசிகளின் இங்கிலீஷ் முதலிய அந்நியபாஷைகளில் இன்றியமையா வீட்டுச் சொற்களாகித் தந்தைதாயரைக் குறிக்கும் 'பாதர்', 'மதர்' என்பனவாதியும் வடமொழி அடியாய்ப் பிறந்த தென்பரா? அப்படியாயின் வடமொழியைக் காணுமுன் அத்தேசத்தாரெல்லாந் தாய் தந்தையரை அழைத்தற்கோர் வீட்டுச்சொல் இல்லாதிருந்தனரென்றன்றோ முடியும்? ஆண்டுள்ள பாதர் மதர் ஒப்ப ஈண்டும் பிதா மாதா ஆயிற்றெனில் யாது குற்றம்? தருக்கத்திற் காகதாலீய நியாயத்தினுண்மை அறியாமலும் ஆரியமொழிக்கும் அதன் அயல் நாட்டு மொழிகளுக்கும் உள்ள சம்பந்தசார்புகளின் காரணத்தை ஆராயாமலும் இவ்வாறு கழறும் இவர் கற்பனைக்கு யாதுசெய்யலாம். இவர் வாய்க்கு விலங்கிட யாரான் முடியும்!

இன்னொருசாரார் தமிழ் என்னுந் தென்மொழிப்பதமே வடமொழியிற் திராவிடமென மரீஇயது என்பர். இவரும் உண்மை கண்டவரல்லர். இருகூற்றாருந் திராவிடமென்னுஞ் சொல் வந்தவரலாறும் அதன்பொருளும் அதன் வழக்கியலும் அறியாராயினார். இருவருந் தம் மனத்தின்கண் நிகழும் ஓரோர் துணிவு பற்றி, வல்லார் பாற் புல்லும் ஆயுதமென்றாற் போலத், தமது துணிவை நாட்டுவான் புக்கு மிக்கிடர்ப்பட்டுப் போலியாதாரங்கள் காட்டி வாய்வல்லான் சொல்லே மன்று கொளுமென்று வாளா நம்பித் தம்வன்மை காட்ட முயன்ற யுத்திமான்களன்றி ஆகமப்பிரமாணங்கொண்டு சாதித்தவரல்லர். ஹேமசந்திரநாநார்த்தத்தின்படித் திராவிடம் என்னுஞ் சொல் திரா என்னும் அடியாற் பிறந்து ஓடிவளைந்தது என்னும் பொருளுடையது. இது *மகாநதிமுதற் குமரியீறாக ஓடி வளைந்த கோடிமண்டலத்தை உணர்த்துவது. இது பல தேசத்தார் நிகழ்ச்சியும் நடையுந் தோன்ற வடமொழியில் ஈராயிரம் வருஷத்தின்முன் உச்சயினிபுரத்தில் இயற்றி ஆடிய ஒரு நாடகத்தில் முதன்முதல் எடுத்தாளப்பட்ட தென்பதூஉம், அதில்

---

* உவில்ஸனாசிரியர் கருமணல் முதலென்றார். அது சரியன்று.

விதர்ப்பநாடு மத்தியாகப் பிராச்சிய தக்ஷணாத்திய திராவிட பாரசீயமென அயனாடுகள் குறிப்பிக்கப்பட்டனவென்பதூஉம், பின்னர் இவற்றை இழிதகைமைத்தாய கொடுமொழியையும் பலபாஷை விரவிய சங்கரமொழியையும் முறையே குறித்த சாண்டாளி சாவரி என்னும் பதங்களோடு சேர்த்து அவ்வத்தேச பாஷைகளைக் குறிக்கும்படிப் பிரயோகிக்கப்பட்டதென்பதூஉம் பிராகிருத நிர்ணயவியாக்கியிற் கரதலாமலகம் போற் காட்டப்பட்டன. மேலுந் திராவிடம் என்பது தமிழ்மொழிக் கிட்டபெயராயின் பஞ்சதிராவிடமென்பதென்னை? தமிழ், தெலுங்கு, கன்னடம், மராஷ்டிரம், கூர்ச்சரம் என்னும் ஐந்துபாஷையையுந் திராவிடமெனவே அஃது இவ்வைந்து மொழியும் வழங்கும் நிலத்தின் பெயரென்பது தானே போதரும். ஆகவே இச்சொல் வடமொழியிற் கோடி மண்டலத்தின் குறியீடாகவே நின்றதென்க. அன்றியும் ஈராயிர ஆட்டைமொழியையா பதினாறாயிர வருஷப்பாஷைக் கிட்ட பெயரென்பது. இவற்றாற் தமிழ் திராவிடமாயதூஉந் திராவிடந் தமிழாயதூஉம் இரண்டுந் தவறென்றுணர்க.

தமிழ் தற்பாஷை என்பதற்குப் பூர்வாசிரியர்கள் கீழ்வாய்க் கணக்கிற்கும் விரவியல் செய்யுட்கும் மணிப்பிரவாளத்திற்கும் வேற்றுமை வகுத்த இலக்கணமே சாட்சி பகராதா? தற்காலத்தில் இங்கிலீஷ் பிராஞ்சியாதி மொழிகள் சேர்ந்த தமிழ்ச் செய்யுட்குள்ள ஊனம் அக்காலத்தில் வடமொழிச் செறிவுக்குளதாயின் வடமொழி தமிழுக்குத் தாய்மொழி யென்றெவ்வாறு பெறப்படும்? கடைச் சங்கத்திலுங் கடைக்காலத்துப் பிறந்த நாயனார்குறள் ஔவைபாடல் திரிகடுகம் நான்மணிக்கடிகை பஞ்சமூலம் ஏலாதி பழமொழி முதலியவற்றில் வரும் ஆரியமொழி எத்துணைச் சிறுபான்மைய?

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா-நின்று
சலியா திளந்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்-இளைஞனாய்க்

கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்று
முள்ளன போலக் கெடும்.

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறியிற்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை-யல்லாக்
கடையார்க்குந் தம்மூரென் றூரில்லைத் தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநெடுங் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்-பலன்படா
மாவிற்குக் கூற்றம் வளைஞெண்டிற் குப்பார்ப்பு
நாவிற்கு நல்லார் வசை.

அறுநால்வ ராய்ப்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப்-பெறுநால்
மறைபுரிந்து வாழுமேன் மண்ணொழிந்து விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்த லியல்பு.

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கு-நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும்.

இற்றையனவாகிய குமரகுருபரசுவாமி நூல்களெத்தன்மைய?

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக-ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இவையெல்லாஞ் சமஸ்கிருதத்தினின்று பிறந்தனவாமே!! இவ்வாறு மயங்குவார் கல்வியறிவில்லாதார் மாத்திர மன்று. தமிழிலக்கணக்கடன் முழுதுண்டு, இலக்கணக்கொத்து ஏப்பமிட்டு வடிந்து, நிலம் நீர் எனப் பொதுவெழுத்தான் வரினுந் தமிழ் தமிழே என்று வற்புறுத்துவான் "பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு - மீரெழுத்தானு மிலங்குந் தமிழ்மொழி" என்று சூத்திரமியற்றிய சுவாமிநாததேசிகரே, தம்மரபின் முன்னோர் மதத்தையும் மறந்து, "நூலுரை போதகாசிரியர் மூவரு-முக்குண வசத்தான் முறைபிறழ்ந் தறைவரே" என்னுந் தன்விதிக்குத் தன்னையே இலக்கியமாக ஒப்பித்தாற்போல, "அன்றியு

மைந்தெழுத் தாலொரு பாடையென்-றறையவு நாணுவ ரறிவுடை யோரே" யென்று மாழ்கினர். இது வடமொழிப் பயிற்சியே மிக்குடையராய் அதன்மேற் கொண்ட பேரபிமானத்தானும் அம்மொழியின்மேற் தென்மொழியன்றிப் பிறிதுமொழி தெரியாக்குறைவானும் நேர்ந்த வழுவன்றோ? உலகத்தில் எப்பாஷைக்குஞ் சிறப்பெழுத்துச் சில்லெழுத்தேயாம். உரப்பியும் எடுத்துங் கனைத்தும் ஒவ்வொன்றையே வேறு மும்மூன்றாக விகற்பித்துச்சரிக்கும் ஐவர்க்கத்தையுங் கூட்டெழுத்தையும் ஒழித்தால் எட்டெழுத்தாலொரு பாஷையின்றேயென்று சமஸ்கிருதத்தையும் புரட்டிவிடலாமே. இங்கிலீஷ் பாஷையில் வடமொழிக்கில்லாத எழுத்துக்கள் யெப் (F), இஸட்(Z) இரண்டாதலால் இரண்டெழுத்தாலொரு பாஷையின்றே யென அதனையும் மறுப்பார் போலும். இரண்டற்குப் பொதுவாயுள்ளனவற்றை ஒன்றற்கே உரியனவாகத் தீர்த்து நடுவு நிலைமை குன்றல் இவர்போலியர்க்குப் பெருங்குற்றமாம். உண்மை உரைப்பின் உரோமாபுரிப்பாஷையாகிய லத்தீனுக்கும் இங்கிலீஷுக்கு முள்ளசம்பந்தமே சமஸ்கிருதத்திற்குந் தமிழுக்குமுள்ள தெனக்கொள்க. அளவில்லாத கிரந்தங்களை யுடையதாயினும் லத்தீன் மொழிவிரவாத கிரந்தமொன்றும் இங்கிலீஷில் இல்லாதவாறு போலவே சமஸ்கிருதமொழி சற்றாகிலும் விரவாத கிரந்தந் தமிழுக்கில்லா திருக்கலாமாகவே "அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று-ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ" என இலக்கணக்கொத்துடையார் முழங்கிய முழக்கம் வெற்றொலியாயினமை அறிக. அன்றியும் வடமொழியில் இல்லாத புணர்ச்சியிலக்கணங்களுங் குறியீடுகளும் வினைத்தொகை குறிப்புவினை முதலிய சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணைக் கூறுபாடும் பால்விகுதிகளும் அகம் புறம் என்னும் பொருட் பேதங்களும் ஐந்திணை யியல்புகளும் அவற்றின் துறைகளும் வெண்பா கலிப்பா கலித்துறை முதலிய செய்யுளிலக்கணங்களும் இவை போல்வன பிறவுங் காலத்திற்குக் காலம் பிற்றைநாளிற் தோன்றாது ஆதியிலக்கணமாகிய அகத்தியத்திலே முற்ற உரைக்கப் பட்டமையால் தமிழ் சமஸ்கிருதத்தினின்று பிறவாத தற்பாஷை என்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படும். இவையெல்லாம் ஒருவர் காலத்தில் அவ்வொருவராலேயே நூதனமாகப் படைக்கப் பட்டபாலனவா? அகத்தியர் மகாரிஷீசுவரர், அன்னோர் இவற்றைக் கற்பித்தல் எளிதன்றே யெனின்; நன்று கடாயினாய்,

ஐந்திர பாணிநீய வியாகரணங்களை நன்குணர்ந்தும், அவற்றுள்ள அதிகார முறைமை ஒத்துமுறைமை சூத்திரமுறைமைகளின் சிறப்பினைச் சீரிதிற் கண்டும், யாதொரு கிரமமும் முன்னொடுபின் சம்பந்தசார்புமின்றித் தமிழுள் இயல், இசை, நாடக இலக்கணவிதிகளும் இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி விதிகளும் நெறிமுறைபிறழக் கண்டபடி விரவத் தமது இலக்கணநூல் இயற்றியமையானே அஃது எத்துணை வல்லாராயினும் ஒருவருக்கரியதென்று உணர்க. அன்றியும் இஃது எத்தேசத்து எந்தப்பாஷையினது அனுபவத்திற்கும் யுத்திக்கும் முழுவிரோதமென்க.

தமிழ்ப்பாஷையின் காலவருத்தமானம் அபோதகாலம் அக்ஷரகாலம் இலக்கணகாலம் சமுதாயகாலம் அநாதாரகாலம் சமணகாலம் இதிகாசகாலம் ஆதீனகாலமென எண் கூறுபடும். வரிவடிவின்றி ஒலிவடிவு மாத்திரமாய் நிகழ்ந்த காலத்தை அபோதகாலமென்றாம். அஃது அகத்தியர்க்கு முன் சென்றகாலமாகும். அகத்தியர் தமிழ்மொழியை அவலோகித முனிவர்பாற் கற்றுணர்ந்தாரென்னும் அருகர் மதமுஞ் சுவாமியிடந் தமிழ்மொழியையுஞ் சுப்பிரமணியக்கடவுளிடம் அதன் இலக்கணத்தையும் ஓதியுணர்ந்தாரெனக் கூறுஞ் சைவர்மதமும் அகத்தியர்க்கு முன்னுந் தமிழுண்மைக்குச் சான்றாம். சிலர் சுவடி எழுத்து நெடுங்கணக்கு முதலிய சொற்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு அளவுக்கு வரிவடிவெழுத்தும் முன்னர் இருத்தல் வேண்டும் எனக் கூறுவர். இங்ஙனமாகவும், வடமொழி தென்மொழி மகோததி பருகிப்-படிமிசைத் தமிழ்மகா பாடியம் வகுத்துக் -குசைநுனி யதனினுங் கூரிய மதிபெறீஇத் திசையெலாந் தன்பெரு மிசைநிறீஇ உயர்ந்த மகானாகிய (பெயர்சொல்லவும் வாய் கூசுகின்றதே) சிவஞ்ஞானமுனிவரர் இதனை மறந்து, அகத்தியராற் தமிழ் பூமியில் உற்பத்தியாயினதெனக் கொண்டு, அகத்தியம் "அச்செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்றுநூல்" எனவுஞ் "செந்தமிழ் நிலத்து மொழி தோன்றுங்காலத்துடன்றோன்றிய நூல்" எனவும் மயங்குவாராயினார். "சிறிய கேள்வியோர் கழியவுஞ் செருக்குடை யோரென்-றறிஞர் கூறிய பழஞ் சொலென் னளவிற்றே" யாயினுமாகுக. "முந்து நூல்" "முந்தை நூல்" என்பன முதனூற்குப் பெயர்களாகவும், இளம்பூரணரும்

நச்சினார்க்கினியாரும் அவ்வாறே பொருள்கூறி "நிலத்தொடு" என்பதற்குச் செந்தமிழ் நிலத்து வழக்கொடு எனப் பொருளுரைத்திருப்பது கண்டாராகவும், "நிலத்தொடு முந்துநூல்கண்டு" என்பதற்கு எண்ணுப்பொருளில் நிலத்தையும் (அதாவது நிலத்தின்கணுள்ள இயற்றமிழ் வழக்கையும்) முதனூலையுங் கண்டு எனச் செம்பாகமாகப் பொருள் வெட்டவெளிபோலக் கிடப்பதாகவும், இவர் உடனிகழ்ச்சிப் பொருள்கொடுத்து "முந்து" என்பதை வினைத்தொகையாக்கி, அறுகம்புல்லிற் தடக்கிய யானைபோல, இவ்வாறு இடர்ப்பட்டது கால கதியோ அன்றேல் பிற ஆசிரியர் மதங்களை மறுத்தலும் ஆங்காங்குத் தமது நூதனமதத்தை நாட்டுதலுந் தமக்கு என்றும் இயல்பாயினமை பற்றியோ அறியேம்.

நடுவினா யகமி லக்காய் நலமழிந் திடுவே மெங்க
ளிடையினக் கீர னில்லா திருப்பினென் றவைசொல் வோனை
விடையினான் றமிழ்நூல் கூறும் விதிவிலக் குணரா னென்றாற்
படியினில் யாவர் வல்லார் பாற்றமி ழடங்கிற் றம்மா!!

"அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" "பொற்பொதிய மாமலையான் மொழி" "பொற்பொதிய மாமுனிபுகன்ற தமிழ்" "குறுமுனிவ னார்தமிழ்" என வில்லிபுத்தூரராதியர் கூறியவெல்லாம் உபசாரவழக்கென்க. அல்லதூஉஞ் சுவிகாரபுத்திர தருமமெனக் கொள்ளினும் அமையும்.

அகத்தியரால் நெடுங்கணக்கு ஏற்பட்டது முதல் அகத்தியம் நிறைவேறியது வரைக்குஞ் சென்றகாலத்தை அக்ஷரகாலமென்றாம். அது சிறுகாலமாயினுங் கைக்குழந்தை மழலைபயின்று சிற்றில் கோலி விளையாடிய பருவமாதலிற் பெற்றாருற்றார்க்குப் பேரானந்தந் தந்த வயதாயிற்று. பின் நிகழ்வது இலக்கண காலமாகலானும் இலக்கியம் பிறந்தவழியே இலக்கணம் அமைவதாதலானும் அக்ஷரகாலமே தமிழுக்கு ஆதியிலக்கியகாலமென்றுங் கொள்க. அன்றியுஞ் சுருதியொப்பச் செவிவாயிலாய் அதற்கு முன்காலத்தினின்று வந்தனவும் பலவுளவாதல் வேண்டும். அவ்வாறிருந்தனவென்றே துணிவாரும்

பலருளர்.* இதனை இவ்வாறு அக்ஷரகாலம் ஏற்பட்ட பிறபாஷைகளின் உவமானப் பிரமாணத்தாலுமுணர்க.

அப்பால் இலக்கணகாலம். இது தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவினையன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் பன்னிரு சீஷரும் அகத்தியரிஷியிடத்தில் அவர்செய்த பேரகத்தியஞ் சிற்றகத்தியம் இரண்டும் முற்றக் கற்றுத் தத்தமபெயரால் வேறுவேறிலக்கணமும் அனைவரும் ஒருங்குசேர்ந்து புறப்பொருட் பன்னிருபடலமும் எழுதிய காலமாம். அகத்திலிருந்து சிற்றில்கோலி ஆடிய சிறுமகவு ருதுவாயினாற்போல இதுவுந் தமிழணங்கிற்கோர் விசேஷ பருவமேயாம்.

அப்பாற் சமுதாயகாலம். அது மதுரைச்சங்கத்தார் காலமாகும். சர்வபூஷணாலங்காரதாரியாய்த் தமிழ்மாது தருணதாதிசையடைந்து அரங்கேறிய மகோற்சவகாலம் அதுவேயாம். அப்பொழுது அவளுடைய சீருஞ்சிறப்பும் இத்துணையதென்று சொல்லற்பாலதன்று. அக்காலத்திற்றான் அவள் சமஸ்கிருதநாயகனை மணந்தது. மணந்துமென்! மாமியார் வீட்டு மருமகன் போல இன்றியமையா வேட்கைக்குரிய போதன்றி மற்றும்படி ஒருசார் ஒதுங்கியிருந்தமையாற் தமிழ் தன் சிறப்பிற் சற்றுங் குறையாதிருந்தனள். இது தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கமென மூன்றாகும். இவற்றுள் முதற்சங்கத்தார் காலத்தே உற்பவித்து இடைச்சங்கத்தார் காலத்திற்கே உரியவாயினவெனவும் அகத்தியரோடு

---

***திருவிளையாடற்புராணம்**

விடைகொடு போவா னொன்றை வேண்டினன் னேகுந் தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டி
னிடைபயின் மாந்த ரெல்லா மின்றமி ழாய்ந்து கேள்வி
யுடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும்.

சித்தமா சகல வந்தச் செந்தமி ழியனூ றன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான் றேற
வைத்தனை முதனூ றன்னை மற்றது தெளிந்த பின்னு
நித்தனே யடியே னென்று நின்னடி காண்பே னென்றான்.

தொல்காப்பியரும் இடைச்சங்கத்தில் இருந்தனரெனவுங் கடைச்சங்கத்திலுந் தொல்காப்பியர் வீற்றிருந்தனரெனவுங் கூறுவாருமுளர். அது யுத்திக்கிசைந்த தன்று. அவரவர் நூற்பெருமையான் வந்த உபசாரவழக்காகக் கொள்ளலாம். அகத்தியத்தோடு தொல்காப்பியராதியோர் நூல்களுந் தலைச்சங்கத்தார் காலத்து நிலவியும் அகத்தியத்தையே அஞ்ஞான்றார் ஆதாரமாகக் கொண்டாரென்றும் அகத்தியருடைய விரோதத்தினாற் தொல்காப்பியம் அப்போது தலையெடாமலிருந்ததென்றுந் தொல்காப்பியத்தின் சிறப்புத்தோன்றத் தோன்ற அஃது அகத்தியத்திற்குச் சரியாயெழுந்து இடைச்சங்கத்தாருக்கு இரண்டும் ஆதாரமாயினவென்றும் ஈற்றில் அகத்தியம் மகத்துவந்தாழத் தொல்காப்பியம் மேம்பட்டுக் கடைச்சங்கத்திற் தானே தனிநின்றதென்றுங் கொள்வதே தகுதி. பாண்டியன் அவைக்களத்து "அதங்கோட்டாசாற் கரிறபத்தெரித்து" எனப் பனம்பாரனாராற் கூறப்பட்டமையிற் தொல்காப்பியமும் ஏனைப் பதினொருவர் நூல்களும் முன்னர் உற்பத்தியாயும் பின் தலைச்சங்கத்தில் அரங்கேறியதாகக் கொள்க.

> நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
> பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான் - மேலாநாற்
> பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்குங்
> கத்தன் மதுரையிற்சொக் கன்

என்னுங் காளமேகப்புலவர் வாய்மொழியைத் துணைக்கொண்டு தலைச்சங்கத்து வீற்றிருந்த புலவர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மரெனவும் இடைச்சங்கத்துப் புலவர் நானூற்று நாற்பத்தொன்பதின்மரெனவுங் கடைச்சங்கத்துப்புலவர் *நாற்பத்தொன்பதின்மரெனவுங் கூறுவாருளர். அது சரியன்று. அவ்வச்சங்கத்து வீற்றிருந்தோர் முறையே அகத்தியனார் விரிசடையத்தனார் முருகமுதல்வனார் முடிநாகராயர் நிதிக்கிழவனார் அதங்கோட்டாசிரியனார் பனம்பாரனார் தொல்காப்பியனார் முதலாய ஐஞ்ஞூற்று நாற்பத் தொன்பதின்மரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியார் வெள்ளூர்க்காப்பியன் சிறுபாண்டரங்கன் திரையன்மாறன்

---

* நாற்பத்தொன்பதின்மர் பெயருந் திருவள்ளுவமாலையிற் காண்க.

துவரைக்கோமான் கீரந்தையார் முதலாய ஐம்பத் தொன்பதின்மருஞ், சிறுமேதாவியார் சேந்தன்பூதனார் மதுரையாசிரியர் நல்லந்துவனார் மருதனிள நாகனார் உருத்திர சன்மனார் கபிலர் பரணர் கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலாய நாற்பத்தொன்பதின்மருமெனவும், அவ்வச்சங்கத்திற் தத்தங் காவியம் அரங்கேற்றிய புலவர் தொகை நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதும், மூவாயிரத்தெழுநூறும், நானூற்று நாற்பத்தொன்பதுமெனவும், நூலும் உரையும் இரண்டுஞ் சங்கத்தார் காலத்தனவாகிய இறையனா ரகப்பொருளுரையாற் தெள்ளிதினுணர்க. அல்லாமலும், இதனையே

*ஏழேழொ டைஞ்ஞூறு மேழே ழொடுபஃதும்*
*ஏழேழுஞ் சங்க மிரீஇனார் - ஏழேழ்சேர்*
*நாற்பதினா னூறுமுப்பா னேழ்நூறு நானூற்று*
*நாற்பதினொன் பான்கவிஞர் நாடு*

என்னுஞ் சங்கத்தார் காலத்துச் செய்யுளும் வற்புறுத்தும்.

மூன்று சங்கத்திற்குங் காலம், முதற்சங்கத்திற்கு முன்பின் நாலாயிரத்தைஞ்ஞூறும், இரண்டாஞ்சங்கத்திற்கு மூவாயிரத் தைஞ்ஞூறும் மூன்றாஞ்சங்கத்திற்கு இரண்டாயிரமுமாக ஆகப் *பதினாயிரம் வருஷமென்ப. அவற்றுள் முதற்சங்கங் காய்சினவழுதி முதற் கடுங்கோன்வழுதி ஈறாக எண்பத் தொன்பதின்மர் பாண்டியரையும், இடைச்சங்கம் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாற னீறாக ஐம்பத் தொன்பதின்மர் பாண்டியரையும், கடைச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர் பாண்டியரையு முடையன. பாண்டியருட் கவியரங்கேறினார்

---

* விவிலிய நூலோடுடாடி அதன் கதைகளையுங் காலநிருபணங்களையும் நம்பியவர்களுக்கு இஃதோர் கட்டுக்கதைபோற் தோற்றும். அவன் அறுபதனாயிரம் ஆண்டாண்டான், இவன் எழுபதினாயிரம் ஆண்டாண்டான், என்னுங் கற்பனைகள் போலாகாது, சங்கம் இரீஇய பாண்டியர்கள் பெயரும் முறையும் தொகையும் ஆகமப்பிரமாணமாக நமது கைக்கு வந்திருக்க, எவ்வெச்சாதியாரும் மனிதருக்குமிக நெடிய வயது கூறிய பண்டைக்காலத்திற், சராசரி ஓரோரரசனுக்கு ஐம்பது வருடச் செங்கோன்மை வகுத்த இந்நிருபணம் யாதாயினுமொரு சமுசயமுமின்றி முற்றவும் நம்பற்பாலதேயாம்.

முதற்சங்கத்தெழுவரும் இடைச்சங்கத்தைவருங் கடைச்சங்கத்து மூவருமாம். தலைச்சங்கத்தரங்கேறிய நூல்கள் தொல்காப்பியம் காக்கைபாடினியம் அவினயம் நற்றத்தம் வாமனம் புறப்பொருட் பன்னிருபடலம் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் பரிபாடல் முதுநாரை முதுகுருகு களரியாவிரை முதலியன. அவர்க்கு நூல் அகத்தியம். அதில் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் மூன்றும் வகுத்துரைக்கப்பட்டன. அவற்றுட் தொல்காப்பியம் முதலியவற்றில் இயற்றமிழும், பெருநாரை பெருங்குருகு முதலியவற்றில் இசைத்தமிழும், முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் முதலியவற்றில் நாடகத்தமிழும் விரித்துரைக் கப்பட்டன. இவர் சங்கம் இரீஇயது கடல் கொள்ளப்பட்ட தெக்ஷண மதுரையென்ப. இடைச்சங்கத்தரங்கேறியன கலி குருகு வெண்டாளி முதலியன. இவர்க்கு நூல் அகத்தியம் தொல்காப்பியம் மாபுராணம் இசைநுணுக்கம் பூதபுராண மென்பன. இவர் இரீஇய இடங் கபாடபுரம். கடைச்சங்கத்தில் அரங்கேறியன நெடுந்தொகைநானூறு குறுந்தொகைநானூறு நற்றிணைநானூறு அகநானூறு புறநானூறு ஐங்குறுநூறு எழுபதுபரிபாடல் கலி பதிற்றுப்பத்து நூற்றைம்பது கூத்துவரி சிற்றிசை பேரிசை முதலியன. இவர்க்கு நூல் முற்கூறியவும் புதியாநுட்பம் பிரணிகை சாயித்தியமாதியவுமாம். இவர் சங்கம் இருந்த இடந் தற்காலத்துள்ள உத்தரமதுரை. இஃது இடைச்சங்கம் இருந்த கபாடபுரம் முடத்திருமாறன் காலத்துக் கடல் கொண்டபின் தோன்றியது. சங்கத்தார்காலத்து நூல்கள் அனேகம் இக்காலத்தில் இல்லாமல் அடியோடே இறந்து விட்டன.

இற்றைக்கு ஏறக்குறைய *ஈராயிரம் வருஷத்தின் முன்பு உக்கிரப்பெருவழுதிகாலத்திற் சங்கத்தார் அதிக அகந்தைகொண்டு தெய்வசிந்தனை யில்லாராய்ப் புலவர்களை அவமதித்துத் தம்நெறி பிசகினபோது தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாராலும் ஒளவை இடைக்காடராலும் அவமானப்பட்டுக் கர்வபங்கமடைந்து அத்தோடே சங்கமு முடிய ஏதுவாயிற்று. சங்கத்துள் அரங்கேறின வற்றுட் தேவர்குறளேகடைசியானது. அதன்பின் ஏறக்குறைய இருநூறு வருஷஞ் சேரசோழபாண்டியர்

---

* சங்கம் ஒழிந்தது சுத்த சந்திரவமிசத்திற் கடைசியாய் அரசு புரிந்த கூன்பாண்டியன் காலமென்று கொள்ளினும், அதன்பின் சோமசுந்தரன்முதற் பராக்கிரமன் வரைக்கும்

அவைக்களத்திற் தனக்குப் பேராதரவில்லாதிருந்துஞ் செந்தமிழ்ச்செல்வி தன் சிறப்புக்குறையாமல் உலாவிக் கொண்டிருந்தனள். அக்காலத்தினையே ஐந்தாவதான அநாதார காலமென்று குறிப்பித்தோம். அதனைப் புத்தர்காலமெனினும் இழுக்காதென்று கொள்க.

அப்பாற் சமணர்காலந் தொடங்கியது. தமிழில் மிக அருமையான இலக்கிய இலக்கண கலைக்கியான நூல்கள் அனேகஞ் சமணவித்துவான்களாற் செய்யப்பட்டிருக்கின்றன. சங்கத்தின் பிற்காலஞ் சமணர் தலைப்பட்டது தாயிறந்த பெண்ணுக்கோர் சற்குணநிறைந்த சிற்றாத்தாள் வாய்த்தது

---

நாற்பத்திரண்டு அனுலோமபாண்டியர்கள் அரசு செய்திருக்கின்றனராதலில், ஒவ்வோர் அரசனுக்குச் சராசரி இருபத்தைந்து வருடம் வைப்பினும் ஆயிரத்தைம்பதாகிறது. பராக்கிரம பாண்டியனை முறியடித்துத் துலுக்கர் முதன்முதல் மதுரையாண்டு எண்ணூற்றைம்பது வருடமென்பது இதிகாசரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆதலிற் கூன்பாண்டியன் காலமே இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்பின்னாயிற்றென்றறிக. அன்றியும் ஸ்ரீ இராமர் இலங்கைக்கு வந்தது அனந்தகுணபாண்டியன் காலம்; அவன் கூன்பாண்டியனுக்குமுன் அறுபத்துமூன்றாவது பாண்டியன். ஆதலாலும் இத்தொகை அதிகமல்லவென்று காண்க. மேலும் இற்றைக்கு மூவாயிரத்தைஞ் ஞூறுவருஷத்தின்முன் இருந்த வியாசர்காலத்தவனாகிய அர்ச்சுனனுக்குத் தன்மகளைக் கொடுத்த சித்திரவாகன் மதுரைக்குச் சமீபமான பூழி என்னும் மணலிபுரத்தில் அனந்தகுண பாண்டியனிலிருந்து பதினெட்டாவது பாண்டியனாகிய சித்திரவிக்கிரம பாண்டியன் காலத்திற் சிற்றரசுபுரிந்தவன். இதனாலும் இக்காலநிர்ணயந் தவறன் றென்பது தெள்ளிதிற் புலப்படும். மேலும் கூன்பாண்டியன் காலத்து ஞானாசாரியராக எழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திகள் மரபிற் தற்காலம்வரைக்கும் ஆசாரியாபிஷேகம் பெற்றோர் நூற்றுப்பதினால்வர். இஃதொன்றே கூன் பாண்டியன் காலம் இற்றைக்கு ஈராயிரம் வருஷத்தின் மேற்பட்ட தென்பதை எட்டுணையும் ஐயமறக் காட்டும்.

போலும். *புத்த வைஷ்ண வித்துவான்கள் ஆண்டாண்டுத் தலைமைபெற்ற காலதிற் தமது மதசார்பான சிலநூல்கள் இயற்றினதன்றிச் சர்வசனோபகாரமாகிய கிரந்தம் ஒன்றுஞ் செய்திலர். இது தமிழ் தம்பெயருக்கு மோனையாகாத கோபம்போலும். சமணரோ அங்ஙனமாகாது தமிழ் விருத்தியில் மிகமுயன்றவர்கள். தமிழ் கற்கப் புகும் மாணாக்கர் பெரும்பான்மையும் படிக்கும் நிகண்டு நன்னூல் காரிகை நம்பியகப்பொருள் முதலிய சிறு கிரந்தங்கள் மாத்திரமல்ல, புலவர் பெருமான்களாலுங் கல்வி வல்ல அரசராதியோராலும் வியந்து துதிக்கப்படுஞ் சிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்களும் அனேகம் அவர்களாற் செய்யப்பட்டன. பெரியவுங் கடியவுஞ் சிறந்த நடையையுடையவுமாகிய பலகிரந்தங்களுக்கு மிக மாண்பு பொருந்திய உரைகளெழுதிவைத்த நச்சினார்க்கினியாரும் பின்பு சைவமதத்தை அனுசரித்தவராயினும் முன்னர்ச் சமணர்கூட்டத்தைச் சேர்ந்தவர். இதனால் மேற்கூறிய கிரந்தமெல்லாம் ஈண்டு வகுத்த சமணகாலத்திற் செய்யப்பட்டனவென்று கொள்ளற்க. இவற்றுட் சில பின்வரும் இதிகாசாதீன காலங்களில் எழுதப்பட்டன. அவர்கள் தன்மை இன்னதென்று மெய்ப்பித்தற்கு எடுத்துக்காட்டாக இதனை ஈண்டுக் கூறினோம். இவர்களுாலுட் சிந்தாமணியெழுதி இப்போது ஆயிரத்தெண்ணூறு வருஷமிருக்கலாம். இவர்களிடந் தமிழ் பரிபாலனம் பெற்றது ஒருத்தேசம் முந்நூறு வருஷத்திற்குண்டு.

---

* இலக்கண இலக்கிய கலைக்கியான கருத்தாக்களை யன்றிச் சைவ நாயன்மாரையொப்பச் சமயாதீனமான தொண்டர்கள் ஆழ்வாராதியரை ஈண்டுக்குறித்திலேம். வஞ்சகச் சூதினால் வடவேங்கடத்தைக் கைப்பற்றியது போலவும் விக்கினேசுவரரைத் திருநாமஞ் சாத்தித் தும்பிக்கையாழ்வா ரென்று கொண்டது போலவுந், தமிழ்நூலுடையார் தஞ்சமயத்தாரில் யாருமில்லாத குறையை நிவிர்த்திக்க முயன்று, வல்லடிவழக்காக, வைஷ்ணவர்கள், சாதியில் ஓச்சனுஞ் சமயாசாரத்திற் பிடாரிபூசகனுமாகிய கம்பருக்கு ஆழ்வார் நாமஞ் சாத்தியும், அடிப்பட்ட சிவாசாரிய குலத்துப் பிறந்து சாம்பரியந்தஞ் சிவார்ச்சனையேசெய்த பரிமேலழகரை அரிமேலழகுறூஉம் அன்பமையந்தணன் பரிமேலழகனென வாய்ப்பகட்டுப்பேசியும்

இவர்கள் காலத்தில் அனேக சமஸ்கிருதப் பதங்கள் தமிழில்வந்து கலந்தனவாயினும், வண்டு கைக்கொண்ட கிருமிபோலவும் வேரின்வாய்ப்பட்ட எருப்போலவுஞ் சமஸ்கிருத நிறமும் மணமுமின்றி ஆர்த்தபம் மயிடம் பகுதி விகுதி முதலியனபோலச் சுத்த தமிழுருவமாகவே திரிந்துவந்தன.

அப்பால் முன்பின் எண்ணூறுவருஷம் இதிகாசகாலம். பற்பல புராணகாவியங்களுங் கலைஞான நூல்களும் இக்காலத்தில் எழுதப்பட்டனவாயினுந் தமிழிற் சிறந்த இதிகாசங்களாகிய நைடதம் பாரதம் இராமாயணம் இரகுவமிசமென்பன தோன்றிய காலமாதலில் இதிகாசகால மென்றாம். வடமொழியிலிருந்து புராணேதிகாசங்கள் சமயசாஸ்திர ஸ்தலமான்மியங்கள் கணித சோதிடாதிகள் சுத்த சமஸ்கிரதாகாரமாய்த் தமிழில் மொய்க்கத்தலைப்பட்டதும் வடமொழிப் பிரளயத்தைக்கண்டு தமிழ் சகிக்க லாற்றாது மூழ்கியதும் இக்காலத்திலே தான். அது மட்டோ? போகர்முதலிய ஆயுணூலாரும் பிரகர் முதலிய கணித வல்லாருஞ் "செந்தமிழணங்கின் றிருமேனியெலாம்- வெந்தழல்கொழுந்தி வெதுப்பியவாவெனக்- கொடுந்தமிழ் மலிந்து கொப்புளித் தெழுந்து" புண்படச் செய்ததும் இக்காலமே. இதில் அதிவீரராமன் புகழேந்தி ஒட்டக்கூத்தர் கம்பர் அம்பிகாபதி தமிழ்த்தண்டி வில்லிபுத்தூரர் வரந்தருவார் முதலிய பெரும்புலவர்கள் சேர, சோழ, பாண்டிய தேசங்களில் எழுந்து சொலித்தனர். தொண்டைமண்டலத்திற் கச்சியப்பசுவாமிகள் சேக்கிழார் முதலிய புராண கவீச்சுரர்கள் சிறப்புற்றோங்கினர். ஈழமண்டலத்தில் அரச கேசரி செகராசசேகரர் முதலிய

---

யாதுபயன்? ஊரை உலைமூடியான் மறைக்கவா!! வைஷ்ணவருட் தமிழ்க் காப்பியஞ் செய்தார் வில்லிபுத்தூராழ்வார் ஒருவரே. இவர் அருணகிரியிற் சிவநிந்தனை செய்து கண்ணிழந்து அச்சாப நீங்கும் பொருட்டுச் சிவபரமாக ஒருநூல் செய்ய ஆஞ்ஞா பிக்கப்பட்டுங் கொடிய வைஷ்ணவராதலிற் தன் மதாபிமானத்திற்குப் பங்கம் வராது சிவஸ்துதி இடையிடை விரவிவரவும் வெளித்தோற்றத்திற் கண்ணன் சரிதையாகவும் பிறர் மயங்கப் பாரதத்தைச் சாப நிவர்த்திக்காகவே செய்தனரென்றுணர்க. இதனுண்மை அருணகிரியார் சரித்திரத்தால் நன்குவெளிப்படும்.

தமிழ்வல்லோர் தலைப்பட்டனர். பின்பு படிப்படியாகத் தமிழ்க்கல்விக்கு அரசபரிபாலனங் குறைந்தது. சமஸ்கிருதம் வல்லாருக்கு மேன்மையுண்டாயது. தமிழ் தனிநில்லாது தத்தளித்து வடமொழி வல்லார் கைப்பட்டு அம்மைவார்த்த உடம்புபோலத் தேகமெல்லாஞ் சமஸ்கிருதத் தழும்பு ஏறியது. கொப்புளித்த திருமேனியிற் கொடுமுள்ளும் ஏறியதென்னத் திசைச் சொற்கள் வந்து மரீஇயின. ஈற்றில் ஏழரைநாட்டுச் சனியும் பிடித்தாற்போல "ஆவீன மழைபொழிய இல்லம் வீழ அகத்தடிமை சாவமனை யாள்மெய்நோவ-மாவீரம் போகுதென்று விதை கொண்டோட வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளச்-சாவோலை கொண்டொருவனெதிரே யெய்தத் தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந்தீண்டக்-கோவேந்தன் றூதர்நின்று கடமைகேட்கக் குருக்களுந்தட் சணைக்குவந்து குறுக்கிட்டாரே" யென்று துலுக்கசேனை வந்து விழுந்து தேசத்தைச் சூறையாடி ஆங்காங்கு இறவாதெஞ்சிய புத்தகங்களையும் அழித்தகன்றனர்.

அப்பாற் தற்காலத்துநிகழும் ஆதீனகாலமாம். இது சந்தானகுரவர் காலத்தையுஞ் சேர்த்து இற்றைக்கு *எழு நூறு வருஷத்தின்முன் தொடங்கியது. சரஸ்வதியாலயமாய்க் கல்விக்களஞ்சியமாக முதன்முதற் தமிழ்நாட்டில் மடமேற் படுத்தியமகான்மா ஸ்ரீகைலாசபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதம பரமாசாரியராய் எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தேசிகரே. இவர் மரபில் முன்னர் நான்காஞ் சந்தான குரவராகிய உமாபதி சிவாசாரியராற் சில சித்தாந்த சமயசாஸ்திரங்களேயன்றிச் சாலிவாகனசகாப்தம் 1200 அளவில் கோயிற்புராணமுதலிய பல அரிய இலக்கியங்களுஞ் செய்யப்பட்டன. பின்னர் ஈசான தேசிகரெனத் திருநாமம் வழங்கப்பெற்ற சுவாமிநாத குரவரால் இலக்கணக்கொத்தும்,

---

* காஞ்சிநகரத்திற் காமக்கோட்டி பீடமுங் கன்னட தேசத்திற் சிங்கேரிமடமும் இதற்கு வெகுகாலத்தின்முன் தோன்றி ஆண்டும் பல நூல்களும் பாஷியங்களுஞ் செய்யப் பட்டுள்ளன வாயினும் அவை யெல்லாஞ் சமஸ்கிருதத்தி லாயினமையால் அவற்றைச் சேர்த்திலேம். கூன்பாண்டியன் காலத்ததாதலிற் திருஞானசம்பந்த மடம் இதற்கும் முந்தியதாயினும் முதலிலே மதுரையில் ஞானாசரிய பீடமாகமாத்திரம் ஏற்பட்டுப் பின் நாயனார் காலத்திலேதானே திருநெல்வேலியைத் தனக்கு மூலஸ்தானமாகப் பெற்ற அம் மடம் அழிந்து போனமையானும் அதிற் தமிழ் பரிபாலிக்கப்பட்டுங்

அவரது மாணாக்கர் சங்கர நமச்சிவாயதேசிகரால் நன்னூல்விருத்தியும், வேலப்பதேசிகராற் பறியலூர்ப்புராணமும், அகத்தியர் வரத்தாற் செகத்திலுற்பவித்து அவர் ஒருகடலுண்டுமிழ்ந்தால் யாமிரு கடலுண்டுமிழேமாவெனத் தென்கலை வடகலைக்கடல்களை முற்றக்கற்றானந்தித்த சிவஞானயோகீசுவரராற் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி தருக்கசங்கிரகம் அன்னம்பட்டியம் புத்தம்புத்துரை காஞ்சிபுராணம் முதுமொழி வெண்பா முதலிய மிக்க சாதுரிய கிரந்தங்களுங் கற்றுவல்லோர் அனைவராலும் நன்கு மதிக்கப்படும் பெருஞ் சிறப்பினையுடைய திராவிடமகாபாஷியமுஞ் செய்யப்பட்டன.

கல்வி விருத்தி செய்து சமயஸ்தாபனம் பண்ணும்பொருட்டுத் தமிழ்நாட்டிற் தருமபுராதீனம் திருவண்ணாமலை யாதீனம் மதுரையாதீனம் மங்கலபுரத்துச் சங்கமாதீனம் முதலிய மடங்கள் ஆதீனங்கள் வேறும் பல அங்கங்கே தர்மசிலோத்தமர்களால் ஏற்படுத்தப்பட்டன. அவற்றின்கண்ணும் இவ்வாறே காலத்திற்குக் காலஞ் சமயசாஸ்திரங்களன்றி இலக்கிய இலக்கண கலைஞானநூல்கள் செய்தோர் தருமபுரத்திற் குமரகுருபரசுவாமிகள் சம்பந்த சரணாலயசுவாமிகள் சம்பந்தசுவாமிகள் வெள்ளியம்பலத் தம்பிரான் சச்சிதானந்ததேசிகர் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாரூர் வைத்தியநாதநாவலர் முதலியோருந், திருவண்ணாமலை யாதீனத்தில் அமிர்தலிங்க சுவாமிகள் குகைநமச்சிவாயர் ஞானப்பிரகாச சுவாமிகள் ஆடிய பாதசுவாமிகள் சுப்பிரமணியசுவாமிகள் முதலியோரும், மங்கலபுரத்திற் சிவப் பிரகாசசுவாமிகள் முதலியோரும் அனேகர் உளர். தம்மையடைந்தவர்க்குக் கல்விகற்பிப்பதும் அவருட் பரிபக்குவ தசையுடையோரை ஞானாசாரியராக அபிஷேகஞ் செய்துவைப்பதும் புலவராய்த் தம்பால் வந்தோர்க்கும்

---

கிரந்தங்கள் எழுதப்பட்டும் இருந்ததாகத் தோன்றாமையானும் அதனையும் ஒழித்தனம். அதற்கு உபயமடமாகிப் பின் மூலத்தானத்துவம் பெற்று ஓங்கிய மதுரை மடமே திருவிளையாடற்புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் முதலியோர் எழுந்தருளப்பெற்றுத் தமிழ்க்கல்வியைப் பரிபலனஞ்செய்தது.

பலபரிசளிப்பதும் அவருட் சிரேஷ்டவல்லமையுடையோரைத் தமது ஆதினவித்துவான்களாக நியோகித்துச் சிறப்புச் செய்வதும் இன்னோரன்ன பிறவுமாகிய ஆதின பரிபாலனம் இல்லாதொழியின் இதுவரையிற் தமிழ் மிகவுங் குறைந்து போய்விடும். தமிழின் மகிமை இப்பொழுது இவர்களாலேயே நிலைபெற்றது.

அரசாட்சியாருந் தமது வித்தியாசாலை மாணாக்கருக்கு அவரவர் சொந்தப்பாஷையையுங் கற்பிக்கும் விருப்புடையவராய்த் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் அவரது சுயபாஷையாகிய தமிழை ஓரோவழி ஓதுவிக்கின்றனர். நீந்துதற்றொழிலைக் கற்பிப்பான் ஒரு நீராசிரியன் கற்பானை ஏரி நதி கிணறு குளங்களில் இறங்கவிடாது குடத்திற் தண்ணீர் மொண்டு சிறு குழியில்விட்டுக் கால்மறையாத் தண்ணீரில் மாரடிக்க விட்டாற்போலக், கடனீரெனில் உடல்கசியும் உப்புப்பூக்குங், குளநீரெனிற் சளிபிடிக்குந் தலைநோவுண்டாம், யாற்றுநீரெனிற் சர்ப்பந்தீண்டும் முதலைபிடிக்கும் என்று ஓரோர் நூலுக்கு ஓரோர் குற்றஞ்சாற்றி ஒன்றிலும் இறங்கவிடாது ஒரு நூலில் ஒருகுடமும் இன்னொரு நூலிற் பின்னொருகுடமுமாக அள்ளிவைத்துப் படிப்பிக்கும் அவரது முயற்சியாற் பெரும்பயன் விளைவதேயில்லை. அவரிடங்கற்றுத் தமிழ்வல்லோராயினாரை யாண்டுங் கண்டிலேம். அன்றியும் இவ்வித்தியாசாலைகளில் நிகண்டுகள் கற்றிலக்கியவாராய்ச்சி இல்லாதார்க்குச் சிற்றிலக்கணங்களை மாத்திரங் கற்பித்தலால் அன்னோர் வா வந்தானெனக் கண்டு கா கந்தானென்றுஞ் சா செத்தானெனக்கண்டு தா தெத்தானெனவுங் கூறுவார்போலத் தமிழைப் பலவாறு விபரீதப்படுத்துகின்றனர். *இதனாற் தமிழுக்கு வருங் கெடுதியைக் குறித்துமிக அஞ்சுகின்றோம். இவ்வாறு விளைந்த விபரீதங்களுக்குச் சில உதாரணங்காட்டல் தகுதியாயினும் பிறர்க்கு விரோதமாமென்று விடுத்தனம். இலக்கியங்களைப் போதுமான அளவு

---

* ஐரோப்பைய பாஷைகள் போல ஒவ்வொரு மொழியுந் தன் சுயரூபமாகப் பக்குவிட்டு நில்லாது பலவாறுபிரியுந் தன்மையவாய்ப் புணர்ந்து நிற்குஞ் சமஸ்கிருத தமிழ்வாக்கியங்களை, அவற்றுள்ள பதங்களை அர்த்தத்தோடு முன்னர் உணர்ந்தாலன்றிப், பிரித்துப் பயன்கொள்ளுதல் அருமையாதலில், அமரம் நிகண்டு முதலிய முதலே கற்றல் மிக அவசியமென்பது இத்தேசமொழிவல்லார் துணிவு.

கற்பிப்பாராயின் இலக்கணத்தை ஒருங்கே ஒழித்துவிடினுங் குற்றமுறாது. இலக்கியம் வல்லாருக்கு இலக்கணந் தானாயமையும். இஃது எந்தபாஷைக்குஞ் சாதாரண தர்மம். இங்கிலீஷ் பாஷையில் மகா பாண்டித்தியமுள்ளோர் சிலர் தாம் இங்கிலீஷிலக்கணஞ் சிறிதுங் கற்றதேயில்லையென்று சொன்னதை நாம் காதாரக் கேட்டிருக்கின்றோம். தமிழில் நல்ல பிரபந்தங்கள் நூல்கள் எழுதினோர் பலர் அவ்வாறிலக்கணப் பயிற்சி இல்லாதாரென்பது யாருமறிவர்.

மேல்வகுத்த காலங்களுள் இந்நூலுடையார் காலஞ் சமணர் காலமென்று கொள்க. வீரராசேந்திரனெனவும் விக்கிரமசோழனெனவும் பெயர்வழங்கிய வீரசோழன் காலத்தில் அவன்கீழ்ப் பொன்பற்றியூரிற் சிற்றரசு புரிந்த புத்த மித்திர அரசனால் எழுதப்பட்டு அவ் வீரசோழனது பெயர்வகிக்கப் பெற்றமையே இந்நூலெழுதி முன்பின் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷஞ் சென்றிருத்தல் வேண்டுமென்பதற்குச் சான்றாம். மேலும் "ஏதமறு சகாத்தமெழுநூற்றில்" ஸ்ரீகச்சியப்ப சுவாமிகள் ஸ்காந்தம் அரங்கேற்றிய போது "திகடசக்கரம்" என மொழிபுணர்ந்ததற்கு விதி காண்பிக்கும் பொருட்டு இந்நூல் கொண்டுவரப்பட்டமையானும், அக்காலத்துப் புலவர்களுக்கு இந்நூற்பெயரும் தெரியாமலிருந்தமையானுந், தமது காலத்து நூலாயின் அவர்கள் தமக்கு நூதனமாயிருந்த அவ்விதியை ஆட்சேபியாமல் ஒத்துக்கொள்ளார்களாதலானும், இந்நூலின் அருமையை அவர்கள் மிக வியந்து கொண்டமையானும் இஃது அவர்காலத்திற்குப் பலநூறு வருஷங்களின் முன்னர்ச் செய்யப்பட்டதென்பதற்கு மயக்கமில்லை.

இந்நூலாசிரியர் ஒருசமணர். உரையாசிரியருஞ் சமணரே. அந்தச்சிறப்பில் அவர்க்குப் பெருந்தேவனென்று பெயர் குறித்திருப்பினுஞ் சமணர் தமது வித்துவான்களைத் தேவரென்று சாதாரணமாய்ச் சொல்லும் வழக்கமுண்டாதலின் இவரதியற்பெயர் வேறாயிருக்கலாம். பாரதப்பெருந்தேவனாருங் கவிசாகரப் பெருந்தேவனாரும் ஆயிரம் வருஷத்துக்கு மேற்பட இவர்காலத்துக்கு முன் இருந்தவர்களாதலின், அவர்கள் இவரினின்று வேறென்பது சொல்லவேண்டியதில்லை. அன்றியும் அவர்கள் சமணரல்லர். உரையில் எடுத்துக்காட்டாகப் பலசெய்யுட்களை விக்கிரமசோழன் மகன் மகனாகிய அநுபமனசோழனது புகழாகப்பாடிச் சேர்த்ததனால்

உரையாசிரியரும் ஆசிரியரும் ஒரேகாலத்தினரா யிருத்தல் வேண்டும். உரையைக் "கடனாகவே நவின்றான்" என்றுரைச்சிறப்புப் பாயிரத்தார் கூறினமையால் அவர் புத்தமித்திரனார் மாணாக்கரிலொருவரென உத்தேசிப்பாரும் பலருண்டு.

முதல் வழி சார்பு மொழிபெயர்ப்பென்னு நாலனுள் இது சார்புநூல். அகத்தியத்தின்வழி இயற்றமிழ் விரித்துணர்த்திய தொல்காப்பியமுங் காதந்திர காவியதரிசனங்களும் இதற்கு முதனூலென்ப. பொருளதிகாரத்துரைப்பில் நாடகத்தமிழும் விரவிவரும். அலங்காரத்தைத் "தண்டிசொன்ன-படிவடநூலின் படியேயுரைப்பன்" என ஆசிரியர் கூறியது தண்டியாசிரியர் வடநூலில் இயற்றிய காவியதரிசனமாமெனக்கொள்க. அதனைத் தமிழில் வடநூலின்படி தண்டியாசிரியர் இயற்றிய தண்டியலங்காரமெனச் சிலர் மயங்குப. சிலர் ஒரு தண்டியே வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லராய் உபயகவியென நாமம் வழங்கப் பெற்றிருந்தனரென்றும் அவரே காவியதரிசனம் தண்டியலங்காரம் இரண்டிற்கும் ஆசிரியரென்றும் ஆதலால் அவற்றுள் எதனை முதலாகக்கொள்ளினும் அமையுமென்றுங் கூறுப. இருசாரார் கூற்றுந் தப்பென மறுக்க. தண்டியலங்காரம் இயற்றினார் அம்பிகாபதியின் புத்திரர். அம்பிகாபதி கம்பர் மகன். கம்பர் குலோத்துங்க சோழன் காலத்தில் வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியார் முன்னர் "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற்" தமது இராமாயணம் அரங்கேற்றியவர். இதற்கு நூற்றேழு வருஷத்தின்முன் குமர கோட்டத்தில் அரங்கேறிய ஸ்காந்தத்திற்கு வீரசோழியத்தினின்று இலக்கணவிதி காட்டப்பட்டதாதலால் இஃது பொருந்தாமை காண்க. அன்றியுங் காவியதரிசனஞ்செய்த தண்டியாசிரியர் ஒரு சமணர். தண்டியலங்காரமுடையார் சைவர். ஆதலால் இருவரும் வேறு. மிகப்பழைய நூலாகிய காவியதரிசனமே வீரசோழியவலங்காரந் தண்டியலங்காரம் இரண்டிற்கும் முதனூலாயிருந்ததென்க.

கரலிகிதங்களால் ஏட்டுப் பிரதிகளிற் காலந்தோறும் புக்க அக்ஷரவழுவுஞ் சொற்சிதைவும் வாக்கியப்பிறழ்வும் இத்துணைய வென்று சொல்லற்பாலதன்று. இதிகாச சிரோரத்தினமாகிய இராமாயணத்தை எழுதி அரங்கேற்றிய கம்பர் சோழன்மேற் கொண்ட சில வெறுப்பினால் அவனூரை விட்டு இருபது முப்பது வருஷஞ் சேரனிடம் போயிருந்து, பின்பு சோழனைக் காண அபேட்சையுடையராய்த் திரும்பி வரும் வழியில் ஒரு மடத்திலே

சில வித்துவான்கள் சேர்ந்து இராமாயணப்பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தனர். அது தனது இராமாயணப் பிரசங்கமெனத் தெரியாதிருந்துங் கற்றாரைக் கற்றார் காமுறுதல் இயல்பாதலின், கம்பர், யாது பிரசங்கமாயினுமாகுக கல்விப்பிரசங்கங் கண்டுங் கம்பன் புறம்பொழுகலாமாவென்று, தன்னையின்னானென்று அன்னோர்க்குத் தெரிவியாது யாரோ வழிப்பிரயாணக்காரன் போல உள்ளே சிலநேரம் போயிருந்து, ஒன்றையொன்று பார்த்தெழுத எழுதப் பிரதிகள் தோறும் புக்க வழுக்களும் திரிபுகளும் அதிகப்பட்டிருந்தமையால் அது தனது இராமாயணமென்று மட்டிடாமற், தன்வாக்குஞ் செய்யுட்களும் இடைக்கிடை யாரோ சொருகுகவிகள் சேர்த்திருப்பதாகச் சொன்னாராம். ஒருவர் காலத்திலே இவ்வளவாயின் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்துத் திரிவு எப்படியிருக்கலா மென்பதை அனுமானித்துக் கொள்க.

ஒரு தேசத்தில் வழங்கிவரும் பிரதிகளை மாத்திரம் பார்த்தார்க்கு இம்மாறுபாட்டின் பெருக்கந் தோன்றாது. மதுரைப்பிரதி திருநெல்வேலிப் பிரதிக்கு வேறு. யாழ்ப்பாணத்துப் பிரதி இவ்விருதேசப் பிரதிகட்கும் வேறு. தஞ்சாவூர்ப்பிரதி முதன்மூன்றற்கும் வேறு. சென்னப்பட்டணப் பிரதிகள் இவை யெல்லாவற்றிற்கும் வேறு. எழுத்ததிகாரத்துஞ் சொல்லதிகாரத்தும் அத்துணைப் பெரும் வித்தியாசமில்லை; அதற்கு நியாயஞ் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. அப்பால் மூன்றதிகாரங்களிலும் பிற்காலத்தோராற் செய்யுள்உரை உதாரணமென்றிவையெல்லாந் தங்கடங்கள் மனம் போன வழியே மாற்றப்பட்டன. சில செய்யுளும் உரையும் ஒருங்கே தள்ளப்பட்டன. பழைய உதாரணங்களை நீக்கிப் புது உதாரணங்கள் பின்னூல்களிலிருந் தெடுத்துப் பதிலாகச் சேர்க்கப்பட்டன. தென்தேசப் பிரதிகளில் அலங்காரத்தின் பிற்பகுதி முழுவதும் யாப்பிற் சிலபகுதியும் மூலமும் உரையும் ஒருங்கு பிறழ்ந்து செய்யுட் டொகையோடு மாறிப்போயின. இதனாற் பிற்காலத்தாராற் சேர்க்கப்பட்ட உதாரணங்கள் இப்பதிப்பிலும் பலவிடத்துச் செறிந்திருக்கு மென்றஞ்சுகிறோம். அது கண்டு நூலின் பழமையை மறுக்கற்க.

மூன்று விரலைக்காட்டிக் கட்டிலிற்கால் போலப் பஞ்சபாண்டவரையும் ஆறுகோணத்திலும் நிறுத்துக என்பான் தொகைவிபரீதத்தோடு விரலை வாலென்றுங் கட்டிலைக்

கடலென்றும் பஞ்சபாண்டவரைப் பிஞ்சுப்பாகற்கா யென்றும் மாற்றி எழுதிவைத்தால் அம்மொழியைச் சரிப்படுத்தல் இலேசாகுமா? அதுபோலவே "விலாசம் பரிசர்ப்பம் விதூதம் சமம் நாபம் நமதூதி பிரகமம் நிரோதம் பரியுபாசனம் வச்சிரம் புட்பம் உபநியாசம் வருணசங்காரம் இவை பயிர்முகத்தில் அங்கம் பதின்மூன்று" என்பது "பிவாசம் விருத்தியபம் விவாசம் தாவனபம் சயதூரகம் மரிசோதம் பரியானம் பாவைச்சிரம் செல்வம் வருணசங்கரம் இவை பிரதிமுகத்திலங்கும் பதின்மூன்று" எனக்கிடந்த ஏட்டுப் பிரதிகளோடு பட்ட பிரயாசைக்குப் பிரயாசையென்னுஞ் சொல் போதுமா? முதலினின்று முடிவுவரைக்கும் ஒரொருவரி ஒரொரு நொடியாகவே கொண்டுழைத்தோம். *ஏடு களிலிருந்த பிரகாரம் 186-வது பக்கத்திற் பதிப்பித்திருக்கும் "மாலவனமுதலிய" என்னுஞ் செய்யுளை எடுத்துத் திருத்த முயல்வோர்க்கு இந்நூலில் யாமெடுத்த உழைப்புச் சிறிதே விளங்கும்.

பிரதி எத்துணைப் பழையதோ அத்துணை அதன் மாறுபாடுகள் குறைவு. ஆனாலும் பூர்வபிரதிகள் பாண வாய்ப்பட்டு எழுத்தொன்றற்குப் பாணவரி மூன்றென்றால் யாதுதான் செய்யத்தக்கது!! "ஒளவையாராணையொன்று' என்று சாபம் பெற்றுக் கிடந்த பிரதிகளின் ஏடுகளை ஒன்றைவிட்டொன்று" பிரித்து எடுத்ததே பேரற்புதமாயிற்று. பழம் பிரதிகளுள் ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறைப் பெரியசற்குரு நாத சுவாமிகள் தயைகூர்ந்து கட்டளையிட்டருளியது நெடுங்காலத்தது. கைவிட்டுக் கடன்கொடுத்த கைப்பிரதிகள் திரும்பி உடையார்பால் மீள்வதரிதாகிய இயல்பினையுடைய இக்காலத்தில், முன் நம்மை அறியாதவர்களாயினும் நமது

---

* வேறும் ஒருபிரதியில் அகப்பட்ட நான்காவது ரூபத்தைத் திருநெல்வேலித் தாசில்தார் ம.கனம்-கனம்-ஸ்ரீ சின்னத்தம்பிப்பிள்ளை யவர்கள் அனுப்பிவைத்தனர். அச்செய்யுளைச் சரிப்படுத்த முயல்வோர்க்கு உபயோகமாமென்றெண்ணி அதனையும் ஈண்டுக் குறிக்கின்றோம்.

"மாலவன முதலிய விமையவாதிபவானபுயி ரொவண மிககால னெழிலலனன காரியவியலஙகிக கெசெடனினகுருவாம தெவாகாங கக வானஙக மிலதா சிலனெனற பொனறிவுனனெதிரிபவன பகவன

பிரார்த்தனையை மறாது கிருபை புரிந்ததுமன்றி, ஆதீனத்துப் பழம்பிரதிகளுட் பலநாளாகத் தமது பரிசனத்தைக்கொண்டு தேடுவித்து எடுத்தனுப்பிய பரிபூரண கிருபைக்காக மிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். பெரிதும் ஈனஸ்திதியிலிருப்பதால் உங்கள் காரியத்திற்கு உபயோக மாகாதென்றெண்ணுகின்றோம் என்று சுவாமிகள் கட்டளை யிட்டருளிய பிரதியே அவர்கள் ஆசீர்வாதத்தினால் நமக்கு மற்றெல்லாவற்றிலுஞ் சிரேஷ்ட பிரதியாயினது. சமுசயம் நிகழ்ந்த இடமனைத்திலும் அதனையே ஆதாரமாகக் கொண்டு மற்றத் தேசத்துப் பிரதிகளை அதற்கு உபபலமாக வைத்துப் பரிசோதனை செய்து எடுத்த முயற்சியை ஒருவாறு நிறைவேற்றினோம்.

ஆயினுந், தற்காலத்திற் தமிழ்நாடுகளில் வழங்கும் பிரதிகள் அனைத்தினும் இப்பொழுது யாம் அச்சிட்டு வெளிப்படுத்தும் ரூபம் மேலானதென்று கொள்வதேயன்றி, ஏட்டுப்பிரதியின் ஆதாரமில்லாது யாம் ஒருமொழியும்

---

மகாமுணாவா சொனனமணகாலனனறுவெதநா னெனனான கழகுநா டன மிலகன றுனனிய வெனறுகநது சொரிய மிரொயிலெயதாயொவி னொஙகூாதாாதம ொஙகூ மவாம
ம ா ண ட ா ா ந த வி ண ா க ெ க ா ல ப பூ ண
ம ா ை ல ச ச ா பி ன ம கி ழ டி த ெ த ா ன றி
ந ய ச ச ை ட ெ ய த பூ ண டி ணி யு யி ா ெ ம ற ப க ா
டெணணியலானனெடுமாலையிடககிளியைததமாலகெளா
யவிணணினிலாமனல லாவிழிததனாசிறபபுக கூவிசி பனனொறக
ெ ர ா ப ெ ப ண ண ா ா ந து நி க கி லு வ ா ய த த ா ர ங
கொளகையினொயதிரததாா லிவிவிலொயவெகதுதுணையா வெலவெனறுவளவினவிகுதிொ."

"கயிலிய கொவளனறனனைககிாம"

"பாரிநனகுடையிணடஙகவெ-சொரிநிரதற கிருநதமாலனெ"

"கொவணமாலை மாாவாொநதா வாமாலைமாறுச"

"காதமதணிடததுல கணணினமாணபெநது மானிதாதுகுமா ணடதனது குறுமானி"

"புலிதானிட நதுலவி ரணடாாாடயதுநா டாளாகிமுடடவி ாாாசெநதிானி"

மாற்றிலேமாயினும், இதுதான் ஆசிரியரெழுதிய சுத்தரூபமென்று கொள்ளற்க. அனைத்து மாறுபாடுந் திருத்தி ஆதி ரூபங்காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது. பிற நூற்துணிவிற்கு மாறுபட்டுந் தற்கால வழக்கத்தை விரோதித்துஞ் சரியான அர்த்தம் *புலப்படாமலுஞ் சமுசயம் நிகழ்ந்த இடத்தும் எல்லாத்தேசத்துப் பிரதியும் ஒத்திருந்தனவற்றை யாம் சிறிதுந் திருத்திப் பதிப்பித்திலேம். அவற்றைத் தம் மதத்தின்படி திருத்துதல் அறிவுடை யோர்க்கு இயல்பன்று.

**முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்**
**பொன்னேபோற் போற்றுவர் பொற்புலவர்-அன்னோர்**
**நடையிடையத் தம்வழியே நாட்டிமொழி மாற்றல்**
**கடையிடையர் மாட்டுவினை காண்**

என்னுஞ் செய்யுளிற் கூறியபடி அஃது துணிவு திரிபு ஐயம் இவற்றினை முறையே உடைய உத்தமர் மத்திமர் கடைஞருள் விபரீத அறிவினையுடைய மத்திமர்க்குஞ் சந்தேக ஞானத்தையுடைய அதமர்க்கும் உரியதொழில் என்றுணர்க. பிரதிகள் அனைத்தும் ஒத்திருந்தமை பற்றி நாந் திருத்தாதொழித்துவிட்டவற்றை வழுவெனக் கண்டுழித் திருத்திக்கொள்ளுதல் நூலை வாசிப்போர் கடனாம். ஆதலால் அவர்க்கு

---

* அர்த்தம் புலப்படாதனவற்றிற்குச் சில உதாரணம் 163-வது பக்கத்தில் யாப்புப்படலம் 33-வது காரிகையுரையில் வரும் மேற்கோட் சூத்திரங்களிற் காண்க. பெரும்பான்மைய பிரதிகளில் ஒழிக்கப்பட்டமையானும், அவற்றிற்கு ஆதாரம் வடநூற்களினுங் காணப்படாமையானும், அர்த்தந் தெரியாதனவற்றை அச்சிட்டும் பயனின்மையானுஞ் சில வித்வசனர்கள் அவற்றை நீக்கிவிடும்படி சொன்னார்கள். இறந்துபோகவிடாது நிலைநிறுத்துவதேயன்றி உலகத்திற்கு வீரசோழியத்தை உணர்த்துவது நமது நோக்கமன்றாதலானும் இவ்வாறு பொருள்விள்ளாதிருந்தன சில பின்னர் வீச கணிதாதாரமாகக் கணக்கேற்றிய போது புலப்பட்டமையானுங் கூட்டுதலும் மாற்றுதலும் போலக் குறைத்தலும் ஒருவர் நூலைப் பதிப்பிப்போர்க்குப் பெருங்குற்றமாதலானும் அவற்றை இருந்தவண்ணம் ஒப்பித்தனம்.

**ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை**
**ஆராய்ந்து கொள்வ தறிவுடைமை- சீராய்ந்து**
**குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்**
**கற்றறிந்த மாந்தர் கடன்.**

என்று உரையாசிரியரே எழுதியிருப்பதை இவ்விடம் நினைப்பூட்டுகின்றோம். நல்ல வித்துவான்களுள்ளும் அனேகர் தாம் வீரசோழியமென்னும் பெயரைக் கேட்டதன்றி நூலைப் பார்த்தறியேமெனப் பல பல சமயங்களில் நமக்கு நேரே சொல்லினர். ஆதலால் அழிந்திறந்துபோன நூல்களுட் தானுமொன்றாகி இன்னுஞ் சிலகாலத்தில் மருந்துக்கும் அகப்படாமற் போய்விடுமென்றஞ்சி, அதன் பாலிய யவ்வன சொரூபங் கிட்டாதாயினுங் கிடைத்தவரைக்கும் அதனைக் காப்பாற்றுதலே இதனை இப்போது அச்சிடுவித்த நோக்கமென்றுணர்க

வடநூற் பயிற்சி இல்லாத எனக்குப் பொருள் யாப்பலங்காரங்களில் வரும் அரிய சமஸ்கிருத விதிகளிற் துணை செய்தோராய, அடியேனது பரமாசாரியர் வேதாரணியாதீனம் ஸ்ரீலஸ்ரீ கைலாயநாதசந்நிதிக்கும், சென்னபட்டணம் பச்சையப்ப முதலியார் பாடசாலைச் சமஸ்கிருத பண்டிதராகிய ஸ்ரீமத் மண்டைக்குளத்தூர்- கிஷ்ணசாஸ்திரியாருக்கும், யாழ்ப்பாணம் நீர்வேலி-ம-கனம்-கனம் -ஸ்ரீ சிவ. சங். சிவப்பிரகாச பண்டிதருக்கும் மிக்க வந்தனஞ் சொல்லுகின்றனன்.

**சந்தனத் தாருவைச் சார்ந்திடு வேம்புந் தகைமணமே**
**தந்திடு மென்பவச் சால்பெதற் காமிந்தத் தாரணியில்**
**அந்தமில் கேள்வி அறிஞரை நாளு மடைந்த வென்சொல்**
**சந்தமுறா திருந்தாற் தவறார்வயிற் சார்வதுவே.**

சென்னபட்டணம்

சி.வை.தா.

விசு வருஷம் சித்திரைமாதம்

# அதிகாராதி


| | | பக்கம் |
|---|---|---|
| பாயிரம் | | |
| எழுத்ததிகாரம் | | |
| சந்திப்படலம் | ..... | 1 |
| சொல்லதிகாரம் | | |
| வேற்றுமைப்படலம் | ..... | 15 |
| உபகாரகப்படலம் | ..... | 25 |
| தொகைப்படலம் | ..... | 31 |
| தத்திதப்படலம் | ..... | 41 |
| தாதுப்படலம் | ..... | 47 |
| கிரியாபதப்படலம் | ..... | 56 |
| பொருளதிகாரம் | | |
| பொருட்படலம் | ..... | 66 |
| யாப்பதிகாரம் | | |
| யாப்புப்படலம் | ..... | 99 |
| அலங்காரம் | | |
| அலங்காரப்படலம் | ..... | 171 |
| அந்தச்சிறப்பு | ..... | 255 |
| செய்யுளகராதி | ..... | 256 |

# சிறப்புக்கவிகள்

தஞ்சாவூர்
சதாவதானம்-சுப்பிரமணியஐயர்
சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

சொல்துளைத்த நாவலர்க ளெழுதிவைத்த முதுவீர சோழி யத்தைச்
செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்னா ளேட்டிற்
பல்துளைத்து வண்டுமண லுழுதவரியெழுத் தெனக்கொள் பரிசினாய்ந்து
கல்துளைத்த வெழுத்தாவச் சிட்டனன் தாமோதரனாங் கலைவல் லோனே.

⌖ ⌖ ⌖

புரசை
அஷ்டாவதானம்-சபாபதிமுதலியார்
சொல்லிய

நேரிசை வெண்பா

கல்லா மகலியைநீள் காசினிக்கு ராமனியல்
நல்லாளாச் செய்யு நலமென்கோ-சொல்லாருந்
தாமோ தரன்வீர சோழியமுன் தந்ததக்கோர்
தாமோ துருவாத் தரல்.

⌖ ⌖ ⌖

கோப்பாய்
வித்துவான்-சபாபதிப்பிள்ளை
சொல்லிய

நேரிசை வெண்பா

மாயைதனி னின்றுலகம் வந்தவா வென்னுகோ
மேயவிந்திர சாலமென விள்ளுகோ-போயவுருத்
தொல்லையது போல்வீர சோழியந்தா மோதரன்றன்
வல்லமையா லின்றுபெற்ற மாண்பு.

⌖ ⌖ ⌖

துரைத்தனவித்தியாசாலைத் தமிழ்ப்புலவர்
தொழூவூர்-வேலாயுதமுதலியார்
சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

புனனாடென்றுரைக்குமுரை போயடங்கவொருகோழிப்பூழியின்வீ
றினநாடா வகைபடைத்த வீரசோழிய மெங்கே யெங்கே யென்ன
தினநாடுபுலவர்மனங் களிதூங்கவெளிப்படுத்த திறத்தைநோக்கிக்
கனநாடியெவர்தாமோ தரமிவர்க்கென் றியற்பெயராற் கருதினாரே

⌖ ⌖ ⌖

திரிசிரபுரம்
சோடசாவதானம்-சுப்பராயச் செட்டியார்
சொல்லிய

நேரிசை வெண்பா

வழுவாகும் வன்மகர வாய்ப்பட்ட நூலைத்
தழுவாத்தா மோதரவேள் சாலவ்-வழுநீக்கித்
தந்ததுமுன் வன்றொண்டர் சார்கரா வாய்ப்பனவற்
தந்ததனை யொக்குந் தகைத்து.

⌖ ⌖ ⌖

சொர்னநாதபுரம்
துவாத்ரிம்சதவதானம்-இராமசாமிச்செட்டியார்
சொல்லிய

நேரிசை வெண்பா

இறந்தபூம் பாவை யெலும்பினைச்சம் பந்தர்
சிறந்தபெண்ணாச் செய்த சிறப்பாந்-திறம்பலசேர்
தாமோ தரன்வீர சோழியத்தார் சாற்றுருவம்
பூமீ தியைத்ததெனப் போற்று.

⌖ ⌖ ⌖

சுன்னாகம்
அ. குமாரசுவாமி உபாத்தியாயர்
சொல்லிய

கட்டளைக் கலித்துறை -

பொன்னிற் பொலிந்திடும் பூணாக்கு மாக்களைப் போன்றசொல்விற்
பன்னரைப் பாரிற் பரவுவர் காண்வன் பரலுலத்தைச்
சொன்னம தாக்கிய தாமோத ரேந்திரன் றொல்புகழை
யென்னென்பவோ விதற்கோர் ரசவாதமு மீடல்லவே.

⌖ ⌖ ⌖

# வீரசோழியம்

*பாயிரம்*

மிக்கவன்போதியின் மேதக்கிருந்தவன் மெய்த்தவத்தாற்
றொக்கவன்யார்க்குந் தொடரவொண்ணாதவன்றூயனெனத்
தக்கவன்பாதந் தலைமேற்புனைந்து தமிழுரைக்கப்
புக்கவன்பைம்பொழிற் பொன்பற்றிமன்புத்த மித்திரனே.

ஆயுங்குணத்தவ லோகிதன்பக்க லகத்தியன்கேட்
டேயும்புவனிக் கியம்பியதண்டமி ழீங்குரைக்க
நீயுமுளையோ வெனிற்கருடன்சென்ற நீள்விசும்பி
லீயும்பறக்கு மிதற்கென்கொலோசொல்லுமேந்திழையே.

நாமேவெழுத்துச்சொனற்பொருள்யாப்பலங்காரமெனும்
பாமேவுபஞ்ச வதிகாரமாம்பரப் பைச்சுருக்கித்
தேமேவியதொங்கற் றேர்வீரசோழன் றிருப்பெயராற்
பூமேலுரைப்பன் வடநூன்மரபும் புகன்றுகொண்டே.

**பாயிர முற்றும்**

# முதலாவது-எழுத்ததிகாரம்

## சந்திப்படலம்

**அறிந்த வெழுத்தம்முன் பன்னிரண் டாவிக ளானகம்முன்**
**பிறந்த பதினெட்டு மெய்நடு வாய்தம் பெயர்த்திடையா**
**முறிந்தன யம்முத லாறு ஙஞண நமனவென்று**
**செறிந்தன மெல்லினஞ் செப்பாத வல்லினந் தேமொழியே.**

*இதன்பொருள்: அறிந்த எழுத்து அம்முன் பன்னிரண்டு ஆவிகளான = அறிந்து சொல்லப்படா நின்ற எழுத்துக்களுக்குள்ளே அகரமுதல் ஔகாரம் ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டெழுத்தும் உயிரெழுத்தென்னும் பெயரவாம். கம்முன் பிறந்த பதினெட்டும் மெய்=ககர ஒற்றுமுதல் னகர ஒற்று ஈறாகச் சொல்லப்பட்ட பதினெட்டெழுத்தும் மெய்யெழுத் தென்னும் பெயரவாம். நடு ஆய்தம்= உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் நடுவாயிருக்கிற அஃகேனமென்னுந் தனிநிலையெழுத்தானது ஆய்தவெழுத் தென்னும் பெயரதாம். பெயர்த்திடையா முறிந்தன யம்முதலாறும் = முன்சொன்ன பதினெட்டு மெய்களுக்குள்ளும் யரலவழள என்னும் ஆறெழுத்தும் இடையினவெழுத்தென்னும் பெயரவாம். ஙஞணநமன என்று செறிந்தன மெல்லினம் = ஙஞண நமன என்னும் ஆறெழுத்தும் மெல்லின வெழுத்தென்னும் பெயரவாம். செப்பாத வல்லினம் = இவற்றுட் சொல்லாதொழிந்த கசடதபற என்னும் ஆறெழுத்தும் வல்லினவெழுத்தென்னும் பெயரவா மென்றவாறு. தேமொழியே என்பது மகடூஉ முன்னிலை.* (1)

**இறுதிமெய்நீங்கிய வீராறிலைந்து குறினெடிலேழ்**
**பெறுவரியானெடு நீர்மையளபு பிணைந்தவர்க்க**
**மறுவறுவல்லொற்று மெல்லொற்றுமாம்வன்மை மேலுகர**
**முறுவதுநையுந் தொடர்மொழிப்பின்னு நெடிற்பின்னுமே.**

*(இ-ள்.) இறுதிமெய் நீங்கிய ஈராறில் ஐந்து குறில் நெடில் ஏழ்பெறுவரியான் = வருக்கங்கடோறும் இறுதியெழுத்து*

நீங்கலாக மற்றப் பன்னிரண்டெழுத்துக்களுக்குள்ளும் ஐந்தெழுத்துக் குற்றெழுத்தென்னும் பெயரவாம், ஏழெழுத்து நெட்டெழுத்தென்னும் பெயரவாம். நெடு நீர்மை அளபு = உயிரளபெடை யானது நெடுஞ்சீர்மை யுடைத்து. பிணைந்தவர்க்கம் மறுவறு வல்லொற்றும் மெல்லொற்றுமாம்= வல்லொற்றும் மெல்லொற்றும் இணைந்து வருவது வர்க்கவெழுத்தென்னும் பெயரதாம். வன்மை மேல் உகரம் உறுவது நையுந் தொடர்மொழிப் பின்னும் நெடிற் பின்னுமே = தனி நெடிற்பின்னும் பலவெழுத்துக்கள் தொடருமொழிக் கண்ணும் ஈற்றிலே கசடதபற என்னும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அந்த உகரமானது குறுகிக் குற்றியலுகரமென்னும் பெயரதாம்-எ-று. (2)

**அகரம்வகரத்தி னோடியைந்தெளவாம் யகரத்தினோ**
**டகரமியைந்தைய தாகும் ஆ ஏ ஓ வினாவந்தமாம்**
**எகர ஒகரமெய் யிற்புள்ளிமேவும் அ இ உச்சுட்டாம்**
**இகரங்குறுகி வருங்குற்றுகரம்பின் யவ்வரினே.**

(இ-ள்.) அகரம் வகரத்தினோடு இயைந்து ஔவாம்=அகரமானது வகரத்தோடுங்கூடி ஔகாரமாம். யகரத்தினோடு அகரம் இயைந்து ஐயதாகும்=பின்னும் அவ் அகரமானது யகரத்தோடுங் கூடி ஐகாரமாம். ஆ ஏ ஓ வினா வந்தமாம் = ஆஏஓ என்னும் மூன்றெழுத்தும் மொழியினதீற்றிலே நின்று வினாவெழுத்தென்னும் பெயரவாம். எகர ஒகர மெய்யிற் புள்ளிமேவும்=எகர ஒகரங்களும் மெய்கள் பதினெட்டும் மேலே புள்ளி பெற்றுப் புள்ளியெழுத் தென்னும் பெயரவாம். அஇஉச் சுட்டாம் = அஇஉ என்னும் மூன்றெழுத்தும் மொழிக்கு முதலிலே சுட்டெழுத்தென்னும் பெயரவாம். இகரங்குறுகிவருங் குற்றுகரம்பின் யவ்வரினே = குற்றியலுகரத்தின் பின்னர் யகரம் வந்து புணர்ந்தால் இகரமாம், அந்த இகரமானது குறுகிக் குற்றியலிகரமென்னும் பெயரதாம்-எ.று. (3)

**ஏயாஎச்சொன்முன் வினாவெடுத்தல்படுத் தன்னலித**
**லோயாதுரப்ப லெனநால்வகையிற் பிறக்குமெய்கள்**
**சாயாமயக்கந்தம் முன்னர்ப்பிறவொடு தாமும்வந்து**
**வீயாதவீரொற்று மூவொற்றுடனிலை வேண்டுவரே.**

(இ-ள்.) ஏ யா எச்சொன்முன் வினா = எகர ஏகாரங்களும் யாவும் மொழியினது முதலிலே நின்று வினாவெழுத்தென்னும்

பெயரவாம். எடுத்தல் படுத்தல் நலிதல் ஓயாது உரப்பலென நால்வகையிற் பிறக்கும் மெய்கள் சாயா மயக்கந் தம் முன்னர்ப் பிறவொடு தாமும் வந்து வீயாத ஈரொற்று மூவொற்று உடனிலை வேண்டுவரே= எடுத்தும் படுத்தும் நலிந்தும் உரப்பியுஞ் சொல்லுதாகிய நால்வகை யினாலேயும் பிறக்கும் எழுத்துக்களானவை தம்முன்னர்த் தாம் வந்து மயங்கியும் தம்முன்னர்ப் பிறவெழுத்துக்கள் வந்து மயங்கியும் ஈரொற்றுடனிலையாயும் மூவொற்றுடனிலையாயும் வரப் பெறுமென்று சொல்லுவர்கள் மேலாகிய புலவர்கள்- எ-று. (4)

**குற்றெழுத்தொன்றொன் றரையாகுமையெள விரண்டுநெடி**
**லொற்றெழுத்தாய்தம்இ உவரை மூன்றளபோங்குயிர்மெய்**
**மற்றெழுத்தன்றுயிர் மாத்திரையேபெறு மன்னுகின்ற**
**வொற்றெழுத்தின்பின் னுயிர்வரினேறு மொளியிழையே.**

*(இ-ள்.) குற்றெழுத்தொன்று=குற்றெழுத்து ஒரு மாத்திரை பெறும். ஒன்றரையாகுமையெள=ஐகார ஒளகாரக் குறுக்கங்கள் ஒன்றரைமாத்திரை பெறும். இரண்டுநெடில்= நெட்டெழுத்து இரண்டு மாத்திரை பெறும். ஒற்றெழுத்தாய்தம் இஉ அரை=ஒற்றெழுத்தும் ஆய்தவெழுத்தும் குற்றியலிகரமும் குற்றியலுகரமுமாகிய நான்கும் ஒவ்வொன்று அரைமாத்திரை பெறும். மூன்றளபு= உயிரளபெடையானது மூன்று மாத்திரை பெறும். ஓங்குயிர்மெய் மற்றெழுத்தன்று உயிர் மாத்திரையே பெறும்= உயிர்மெய் யெழுத்தானது வேறேயெழுத்தன்று, உயிர் மாத்திரையே பெறும். ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்கும் அளவெனக் கொள்க. மன்னு கின்ற ஒற்றெழுத்தின்பின் உயிர்வரின் ஏறும்= நிலைமொழியினது ஈற்றொற்றின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் வந்த உயிரானது ஒற்றின்மேலேறி நடக்கும்-எ-று. ஒளியிழையேயென்பது மகடூஉ முன்னிலை.* (5)

**உந்திமுதலெழுங் காற்றுப்பிறந்துர முஞ்சிரமும்**
**பந்தமலிகண் டமுமூக்குமுற்றண்ணம் பல்லுடனே**
**முந்துமிதழ்நா மொழியுறுப்பாகு முயற்சியினால்**
**வந்துநிகழு மெழுத்தென்றுசொல்லுவர் வாணுதலே.**

*(இ-ள்.) நாபிக்கமலத்தினின்றெழாநின்ற வாயுவானது மார்பினிடமாகவும் சிரத்தினிடமாகவும் கண்டத்தினிடமாகவும் மூக்கினிடமாகவும் பொருந்தி வெளியே புறப்படும்போது அண்ணம் பல் இதழ் நாவென்று சொல்லப்படாநின்ற*

அவயவங்களின் முயற்சியினால் வெவ்வேறெழுத்தொலியாகப் பிறக்குமென்று சொல்லுவர் மேலாகிய புலவர்-எ-று. வாணுதலேயென்பது மகடூஉ முன்னிலை. இவற்றுள் உரத்தை வல்லினமுஞ் சிரத்தை ஆய்தமும் கண்டத்தை உயிருமிடையினமும் மூக்கை மெல்லினமும் பொருந்துமெனக் கொள்க. முயற்சியுள் ஒரெழுத்திற்குப் பலமுயற்சியுளவாதலின் எழுத்தெழுத்தாய் முயற்சிகூறின் ஈண்டுப் பெருகுமென விடுத்தனமென்க. (6)

**ஆவியனைத்துங் கசதநபமவ் வரியும்வவ்வி**
**லேவியவெட்டும்யவ் வாறுஞநான்குமெல் லாவுலகு**
**மேவியவெண்குடைச் செம்பியன்வீரரா சேந்திரன்றன்**
**நாவியல்செந்தமிட் சொல்லின்மொழிமுத னன்னுதலே.**

*(இ-ள்.)* உயிரெழுத்துப் பன்னிரண்டும், ககார சகார தகார நகார பகார மகார வர்க்கங்களும், வகாரவர்க்கத்தில் உ ஊ ஒ ஓ அல்லாத எட்டெழுத்தும், யகார வர்க்கத்தில் அ ஆ உ ஊ ஓ ஒள வாகிய ஆறெழுத்தும், ஞகார வர்க்கத்தில் அ ஆ எ ஒ ஆகிய நான்கெழுத்துமாகிய இவையனைத்தும் எல்லாவுலகுந் தன் வெண் கொற்றக்குடைநிழற்கீழாளாநின்ற வீரசோழ மகாராசாவினுடைய நாவினிடமாகச் சொல்லப்பட்ட செந்தமிட் சொல்லுக்கு மொழிக்கு முதலாகிய எழுத்துக்களாம்- எ-று. நன்னுதலேயென்பது மகடூஉ முன்னிலை. (7)

**ஈறுமகர ணகரங்கடாமு மிடையினத்தி**
**லேறும்வகர மொழிந்தைந்துமீரைந் தெழிலுயிரும்**
**வீறுமலிவேங் கடங்குமரிக்கிடை மேவிற்றென்று**
**கூறுந்தமிழினுக் கீற்றெழுத்தாமென்பர் கோல்வளையே.**

*(இ-ள்.)* பதினெட்டாம் மெய்யாகிய னகரவொற்றும், மகார ணகாரவொற்றுக்களும், இடையின எழுத்தில் வகரவொற்றொழிந்த மற்ற ஐந்தொற்றும், உயிரெழுத்துக்களுள் எகர ஒகரம் ஒழிந்த மற்ற பத்தெழுத்துமாகிய இவையனைத்தும் குணகடல் குமரி குடகம் வேங்கட மென்னும் இந்நான்கெல்லைக்குள்ளும் வழங்காநின்ற செந்தமிட் சொல்லுக்கு மொழிக்கீறாகிய எழுத்துக்களாம்- எ-று. கோல்வளையே யென்பது மகடூஉ முன்னிலை. (8)

**நின்றசொல்லீறும் வருஞ்சொன்முதலு நிரவித்தம்முள்**
**ஒன்றிடும்போதுமொரோமொழிக்கண்ணுமுலகிற்கொப்பி**
**னன்றியன்மும்மை விகாரம்வந்தெய்திடு நன்கியல்பிற்**
**குன்றுதலின்றி வருதலுமுண்டென்று கூறுவரே.**

(இ-ள்.) நின்றசொல்லீறும் வருஞ்சொன்முதலும் நிரவித்தம்மு ளொன்றிடும்போதும் ஒரோமொழிக்கண்ணும் உலகிற்கொப்பின் நன்றியல் மும்மைவிகாரம்வந்தெய்திடும்= நிலைமொழியினதீறும் வருமொழியினது முதலும் ஒன்றோடொன்று கலந்து புணருமிடத்தும் ஒரோவிடத்துத் தனிமொழிக்கண்ணும் உலகத்துக்கொப்பாகத் தோன்றற்றிரிதல் கெடுதலென்னும் மூன்று விகாரம் வரப்பெறும். நன்கியல்பிற்குன்றுதலின்றி வருதலுமுண்டென்று கூறுவர்= ஒரோவிடத்து விகாரப்பாடில்லாமல் நிலைமொழியின தீறும் வருமொழி யினதுமுதலும் திரியாமல் இயல்பாய் முடிதலுமுண்டென்று சொல்லுவர் மேலாகிய புலவர்-என-று. (9)

**ஆன்றாமுலோபத்தொ டாகமமாதேச மாரியத்துண்**
**மூன்றாமொழியொ டெழுத்துவிகார முதனடுவீ**
**றேன்றாம்வகையொன்ப தாகலுமுண்டவையெவ்விடத்துந்**
**தோன்றாவுலகத் தவர்க்கொத்தபோதன்றித் தூமொழியே.**

(இ-ள்.) ஆன்றாமுலோபத்தொ டாகம மாதேசம் ஆரியத்துண் மூன்றாம் மொழியொ டெழுத்து விகாரம்=வடமொழிக்கண் ஒரு சொல்லி னிடமாகவும் ஓரெழுத்தினிடமாகவும் உலோபமென்றும் ஆகமமென்றும் ஆதேச மென்றும் மூன்று விகாரம் வரப்பெறும். முதனடுவீறேன்றாம் வகையொன்பதாதலுமுண்டு=பின்னும் விகாரங்களானவை மொழியினது முதலிலேயும் மொழியின திடையிலேயும் மொழியினது கடையிலேயுமென மும்மூன்றாகவிகற்பிக்க ஒன்பது விகாரமாம், எழுத்தினும் மொழியினுமாகப் பதினெட்டாம். அவை யெவ்விடத்துந் தோன்றா உலகத்தவர்க் கொத்தபோதன்றி=பின்னும் அவ்விகாரங்களானவை உலகத்தார்க்கொத்தபோதன்றி மற்றெவ்விடத்தும் வரப்பெறாவெனக் கொள்க. தூமொழியே யென்பது மகடூஉ முன்னிலை. (10)

**சொன்னமொழிப்பொருணீக்குநகாரமச்சொன்முன்மெய்யேல்**
**அந்நிலையாக வுடல்கெடுமாவிமுன் னாகிலது**
**தன்னிலைமாற்றிடும் ஏ ஓ இரண்டுந் தனிமொழிமுன்**
**மன்னிய ஐ ஔவு மாகும்வடமொழி வாசகத்தே.**

(இ-ள்.) சொன்னமொழிப் பொருணீக்குநகாரம்= வடமொழிக் கண் ஒருசொல்லிற்குரித்தாகிய பொருளை

நீக்குதற்பொருட்டாக அச்சொல்லின்முன்னர் ஒருநகாரம் வரப்பெறும். அச்சொன்முன் மெய்யேல் அந்நிலையாக உடல்கெடும்=பின்னும் அந்தச் சொல்லானது மெய்ம்முதன் மொழியாகில் அச்சொல்லின்முன் நகாரத்தின் மேனின்ற உயிர் நிற்க உடல்கெடும். ஆவிமுன்னாகில் அது தன்னிலை மாற்றிடும்=பின்னம் அந்தச் சொன்னசொல்லானது உயிர்முதன் மொழியாகில் அச்சொல்லின் முன் நின்ற நகாரத்தின் மேனின்ற உயிர் பிரிந்து தன்னிலையை மாற்றி உயிர்முன்னும் ஒற்றுப் பின்னுமாகநிற்கும். ஏ ஒ இரண்டுந் தனிமொழிமுன் மன்னிய ஐ ஒளவுமாகும் வடமொழிவாசகத்தே=மொழிமுதற்கணின்ற ஏகார ஓகார ரங்களிரண்டும் தமிழில் வரும்போது ஐகார ஒளகாரங் களாகவும் வரும்-எ-று. (11)

**ஆவுமகரக் கிகரத்துக்கையு மௌவுமுகரக்**
**கேவுமிருவினுக் காரும்விருத்தி யெழிலுகரக்**
**கோவுமிகரத்திற் கேயுங்குணமென் றுரைப்பவந்து**
**தாவுமிவைதத்தி தத்தினுந்தாதுப் பெயரினுமே.**

(இ-ள்.) ஆவுமகரக்கிகரத்துக்கையுமௌவுமுகரக் கேவுமிருவி னுக்காரும் விருத்தி=அகரத்திற்காகாரமும் இகரத்திற் கைகாரமும் உகரத்திற்கௌகாரமும் இருவென்பதற் காரென்பதும் ஆதேசமாய் வந்து விருத்தியெனப்படும். எழிலுகரக்கோவு மிகரத்திற்கேயுங் குணமென் றுரைப்ப= உகரத்திற் கோகாரமும் இகரத்திற்கேகாரமும் ஆதேசமாய் வந்து குணமெனப்படுமென்று சொல்லுவர் மேலாகிய புலவர். வந்து தாவுமிவை தத்திதத்தினுந் தாதுப்பெயரினுமே=இந்த விருத்தியுங் குணமுந் தத்திதப்பெயர் முடிக்குமிடத்துந் தாதுப்பெயர் முடிக்குமிடத்தும் வரப்பெறும் - எ-று. (12)

**மூன்றொடுநான்கொன்ப தாமுயிர்ப்பின்னுயிர் முந்தினடு**
**வான்றயகாரம்வந் தாகமமாகுமல் லாவுயிருக்**
**கேன்றவகார மெட்டேற்குமிரண்டு மிறுதிகெட்டுத்**
**தோன்றுநிலையு மொரோவிடத்தாமென்பர் தூமொழியே.**

(இ-ள்.) மூன்றொடுநான்கொன்பதாமுயிர்ப்பின் உயிர் முந்தின் நடு ஆன்ற யகாரம் வந்தாகமமாகும்=இகர ஈகார ஐகார உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் இடையே யகார வொற்று வந்து ஆகமமாம். அல்லா வுயிருக்கேன்ற

*வகாரம்=இவையல்லாத மற்றவுயிரீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் இடையே வகரவொற்றுவந்து ஆகமமாம். எட்டேற்கு மிரண்டும்=ஏகார வீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் யகார வகார வொற்றுக்கள் இரண்டும் வந்தாகமமாம். இறுதி கெட்டுத் தோன்றும் நிலையு மொரோவிடத்தாமென்பர்=ஒரோவிடத்து நிலைமொழியின தீற்றினின்றபதமாதல் உயிர்மெய்யாதல் உயிராதல் ஒற்றாதலழிந்து சந்திகாரியம்பண்ணப்படுமென்று சொல்வர்மேலாகிய புலவர் - எ-று. தூமொழியே யென்பது மகடூஉ முன்னிலை.* *(13)*

**ஆறாமுடலின்பின் தவ்வரினாங்கதைந் தாமுடலாங்**
**கூறார்ந்தநவ்வரின் முன்பினதாங்குறிற் பின்புமெய்க**
**ளேறாவுயிர்பின் வரவிரண்டாகும்யவ் வோடுரழ**
**வீறாவரில்வன்மை பின்பில்வர்க்கத்தொற் றிடைப்படுமே.**

*(இ-ள்.) ஆறா முடலின் பின் தவ்வரின் ஆங்கதைந்தாமுடலாம்= ணகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின்பின்னர் வருமொழிமுதல் தகாரம்வந்து புணர்ந்தால் வந்த தகாரமானது டகாரமாம். கூறார்ந்த நவ்வரின் முன்பினதாம்=ணகரவொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் நகாரம்வந்து புணர்ந்தால் வந்த நகாரமும் ணகாரமாம். குறிற் பின்பு மெய்களேறா வுயிர் பின்வர விரண்டாகும்= குற்றெழுத்தின் பின்னின்ற வொற்றுக்களானவை வருமொழியுயிர் முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் இடையே அவ்வொற்றிரட்டித்து நிற்கும். யவ்வோடு ர ழ ஈறாவரில் வன்மை பின்பில் வர்க்கத் தொற்றிடைப் படுமே=யகார ரகார ழகாரவொற்றீற்று நிலை மொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் வல்லினம் வந்து புணர்ந்தால் இடையே அவ்வவ் வந்த வல்லொற்றும் வல்லின வருக்கவொற்றும் மிக்குமுடியும்-எ-று.* *(14)*

**நான்கொடுமூன்றொன்ப தாமுயிரின்பின்பு நவ்வருமே**
**லேன்றஞகாரம தாகும்பதினைந்தொ டெண்ணிரண்டாய்த்**
**தோன்றுடற்பின்னர்த் தகாரம்வரினிரண் டுந்தொடர்பா**
**லான்றவைந்தாமுடலா முன்பிலொற்றுக் கழிவுமுண்டே.**

*(இ-ள்.) நான்கொடுமூன்றொன்ப தாமுயிரின் பின்பு நவ்வருமே லேன்ற ஞகாரம தாகும்=இகர ஈகார ஐகார உயிரீற்று*

*நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் நகரம்வந்து புணர்ந்தால் வந்த நகாரமானது ஞகார மாகும். பதினைந்தொ டெண்ணிரண்டாய்த் தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரின் இரண்டுந் தொடர்பாலான் றவைந்தா முடலாம் = ழகார ளகார வொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் தகாரம்வந்து புணர்ந்தால் நிலைமொழியீறும் வருமொழி முதலுந் திரிந்து தனித்தனியிரண்டும் டகாரமாம். முன்பிலொற்றுக்கழிவு முண்டே=பின்னும் அவ்விலக்கணத்துள் நிலைமொழியீற்றிற்கு அழிவுமுண்டு-எ-று.* (15)

**எண்ணிரண்டாமொற்றுவன்மைவந்தாற்பின் பியைந்தவைந்தா**
**நண்ணியவொற்றாநகரம்வரின் முன்மெய்ணவ்வதுவாந்**
**தண்ணியமவ்வந் திடினுமஃதே தனிநெடிற்பின்**
**பண்ணியவொற்றுப் பின்றான்வரப்போ மொருகாற்பயின்றே.**

*(இ-ள்.) எண்ணிரண்டா மொற்று வன்மை வந்தாற் பின்பியைந் தவைந்தா நண்ணிய வொற்றாம்=ளகார வொற்றீற்று நிலைமொழிப் பதத்தின்பின்னர் வருமொழிமுதல் வல்லினம்வந்து புணர்ந்தால் அந்த ளகாரமானது டகாரமாம். நகரம்வரின் முன்மெய் ணவ்வதுவாம்=ளகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் நகாரம் வந்து புணர்ந்தால் அந்த ளகாரமானது ணகாரமாம். தனிநெடிற்பின் பண்ணிய வொற்றுப்பின் தான்வரப்போம் ஒருகாற்பயின்றே=தனிநெடிற் கீழ் நின்ற ளகரவொற்றின்பின்னர் வருமொழிமுதல் தகாரம் வந்து புணர்ந்தால் ஆதேசமான டகாரங்களுள் தனிநெடிற்கீழ்வந்த டகாரம் கெடும்-எ-று.* (16)

**பன்மூன்றதாமுட னப்பின்வருமெனி னீற்றெழுத்தாம்**
**பன்னேழதாம்வன்மை பின்வரினாயிடைத் தவ்வுமஃதாம்**
**பின்னாமிகார மதுபன்னொன்றாமுடல் பின்வருமேற்**
**சொன்னாரியவின்பின் றோன்றுநகார ஞகாரமென்றே.**

*(இ-ள்.) பன்மூன்றதா முடல் நப்பின்வருமெனி னீற்றெழுத்தாம்= லகார வொற்றீற்று நிலைமொழிப் பதத்தின்பின்னர் வருமொழிமுதல் நகாரம்வந்து புணர்ந்தால் அந்த லகாரமானது னகாரமாம். பன்னேழதாம் வன்மை பின்வரின்=வருமொழிமுதல் வல்லினம்வந்து புணர்ந்தால் அந்த லகாரமானது றகாரமாம். ஆயிடைத்தவ்வுமஃதாம்=புணர்ந்த வல்லினம் தகாரமாயின் வந்த தகாரமும் றகாரமேயாம். பின்னாமிகாரமது பன்னொன்றா முடல் பின்வருமேல்= லகார*

வொற்றீற்று நிலை மொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் யகாரம்வந்து புணர்ந்தால் இடையே ஒரு இகரம்வரப் பெறும். சொன்னாரியவின் பின்றோன்றுநகாரம் ஞகாரமென்றே= யகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் நகாரம்வந்து புணர்ந்தால் வந்த நகாரமானது ஞகாரமாமென்று சொல்லுவர் புலவர்-எ-று. (17)

**ஐம்மூன்றதாமுடல் வன்மைபின்வந்திடி லாறொடைந்தா**
**மெய்ம்மாண்பதாநவ்வரின் முன்னழிந்துபின் மிக்கணவ்வாம்**
**மம்மேல்வரினிரு மூன்றாமுடன்மற் றியல்புசந்தி**
**தம்மாசகலங் கிடப்பின்களாமென்ப தாழ்குழலே.**

(இ-ள்.) ஐம்மூன்றதாமுடல் வன்மைபின்வந்திடில் ஆறொடைந்தாம் மெய்மாண்பதாம்=ழகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் வல்லினம்வந்து புணர்ந்தால் அந்த ழகாரமானது ணகாரமும் டகாரமுமாம். நவ்வரின்முன் னழிந்து பின்மிக்கணவ்வாம்=வருமொழிமுதல் நகாரம்வந்து புணர்ந்தால் அந்த ழகாரமானது கெட்டு வந்தநகாரம் ணகாரமாம். மம்மேல்வரின் இருமூன்றாமுடல்= வருமொழிமுதல் மகாரம்வந்து புணர்ந்தால் அந்த ழகாரமானது ணகாரமாம். மற்றியல்பு சந்தி தம்மாசகலங் கிடப்பின் களாமென்ப=இயல்பு சந்தியாவது தத்தங்கிடப்பிலே கிடக்குமென்று சொல்லுவர் மேலாகிய புலவர்- எ-று. தாழ்குழலே யென்பது மகடூஉ முன்னிலை. (18)

**வன்மைவந்தாற்பின்பு பத்தாமுடல்வன்மை யின்வருக்கத்**
**தன்மையொற்றாகு ஞநமக்கள்பின்வரிற் சாற்றுமப்போம்**
**முன்வயிற்கால்வவ் வரிற்பதின்மூன்றா முடலழியும்**
**பின்வயிற்தவ்வரிற் தவ்வுங்கடைவன்மைப் பேறுறுமே.**

(இ-ள்.) வன்மைவந்தாற்பின்பு பத்தாமுடல் வன்மையின் வருக்கத் தன்மையொற்றாகும்= மகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் வல்லினம்வந்து புணர்ந்தால் அந்த மகரமானது அவ்வவ்வந்த வல்லொற்றும் வல்லினவர்க்க வொற்றுமாம். ஞ ந மக்கள் பின்வரிற்சாற்று மப்போம்= வருமொழி முதல் ஞ ந மக்கள் வந்துபுணர்ந்தால் அந்த மகாரமானது கெடும். முன்வயிற்கால் வவ்வரின்=வருமொழிமுதல் லகரம் வந்து புணர்ந்தால் அந்த மகரமானது குறுகிக் கால்மாத்திரையாய் உட் புள்ளிபெறும். பதின்மூன்றாம் உடலழியும். பின்வயிற் தவ்வரிற் தவ்வுங் கடைவன்மைப்

பேறுறுமே=லகாரவொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் தகாரம்வந்து புணர்ந்தால் அந்த லகாரமானது கெட்டு வந்த தகாரமும் றகாரமாகப் பெறும்.-எ-று. (19)

**ஈற்றின் பின்னவ்வரி னீற்றெழுத்தாமெழிற் தவ்வரிற்தவ்**
**வேற்றுப்பதினேழ தாமுடலாமெய்து மாவியின்பின்**
**னாற்றுந்திறல்வல் லினம்வந்திடிலவற் றின்வருக்கம்**
**போற்றுமிவையென்ற வல்லொற்றுமெல்லொற்றுப்புக்கிடுமே.**

(இ-ள்.) ஈற்றின் பின் நவ்வரின் ஈற்றெழுத்தாம் = னகரவொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் நகாரம் வந்து புணர்ந்தால் வந்த நகாரமும் அப்பதினெட்டாமுடலாகிய னகாரமாம். எழிற் தவ்வரிற் தவ் வேற்றுப்பதினேழதாமுடலாம்= வருமொழிமுதல் தகாரம்வந்து புணர்ந்தால் வந்த தகாரமானது றகாரமாம். எய்துமாவியின் பின் ஆற்றுந் திறல்வல்லினம் வந்திடில் அவற்றின் வருக்கம் போற்றுமிவையென்ற வல்லொற்றும் மெல்லொற்றும் புக்கிடுமே=உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால் இடையே அவ்வவ் வந்தவல்லொற்றும் வல்லினவருக்கவொற்றும் மிக்குமுடியும்-எ-று.

**ஆவிபின்றோன்றக் கெடுங்குற்றுகர மவற்றின்மெல்லொற்**
**றேவியவாறெழில் வல்லொற்றுமாமினி வன்மையொற்று**
**மேவியதன்முன் விளைதலும்வேண்டுவ ராவிவந்தாற்**
**பாவியமுற்றுக ரத்தின்சிதைவும் பகர்ந்தனரே.**

(இ-ள்.) ஆவி பின்றோன்றக் கெடுங் குற்றுகரம்= நிலைமொழி யீற்றுக் குற்றியலுகரத்தின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் அந்நிலைமொழியீற்றுக் குற்றியலுகரமானது தனக்காதாரமாகிய மெய்யைவிட்டுத் தான்கெடும். அவற்றின் மெல்லொற் றேவியவாறெழில் வல்லொற்றுமாம்=பின்னும் அந்நிலைமொழியீற்றுக் குற்றியலுகரத்தின் முன்னர் நின்ற மெல்லொற்றானது வல்லொற்றாதலுமாம். இனி வன்மையொற்று மேவியதன்முன் விளைதலும் வேண்டுவர்=அந்நிலை மொழியினதீற்றுக் குற்றியலுகரத்தின்முன்னர் ஒரு வல்லொற்று வரப்பெறலுமா மென்பர். ஆவிவந்தாற் பாவிய முற்றுகரத்தின் சிதைவும் பகர்ந்தனரே=வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் நிலைமொழியீற்று முற்றியலுகரமுங் கெடுமென்று சொல்லுவார் மேலாகிய புலவர்-எ-று. (21)

**ஈறாம்லகார மதவந்தெதிர்ந்திடி லீற்றெழுத்தே**
**லாறாங்கடைவன்மையாம்வன்மை தோன்றிலைந்தாமுடலாம்**
**ஆறாமுடல்வல் லினம்வரினாவிமு னாவியொடுங்**
**கூறாழகார மழிந்துடகாரங் குறுகிடுமே.**

*(இ-ள்.) ஈறாம் லகார மதவந்தெதிர்ந்திடில்=லகர வொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் மகார தகாரங்கள் வந்து புணர்ந்தால் அந்த லகாரமானது னகாரமாம். ஈற்றெழுத்தே லாறாங்கடை வன்மையாம் வன்மை தோன்றில்=னகரவொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல் வல்லினம்வந்து புணர்ந்தால் அந்த னகாரமானது ஆறாம் வல்லினவெழுத்தாகிய றகாரமாம். ஐந்தாமுடலாம் ஆறாமுடல் வல்லினம் வரின் = ணகர வொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழிமுதல் வல்லினம்வந்து புணர்ந்தால் அந்த ணகாரமானது டகாரமாம். ஆவிமுன் ஆவியொடுங் கூறாழகாரம் அழிந்து டகாரங் குறுகிடுமே=வருமொழியுயிர் முதலாகிய மொழிவந்து புணர்ந்தால் நிலைமொழியினதீற்றினின்ற ழகாரமானது தன்முன்னின்ற உயிரோடுமழிந்து ஐந்தாமுடலாகிய டகாரமாம்-எ-று.* (22)

**ஒன்றுக்கொருவோ ரிருவீரிரண்டுக்கு மூன்றுமுமூ**
**வன்றுற்றநாலுக்கு நான்கைந்தையாறறு வேழெழுவாம்**
**தொன்றுற்றவெட்டுக்கெண் ணொன்பதொன்பானொடு**
**தொண்டொள்ளும்**
**பான்பன்றுற்றநூறு பதுபஃதுபத்துநூ றாயிரமே.**

*(இ-ள்.) ஒன்றுக்கொருவோர்=ஒன்றென்னும் எண்ணுக்கு ஒருவென்பதும் ஓரென்பதும் ஆதேசமாம். இருவீரிரண்டுக்கு= இரண்டென்னும் எண்ணுக்கு இருவென்பதும் ஈரென்பது மாதேசமாம். மூன்றுமுமூ=மூன்றென்னும் எண்ணுக்கு முவென்பதும் மூவென்பதும் ஆதேசமாம். அன்றுற்ற நாலுக்கு நான்கு=நாலென்னும் எண்ணுக்கு நான்கென்பதாதேசமாம். ஐந்தை=ஐந்தென்னும் எண்ணுக்கு ஐயென்பதாதேசமாம். ஆறறு=ஆறென்னும் எண்ணுக்கு அறுவென்பதாதேசமாம். ஏழெழுவாம்= ஏழென்னும் என்னுக்கு எழுவென்பதாதேசமாம். தொன்றுற்றவெட்டுக்கெண்= எட்டென்னு மெண்ணுக்கு எண்ணென்ப தாதேசமாம். ஒன்ப தொன்பானொடு தொண்டொள்ளும்=ஒன்பதென்னு மெண்ணுக்கு ஒன்பானென்பதுந் தொண் ணென்பதுந் தொள்ளென்பது மாதேசமாம்.*

*பான் பன் றுற்றநூறு பது பஃது பத்து=பத்தென்னு மெண்ணுக்குப் பானென்பதும் பன்னென்பதும் நூறென்பதும் பதுவென்பதும் பஃதென்பதும் ஆதேசமாம். நூறாயிரமே=நூறென்னும் எண்ணுக்கு ஆயிரமென்ப தாதேசமாம்.-எ-று.* (23)

**ஆவிக்குறிற்பின் ஞநமவத்தோன்றிலவ் வொற்றிடையா**
**மேவியபன்னொன்று தோன்றில்வவ்வாமெய்யிலைந்திருமுன்**
**றாவதுமுண்டொற் றொரோவழித்தோன்றிடு மாவுமவ்வாய்த்**
**தாவியவைந்தா முயிர்பின்பெறுவன தாமுமுண்டே.**

*(இ-ள்.) ஆவிக்குறிற்பின் ஞநமவத் தோன்றிலவ் வொற்றிடையாம்=உயிர்க்குற்றெழுத்தின் பின்னர் வருமொழிமுதல் ஞநமவக்கள் வந்து புணர்ந்தால் இடையே அவ்வவ்வந்த ஒற்றுமிக்கு முடியும். மேவிய பன்னொன்று தோன்றில் வவ்வாம்=பின்னும் அவ்வுயிர்க் குற்றெழுத்தின் பின்னர் வருமொழிமுதல் யகாரம் வந்து புணர்ந்தால் இடையே வகரவொற்றுவந்தாகமமாம். மெய்யிலைந்திரு மூன் றாவதும் உண்டு=ஒரோவிடத்து மெய்களுக்குள் டகாரமானது ணகாரமாதலுமாம். ஒற்றொரோவழித்தோன்றிடும்=ஒரோவிடத்து ஒற்றுவந்து தோன்றுதலுமுண்டு. ஆவுமவ்வாய்த் தாவிய ஐந்தாமுயிர் பின் பெறுவனதாமுமுண்டே=ஒரோவிடத்து நிலைமொழியின தீற்றினின்ற ஆகாரமானது அகரமாகக்குறுகி அக்குறுகலுடனே ஐந்தாமுயிர் பெறுதலுமுண்டு-எ-று.* (24)

**நின்றசொல்லீற்றுமெய்ம் முன்னாமுதலுயிர் நீண்டுமெய்யும்**
**பொன்றுமுயிரொ டுயிர்மெய்வந்தால்வந்த வாவியும்போய்க்**
**குன்றுமொரோவழிக் கூறியவாவி யொரோவழிப்போம்**
**அன்றிலனள ணமனக்களொன்றுக்கொன் றாவனவே.**

*(இ-ள்.) நின்றசொல்லீற்றுமெய்ம் முன்னாம் முதலுயிர் நீண்டு மெய்யும் பொன்றும் உயிரொடுயிர்மெய் வந்தால்=வருமொழிக்கு முதலாக உயிராதல் உயிர்மெய்யாதல் வந்து புணர்ந்தால் நிலைமொழி யீற்றயலினின்ற அகாரமானது ஆகாரமாக நீண்டு நிலைமொழியின தீறுங்கெடும். வந்த ஆவியும்போய்க் குன்றுமொரோவழி=ஒரோவிடத்து வருமொழி முதலுயிர்கெடுதலுமுண்டு. கூறிய ஆவி ஒரோவழிப்போம்= ஒரோவிடத்து நிலைமொழியினது ஈற்றயலுயிர் கெடுதலு முண்டு. அன்றி லன ளண மனக்கள் ஒன்றுக் கொன்றாவனவே- இவையல்லாமலும் லகாரத்துக்கு னகாரமும் ளகாரத்துக்கு*

*ணகாரமும் மகாரத்துக்கு னகாரமும் ஒன்றுக் கொன்றாதேசமாம்.-எ-து.* *(25)*

**கூறியசுட்டின்பின் னாய்தமுங்கூடுஞ் சுட்டீற்றுகர**
**மாறியுயிரிரண் டாவதுமாம்வந்த சுட்டொருகால்**
**வீறுடைநெட்டெழுத் தாகுமளபும் விரிந்துநிற்கு**
**நூறுடைவெள்ளிதட் டாமரைக்கோயி னுடங்கிடையே.**

*(இ-ள்.) கூறியசுட்டின்பின் ஆய்தமுங்கூடும்=நிலைமொழிச் சுட்டெழுத்தின் பின்னர் ஆய்தமும் வரப்பெறும். சுட்டீற்றுகர மாறி உயிரிரண்டாவதுமாம்=நிலைமொழிச்சுட்டினது ஈற்றினின்ற உகரமானது கெட்டு இரண்டாமுயிர் பெறுதலுமுண்டு. வந்த சுட்டொருகால் வீறுடை நெட்டெழுத்தாகும்=ஒரோவிடத்து வருமொழிச்சுட்டு நீளுதலுமுண்டு. அளபும்விரிந்து நிற்கும்=அந்நீளுதலுடனே அளபெடுத்தலுமுண்டு-எ-று. நூறுடை வெள்ளிதட் டாமரைக்கோயி னுடங்கிடையே யென்பது மகடூஉமுன்னிலை.* *(26)*

**துப்பார்பெயர்வேற் றுமையினகத்துந் தொகையின்கண்ணுஞ்**
**செப்பார்மொழிமுதற் பின்சாரியைவரிற் றேர்ந்தவற்று**
**ளொப்பார்மொழியீ றுயிரொடும்போமொரு காலுடல்போந்**
**தப்பாவுயிர்மெய் கெடுமொருகாலென்பர் தாழ்குழலே.**

*(இ-ள்.) பெயர் வேற்றுமை முடிக்குமிடத்துந் தொகை வேற்றுமை முடிக்கு மிடத்தும் மொழிமுதற்பின் சாரியைச்சொற்கள் வந்து புணர்ந்தால் ஒரோவிடத்து நிலைமொழியினதீறும் ஈற்றயலுயிருங் கெடுதலும் ஒரோவிடத்து நிலைமொழியினதீற்றொற்றுக் கெடுதலும் ஒரோவிடத்து நிலைமொழியின தீற்றுயிர்மெய்கெடுதலு முண்டென்று சொல்லுவர் மேலாகியபுலவர்-எ-று. தாழ்குழலே யென்பது மகடூஉ முன்னிலை.* *(27)*

**எண்ணிரண்டாமொற்றுப்பன்மூன்றுமெய்நின்றிவற்றின்பின்னே**
**யண்ணியதவ்வரிற் தட்டறவாமவை யாய்தமுமாம்**
**பண்ணியசந்தி பகராதனவும் பகர்ந்தவற்றாற்**
**கண்ணியுரைக்க மதியால்வனசக் கனங்குழையே.**

*(இ-ள்.) எண்ணிரண்டாமொற்றுப் பன்மூன்றுமெய் நின்று இவற்றின் பின்னே அண்ணிய தவ்வரிற் தட்டறவாம்= ளகாரலகார வொற்றீற்று நிலைமொழிப்பதத்தின் பின்னர் வருமொழிமுதல்*

தகாரம் வந்து புணர்ந்தால் வந்த தகாரமானது முறையே டகார றகாரங்களாம். அவை ஆய்தமுமாம்=பின்னும் அந்த ளகார லகாரங்கள் ஆய்தமாதலுமாம். பண்ணிய சந்தி பகராதனவும் பகர்ந்த வற்றாற் கண்ணியுரைக்க மதியால்=இச்சந்திகளுட் சொல்லாத சந்திகளுளவெனினும் இச்சொன்னசூத்திரங்களான் அடக்கிமுடிக்க -எ-று. வனசக் கனங்குழையே யென்பது மகடூஉ முன்னிலை. *(28)*

## சந்திப்படலம் முற்றும்

# இரண்டாவது-சொல்லதிகாரம்

## வேற்றுமைப்படலம்

**எட்டாமெழுவாய் முதற்பெயர்வேற்றுமை யாறுளவாங்**
**கட்டார்கருத்தா முதற்காரகமவை கட்டுரைப்பி**
**னொட்டார்கருத்தா கருமங்கரணமொண் கோளியொடுஞ்**
**சிட்டாரவதியொ டாதாரமென்றறி தேமொழியே.**

(இ-ள்.) எழுவாய் வேற்றுமை முதலாகப் பெயர் வேற்றுமை எட்டுளவாம். அவை தாம் எழுவாய் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் மூன்றாம் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் விளிவேற்றுமையும் எனக்கொள்க. கருத்தாமுதற் காரகமாறுளவாம். அவை சொல்லும் பக்கத்துக் கருத்தாக் காரகம் கருமக் காரகம் கரணக் காரகம் கோளிக் காரகம் அவதிக் காரகம் ஆதாரக் காரகம் என ஆறுவகைப்படும். - எ-று. தேமொழியே யென்பது மகடூஉ முன்னிலை. (1)

**ஒருவனொருத்தியொன் றாஞ்சிறப்போடுபல்லோர்பலவைக்**
**கருதுமுறையிற் கலப்பனவேற்றுமை காண்முதல்சு**
**மருவும்அர் ஆர்அர்கள் ஆர்கள்கள் மார்முதல்வேற்றுமையி**
**னுருவம்விளிவேற் றுமையொழித்தெங்கு முறப்பெறுமே.**

(இ-ள்.) ஒருவனைக் கருதின சொல்லும் ஒருத்தியைக் கருதின சொல்லும் பலரைக் கருதின சொல்லும் ஒன்றைக் கருதின சொல்லும் பலவைக் கருதின சொல்லும் ஒருவனைச் சிறப்பித்த சொல்லும் ஒருத்தியைச் சிறப்பித்த சொல்லும் ஒன்றைச் சிறப்பித்த சொல்லுமெனப் பெயர்ச்சொல்லெல்லாம் எட்டுவகைப்பட்ட பிரகிருதியாம். அவற்றுள் சுவ்வும் அர்ரும் ஆரும் அர்களும் ஆர்க்களும் கள்ளும் மாருமென இவையேழும் முதல் வேற்றுமைக் குருபுகளாம். இவை எட்டாம் வேற்றுமையொழித்து ஒழிந்த வேற்றுமையாறின் முன்பு நிற்கவும்

பெறும் ஒரோவிடத்து - எ-று. எங்குமென்ற உம்மையான் விளிவேற்றுமைக்கு முன்னும் சிறுபான்மை வரப்பெறும். (2)

**ஒருவனொருத்தி பலரொன்றொடுபல வுஞ்சிறப்பி**
**னுருபுகண்மூன்று முடன்வைத்துப் பின்னெட்டுவேற்றுமையு**
**மருவநிறுவி யுறழ்தரவாங்கா ரகபதங்க**
**ளுரவுமலியு மறுபத்துநான்குள வொண்டொடியே.**

(இ-ள்.) முன்சொல்லப்பட்ட எட்டுப் பிரகிருதியை முறையானே நிறுத்தி அவையிற்றின் பின்னாக எழுவாய் வேற்றுமை முதலாகிய எட்டு வேற்றுமையையும் அடைவே வைத்துறழ அவை அறுபத்துநான்கு காரக பதமாம்-எ-று. வரலாறு:- சாத்தன் கொற்றன்-ஒருவனைக்கருதினசொல். தட்டார் ஊரார்-பலரைக் கருதினசொல். யானை மரம் - ஒன்றைக் கருதினசொல். யானைகள் மரங்கள்-பலவைக் கருதினசொல்; இவை கள்ளென்னும் பிரத்தியம் அழிந்து யானைபல மரம்பல எனவும் வரும். சாத்தனார் கொற்றனார் ஒருவனைச் சிறப்பித்த சொல்; இராமர் கண்ணர் என அர் என்னும் பிரத்திய மீறாய் வரவும் பெறும். நரியனார் நாரையார்-ஒன்றைச் சிறப்பித்தசொல். இச்சொல் லெட்டும் வேற்றுமையெட்டினுங் கூடிக் காரக பதங்கள் அறுபத்து நாலாமாறு காண்க. வரலாறு-சாத்தன் சாத்தனை சாத்தனால் சாத்தனுக்கு சாத்தன்பக்கலினின்று சாத்தனுடைய சாத்தன்பக்கல் சாத்தனே எனவும், கொற்றி கொற்றியை கொற்றியால் கொற்றிக்கு கொற்றிபக்கலினின்று கொற்றியுடைய கொற்றிபக்கல் கொற்றீ எனவும், நாட்டார் நாட்டாரை நாட்டாரால் நாட்டாருக்கு நாட்டார்பக்கலினின்று நாட்டாருடைய நாட்டார்பக்கல் நாட்டீரெனவும், யானை யானையை யானையால் யானைக்கு யானைபக்கலினின்று யானையுடைய யானைபக்கல் யானாயெனவும், மரங்கள் மரங்களை மரங்களால் மரங்களுக்கு மரங்கள்பக்கலினின்று மரங்களுடைய மரங்கள்பக்கல் மரங்காளெனவும், சாத்தனார் சாத்தனாரை சாத்தனாரால் சாத்தனாருக்கு சாத்தனார் பக்கலினின்று சாத்தனாருடைய சாத்தனார்பக்கல் சாத்தனாரேயெனவும், கொற்றியார் கொற்றியாரை கொற்றியாரால் கொற்றியாருக்கு கொற்றியார் பக்கலினின்று கொற்றியாருடைய கொற்றியார்பக்கல் கொற்றியாரேயெனவும், யானையார் யானையாரை யானையாரால் யானையார்க்கு யானையார்பக்கலினின்று யானையாருடைய யானையார்பக்கல் யானையாரே யெனவும் வரும். (3)

**ஆதியிலாண்பெ ணலியென்றுநாட்டி யதினருகே**
**யோதியவேற்றுமை யேழையுஞ்சேர்வித் தொருங்கதன்பின்**
**வாதியலொன்றோ டிரண்டுபலவென வைத்துறழத்**
**தீதியலாத வறுபத்துமூன்றுறுந் தேர்ந்தறியே.**

*(இ-ள்.) வடமொழிக் காரகபதம் வருமாறு. ஆண் பெண் அலியென்று வைத்து அவையிற்றின்பின் எழுவாய் வேற்றுமை முதலாக ஏழாம் வேற்றுமை இறுதியாக ஏழுவேற்றுமையுஞ் சேர்த்து ஏகவசனம் துவிவசனம் பகுவசனமென்னும் மூன்று வசனத்தையுங் கூட்டி உறழ அறுபத்துமூன்று காரகபதமாம். பின்னையும் உயிரிறுதியும் ஒற்றிறுதியுமாகக் கூறுவார்க்கு நூற்றிருபத்தாறாம். அவையெல்லாம் வடமொழியிற் கண்டுகொள்க.* *(4)*

**கூறியசொற்பின் பொருண்மாத்திரத்திற் குலவெழுவாய்**
**வீறுடைவேற்றுமை யெய்துமொருவ னொருத்தியொன்றி**
**னேறியசுப்பல விற்சுவ்வுங்கள்ளுமெங் கும்மழியு**
**மூறியசுச்சிறப் புப்பலரிற்கள் ளொழிந்தனவே.**

*(இ-ள்.) முன் சொன்ன எட்டுப் பிரகிருதிக்கும் பின்னாகச் சொல்லின் பொருண் மாத்திரத்தை விளக்குதற் பொருட்டாகச் சு அர் ஆர் அர்கள் ஆர்கள் கள் மார் என்று சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமைப் பிரத்தியமேழும் வரும். வருமிடத்து ஒருவனைக் கருதின சொல்லின் பின்னும் ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்னும் ஒன்றைக் கருதின சொல்லின் பின்னும் சு என்னும் பிரத்தியமொன்றே வரும். பலவைக் கருதினசொல்லின் பின்பு சு, கள் என்னும் பிரத்தியமிரண்டும் வரும். எல்லாவிடத்தும் சு என்னும் பிரத்தியம் அழிந்தே வரும். எல்லாவிடத்தும் அழியுமாயின் வருதற்குக் காரண மென்னெனின் வடமொழியுடையான் வாரியென்னுஞ் சொல்லை வைத்து முதல் வேற்றுமை ஏகவசனத்தைப் பொருள்விளக்குதற்பொருட்டு எவ்வண்ணம் இட்டழித்தான் இவனும் அது போலஆக்கி யழித்தாலல்லாது பதமாகாதென்று இட்டழித்தானென்க. ஒருவனைச் சிறப்பித்தசொல்லின் பின்பும் ஒருத்தியைச் சிறப்பித்தசொல்லின் பின்பும் ஒன்றைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் அர் ஆர் அர்கள் ஆர்கள் கள் மார் என்னும் ஆறு பிரத்தியம் வரும். இவை எல்லாவிடத்தும் ஆவனவல்ல. பலரைக் கருதினசொல்லின் பின்பு ஆறு பிரத்தியமுமாம்-எ-று. சாத்தன் கொற்றன் என ஒருவனைக் கருதின சொல்லின் பின்பும் சாத்தி*

கொற்றி என ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்பும் யானை குதிரை என ஒன்றைக் கருதினசொல்லின் பின்பும் சு என்னும் எழுவாய் வேற்றுமைப் பிரத்தியம் நிறுத்துக. நிறுத்தவே சொல்லின் பொருண்மாத்திரத்தை விளக்கிற்றாம். சொல்லாவது சாத்தனென்று உச்சரிக்கப்படாநின்றசொல். அதன் பொருளாவது கரசரணாதி அவயவங்களை யுடையதொரு பிண்டமாய்ச் சாத்தனாவானெவனென்று வினாவினார்க்கு இவனென நின்னாற் சொல்லப்படுகின்றான் யாவன் அவனெனக் கொள்க. எங்குமழியு மேறியசுவ்வென்பதனால் அச்சொற்களின் பின்பு நின்ற சுவ்வை உலோவித்துச் சாத்தன் கொற்றனென்று உச்சரித்துக்கொள்க. பலவிற் சுவ்வுங் கள்ளுமென்பதனால் சுவ்வென்னும் பிரத்தியத்தைக் கொடுத்து மரம் நின்றவெனவும் கள்ளென்னும் பிரத்தியத்தைக் கொடுத்து மரங்கணின்ற வெனவும் முடிக்க. சிறப்புப்பலரிற் சுவ்வொழிந்தன என்பதனாற் பிரகிருதிகளின்பின்பு அர் ஆர் அர்கள் ஆர்கள் கள் மார் என்னும் ஆறுபிரத்தியங்களுங் கொடுத்துப் பன்மையாக்கி இவர்கள் சிலர் வேளாளர், இவர்கள் சிலர் பார்ப்பார்கள், இவர்கள் சிலர் குறத்திகள் இவர்கள் சிலர் நம்பிமாரென முடிக்க. கள் என்னும் பிரத்தியம் மார் என்னும் பிரத்தியத்தின் முன்னும் பின்னும் வரப்பெறும். இவையெல்லாம் வேண்டுமிடத்து இறுதி சிதைத்து முடித்துக் கொள்க. குலவெழுவாயென்று சிறப்பித்தவதனால் எழுவாய் வேற்றுமைப் பிரத்தியங்களிற் சுவ்வென்னும் பிரத்தியமொழித்து ஒழிந்த ஆறுபிரத்தியமும் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை யீறாக ஆறுவேற்றுமைப் பிரத்தியங்களின் முன்புந் தொகையின் கண்ணும் ஒரோவழி வந்துநிற்கவும் பெறுமென்க. விழுமியான் விழுமியாள் விழுமியோ ரென்று ஆகலுமுண்டு. (5)

**ஐயென்பதுகரு மத்திரண்டாவ ததுவொருகாற்**
**பையவழிதரு மூன்றோடொடாலாம் பகர்கருத்தா**
**வையநிகழ்கர ணத்தின்வருங்குப் பொருட்டென்பது**
**மெய்திகழ்வேற்றுமை நான்காவதாமிக்க கோளியிலே.**

(இ-ள்.) ஐயென்பது இரண்டாம்வேற்றுமைப்பிரத்தியம். அது கருமத்தின் காரகமாம். அஃது ஒரோவழி அழிந்துநிற்றலுமுண்டு. அழிந்தாலும் எழுவாய் வேற்றுமையிற் சுவ்வேபோலத் தன் வேற்றுமைப்பொருளை விளக்கும். மூன்றாம் வேற்றுமைக்கு ஒடு ஓடு ஆல் என மூன்றுபிரத்தியமுள. அவை கருத்தாவினுங் கரணத்தினும் வரும். நான்காம் வேற்றுமைக்குக் கு பொருட்டு

என்னுமிரண்டு பிரத்தியமுள. அவை கோளியென்னுங் காரகத்தின்வரும்-எ-று. வரலாறு: சாத்தனை அழைத்தான், கொற்றியைக் கொடுத்தான், கடலை நீந்தினானென்பன இரண்டாம் வேற்றுமையிற் கருமக்காரகமாம். அது ஒருகாற் பையவழிதருமென்பதனாற் சோறுண்டான் நீர்குடித்தான் என வேற்றுமைப்பிரத்தியமழிந்தும் வரும். "முதல் வேற்றுமையி-னுருவம்விளி வேற்றுமையொழித்தெங்கு முறப்பெறுமே" என்பதனால் வேளாளரை நாட்டாரை வேளாளர்களை நாட்டார்களை தவசிகளை நம்பிமாரை என்புழி இரண்டாம் வேற்றுமையின்முன்பு எழுவாய் வேற்றுமையினுருபுகள் வந்தவாறுகாண்க. மூன்றோடொடாலாம் பகர்கருத்தா வையநிகழ்கரணத்தின் வருமென்பதனால் தச்சனாலெடுக்கப் பட்டது வீடு, தட்டானாற் செய்யப்பட்டது தாலியெனவும், வாச்சியாற் செதுக்கப்பட்டது மரம், எழுத்தாணியா லெழுதப்பட்டதேடு எனவும் வருவன முறையே மூன்றாம் வேற்றுமையிற் கருத்தாக்காரகமும் கரணக்காரகமுமாம். சாத்தனொடுண்டான் சாத்தனோடுண்டான் ஊரோடு கலந்தானென்பதில் ஒடு-ஓடு என்னும் பிரத்தியங்கள் மூன்றாம் வேற்றுமையிற் கிரியா பதத்தோடுங்கூடி முடிந்தவாறு கண்டுகொள்க. தொல்காப்பியனார் ஒடு வென்னும் பிரத்தியமொன்றே மூன்றாம் வேற்றுமைக்கு உருபாகச் சொன்னார். "ஆலுமானுமூன்றனுருபே" என்றார் அவினயனார்.

> *சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்*
> *கலத்துணீர் பெய்திரீஇ யற்று*

என்புழி ஆலென்னு மூன்றாம்வேற்றுமையுருபு வந்தவாறு காண்க.

> வாரம் புலர்ந்த மனத்தார் மணிக்குறங்கி
> னீரம் புலர்ந்தாலு மேகாரிவ்-வீர
> ரகிலோடு காவிரிநீ ராடி வருவார்
> துகிலொடு சுற்றிச் சுழன்று

எனவும்,

> பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
> ருன்னேனென் றூழுலக்கை பற்றினேற்-கென்னோ
> மனனோடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
> புனனாடன் பேரே வரும்

எனவும்,

சுழியோடெறிபுனற் பொன்னிநன்னாடன் சுரர்குருவின்
வழியோனமலன் மயிலையன்னீர்மணி வாயினின்றும்
மொழியோதெரிந்தில கொங்கையுஞ்செய்ய முகத்திரண்டு
விழியோபடுகுலையோ விலங்கோவந்து நின்றதுவே

எனவும் இவையிற்றில் ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமைப் பிரத்தியம் வந்தவாறு காண்க.

நோயொ டுறவென்னை கொல்லோ நுனையெஃகின்
வாயிடை மாளா தவர்க்கு

வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு

என ஒடு என்னும் பிரத்தியம் வந்தவாறு கண்டுகொள்க.

"முதல் வேற்றுமையி னுருவும் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே" என்பதனால் வேளாளராற் செய்யப்பட்டது தவசிகளாற்செய்யப்பட்டது நம்பிமாராற் செய்யப்பட்டது என மூன்றாம் வேற்றுமையின்முன்னே எழுவாய்வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க. "குப்பொருட்டென்பது மெய்திகழ் வேற்றுமை நான்காவதா மிக்ககோளியிலே" என்பதனால் இரப்பானுக்குச் சோறிட்டான், ஏற்பானுக்குப் பொன்னீந்தான், நல்லானுக்கு மந்திரங் கொடுத்தான், தெய்வத்துக்குப் பூவிட்டான் என நான்காம்வேற்றுமையிற் கோளிக்காரகம் வந்தவாறுகாண்க. "முதல்வேற்றுமையி னுருவம் விளிவேற்றுமை யொழித் தெங்குமுறப்பெறுமே" என்பதனால் நாட்டார்க்கிட்டான், வேளாளர்களுக்களித்தான், தவசிகளுக்குக் கொடுத்தான், நம்பிமார்களுக்கீந்தானென நான்காம் வேற்றுமையின் முன் எழுவாயுருபு வந்தவாறு காண்க. கரும்பு சோறு என நிறுத்திப் பொருட்டு என நான்காம் வேற்றுமையுருபு வருவித்து இன்னென்னுஞ் சாரியைச் சொல் இடைப்படுத்துச் சந்திகாரியம்பண்ணிக் கரும்பின்பொருட்டு வேலியிட்டான், சோற்றின் பொருட்டூர் சேவித்தான் எனமுடித்துப் பொருட்டுருபு வந்தவாறு காண்க. (6)

**ஆனாளாரார்க ளதுவினவாறிற் குடைப்பின்குவ்வேல்
நூனாடியபத மாநுவலாதார மேழினிற்கே
தானாமுழைவயின் பக்கலுழியில்கண் சார்பிறவும்
வானாமலிநின்ற வற்றில்வருஉமைந் தவதியிலே.**

(இ-ள்.) ஒன்றினைத் துடக்கிக் கோடுநிற்றலே தனக்குப் பொருளாகவுடைய ஆறாம்வேற்றுமைக்கு ஆன் ஆள் ஆர் ஆர்கள் அது இன என்னுஞ் சொற்களின்முன் உடையென்னும் ஆறாம்வேற்றுமைபெற்று உடையான் உடையாள் உடையார் உடையார்கள் உடையது உடையினவென்னும் ஆறுபிரத்தியமும் முன் சொல்லப்பட்ட எட்டுப்பிரகிருதிகளின் பின்பு மரபு பிழையாமல்வரும். உடையென்னும் வேற்றுமையின்பின்பு யகார மாகமமாய் உடையவென்றும் வரும். இந்த ஏழுசொற்களின் முன்னின்ற ஆறாம்வேற்றுமை தான் காரகபதமாகாதே ஒன்றைத்துடக்கிக் கோடுநிற்குமிடத்து வரப்பெறும். ஆறாம்வேற்றுமை காரகபதமாகும் பொழுது கு என்னும் பிரத்தியமொன்றேவரும். ஆதாரமென்று சொல்லப்பட்ட பொருளின்மேல் வரும் ஏழாம்வேற்றுமைக்குக் கே உழை வயின் பக்கல் உழி இல் கண் என்னும் ஏழுபிரத்தியமுமுரிய. சார்பிறவுமென்பதனால் இடம் இடை முன் பின் கீழ் மேல் உள் புறம் வாய் முதலியவுமுரிய. வானாமலியென்பதன்பொருள் வாலியதாய் நாவின்கண் மலியாநின்றவென்பது. அவதியென்று சொல்லப் பட்ட பொருளின் ஐந்தாம்வேற்றுமைப் பிரத்தியமானது ஏழாம் வேற்றுமைப் பிரத்தியங்களின்பின் நின்று என்னுஞ் சொற்பெற்று வரும்-எ-று. வரலாறு: இவன் கொற்றனுடையான் இவள் கொற்றனுடையாள் இவர் கொற்றனுடையார் இவர்கள் கொற்றனுடையார்கள் இது கொற்றனுடையது இவை கொற்றனுடையின எனவரும். இவை கொற்றனுடையன இது கொற்றனது என முடிப்பாருமுளர். இவனுடையமகன் கொற்றனுடையவீடு என உடையவென்னும் பிரத்தியத்தானுமுடியும். இவையெல்லாம் ஆறாம்வேற்றுமையாம். இவ்வேற்றுமை தான் காரகபதமாகாதே ஒன்றைத் துடக்கிக் கோடுநின்று முடியும். குவ்வேனூனாடியபதமாமென்பதனாற் பிரகிருதிகளின் பின்பு கு என்னும் நாலாம்வேற்றுமைப் பிரத்தியம்வருவித்து உகரச்சாரியையை இடைப்படுத்துச் சந்திகாரியம் பண்ணிக் காரகபதமாக்கிக் கிரியாபதத்தோடுங் கூட்டிச் சாத்தனுக்கு மகனானானென முடிக்க. "முதல்வேற்றுமையி னுருவம் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே" என்றதனால் ஆறாம் வேற்றுமையுருபுக்கு முன்பாக எழுவாய் வேற்றுமை உருபுகளும் நிறுத்தி முடிக்க. ஆதார மேழினிற்கே தானா முழைவயின் பக்கலுழியில்கண்

சார்பிறவுமென்பதன் வரலாறு:- நீர்க்கே விழுந்தான், சாத்தனுழை அறிவுநின்றது, கொற்றன்வயிற் பொறையிருந்தது, இராமன்பக்கல் நன்மைவதிந்தது, தேவனுழிப் பெருமைதங்கிற்று, எள்ளில் எண்ணெயுண்டு, வீட்டின்கண் எலிபுகுந்தது, மாவினிடம் மாங்காய்பழுத்தது, தேவதத்தனிடை அடக்கமெய்திற்று, ஆலின் கீழ்ப் பசுக்கிடந்தன, நீரின்மேல் நுரையெழும்பிற்று. வேர்ப்புறந் தோல்செறிந்தது, வீட்டின்முன் தோட்டமுளது, காட்டினுட்புலி பாய்ந்தது, வெளியின்பின் நீர்சூழ்ந்தது, தேவதத்தன்வாய் அறிவுவளர்ந்தது எனவரும். "முதல்வேற்றுமையி னுருவம் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே" என்பதனால் மலையாளர்பக்கற் சேவகஞ்செய்தான், நம்பனாரிடைப் பெருமையுளது என ஏழாம் வேற்றுமைப் பிரத்தியத்தின்முன் எழுவாயுருபு வந்தவாறுகாண்க. அவதிப்பொருளிலே ஐந்தாம்வேற்றுமைப் பிரத்தியம்வருமாறு: சாத்தனுழைநின்றுந் தீமையகன்றது, பெரியோரிடைநின்றுஞ் சின நீங்கிற்று, மலையினின்றும் அருவிவீழ்ந்தது எனவரும். ஐந்தாம் வேற்றுமைக்கு இன் என்னும் பிரத்தியமும்வரும். மக்களிற் கொற்றனல்லன், மரத்திற் பனைநன்று, ஊரினீங்கினானெனவரும்.

*வானின் றுலகம் வழங்கி வருதலாற்*
*றானமிழ்த மென்றுணரற் பாற்று*

இஃது ஐந்தாம்வேற்றுமையுருபாகிய *நின்றென்பதனான் முடிந்தது. இனித் தேவதத்தனாரிடைநின்று பொன்வந்தது என "முதல் வேற்றுமையி னுருவம் விளிவேற்றுமை யொழித்தெங்குமுறப் பெறுதல்காண்க". (7)

**ஆயாளீயேயவ்வொ டாவானோலோயீ ரளபெடைகாள்**
**மாயாவிளியி னுருபுகண்மற்றிவை முன்னிலைக்கண்**
**ணேயாகுமுன்சொன்ன வேழ்வேற்றுமையு மெல்லாவிடத்து**
**மோயாதியல்கை யுணர்பெரியோர்த முரைப்படியே.**

(இ-ள்.) ஆய் ஆள் ஈ ஏ அ ஆ ஆன் ஓல் ஓய் ஈர் என்னுமுருபுகளும் இவற்றினளபெடைகளும் காள் என்னும் பிரத்தியமும் விளி வேற்றுமைக்குரிய. இவ்விளிவேற்றுமை முன்னிலைக் கண்ணேவரும். மற்றை ஏழுவேற்றுமையுந் தன்மை

*நிற்பவென்னும் வினையெச்சம் நின்றெனத் திரிந்துநின்ற தென்பது பரிமேலழகர் கூற்று.

படர்க்கையென்னும் மூன்றிடத்தினும்வரும்- எ-று. விளித்தல் தன்னை நோக்குவித்துக்கொள்ளுதற் பொருட்டாம். ஓயாதென்று விகற்பித்தவதனால் விளிவேற்றுமைப்பிரத்தியம் பின்புவந்தால் முன்புநின்ற பிரகிருதியினீறு ஒரோவிடத்தழிதலுமுண்டு. வரலாறு:- பிள்ளாய் ஆனாயெனவும் உடையாள் அரியாளெனவும் செல்வீ அரங்கீயெனவும் இராமனே மன்னனேயெனவும் மன்னவ நாயகவெனவும் சாத்தா கொற்றாவெனவும் பெரியான் காத்தானெனவும் சாத்தாவோல் கொற்றாவோலெனவும் சாத்தாவோய் கொற்றாவோயெனவும் அரையீர் வெளியீரெனவும் வரும். இவற்றின் இறுதி சிதைந்துமுடிந்தபடி அறிந்துகொள்க. அளபெடை சாத்தாஅ கொற்றீஇ எனவரும். பெண்காள் மரங்காள் என்பனவற்றிற் காளென்னும் பிரத்தியம் ஆமாறுகாண்க. விளிவேற்றுமைக் காரகபதங்களெல்லாம் இறுதி உதாத்தமாக உச்சரித்தாலல்லது பொருள் விளங்காதென்க. அளபெடையான் வரும் உருபுகள் சேயாரை விளிக்கும்போதல்லது வாரா. ஆய்முதலாகிய பிரத்தியங்கள் அளபெடுத்தலுமன்றி இறுதியளபெடுத்தலும் இறுதிசிதைந்து நின்ற ஈற்றயலெழுத்தள பெடுத்தலும் அவ்வீற்றயல்திரிந்தளபெடுத்தலும் உண்டு. (8)

**உன்னுமென்னுந்தன்னும் யாவுமவ்வும்மிவ்வு முவ்வுமெவ்வு**
**மென்னுமிவற்றின்முன் னீநான்றான் சுவ்வரில் யாமுதல**
**வன்னும் வள்ளுந்துவ்வும் வையுஞ்சிறப்பினீர் நாமொடுதாம்**
**பின்னிலைந்தும்வர் பலரிற்கள்ளோடுவர் கள்ளென்பவே.**

(இ-ள்.) உன் என் தன் எனும் மூன்றும் யா அ இ உ எ எனுமைந்துமாக எட்டுப்பிரகிருதியையும் வேற்றுமைப் பிரத்தியத்தோடு கூட்டிமுடிக்கும்பொழுது முன்புநின்ற மூன்றையுஞ் சுப்பிரத்தியம் பண்ணி எழுவாய்வேற்றுமையில் நீ நான்தானென அடைவே ஆதேசமாக்குக. இவையிற்றைச் சிறப்பிக்கக் கருதினபொழுது நீர் நாம் தாம் என ஆதேசமாக்குக. யா முதலாகிய ஐந்தினையும் வன் வள் து வை என்று அடைவே பிரத்தியங் கொடுத்து முடிக்க இவற்றைச் சிறப்பிக்கக் கருதினபொழுது வர் என்னும் பிரத்தியங் கொடுக்க. இவையெட்டையும் பன்மையாக்கக் கருதினபோது கள் வர்களென்னும் இரண்டு பிரத்தியங் கொடுத்து முடிக்க. வரலாறு: உன் என் தன் என்பன சுப்பிரத்தியத்தோடு சேர்ந்து நீ நான் தான் என வரும். உன் என்பதற்கு நும் என்பதும் நின் என்பதும் நான்

என்பதற்கு யான் என்பதும் ஆதேசமாம். யா முதலியன யாவன் அவன் இவன் உவன் எவன் எனவும் யாவள் அவள் இவள் உவள் எவள் எனவும் யாது அது இது உது எது எனவும் யாவை அவை இவை உவை எவை எனவும் வரும். அது இது உது எது என்பன அஃது இஃது உஃது எஃது என ஆதேசமாம். சிறப்பில் முன்னின்ற மூன்றும் நீர் நாம் தாம் எனவும் பின்னின்ற ஐந்தும் யாவர் அவர் இவர் உவர் எவர் எனவும் வரும். நாம் யாம் எனவும் யாவர் யார் எனவும் ஆதேசமாதலுமாம். பன்மையில் நீர்கள் நீங்கள் நாங்கள் தாங்கள் எனவும் யாவர்கள் அவர்கள் இவர்கள் உவர்கள் எவர்கள் எனவும் வரும். நீர்களென்பது நீயிர்கள் நீவிர்களென ஆதேசமாதலுமுண்டு. நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம். நாங்களென்பது யாங்களென ஆதேசமாம். இவையெல்லாம் எழுவாய்வேற்றுமை உருபாகக் கண்டுகொள்க. "முதல்வேற்றுமையி னுருவம் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே" என்பதனால் உன்னை என்னை தன்னை அவனை இவனை உவனை எவனை எனவும் உம்மை எம்மை தம்மை எனவும் யாவரை அவரை இவரை உவரை எவரை எனவும் உங்களை எங்களை தங்களை எனவும் இரண்டாம் வேற்றுமையோடு கூட்டி முடிக்க. உங்களையென்பது நுங்களையென ஆதேசமாம். உன்னால் என்னால் தன்னால் எனவும் உன்னோடு தன்னோடு என்னோடு எனவும் யாவனால் யாவனோடு எனவும் மூன்றாம் வேற்றுமையோடு கூட்டிமுடிக்க. ஒழிந்தனவும் இவ்வாறேவரும். இவை முடிக்குமிடத்துச் சாரியைச்சொற்களையும் விகாரங்களையும் வருமிடமறிந்து வருவித்துமுடிக்க. உன்னென்னுஞ்சொல் முன்னிலைச்சொல் லேயாயினும் இவற்றுடன் கூட்டிமுடிக்கப்படுதலால் விளிவேற்றுமைக்கு உரித்தன்றென்க. வன் வர் சு என்னும் பிரத்தியங்கள் வந்தால் எண்ணுப்பெயரில் மரபு பிழையாமல் முடிக்க. அவை வருமாறு:- ஒன்றென்பது ஒருவென ஆதேசமாகி வன் என்னும் பிரத்தியத்தோடு ஒருவன் எனவும் வர் என்னும் பிரத்தியத்தோடு ஒருவர் எனவும் வரும். இப்பிரத்தியம் மற்றையெண்களோடு இருவர் மூவர் நால்வர் ஐவர் அறுவர் எழுவர் எண்மர் ஒன்பதின்மர் பதின்மர் எனவரும். ஒன்று இரண்டு மூன்று என்பன சுப் பிரத்தியத்தான் முடியும். (9)

**வேற்றுமைப்படலம் முற்றும்**

# உபகாரகப் படலம்

**மேதகுநற்றொழில் செய்வான்கருத்தா வியன்கருவி**
**தீதில்கரணஞ் செயப்பட்டதாகுந் திறற்கருமம்**
**யாதனினீங்கு மவதியதாமிட மாதாரமாங்**
**கோதறுகோளிமன் கொள்பவனாகுங் கொடியிடையே.**

*(இ-ள்.)* முன்சொல்லிப் போந்த ஆறு காரக பதங்களுமாமாறு: யாதொரு தொழிலைச்செய்வானெவன் அவன் கருத்தாக்காரகமாம், அத்தொழிலினைச்செய்தற்குக் கருவியாயிற்று யாது அது கரணக்காரகமாம், யாதொன்று செய்யப்பட்டது அது கருமக் காரகமாம், யாதொன்றினின்றும் ஒருபொருணீங்குவது அஃது அவதிக்காரகமாம், யாதொன்று ஒருதொழில் செய்தற்கிடமாயிற்று அஃது ஆதாரக்காரகமாம், யாவனொருவன் ஒருபொர்ருளைக் கொள்வான் அவன் கோளிக்காரகமாம்-எ-று. கொடியிடையே யென்பது மகடூஉ முன்னிலை. (1)

***வரைநின்றி ழிந்தங்கொர் வேதியன்வாவியின் கண்மலிந்த**
**விரைநின்றபூவைக் கரத்தாற்பறித்து விமலனுக்குத்**
**துரைநின்றதீவினை நீங்கவிட்டானென்று சொல்லுதலு**
**முரைநின்றகாரக மாறும்பிறக்கு மொளியிழையே.**

*(இ-ள்.)* வரைநின்றிழிந்தங்கொர்வேதியன் என்பதில் "யாதனி னீங்குமவதியதாம்" என்பதனால் அந்தணனை நீக்கப்பட்டமலை அவதிக் காரகமாயிற்று, அங்கொர் வேதியன் பறித்திட்டான் என்பதில் "மேதகுநற்றொழில்செய்வான்கருத்தா" என்பதனால் வேதியன் கருத்தாக் காரக மாயினான், வாவியின் கண் ணென்பதில் "இடமாதாரமாம்" என்பதனாற்

---

* "இந்திரன்றாமரையைக் கரத்தாற் கொய்திறைவனுக்குத்-தந்திருங்குற்றத்தினீங்கி விண்மேலிருந்தானெனலும் - வந்தன காரகமெல்லாம் வகுத்தவழி முறையே". . .

என்றார் பிறரும்.

*பூப்பறித்தற்கிடமாகியவாவி ஆதாரக் காரகமாயிற்று, மலிந்தவிரைநின்றபூவை என்பதிற் "செயப்பட்டதாகுந்திறற்கருமம்" என்பதனாற் பறித்திடப்பட்ட பூக் கருமக் காரகமாயிற்று, கரத்தாற்பறித்தென்பதில் "வியன்கருவிதீதில் கரணம்" என்பதனாற் பூப்பறித்தற்குக் கருவியாக நின்ற கரம் கரணக்காரகமாயிற்று, விமலனுக்குத் துரைநின்ற தீவினை நீங்கவிட்டான் என்பதிற் "கோதறுகோளிமன் கொள்பவ னாகும்" என்பதனாற் பூவைக் கொள்பவனான விமலன் கோளிக்காரகமாயினான்.- எ-று. இனி முன்சொல்லப்பட்ட ஆறுகாரகமும் இருபத்து மூன்றாய் விரியுமென அவற்றின் வேறுபாடு சொல்கின்றார்.* (2)

**காரணந்தான்றெரி தான்றெரியாக்கரு மந்தலைமை**
**யாரணங்கேயைந் துளகருத்தாவச லஞ்சலமாம்**
**பூரணமாகு மவதிபுறமக மாங்கரணஞ்**
**சீரணங்கார்வங் கிடப்பிரப்பாங்கோளி தேமொழியே.**

**பற்றொடுவீடே யிருபுறந் தான்றெரி தான்றெரியா**
**நற்கருத்தாத்தீ பகமாங்கருமநான் காதாரமேற்**
**பொற்பமர்சேர்வு கலப்புப்புலனோ டயலென்பதாங்**
**கற்புமலியு மிருபத்துமூவகைக் காரகமே.**

*(இ-ள்.) காரணக் கருத்தாவும் தான்றெரி கருத்தாவும் தான்றெரியாக் கருத்தாவும் கருமக் கருத்தாவும் தலைமைக்கருத்தாவுமென ஐந்துவகைப்படும் கருத்தாக்காரகம்; அசலமென்னு மவதியும் சலமென்னு மவதியுமென இரண்டுவகைப்படும் அவதிக்காரகம்; புறக்கரணம் அகக்கரணமென இரண்டுவகைப்படுங் கரணக்காரகம்; கரணமெனினுங் கருவியெனினுமொக்கும். ஆர்வக்கோளி கிடப்புக்கோளி இரப்புக்கோளி என மூன்றுவகைப்படுங் கோளிக்காரகம்; பற்றுக்கருமம் வீட்டுக்கருமம் இருபுறக்கருமம் தான்றெரிகருமம் தான்றெரியாக்கருமம் கருத்தாக்கருமம் தீபகக்கருமமென ஏழுவகைப்படுங் கருமக்காரகம்; சேர்வாதாரம் கலப்பாதாரம் புலனாதாரம் அயலாதாரம் என நான்கு வகைப்படும் ஆதாரக் காரகம்- எ-று. இவையிற்றினுக்குதாரணம் வருமாறு:- சாத்தன் கொற்றனை அஞ்சுவித்தான் கொற்றன் அரங்கனைப் போக்கினான் புத்தன் கண்ணனை உய்வித்தான் என்புழிக் கருத்தா கிரியைக்குக் காரணமாய் நிற்றலிற் காரணக்கருத்தாவாயிற்று. விழுமியோராற் செய்யப்படாநின்றது*

நன்மை, சாத்தனாலெறியப்பட்டது கல், கொற்றனாற் கொள்ளப்பட்டது வீடு என்புழிக் கருத்தா இடந் தெரிந்து நிற்றலாற் தான்றெரிகருத்தாவாயிற்று. தேவதத்தன் சோற்றை யடுகின்றானென்புழித் தேவதத்தனென்னுஞ் சொற்றானே கருத்தாவென்னுமிடந்தெரிந்து நில்லாமையானுஞ் சோற்றையென்னுங் காரகபதத்தானும் அடுகின்றானென்னுங் கிரியாபதத்தானுங் கருத்தாவென்றறியப்படுதலானுந் தான்றெரியாக் கருத்தாவாயிற்று: வறியோர்சுற்றமுவப்பரென்பதும் அது. நன்மைதானேவெளிப்படும் விழுமியோர் பக்கலென்புழி நன்மையைச் சாத்தன் வெளிப்படுத்தினானென்றாற்போல நன்மை கருமமாய்க் கருத்தாப் பிறிதொன்றாய்நில்லாது கருமமுங் கருத்தாவுந் தானேயாய் நிற்றலாற் கருமக் கருத்தாவாயிற்று. அன்பு கெடுந் தீயோர்பக்கலென்பதும்,

*பகைபாவ மச்சம் பழியென நான்கு*
*மிகவாவா மில்லிறப்பான் கண்.*

*அறம்பொருள் கேண்மை பெருமையிந் நான்கும்*
*பிறன்றார நச்சுவார்ச் சேரா-பிறன்றாரம்*
*நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்*
*றச்சத்தோ டிந்நாற் பொருள்*

என்பனவும் அது. விழுமியோர் நன்மைசெய்வர் அறிவிலாதோர் பகைபெருகுவர் முயற்சியில்லாதோர் இகழ்ச்சியடைவரென்புழி மற்றுஞ்சிலராலியற்றப்படுந் தன்மையின்றித் தாங்களே கருத்தாத்தன்மையெய்தினமையால் இவையிற்றிற் கருத்தா தலைமைக் கருத்தாவாயிற்று. ஊரினின்றும்போனான் தேவதத்தன் மலையினின் றிழிந்தார் முனிவரென்புழி ஊருமலையுந் துளக்கமில்லாவவதியாதலால் அசலமென்னுமவதியாயிற்று. குதிரையினின்றுவிழுந்தான் சாத்தன் யானையினின்றிறங்கினான் கொற்றனென்புழிக் குதிரை யும்யானையுந்துளக்கமுடைய அவதியாதலாற் சலமென்னு மவதியாயிற்று. கோடாலியான் மரத்தைவெட்டினான் கொற்றனென்புழி மரம்வெட்டுதற்குக் காரணமாய் நின்ற கோடாலி கருத்தாவாய் நின்ற கொற்றனுக்கு அவயவமன்றாதலாற் புறக்கரணமாயிற்று. வாளினாலே வெட்டினான் கத்தியாலறுத்தான் என்பனவும் அது. கண்ணினாற்கண்டானென்புழிக் காண்பதற்குக் கரணமாய்நின்ற கண் கருத்தாவிற்கு உறுப்பாதலால் அகக்கரணமாயிற்று.

செவியினாற் கேட்டான் நெஞ்சினாளினைந் தானென்பனவும் அது. அருந்தவர்க்கூண் கொடுத்தானென்புழி அருந்தவர் ஆர்வத்தோடு கொண்டமை யானுங் கருத்தா ஆர்வத்தோடுகொடுத்தமையானும் ஆர்வக்கோளியாயிற்று. விருந்தினர்க்கிடங்கொடுத்தானென்பதும் அது. தேவர்க்குப் பூவிட்டானென்புழித் தேவர் தமக்குப் பூவேண்டு மென்றிரந்திலாமையானும் இல்வாழ்வானுக்கியல்பாதலானுங் கிடப்புக்கோளியாயிற்று. செய்க்கு நீர்ப்பாய்ச்சினான் ஆவுக்கு நீர்கொடுத்தா னென்பனவும் அது. அந்தணர்க்குப் பொன் கொடுத்தான் அரசனென்புழி அந்தணர் வேண்டுமென்றிரந்துபெறுதலின் இரப்புக்கோளியாயிற்று. இரவலர்க்குப் பிச்சையிட்டா னென்பதும் அது. பொன்னையாசைப் பட்டார் வறியோரென்புழிக் கருமத்தைக் கருத்தா பற்றினமையிற் பற்றுக் கரும மாயிற்று. ஒழுக்கத்தையிகழ்வர் தீயோரென்புழிக் கருமத்தைக் கருத்தாவிட்டமையால் வீட்டுக் கருமமாயிற்று. மாச்சோறுண்கின்ற சிறுக்கன் அதன்கண்வீழ்ந்த தூளியினைத் தின்றானென்புழிக் கருமமாய் நின்ற தூளி தின்ற சிறுக்கனால் வேண்டப்படாமையாற் பற்றுக் கருமமன்று, இதனையறிந்திலா மையாற் தின்னலாகா தென்னுங் கருத்து அவன் பக்கலுண்டன்றாகலால் வீட்டுக் கருமமன்று, ஆதலாற் பற்றுக்கருமமும் வீடுக்கருமமுமன்றி இருபுறக் கருமமாயிற்று. வீட்டை யெடுத்தான் றச்சன் என்புழிக்கருமமாய் நின்ற வீடு மற்றொரு சொல்லானன்றித் தானே கரும மென்னுமிடந் தெரிந்துநிற்றலாற் தான்றெரிகருமமாயிற்று. வீடு தச்சன்கட்டினான் என்புழிக் கருமமாய் நின்ற வீடு கருமமென்னுமிடம் தானே தெரியாமையாலுந் தச்சனென்னுங் காரகபதத்தானுங் கட்டினானென்னுங் கிரியாபதத்தானுங் கருமமென்றறியப் படுதலாலுந் தான்றெரியாக் கருமமாயிற்று. வாச்சி கொல்லன்செய்தான் தாலி தட்டான் செய்தான் என்பனவும் அது. கொற்றனையூர்க்குப் போக்கினான் சாத்தனென்புழிக் கொற்றன்றானே கருமமுமாய்ப் போதற் கிரியையைச் செய்வானுமாய் நிற்றலாற் கருத்தாக் கருமமாயிற்று. இராமனை யறிவித்தான் கண்ணனைப்பேசுவித்தானென்பனவும் அது. பசுவினைப் பாலைக்கறந்தானென்புழிக் கருமமாய் நின்றபசுவே பாலினைக் கறந்தானென மற்றுமொரு கருமமாதலிற்

*தீபகக்கருமமாயிற்று. மாணாக்கனை நூலை யறிவித்தான் ஆசிரியனைப் பொருளை வினாவினா னென்பனவும் அது. தடுக்கின் கண்ணிருந்தான் கொற்றனென்புழித் தடுக்கு இருக்கைக்குச் சேர்வானமையிற் சேர்வாதாரமாயிற்று. தேரின்கணின்றான் மெத்தையிற் கிடந்தா னென்பனவும் அது. எள்ளி லெண்ணெய்நின்றதென்புழி ஆதாரமான எள்ளின்கண் ஆதேயமான எண்ணெய் எங்குங்கலந்து நிற்றலாற் கலப்பாதாரமாயிற்று. தயிரில்வெண்ணெயுளது மரத்திற்றீயுண்டு என்பனவும் அது. புலனாதாரமென்பது வடமொழியில் விடயாதாரமாம். அஃது காட்டின் கட் புலிநின்றது கடலின்கண் மீன்றிரிகின்றதெனவரும். அயலாதாரமாவது ஆலின்கட் பசுக்கிடந்தது யாழின்கண் ஓசைநின்ற தெனவரும். இப்பதங்களிற் சாரியைச் சொற்களும் வேற்றுமை யுருபுகளும் வந்து கிரியாபதத்தோடுங் கூடிமுடிந்தவாறு கண்ட கொள்க. இனி முன்சொல்லப்பட்ட இருபத்துமூன்று காரகபதத்தினும் வேற்றுமைப்பிரத்தியங்கள் மயங்கிவருமாறு சொல்கின்றார். (3,4)

ஆதியதான்றெரி யாக்கருத்தாவதல் லாக்கருத்தா
வாதியதாறொடு மூன்றும்பெறுமென்ப ராதியையே
யோதினர்தான்றெரி யாக்கருமத்திற் கொழிகரும
மேதகுமூன்றிரண் டாறுநான்காமென்பர் மெல்லியலே.

*(இ-ள்.)* தான்றெரியாக் கருத்தாவிற்கு எழுவாய்வேற்றுமை யேயாம். அல்லாதகருத்தாவிற்கு எழுவாய்வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் மூன்றாம் வேற்றுமையுமாம். தான்றெரியாக் கருமத்திற்கு மூன்றாம்வேற்றுமையும் இரண்டாம்வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் நான்காம்வேற்றுமையுமாம்-எ-று. (5)

மூன்றைந்தொடாறு கரணம்பெறுமுரட் கோளியதே
மூன்றிருமூன்றொடு நான்காந்தருமுறை யாலவதி
தோன்றுமைந்தாமற்றை யாதாரமேழின்க ணேயென்பவாம்
வான்றிகடெய்வ வடநூற்புலவர்தம் வாய்மொழியே.

*(இ-ள்.)* கரணக்காரகத்துக்கு மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையுமாம். கோளிக்காரகத்துக்கு மூன்றாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையுமாம். அவதிக்காரகத்துக்கு

* வடநூலார் துவிகர்ம காரகமென்பர்.

ஐந்தாம்வேற்றுமை யொன்றுமேயாம். ஆதாரக்காரகத்துக்கு ஏழாம்வேற்றுமை யொன்றுமேயாம் எ-று. வரலாறு:- தேவதத்தன் சோற்றை யடுகின்றானென்புழித் தான்றெரியாக்கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது. தேவ தத்தனாற் சோறுபெறப்பட்ட தென்புழித் தான்றெரி கருத்தா மூன்றாம் வேற்றுமையால் வந்தது. தேவதத்தனுடைய சொல்லென்புழித் தான்றெரி கருத்தா ஆறாம் வேற்றுமையால் வந்தது. சாத்தன் கொற்றனை யஞ்சு வித்தானென்புழிக் காரணக் கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது. நன்மை தானே வெளிப்படும் விழுமியோர்பக்க லென்புழிக் கருமக்கருத்தா எழுவாய்வேற்றுமையால் வந்தது. விழுமியோர் நன்மை செய்வரென்புழித் தலைமைக் கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது. இவையிற்றுக்கு மூன்றாம் வேற்றுமையும் ஆறாம்வேற்றுமையும் ஏற்பித்துக்கொள்க. சோறு தேவதத்தனாலடப்பட்டதென்புழித் தான்றெரியாக்கருமம் எழுவாய் வேற்றுமையால் வந்தது. சாத்தனோடு எதிரிட்டா னென்புழிக் கருமக் காரகம் மூன்றாம் வேற்றுமையால் வந்தது. நூலை யறிவித்தான் எனக் கருமக்காரகம் இரண்டாம் வேற்றுமையால்வந்தது. சாத்தனுக்கு உரிமைசொன்னானெனக் கருமக்காரகம் ஆறாம் வேற்றுமையால் வந்தது. செய்க்கு நீர்ப்பாய்ச்சினா னெனக் கருமக் காரகம் நான்காம் வேற்றுமையால் வந்தது. கோடாலியான் மரத்தை வெட்டினா னென்புழிக் கரணக் காரகம் மூன்றாம்வேற்றுமையால் வந்தது. நன்மையினின்று பிழைத்தான் என்புழிக் கரணக்காரகம் ஐந்தாம் வேற்றுமையால் வந்தது. செவியினுக்குக்கேட்கலாமென்புழிக் கரணக்காரகம் ஆறாம் வேற்றுமையால்வந்தது. பொன்னோடு வெள்ளியிட்டது என்புழிக் கோளிக்காரகம் மூன்றாம் வேற்றுமையால் வந்தது. சாத்தனுக்குக் கொடுத்தானென்புழிக் கோளிக்காரகம் நாலாம் வேற்றுமையால் வந்தது. ஆறாம் வேற்றுமையில் வருங்கோளிக்காரகம் வடமொழியிலல்ல தில்லை. மரத்தினின்றும் விழுந்தானென்புழி அவதிக்காரகம் ஐந்தாம் வேற்றுமையால் வந்தது. எள்ளிலெண்ணெய் நின்றதென்புழி ஆதாரக்காரகம் ஏழாம் வேற்றுமையால் வந்தது.*

### உபகாரகப்படலம் முற்றும்

* வேற்றுமைமயக்கம் வரைகூறற்பாலதன்று. "யாத னுருபிற் கூறிற் றாயினும்- பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்" என்றார் முனிவரர் மூவரும். "ஒன்று மூன்றுநான் காறெனு முருபொடு" எனக் கூறப்புகுந்த பின்னூலாரும் "மாறுபட நிற்றல் வரம்பிலை யென்ப" என்றே முடித்தனர்.

# தொகைப்படலம்

**நாமங்களிற்பொருந்தும்பொருணற்றொகையத்தொகைக்கட்**
**டாமங்கழியுமுன் சாற்றியவேற்றுமை வேற்றுமையைச்**
**சேமங்கொள்சார்பாக வெய்தியசொல்லுஞ் சிலவிடத்துப்**
**போமங்கதன்பொரு டன்னையெல்லார்க்கும் பொருட்படுத்தே.**

*(இ-ள்.) ஒருபொருளை விளக்கிநிற்கும் பெயர்ச்சொற்கள் இரண்டுசொல்லாயும் பலசொல்லாயும் பொருந்திய பொருளால் ஒருசொல்லாய்த் தொகும். அவ்வாறு தொகுமிடத்து வேற்றுமை யழிந்தும் ஒரோவிடத்து வேற்றுமையும் வேற்றுமையைச் சார்வாகிய சொற்களுமழிந்துந் தொகும். தொகையெனினுஞ் சமாசமெனினுமொக்கும். வேற்றுமையும் வேற்றுமையைச் சார்வாகிய சொற்களுமழிதற்குக் காரணம் அவை அத்தொகைச் சொல்லின் பொருளை விளக்குதற் பொருட்டு உச்சரிக்கப்படுதலால் அவையழிந்த விடத்தும் பொருளை விளக்கி நிற்றற்காகும்-எ-று. வரலாறு:- மார்கழி திங்கள் மார்கழித்திங்களென எழுவாய் வேற்றுமையிலும், குடியைத்தாங்கி குடிதாங்கியென இரண்டாம் வேற்றுமையிலும், தாயொடு நால்வர் தாய் நால்வரென மூன்றாம் வேற்றுமையிலும், மரக்கலத்துக்குக் கல்லி மரக்கலக் கல்லி மழையின்பொருட்டுக்குடை மழைக்குடை குண்டலத்தின் பொருட்டுப் பொன் குண்டலப்பொன் குதிரைப் பொருட்டுச் சம்மட்டி குதிரைச்சம்மட்டி யானைப்பொருட்டுத் தோட்டி யானைத்தோட்டி மாடத்தின்பொருட்டு ஓடு மாடவோடு முயற்பொருட்டுவலை முயல்வலையென நாலாம் வேற்றுமையிலும், ஆட்டினின்று கறந்தபால் ஆட்டுப்பாலென்பது போல எருமைப்பால் யானைமதம் பூநாற்றம் கடலமிழ்து வாய்ச்சொல் எண்ணெய்யென ஐந்தாம் வேற்றுமையிலும், கொற்றனுடையமகன் கொற்றன் மகனென்பதுபோலச் சாத்தன்வீடு களக்கோல் மாங்காய் மரப்பனை ஊர்ப்பொதுவென ஆறாம் வேற்றுமையிலும், ஊரின்கட் குருவி ஊர்க்குருவியென்பதுபோல நீர்க்காக்கை கடற்பன்றி*

மலைக்குறவன் என ஏழாம்வேற்றுமையிலும் வரும். விளிவேற்றுமையிற் சொற்றொக்கு முடிதலில்லை. கரும்பினுடைய வேலி மாடத்தினுடையவோடு என நாலாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமையாகவும் எருமையினுடைய பால் யானையினுடைய மதமென ஐந்தாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமையாகவுந் தொகுத்தாலுங்குற்றமில்லை. இனி வேற்றுமைச்சார்வாகிய சொற்களுமழிந்து தொகுமாறு:- தயிரினாற்குழைத்தசோறு தயிர்ச்சோறு, மருந்துகளாலாடப்பட்ட எண்ணெய் மருந்தெண்ணெய், சங்கரனுக்கு மகனாயுள்ள சாத்தன் சங்கரன் சாத்தன் எனவரும். இனி இடைச்சொலழி தொகையென்பதும் ஒன்றுண்டு. அஃதாமாறு:- இருப்பைப் பாலாற்கொள்ளப்பட்ட நெய் இருப்பைநெய், பாண்டிநாட்டுக்கடலின்கரை பாண்டிக்கரை எனவரும். இதனை வடமொழிப்புலவர் மத்திமபதலோபசமாசமென வழங்குவர். (1)

**தற்புருடன்பல நெற்கன்மதாரயந் தாங்கியசீர்**
**நற்றுவிகுத்தொகை நாவார்துவந்துவ நல்லதெய்வச்**
**சொற்பயன்மாந்தர்க ளவ்வியபாவ மிதென்றுதொன்மை**
**கற்பகமாப்பகர்ந் தார்தொகையாறுங் கனங்குழையே.**

(இ-ள்.) தற்புருடசமாசமும் பலநெற்சமாசமும் கன்மதாரய சமாசமும் துவிகுசமாசமும் துவந்துவசமாசமும் அவ்வியசமாசமும் என்று தொகைப்படுத்துச் சொல்லுவர் வடமொழிப்புலவர்- எ-று. பலநெற்சமாசமென்பது பலவென்னும் பொருளைப் பயக்கின்ற பகு என்னும் வடமொழியும் நெல்லென்னும் பொருளைப்பயக்கின்ற விரீகியென்னும் வடமொழியுஞ் சேர்ந்த பகவிரீகியென்னுஞ் சமாசமாம். பலநெல்லெனினும் பகுவிரீகியெனினும் ஒக்கும். (2)

**எழுவாய்முதலெழு வேற்றுமையொடு மெழுந்தடையில்**
**வழுவாதநஞ்ஞொடெட் டாந்தற்புருடன் வளர்ந்துவிகு**
**தழுவார்ந்தவெண்மொழி முன்னாய்வருந் தத்திதப்பொருண்மேற்**
**குழுவாரொருமையொப் புப்பன்மையொப்புக்குறியிரண்டே.**

(இ-ள்.) தற்புருடத்தொகையானது எழுவாய் முதலாக ஏழு வேற்றுமையோடும் தடையில் நிகழாநின்ற நஞ்ஞோடுங்கூட எட்டுவகைப்படும். துவிகுத்தொகையானது எண்முன்னாய்வருந் தத்திதப் பொருண்மேல் கருமையொப்புத் துவிகும் பன்மையொப்புத் துவிகுமென இரண்டு குறியினையுடைத்து.

அவை எழுவாய் வேற்றுமைத் தற்புருடனும் இரண்டாம்வேற்றுமைத் தற்புருடனும் மூன்றாம்வேற்றுமைத் தற்புருடனும் நாலாம் வேற்றுமைத் தற்புருடனும் ஐந்தாம்வேற்றுமைத் தற்புருடனும் ஆறாம்வேற்றுமைத் தற்புருடனும் ஏழாம்வேற்றுமைத் தற்புருடனும் நஞ்ஞுத் தற்புருடனு மெனவும் ஒருமையொப்புத் துவிகும் பன்மையொப்புத்துவிகும் எனவும் வரும்-எ-று. வரலாறு:- கழஞ்சினுடைய அரை அரைக்கழஞ்சு, காசினுடைய கால் காற்காசு, அகத்தினுடைய கால் காலகம், பகலினுடையமுன் முன்பகல், ஊரினுடைய உள் உள்ளூர், கையினுடையபுறம் புறங்கையென வரும். இவை முன்பதம் எழுவாய் வேற்றுமையாதலின் எழுவாய்வேற்றுமைத் தற்புருடனாம். இவ்வண்ணம் மலையைத்தாங்கி மலைதாங்கி, கல்லாற்றளி கற்றளி, தாலியின்பொருட்டுப்பொன் தாலிப்பொன், கள்ளரினின்றும்பயம் கள்ளர்பயம், தாமரையினுடையகிழங்கு தாமரைக்கிழங்கு, ஊரின் கட்குருவி ஊர்க்குருவி என்பன முற்பதம் முறையே இரண்டாம் மூன்றாம் நாலாம் ஐந்தாம் ஆறாம் ஏழாம் வேற்றுமையாதலில் அவ்வவ்வேற்றுமைத் தற்புருடனாம். நஞ்ஞுத்தற்புருடன் வடமொழியினல்லதில்லை. அஃதாமாறு "தடைநவுட லடையிற் றன்னுடல் போமாவி-யடையினுடறெற்றுமாற்றாம்" என்பதனால் நவ்வென்னும் ஒற்றின்மேல் அகரவுயிரேறி நகரமாய்க்கிடந்த சொல் தொகையின் கண்ணுயிர் மெய்வரும்பொழுது நகரவொற்றழிந்து அகரமாய்நிற்கும், உயர்வரும்பொழுது நகரவொற்றுப்பின்னாய் அகரமுன்னாய்த் தெற்றுமாறிநிற்கும். உதாரணம் ந நாதன் அநாதன், ந உசிதம் அநுசிதம் எனவரும். ஆயிரந்தளி கூடினவிடம் ஆயிரத்தளி பன்னிருபடலங்கூடினது பன்னிருபடலம் என்பன ஒருமொழி யொப்புத்துவிகுத்தொகை. அன்மொழியொப்புத் துவிகுத்தொகை யெனினுமிழுக்காது. மூவர்கோக்கள் முக்கோக்கள் என்பது பன்மொழியொப்புத் துவிகுத்தொகை. (3)

**இருமொழிபன்மொழிபின் மொழியெண்ணோடிருமொழியெண்**
**மருவும்விதியா ரிலக்கணமற்றைச் சகமுன்மொழி**
**பரவுந்திகந்தரா ளத்தொகையென்னப் பலநெற்றொகை**
**விரியுமொரேழவைவேற்றுமொழிப்பொருண்மெல்லியலே.**

(இ-ள்) இருமொழித்தொகையும் பன்மொழித்தொகையும் பின்மொழியெண்டொகையும் இருமொழியெண்டொகையும் விதியாரிலக்கணத்தொகையும் சகமுன்மொழித்தொகையும் திகந்தராளத் தொகையுமெனப் பகுவிரீகித்தொகை ஏழுவகைப் படும்-எ-று. பின்மொழியொண்ணாவது எண்ணினைப் பின்மொழியி னுடையது. இருமொழி யெண்ணாவது முன்மொழியினும் பின்மொழியினும் எண்ணாய்வருவது. விதியாரிலக்கணத் தொகையாவது தடுமாற்றத்தை இலக்கணமாகவுடையது. சகமுன்மொழியாவது வடமொழி எழுத்தடைவில் அகரத்தோடுங்கூடின முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தையும் முப்பத்துமூன்றாம் வியஞ்சனத்தையும் அடைவே ஒன்றாக வுடையதொரு பதமாய் அப்பதத்தின் விகாரத்தோடுங்கூடி முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தை முன்னாகவுடையதொகையாம். திகந்தராளமாவது பெருந்திசைகளுக்கு நடுவாய்க்கிடந்த கோணங்களைக் குறித்துத் தொகுந்தொகையாம். இவையேழும் யாவனொருவனென்றும் வேறாய்க்கிடந்ததொருமொழிக்குப் பொருளாகுமல்லது தொகுத்தற் பொருட்டு வந்த மொழிகளுக்குப் பொருளாகாவெனக்கொள்க. வரலாறு: கல்லுத்தலையின் கண்யாதொருமீனுக்குண்டு அம்மீன் கற்றலையெனவும் கழுத்தி லாடையாவ னொருவனுக்குண்டு அவன் கழுத்தாடை யெனவுஞ் சொல்வது. இரண்டு மொழியைத் தொகுத்தலால் இருமொழித்தொகை. குரங்குகளாடப்பட்ட துறை யாதொரூரிலுண்டு அவ்வூர் குரங்காடுதுறை யெனவும் மயில்களாடப்பட்ட துறை யாதொரூரிலுண்டு அவ்வூர் மயிலாடுதுறையெனவும் சொல்வது பன்மொழியைத் தொகுத்தலாற் பன்மொழித்தொகை. இன்னாவென்னுஞ் சொல்லினையுடைய நாற்பதுகவி யாதொரு நூலினுண்டு அந்நூலின்னா நாற்பதெனவும் இவ்வண்ணம் இனியநாற்பது கார்நாற்பது களவழிநாற்பதெனவும் வருவன பின்மொழிகளெண்மொழியாதலாற் பின்மொழியெண்டொகை. இருவராதல் மூவராதலன்றி யாவர் சிலரைக்கருதி இருவர் மூவரெனவும் இவ்வண்ணம் ஐந்தாறெனவும் ஏழெட்டுப் பத்தெனவும் வருவன இருமொழியும் எண்ணாய் நின்றமையால் இருமொழி யெண்டொகை. தேசங்களிலே தேசங்களிலே

பற்றிக்கோடு பற்றிக்கொடு நிகழ்கின்ற யாதொரு பூசல் தேசாதேசியெனவும் தண்டுகளாலே தண்டுகளாலே அடித்து நிகழ்கின்றதோர் பூசல் தண்டாதண்டியெனவும் வருவன தடுமாற்றத்தை இலக்கணமாக வுடைமையின் விதியார் இலக்கணத்தொகை. இது வடமொழியிலல்லது வாராவெனக் கொள்க. சகமுன்மொழித்தொகையாவது வடமொழியின் முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தையும் முப்பத்துமூன்றாம் வியஞ்சனத்தையும் உடைய சொல் முன்னாகப்பெற்று ஒரு மெய்ச்சொற்* பின்னாகத் தொகுவதாம்; அது தொகுமிடத்து முன்னின்ற மொழியிலிரண்டாம் எழுத்தழிந்தல்லது தொகாது. வரலாறு:-முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தையும் முப்பத்து மூன்றாம் வியஞ்சனத்தையும் உடையசொல்லை முன்னே நிறுவி நீதியென்னுஞ் சொல்லைப் பின்னே நிறுவி, நீதியோடுங்கூடி நிகழாநின்றான்யாவன், அவன் சநீதியாமென்க. திகந்தராளத் தொகையாமாறு:- தென்றிசைக்குங் கீழ்த்திசைக்கும் நடுவுயாதொருதிசை, அது தென்கிழக்காம். இவ்வண்ணம் தென்மேற்கு வடமேற்கு வடகிழக்கு எனக் கண்டுகொள்க. (4)

**முன்மொழிப்பண்பு மிருமொழிப்பண்பு மொழிந்தமைந்த**
**பின்மொழியொப்பொடுமுன் மொழியொப்பும் பிணக்கொன்றிலா**
**முன்மொழிநற்கருத் தும்முன்மொழிநற் றுணிவுமென**
**நன்மொழியார்கன்ம தாரயமாறென்ன நாட்டினரே.**

(இ-ள்.) முன்மொழிப்பண்புத்தொகையும் இருமொழிப் பண்புத்தொகையும் பின்மொழியொப்புத்தொகையும் முன்மொழி யொப்புத் தொகையும் முன்மொழிக் கருத்துத்தொகையும் முன்மொழித் துணிவுத்தொகையுமெனக் கன்மதாரய மாறாம்-எ-று. வரலாறு:- நீலமுமதுவே குவளையுமதுவேயென நீலக்குவளையாம். கருமையுமதுவே பாம்புமதுவே எனக்கரும்பாம்பாம். இவ்வண்ணங் குறுங்கொற்றன் நெடுஞ்சாத்தன் எனப்பண்புமொழி முன்புநிற்றலான் முன்மொழிப் பண்புத்தொகையாயிற்று. பண்பெனினும் விசேடண மெனினுமொக்கும்.

---

* சரகவன் என உயிர் பின்னாகவும் வருதலால் இதுநியதியன்று.

* குறுவுமதுவே மையுமதுவே எனக் குறுமையாயிற்று. இது பண்புமொழியே முன்னும்பின்னுநிற்றலால் இருமொழிப் பண்புத்தொகை. ஆணிவன் மாணிக்கமொத்தலால் ஆண்மாணிக்கம், பெண்ணிவள் அணங்கொத்தலாற் பெண்ணணங்கு. இவை யொப்புமொழி பின்பு நிற்றலாற் பின்மொழியொப்புத்தொகை. ஒப்பெனினும் உவமை யெனினுமொக்கும். பின்மொழி யொப் புத்தொகையெனினும் பின்மொழியுவமைத்தொகையெனினு மொக்கும். பவளம்போற் செவ்வாய் பவளவாய், அஞ்சனம்போற் கரியகண் அஞ்சனக்கண் இவையொப்புமொழி முன்புநிற்றலான் முன்மொழி யொப்புத்தொகை. அடையாதென்று கருதப்பட்ட நெடுங்கடை அடையாநெடுங்கடை, இதனுட் கருதினமொழி முன்பு நிற்றலான் முன்மொழிக்கருத்துத்தொகை. மருந்தேயென்று துணியப் பட்டமரம் மருந்துமரம், நஞ்செனத் துணியப்பட்டமரம் நச்சுமரம். இவையிற்றிற் துணிந்தமொழிமுன்புநிற்றலான் முன்மொழித் துணிவுத்தொகை யெனப்பட்டது. முன்மொழிக் கருத்துத்தொகைக்கும் முன்மொழித் துணிவுத்தொகைக்கும் வேறுபாடியாதெனின் கருதினது மாத்திரமேயன்றித் துணிந்துமுளனென்று வேறுபடுக்கத் துணிந்தபொழுது முன்மொழித்துணிவுத்தொகையாம்; துணியாதே கருத்துமாத்திர மாம்பொழுது முன்மொழிக் கருத்துத்தொகையாம். ஆகையாற் பலபடிக்கும் ஒத்திருக்குந்தொகையும் உளவா மென்றறிக. (5)

**முன்மொழியவ்வியஞ்சேர்தொகைபேர் முன்மொழித்தொகையே**
**சொன்மொழியவ்விய பாவமருவுந் துவந்துவமும்**
**வன்மொழியாமித ரேதரம்வாய்ந்த சமாகாரமா**
**நன்மொழியானுரைத் தார்கள் சமாச நறுநுதலே.**

---

* குறுமையின் விகாரமே குறுவாதலானும், இருமொழிப் புணர்ச்சி யின்மையானும், "இருசொல்லும் ஒருபொருளனவாய் இன்னதிதுவென ஒன்றை யொன்று பொதுமைநீக்கி" யெனக்கூறிய ஆசிரியர் சேனாவரையருரைக்கு மாறுபடுதலானும், தொகை யென்றொன்றாங்கு நிகழாமையானும், உரையாசிரியர் கூற்றுச்சரியன்றென மறுக்க. கருமையுமதுவே செம்மையுமதுவே யெனக் கருஞ்சிவப்பு எனவும் சிறுமையுமதுவே வெம்மையுமதுவே யெனச் சிறுவெம்மை எனவும் வருவனவும் இன்னபிறவும் நூலாசிரியர் கருத்தென்க.

(இ-ள்). முன்மொழி *அவ்வியத்தொகையும் பெயர் முன்மொழித்தொகையும் என்று அவ்வியபாவமிரண்டு வகைப்படும்; இதரேதரத் தொகையும் சமாகாரத்தொகையும் என்று துவந்துவமிரண்டு வகைப்படும்-எ-று. சமாசமென்பது வடமொழியின் முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தோடு கூடிநிற்கும் சொல்லெனக்கொள்க. வரலாறு;- கும்பத்தருகு நிகழ்கின்றது உபகும்பமாம் இதன்கண் உபவென்னமவ்வியம் முன்புநின்று கும்பமென்னும்பெயர் பின்பு நிற்றலான் முன்மொழியவ்வியத் தொகையாயிற்று. சாகத்தினுடைய பிரதி** சாகப்பிரதியாம். பிரதியென்னுஞ்சொல் அவ்வியம், சாகமென்பதுபெயர். அவ்வியம் பின்புநின்று பெயர் முன்புநிற்றலாற் பெயர்முன்மொழித் தொகையாயிற்று. வடமொழியில் அவ்வியச் சொல் தமிழினிடைச்சொல்லெனவமைக்க. இடைச்சொல்லாவன காரகபத வேற்றுமையானும் கிரியாபதவேற்றுமையானும் விகற்பிக்கப்படாதே ஐ ஆல் என்றும், மன் இசின் என்றும் மற்று ஆங்கு ஒருங்கென்றும் இவைமுதலாக வருவன. 'துவந்துவமும் வன்மொழியா மிதரேதரம்வாய்ந்த சமாகாரமா' என்பது, கபிலபரணர் தங்களிலே வாதுசெய்தார்களென இயைபு தோற்றி நின்றமையால் இதரேதரத்தொகையாயிற்று, உவாவும்பதினான்கும் உவாப்பதினான்கு, நெய்யுமெண்ணெயும் நெய்யெண்ணெய், நாளும்பக்கமும் நாட்பக்கம் என்றிப்படி வருவனவெல்லாம் சமாகாரத்தொகையாம். இவையெல்லாம் வடமொழியிற் கண்டுகொள்க. (6)

**வேற்றுமையும்மை வினைபண்புவமையொ டன்மொழியென்**
**றாற்றுந்தொகைசெந் தமிணர்களாறென்ப ராய்ந்தபண்பிற்**
**றோற்றுமளவு வடிவுநிறஞ்சுவை சொல்பிறவும்**
**ஏற்றுமிருபல் லளவுநிறையெண் பெயரும்மையே.**

(இ-ள்). வேற்றுமைத்தொகையும் உம்மைத்தொகையும் வினைத் தொகையும் பண்புத்தொகையும் உவமைத்தொகையும் அன்மொழித் தொகையுமெனத் தொகை ஆறுவகைப்படுத்துச் சொல்லுவர் ஒருசார் தமிழ்ப்புலவர். அவையாறினும் பண்புத்தொகை தொகுமிடத்து அளவுப்பண்புத்தொகையும் வடிவுப் பண்புத்தொகையும் நிறப் பண்புத்தொகையும

---

* அவ்வியயமென்னும் வடமொழிச்சிதைவு.

** சாப்பிரதியெனவும் வழங்கும்.

சுவைப்பண்புத்தொகையும் பிறவாற்றானுமாய்த் தொகும். உம்மைத்தொகை தொகுமிடத்து இருபெயர்த் தொகையும் பலபெயர்த்தொகையும் அளவுப்பெயர்த் தொகையும் நிறைப் பெயர்த்தொகையும் எண்ணின்பெயர்த்தொகையும் எண்ணியற் பெயர்த்தொகையுமாய்த் தொகும்-எ-று. எண்ணெனுஞ் சொல்லை இருகாலாகச் சொல்லவேண்டியதேனெனில், எண்ணியற் பெயரென்று எண்ணின்கணின்ற பெயரைக் குறித்ததொன்றும் எண்ணின்பெயரென்று எண்ணையே குறித்ததொன்றுமாக இரண்டாதலினென்க. வரலாறு:- சாத்தனுடையமகன் சாத்தன்மகன், தாயொடுநால்வர் தாய்நால்வர் என வேற்றுமையழிந்துதொக்கவாறு. பண்ணுங்கோணிகையும் பண் கோணிகையென உம்மைத்தொகை வந்தவாறு. இவ்வண்ணம் செம்புதரா, பயறுதுவரை என உம்மையழிந்து இருபெயர்த்தொகை வந்தவாறு. எண்ணெய்மஞ்சள் வெற்றிலை, கடுநெல்லிதான்றி, சுக்குமிளகுதிப்பிலி எனப் பலபெயர்த்தொகை வந்தவாறு. தூணியும்பதக்கும் தூணிப்பதக்கு என அளவுப்பெயர்த்தொகை வந்தவாறு. நடுவு ஏகாரமாகிக் கலனே தூணியெனவுமமையும். கழஞ்சேகால் ஒன்றேகாற்பலம் என நிறைப்பெயர்த்தொகை வந்தவாறு. பத்தும் மூன்றும் பதின்மூன்று, ஆயிரமும் எட்டும் ஆயிரத்தெட்டு என எண்ணின்பெயர்த்தொகை வந்தவாறு. முப்பதின்மரும் மூவரும் முப்பத்துமூவர், நூற்றுவரும் ஐவரும் நூற்றைவர் என எண்ணியற்பெயர்த்தொகை வந்தவாறு. இனி வினைத் தொகைவருமாறு;- கொல்லும்யானை கொல்யானை வெல்லும் படை வெல்படை எனவரும். ஓடுங்குதிரை ஆடுங்கூத்து குரங்கு இவற்றைக் காலங்குறித்து *வேறுபடுக்க. பண்புத்தொகை வருமாறு;- நெடியாளுமிவளே கொற்றியுமிவளே என நெடுங்கொற்றியாம். இவ்வண்ணம் குறுஞ்சாத்தன் நெடுங்கடல் என அளவுப் பண்புத்தொகை வந்தவாறு. வட்டமுமதுவே பலகையுமதுவே யெனின்

---

* "வேறுபடுக்கவேண்டா" என்பதுரைபாடம். ஆசிரியர் தொல்காப்பியர் "வினையின்றொகுதி காலத்தியலும்" என்றமையானும், பின்னூலாரும் "காலங்கரந்தபெயரெச்சம் வினைத்தொகை" என்றமையாலும், காலம்விரிந்துழித் தொகையின்மையானும், எதிர்காலப் பெயரெச்சம் வேறின்மையானும் அஃதுரையன்றென மறுக்க.

வட்டப்பலகை. இவ்வண்ணம் சதுரங்கப்பலகை சுளகுநிலம் என வடிவுப்பண்புத்தொகை வந்தவாறு. புளிம்பருத்தி உவரித்தண்ணீர் எனச் சுவைப்பண்புத்தொகை வந்தவாறு. பிறவுமென்றதனால் வெந்நீர் தண்ணீர் இன்றமிழ் நறும்பூ நுண்ணூல் பருநூல் மெல்லிலை நல்லாடை என வருவனவுங் கொள்க. இனி உவமைத்தொகை வருமாறு:- பவளம்போன்றவாய் பவளவாய், மழைபோன்ற வண்கை மழைவண்கை, முத்துப்போன்ற முறுவல் முத்துமுறுவல் எனக்கொள்க. இனி அன்மொழித்தொகை வருமாறு:- அன்மொழித்தொகையாவது இரண்டு சொல்லும் பல சொல்லுந் தொக்கக்காற் சொற்களை நோக்காதே பொருள் வேறொருமொழியை நோக்குவது; அது வருமிடத்து யாவன் அவனென்றும் யாது அதுவென்றும் இன்னனபிறவுங் கூறுதல் காண்க. கழுத்தின்கண்ணாடை யாவனுக்குண்டு அவன் கழுத்தாடையாம், தலையின்கண் கல் யாதொன்றினுக் குண்டு அது கற்றலையாம் (7)

**அன்மொழிநற்றொகை யிற்றொகும்போதுமல் லாவிடத்தும்**
**நன்மொழிப்பின்பு நடுவுங்கெடுநன் கொரோவிடத்து**
**முன்மொழியீறு கெடும்பன்மையாகுமுரட்பொருள்கோள்**
**பின்மொழிமுற்சொற் பிறிதோர்மொழியொடிருமொழியே.**

(இ-ள்). அன்மொழித்தொகையின்கண்ணும் அல்லாத தொகைகளிலும் பின்மொழிகளும் நடுவின் மொழிகளுஞ் சிதைகையுமுண்டு. ஒரோவிடத்துத் தொகையின்முன்பு நின்றசொல்லின் ஈற்றிலொற்றுச்சிதைகையுமுண்டு. அச்சொற் பன்மைப் பொருளை விளக்கி நிற்றலுமுண்டு. இனிப் பொருள் கொள்ளுமிடத்துப் பின்மொழி யிலாதல் முன்மொழியிலாதல் வேற்றுமொழி யிலாதல் இருமொழியிலுமாதல் பொருள்சிறக்கும்-எ-று. வரலாறு:- கடுகாய்-கடு எனவும், இவ்வண்ணம் தான்றி நெல்லி எனவும் வருவன பின்மொழிச் சிதைவு. தாமரை பருத்தி எள்ளு கொள்ளு என வருவனவும் அது. பின்மொழியழிந்தபொழுதும் அழியாதபோதைப் பொருள் பயக்கும். கவிழப்பூக்குந்தும்பை கவிழ்தும்பை, வெளுக்கப்பூக்குந்தாமரை வெண்டாமரை, சிவக்கப்பூக்குந்தாமரை செந்தாமரை, கொம்மட்டி போலக்காய்க்கு மாதளை கொம்மட்டி மாதளை, வேரிற்பழுக்கும்பலா வேர்ப்பலா என்பன இடைமொழிச்சிதைவு.சிவக்கத்தோய்ந்த விளிம்பினை யுடையகூறை செவ்விளிம்பன் என்பது இடைச்சொல்லுங்

கடைச்சொல்லுமழிந்துதொக்கது. சோழன்கோன் சோழ கோனென்பது முன்மொழியீற்றுச்சிதைவு. பட்டர்கள்தெருவு, நாட்டார்வாய்க்கால், ஆயிரத்தளியர் வாச லென்பனவற்றில் முன்மொழியீறு பன்மைப் பொருளை விளக்கிநின்றது. மாங்காய் பலாப்பழ மென்பன பின்மொழிச் சிறப்புத்தொகை. மழைக்கொடை மருத்தெண்ணெய் என்பனவும் அது. அரைப்பலம் எள்ளூர் புறங்கை யென்பன முன்மொழிச் சிறப்புத்தொகை. கற்றலை கழுத்தாடையென்பன அன்மொழிப் பொருட்சிறப்புத்தொகை. சோழபாண்டிய ரென்பது இருமொழிப் பொருட் சிறப்புத்தொகை. இனிக்கிடப்புத் தொகையும் மாறிடுதொகையும் நித்தத்தொகையும் அழிதொகையும் அழியாத்தொகையுமெனக் கூறுபடுப்பாருமுளர். அவையாமாறு:- மாங்காய் பலாக்காயென முன்மொழியும் பின்மொழியும் மாறாடாதே கிடப்பிலே நின்று தொக்கமையாற் கிடப்புத்தொகை. முன்றில் வாயிலென முன்மொழிபின்னாய்ப் பின்மொழி முன்னாய் மாறாடி வந்தமையான் மாறாடு தொகை. செம்போத்து குறுமரை கருங்காக்கையென ஏகாந்தித்துக்கிடத்தலால் நித்தத்தொகை. சாத்தன்மகன் எண்ணெய் எருமைப்பாலென வேற்றுமையழிந்து தொகுவன அழிதொகை. கழுத்திலாடை பொதும்பிற்றேனென வேற்றுமையழியாது தொகுவன அழியாத்தொகை. முன்பொரு சூத்திரத்தின்கண் நடுவுநின்ற வேற்றுமையைச் சார்ந்தசொல்லும் அழியுமெனச் சொல்லிப் போன சூத்திரத்தினும் நடுவுநின்ற சொல்லழியு மென்று சொன்னாராதலிற் கூறியது கூறலென்னுங் குற்றமுண்டோ வெனில் அற்றன்று. முன்பிற்போனசூத்திரத்திற் காரகபதவேற்றுமையும் அதனைச் சார்ந்தசொல்லுமே அழிவன. இதனாற் காரகபத வேற்றுமையுங் கிரியாபதவேற்றுமையும் முற்சார்வுபதமும் அந்தமுந் துவாந்தமுஞ் சந்திராந்தமும் அழிந்து தொகப்பெறும். (8)

## தொகைப்படலம் முற்றும்

# தத்திதப்படலம்

**அன்னியனீன னிகனேயன்வான்வதி யம்மிகரம்**
**வன்னுவகரத்தொ டானாளன்மானக னாதிமற்றுந்**
**துன்னியசீர்த்தத் திதத்தின்பிரத்தியஞ் சுவென்பது**
**மன்னுமரபு பிழையாமலெங்கும் வரப்பெறுமே.**

*(இ-ள்) அன் இயன் ஈனன் இகன் ஏயன் வான் வதி அம் இவன் உ அ ஆன் ஆளன் மான் அகன் முதலிய *பிரத்தியங்களுஞ் சு என்பதுந் தத்திதப்பிரத்தியங்களாம்.- எ-று. மன்னு மரபு பிழையாம லென்றதனால் வேற்றுமைச் சுப்போலச் சு எங்கு மழியப்பெறு மென்க.* (1)

**உண்ணுமிதனா லுரைக்குமிதனை யுடையனிது**
**பண்ணுமிதனைப் பயிலுமிதிற்பயன் கொள்ளுமித்தா**
**லெண்ணுமிதனை யிதனுக்குநாயக னீங்கிருக்கும்**
**நண்ணுமிதனை யிதையொக்குமிங்குள னன்னயத்தே** (2)

**மகனிவனுக்கிவ ளுக்கிந்தவர்க்கத் தினனிவனைத்**
**தகவியதேவ னெனும்யாவனென்றுநற் றத்திதங்கள்**
**நிகழும்பிறபொரு ளின்கண்ணுநிற்கு நினைந்தவற்றைப்**
**புகண்மலிதெய்வப் புலவர்க்கும்பொச்ச மடக்கரிதே.**

*(இ-ள்) தத்திதப்பிரத்தியங்கணிகழுமிடத்து இதனால் உண்ணுவன் யாவனென்பது முதலாக இவனைத் தெய்வமாகக் கொள்வான் யாவனென்ப தீறாகக்கூறப்பட்டபொருள்களிலும் இவைபோலும் பிறபொருளின்கண்ணுநிகழும்; அவையிற்றைக் கூற்றறுத்துப்பொச்சமடக்குதல் எண்ணிறந்த கிரந்தத்தாற் சொன்முடிக்கினுந் தெய்வப் புலவர்களுக்குமரிதாம்.-எ-று. அரிதாவதற்குக்காரணம் இலக்கியத்தைப் பார்த்திலக்கணஞ் சொன்னமையினென்க. அவையிற்றிற்கு உதாரணம் வருமாறு:- வலையினாலுண்பான் வலையன். ஞகரம் ஆகமமாய் வலைஞன்*

---

* *பிரத்தியயமென்னும் வடமொழிச் சிதைவு.*

என்றுமாம். வேதத்தையுரைப்பான் வேதியன். இதில் அம்மென்னுங் கடைச்சொற்குறைந்தது. கொந்தத்தையுடையான் கொந்தவன். இதில் ஈறழிந்தது. மருந்தைப் பண்ணுவான் மருத்துவன். மெல்லொற்று வல்லொற்றாயிற்று. கூத்துப் பயிலுவான் கூத்தன். வல்லினாற் பயன்கொள்வான் வல்லி. சோதிடத்தை யெண்ணுவான் சோதிடவன். அதிதிமகன் ஆதித்தியன், இதில் கடைகுறைந்து நடுவே தகரவொற்றாகமமாய் முதற்கண் அகரம் விருத்தியானது. திதிமகன் தைத்தியன், விநதைமகன் வைநதேயன். வயினதேயனெனவும் வரும். கங்கைபுத்திரன் காங்கேயன். சிபிவருக்கத்தான் செம்பியன். இதில் நடுவே மகரவொற்றாகமமாய் முதற்கணிகரங்குணமானது. குருவருக்கத்தான் கௌரவன். இதில் முதற்கணுகரம் விருத்தியானது. புத்தனைத் தெய்வமாயுடையான் பௌத்தன். இது சுப்பிரத்தியத்தால் முதல்விருத்திபெற்றது. சிவனைத் தெய்வமாகவுடையான் சைவன். பசுபதியைத் தெய்வமாக வுடையான் பாசுபதன். ஆதியென்றதனாற் பிறபொருள்களின்கண் ணிகழுமாறு;- பூனைக்காலையொப்பக்: காய்ப்பது பூனைக்காலி. குலத்தினுள் விழுமியான் குலீனன். சிங்களவன் பேசுவது சிங்களம், வடுகன் பேசுவது வடுகு, துளுவன் பேசுவது துளுவு. வியாகரணமோதுவான் வையாகரணன். துவாரத்தினிற்பான் தௌவாரிகன். குணத்தை நன்றாகவுடையான் குணவான் குணவதி. மதியை நன்றாக வுடையான் மதிமான். கள்ளத்தையுடையான் கள்ளன். இவன்றன்மை கள்ளமெனினும் அமையும். குங்குமத்தாலூட்டப்பட்டது கௌங்குமம். இருடிசம்பந்தமானது ஆரிடம். இதில் இருவினுக்கா ரென்னுமாதேசமாகி இகரம் உலோபமானது. பார்ப்பானாற் செயற்படுவது பார்ப்பு. இவ்வண்ணம் கொல்லி தச்சு என முடியும். சொற்க ளொன்றையொன்று காதலித்துக் கிடத்தலால் இவற்றினின்றே கொல்லன் தச்சனென முடிந்ததெனினுமமையும். இனிப் பிரத்தியங்களான் முடியுமாறு- *அம்பு என்பது நீர், பங்கமென்பது சேறு, இவற்றுட்டோன்றியது அம்புசம் பங்கசம் எனவரும் குறிப்புச்சொற்களும் வினைச்சொற்களும் பிறவும்

---

* அம்பு, பங்கம் என்பன தனிப்பிரத்தியங்களன்றாதலின் மேலெடுத்துக்காட்டுத் தவறென்க. அநுசன், தத்துவம், உபகாரம், பிரஞ்சை, சங்கரன் முதலிய பதங்களே தக்க உதாரணங்களாம்.

*ஒரு பெயர்ச்சொல் தம்மேலேறிய பிரத்தியத்தை யுடையவாய் வேறு பொருள் பயந்து நிற்பின் அவை தத்திதப் பெயர்களென்றறிந்து உலகிற்கொப்ப முடிக்க.* (3)

**மையம்புதுவுகம் வல்லளவாதி குணக்குறிப்பில்**
**வையம்வலிநெடு வாதிபின்னாமன்கன் னானன்வன்னாள்**
**ஐயமவனவள் மிம்முதலாகுந் திரப்பியத்திற்**
**பையமதிக்க வுலகத்தவர்க்குப் பயன்படவே.**

*(இ-ள்) மை அம் பு து வு கம் வல் அளவு என்னுமிவை முதலாகிய பிரத்தியங்கள் வலி நெடு என்னுஞ் சொன்முதலாகிய பிரகிருதிகுணத்தின்பின் குணக்குறிப்பை விளக்குதற் பொருட்டுவரும். மன் கன் ஆன் அன் வன் ஆள் ஐ அம் அவன் அவள் மி முதலாகிய பிரத்தியங்கள் *திரப்பிய மென்னும் பொருள்களை விளக்குதற் பொருட்டுவரும். இவையாக்கும் பொழுது உலகத்தார்க்கொத்துப் பயன் புணரவேயாக்குக-எ-று. வலிநெடுமுதலாகிய பிரகிருதிகுணமாவது வலி நெடு குறு கரு பசு வெளு கெடு இள தண் வெம் அரி எளி பெரு சிறு பரு நேர் மலி என இவைமுதலாகவரும். உதாரணம் வருமாறு:- மை, வலிமை நெடுமை குறுமை, அம் நீளம். இதில் நெடு நீளென ஆதேசமாயிற்று. பு, அலிப்பு மெலிப்பு. து, வலிது மெலிது. வு, வலிவு மெலிவு. கம் குறுக்கம். வல், இளவல். அளவு, தண்ணளவு. பிறவுமன்ன. இவ்விலக்கணத்தாற் திரப்பியப் பிரத்தியங்கள் விளங்கி முடியுமாறு;- குறுமன் கருமன் எனவும் சிறுக்கன் எனவும் அரியான் எளியான் எனவும் கரியன் குறியன் எனவும் புவலன் சிறுவன் எனவும் செய்யாள் கரியாள் எனவும் வெள்ளை பச்சை எனவும் புறம் அகம் எனவும் கரியவன் குறியவன் எனவுங் கரியவள் குறியவள் எனவும் கருமி குறுமி எனவுங்கொள்க.* (4)

**அச்சியொடாட்டி யனியாத்தியத்தி தியாளொடள்ளி**
**இச்சியாதியும் பெண்மைத்தெளிவா மெழில்வடநூன்**

---

* *பருப்பதம் காப்பியம் காந்தர்ப்பம் சருப்பதோபத்திரம் என்றற்றொடக்கத்தனவொப்பத் திரவியமென்னும் வடமொழி தமிழிற் திரப்பியமெனத்திரிந்தது. இதனை மேல் அலங்கா ராதிகாரத்தில் வரும் "திரப்பியஞ் சாதி தொழில் குணம்" என்னும் பத்தாவது கட்டளைக் கலித்துறை யானுமுணர்க.*

**மெச்சியவாகாராந் தத்தினுமூர்ப்பின்னு மிக்கவையாம்**
**நச்சியவீகாரந் தானேகுறுக நறுநுதலே.**

(இ-ள்.) அச்சி ஆட்டி அனி ஆத்தி அத்தி தி ஆள் அள் இ இச் சி சி முதலாகிய பிரத்தியங்கள் பெண்மையை விளக்கும் பிரத்தியங்களாம். பெண்ணைக்குறித்தபொழுது எல்லாச் சொற்களின் மரபும் பிழையாமற் சொல்லிக்கொள்க. எல்லாச் சொல்லுமாவன சாதியைச் சொன்னசொல்லுங் குணத்தைச் சொன்னசொல்லுஞ் கிரியையைச் சொன்னசொல்லுஞ் திரப்பியத்தைச்சொன்ன சொல்லுமெனவே அடங்கும். வடநூலிற் பெண்ணைக்குறித்துவந்த ஆகாராந்தச் சொற்களின் பின்னும் ஊரைச்சொல்லுஞ் சொற்களின் பின்னும் ஐகாரம்வரும். ஈகாராந்தம் தானே குறுகும்.- எ-று. வரலாறு:- பறையனென்னுஞ்சாதிச்சொல் அக்குலத்துள்ளாளென்னும் பெண்மைப் பொருண்மேல் அச்சியென்ற பிரத்தியம் பெற்றுப் *பறைச்சியெனவரும். இவ்வண்ணம், வெள்ளாட்டி கம்மாட்டி எனவும் பார்ப்பனி வண்ணாத்தி நட்டுவத்தி கைக்குளத்தி குறத்தி ஒருத்தி நல்லாள் தீயாள் நல்லள் தீயள் சாத்தி கொற்றி கள்ளிச்சி பேய்ச்சி எனவும் வரும். பிறவுமன்ன. வனிதா தாரா உமா மாலா சாலா என வடநூலில் ஆகாராந்தமாய்ப் பெண்ணைக்குறித்துக் கிடந்தசொற்கள் தமிழில் ஐகாராந்தமாகி வனிதை தாரை உமை மாலை சாலை என முடியும். தேவதை கலை சீதை என வருவனவும் அது. நாகபட்டினம் தஞ்சாவூர் உறையூர் எனக்கிடந்த ஊர்ப்பெயர்ச் சொற்கள் கடை குறைந்து நாகை தஞ்சை உறந்தை என ஐகாரத்தான் முடியும். வடநூலிற் பெண்பாலைக்குறித்த நதீ குமரீ என்னும் ஈகாராந்தச் சொற்கள் நதி குமரி எனக் குறுகும்.(5)

**முந்தியவர்க்கங்க ளைந்தினுமுன்னொன்றின் மூன்றடங்கும்**
**பந்தியிற்றெய்வ மொழிமுதல்யவ்வேற் பகருமிய்யாம்**
**வந்திடும் லவ்விற் குகரமுமாகும் வரில்ரகரம்**
**அந்தவிரண்டொ டகரமுமாமென்ப ராயிழையே.**

(இ-ள்.) கசடதப என்பவற்று ஒவ்வொன்றையே கிடப்பினும் உரப்பியும் எடுத்துங் கனைத்தும் மூக்கினும் ஐந்துவிதமாகச் சொல்லப்படுகின்ற ஐந்து வருக்கங்களினும்

---

* இஃது சிப்பிரத்தியத்தான் முடிந்ததோர் தத்திதம். அச்சிப் பிரத்தியத்திற் குதாரணம், வேட்டுவச்சி, துளுவச்சி, அம்பட்டச்சி, ஆரியச்சி முதலிய பிறமொழிகளாம்.

முன்படையக் கிடப்பினாற் சொல்லப்படுகின்ற ஒன்றின்கண்ணே அதன் பின்னே நின்ற மூன்றெழுத்தும் அடங்கும். இஃது ஆதேசமென்னும் விகாரமெனக் கொள்க. யவ்வென்னுமெழுத்தை முதலாகவுடைய வடமொழியின்முன் இகரம் வரப்பெறும்; லவ்வென்னுமெழுத்தை முதலாகவுடைய வடமொழியின்முன் இகரமும் உகரமும் வரப்பெறும்; ரவ்வென்னுமெழுத்தை முதலாகவுடைய வடமொழியின்முன் அகர இகர உகரங்கண்மூன்றும் வரப்பெறும்.-எ-று. இவையெல்லாம் ஆகமமென்னும் விகாரமெனக்கொள்க. இவையிற்றைத் தத்திதப்படலத்து ஓதல்வேண்டியதென்னையெனின் இவையுந் தத்திதப்பிரத்தியத்தான் முடிகையினாலென்க. வரலாறு:- கந்தமென்னுஞ்சொல் கவ்வருக்கத்து மூன்றாவதற்கு முதலாதேசமாயும் தவ்வருக்கத்து நாலாவதற்கு முதலாதேசமாயும் அம்மென்னுந் தத்திதப் பிரத்தியத்தான் முடிந்தது. இது வேறொருபொருண்மேலாய் முடிந்ததன்று. தன்பொருளிலே முடிந்தது. வடமொழியுடையானும் தன் பிரத்தியத்திலே சுப்பிரத்தியத்தான் நலமே நிலமாய தென்று முடிக்கும். இப்படியே கடகம் சத்திரம் சலம் மாடகம் ஆடகம் தானம் தனம் பாணம் பணம் பகவான் எனவரும். இயக்கர் எனவும் இலங்கை உலோகம் எனவும் அரங்கம் இராவணன் உரோமம் எனவும் வரும். (6)

**முதலொற் றிரட்டிக்கு முப்பத்தொன்றெய்திடின் முன்பினிஃது**
**இதமிக்கவைந்தாமெய் யாகுந்தனியே யிதனயற்குப**
**பதமிக்கசவ்வரு மெண்ணான்குதவ்வாமுப் பானுறுமூன்**
**றதனுக்குலோபமும் யவ்வொடுகவ்வு மறைவர்களே.**

(இ-ள்.) வடமொழியில் எழுத்தடைவில் சவ்வென்னும் முதல் வியஞ்சனம் முப்பத்தொன்றாமெய் தனக்கு முன்னேவரினும் பின்னேவந்து முப்பத்தைந்தாய் நிற்பினும் ஈரிடத்தும் இரட்டிக்கும். இரட்டிக்குமிடத்துத் தமிழிலில்லனபோம் என்னும் இலக்கணத்தான் மேலிட்ட முப்பத்தொராமெய் அழியும், மொழியின்கண் நடுவிலேதனியே வரில் ஐந்தாமெய்யாகிய டகாரமாகும். இவ்வியஞ்சனத்துக்கயலாய்நின்ற முப்பதாம் முப்பத்திரண்டாம் வியஞ்சனங்கள் சவ்வாம். முப்பத்திரண்டாம் வியஞ்சனந் தவ்வாம். முப்பத்து மூன்றாம் வியஞ்சனத்துக்கு ஒரோவழியுலோபமாம் ஒரோவழி யவ்வுங்கவ்வுமாம்-எ-று. வரலாறு:- பக்கம் தக்கன் இயக்கன் எனவும் பரிக்காரம் நிக்காரம் எனவும் விடபம் புருடன் எனவும் சங்கு சாலை சதயம் சத்தம்

எனவும் சகலம் சங்கம் சிங்கம் சத்தியம் எனவும் வத்தன் தாதன் எனவும் அரி அரன் ஆரம் எனவும் வயிதேவி மயிமை மயிதலம் எனவும் மோகம் மகிடம் மகிமை எனவும் வரும். சவ்வருக்கத்து மூன்றாமெழுத்து யகாரமாய்ப் பங்கயமெனமுடிவதும் முப்பத்தொராம் வியஞ்சனம் மொழிமுதலிற் சகரமாய்ச் சட்டியென முடிவதுமுண்டு. (7)

**கூட்டெழுத்தின்பின் யரலக்கடோன்றிடிற் கூட்டிடையே**
**யோட்டெழுத்தாகப் பெறுமொரிகாரம் வவ்வுக்கொருவ்வாம்**
**மீட்டெழுத்துத்தமி ழல்லனபோம்வேறு தேயச்சொல்லின்**
**மாட்டெழுத்தும்மித னாலறிமற்றை விகாரத்தினே.**

(இ-ள்.) வடமொழியில் இரண்டு வியஞ்சனங் கூடிவருமிடத்துப் பின்பு நிற்கின்ற யரல வென்னும் மூன்றுகூட்டெழுத்தைப்பிரித்து நடுவே இகரமாகமமாகும். வகரங் கூட்டெழுத்திற் பின்னாய்வரின் நடுவே உகரமாகமமாகும். இவையிற்றிலெல்லாம் முன்பினெழுத்திரட்டித்து வரும். வடமொழியை வைத்துத் தமிழாக்குமிடத்து இவ்விலக்கணத்தால் ஆதேசமாவனவாகத் தமிழொழிந்தவற்றை அழிக்க. ஆரியம் வடுகு தெலுங்கு சாவகம் சோனகம் சிங்களம் பப்பரம் இவை முதலாகிய பிறதேயச்சொற்களையுந் தமிழாக்குமிடத்து இவ்விலக்கணத்தானே முடிக்க- எ-று. வரலாறு;-வாக்கியம் வாச்சியம் சத்தியம் நாட்டியம் எனவும் புத்திரன் சத்திரம் எனவும் சுக்கிலம் ஆமிலம் எனவும் யகரரகர லகரங்கள் இடையே இகரம் பெற்றுவந்தன. பக்குவம் என வகரங் கூட்டெழுத்திற்குப்பின்பு நடுவோருகரம் பெற்றது. மகர நகரங்கள் கூட்டெழுத்தின்பின் வருங்கால் முறையே பதுமம் அரதனமென உகர அகரங்கள்பெற்று முன்னெழுத்து மிகாமல் முடிவனவும் நகரம் இரத்தினம் என முன்னெழுத்திரட்டித்து இகரம் பெற்றுமுடிவதும் இவைபோல்வன பிறவுங்கொள்க. இவ்விலக்கணத்தாற் பக்கம் என முப்பத்தொன்றாம் வியஞ்சனந் தமிழெழுத்தல்லன போமென்றவாற்றானே போனதும் "முதலொற்றிரட்டிக்கு முப்பத்தொன்றெய்திடில்" என்றவாற்றானே இரட்டித்துக்காண்க. வட்டாவென்னும் ஆரியதேயச்சொல் வட்டையென வந்தவாறும் முருங்காவெனுஞ் சிங்களச்சொல் முருங்கையென வந்தவாறுங்கொள்க. (8)

## தத்திதப்படலம் முற்றும்

# தாதுப்படலம்

**மன்னியசீர்வட நூலிற்சரபச வென்றுவந்து**
**துன்னியதாதுக் களின்போலிபோலத் தொகுதமிழ்க்கும்**
**பன்னியதாதுக் களைப்படைத்துக்கொள்க முன்னிலையில்**
**உன்னியவேவ லொருமைச் சொற்போன்றுல கிற்கொக்கவே.**

(இ-ள்) வடநூலிற் தாதுவின்கண் சர என்றும் பச என்றும் மத்திம புருடனிலே விதியென்னும் ஏவற் பொருளின்கண் ஏக வசனாந்தப் பொருள்போற் கிடந்ததாதலாற் தமிழ்ச் சொல்லினுக்குந் தாதுக்களை அதுபோலத் தோற்றுவித்துக் கொள்க. படைக்குமிடத்து முன்னிலை யேவற்பொருளின் உலகத்தார்க்கொக்க ஒருமைச்சொற்போலப் படைக்க-எ-று. அஃதாமாறு:- சரவென்னுந் தாதுவின் பொருட்போலியும் பசவென்னுந்தாதுவின்பொருட் போலியும் போல நடவென்பதும் அடுவென்பதுமாம். அப்பரிசே கிடந்தன எண்ணிறந்த தாதுக்களுளவாதலாற் தமிழினுக்கும் நட அடு வென்னுமிவை முதலாகிய தாதுவாய் அவை முன்னிலையிடனில் ஏவற்பொருளில் ஒருமைப்பொருட்போலி போன்றன. நடவென்பது ஒருவனை நடவென்றும் அடுவென்றது ஒருவனை அடுவென்றும் ஏவினாற் போன்றது. அதற்குக் காரண மென்னையெனின் சுவ்வென்னும் பிரத்தியத்தான் முடிந்தாலல்லது நடப்பது அடுவதான பொருள்களைப் பயவா. அப்பொருள்போன்றிருப்பது மாத்திரமே யென்க. முடியாத பொழுதும் அப்படியே கிடப்பதாயின் முடித்துப் பயனென்னையெனின் அது வடநூற் தாதுவிதியென்க. அன்றியும் அதனைத் தாதுவாகவைத்து மற்றைக் கிரியாபதங்களை முடித்தலாலும் அமையுமென்க.//தமிழ்ச் *சொல்லிற்கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாந் தமிழுக்கும் பெறும்.//அப்படித் தோற்றுவித்துக் கொள்ளுந் தாதுக்களும் மூன்றுவகைப்படும். அவை தமிழ்த்தாதுவும் வடமொழித்தாதுவுந் திசைச்சொற்றாதுவுமாம். தமிழ்த்தாதுக்கள்

* ஈண்டுச் சொல்லென்றார் சொல்லினதிலக்கணத்தை.

நடஅடு செய் பண்ணு என்னு மிவைமுதலாக வரும். வடமொழித்தாதுக்கள் வடவெழுத்தோடுகூடியும் வடசொற் சிதைவாயு மிருக்கும். வி என்னும் எழுத்தின் பின் வடவெழுத்தடைவிற் பத்தொன்பதாம் வரியின் மூன்றா மெழுத்தையும் ந என்னு மெழுத்தின் பின் முப்பதாம் வரியின் மூன்றா மெழுத்தையும் கிரு என்னுமெழுத்தின் பின் முப்பத்தொன்றாம் வரியின் மூன்றாமெழுத்தையுங் கூட்டின பொழுது முன்னிலையேவலொருமைபோற்றோன்றித் தாதுவாதல் காண்க. சிந்தி வந்தி எனப் பிறவும்வரும். வடவெழுத்துத் தாதுவெல்லாம் பெரும்பாலும் இகார இறுதியாயல்லது வாராவென்க. திசைச்சொற்றாதுக்கள் நொடி கோடி என்னும் சொற்களொப்ப முன்னிலையில் ஏவற்பொருண்மே லொருமைச்சொல்லாய் வடமொழி தமிழ்ச்சொற்களினின்று வேறாய் வரும். பிறவுமன்ன. (1)

**நடவடுசெய்பண்ணு நண்ணுபோசிந்தி நவிலுண்ணிரு**
**கிடவிடுகூறு பெறுமறுகொள்ளழை வாழ்கிளைவெல்**
**கடநடுதங்கு கசிபொசிபூசு மிகுபுகுசெல்**
**இடுமுடியேந்துகொ லிவ்வணமற்று மியற்றிக்கொள்ளே.**

முன்பிற்சூத்திரத்திற் தாதுக்களைப் பிறப்பித்துக்கொள்ளச் சொன்னானேயாயினும் அவற்றுட் சிலகாட்டியவண்ணமே இயற்றிக் கொள்கவென்றான், ஈண்டு மேலும் சிலதாதுக்கள் காட்டுகின்றான். (இ-ள்.) நடவென்பதுமுதல் கொல்லென்பதீறாக முப்பத்துமூன்று தாதுக்கள் கண்டு பிறவுமிப்படியே தோற்றுவித்துக்கொள்க-எ-று. அவற்றுட் கருமத்தை நீங்காததாது கருமத்தை நீங்கினதாது எனத் தாது இருவகையாம். வடமொழிப்புலவரும் சகருமகம் அகருமகமென வழங்குவர். கிரியாபதங்கள் முடிக்குமிடத்து முன்சொன்ன விகாரங்களை அறிந்து வேண்டுமிடமறிந்து முடிக்க. (2)

**வானுமையம்புகை வல்லிவுதல்லலல்லன் பானலைகுத்**
**தான்விதிவைசி முதல்சுப்பிரத்தியந் தாதுவின்பின்**
**னானவினைக்குறிப் புக்காரகத்தி லணையுமென்ப**
**ஊனமில்சொல்லொன்று முன்புநின்றாகலு முண்டென்பரே.**

(இ-ள்.) வான் உ மை அம் பு கை வல் இ வு தல் அல் அன் பான் அலை கு தான் வி தி வை சி என இவை முதலாகும் பிரத்தியமுஞ் சுப்பிரத்தியமும் தாதுவின்பின் வினைக்குறிப்புப்

பொருளினுங் காரகபதப்பொருளினும் வரப்பெறும். இப்படித் தாதுக்களின் பிரத்தியம் பின்பெற்று முடியுமிடத்து மற்றொரு பெயர்ச்சொல்லு முன்புநின்றும் முடியும் எ-று. வரலாறு:- போவான் அறிவான் செய்வான் கருதுவான் எனவும் பூச்சு நாற்று எனவும் மென்மை வன்மை எனவும் ஆட்டம் நாட்டம் எனவும் கற்பு சிரிப்பு எனவும் அறிக்கை நடக்கை எனவும் இளவல் கறுவல் எனவும் காணி எனவும் அறிவு கரவு எனவும் போதல் எனவும் செல்லல் எனவும் ஊணன் எனவும் காப்பான் எனவும் சுடலை எனவும் போக்கு எனவும் கடந்தான் எனவும் கேள்வி எனவும் உண்டி எனவும் போர்வை எனவும் காட்சி மாட்சி நீட்சி எனவும் வரும். முதலென்றமையாற் கொல்லை கலை என ஐ முதலிய வருவனவுங் கொள்க. கலா என்னும் வடமொழி கலையாயிற்றெனினும் அமையும். சுப்பிரத்தியத்தான் விதை அவிழ் பார் சரி மடி முதலிய கொள்க. இனிச் சுப்பிரத்தியத்தான் எண் பண் எனக் கடைகுறைந்தும் தீன் ஊண் வீடு என விகாரப்பட்டும் வருவனவுமாம். இவை காரகத்தினும் வினைக்குறிப்பினும் பேதித்தவாறு. தறிக்கப்படுதலாற்தறி, முறிக்கப்படுதலான் முறி, பொதியப்படுதலாற் பொதி எனவும் இவ்வண்ணந் துளை விதி உரி எனவுங் கருமக்காரகத்தில் முடிந்தன. விளக்குதலால் விளக்கு எனவும் இவ்வண்ணம் அறிவு சாவு எனவும் கருத்தாக்காரகத்தில் முடிந்தன. இதனால் அணிவதென்பது அணியெனவும் இவ்வண்ணம் மொழி பேச்சு உடையெனவும் கரணக்காரகத்தில் முடிந்தன. இதனினின்றுங்கழிவரென்பது கழியெனவும் இவ்வண்ணம் உறைவீடு எனவும் அவதிக்காரகத்தில் முடிந்தன. இதன்கட்சுடுவாரென்பது சுடலையென ஆதாரக்காரகத்தில் முடிந்தது. கேட்டல் அறிதல் சாதல் போதல் எனவும் வீடு கூடு கூத்து நோக்கு காட்சி சரி காவல் ஆட்டம் ஓட்டு எனவும் வினைக்குறிப்பின் முடிந்தன. வினைக்குறிப்பாவது வடநூலிற் பாவமென்பது. இதிற் ப இருபத்துநாலாம் வியஞ்சனம். இனி முன்பு சிலபெயர் நின்று பின்பு தாதுபெற்றுப் பிரத்தியங்களான் முடியுமாறு. கூத்தாடி நீறணிந்தான் அம்பலத்தாடி பாம்பழிவுண்ணி முற்சொல்லி ஆறுகாட்டி ஊடுபோகி நாடுகாணி கண்கட்ட பழியஞ்சி புகழேந்தி எனவரும். பிரத்தியசாதி பதத்துடன் பிரத்தியங்களுங்கூட்டிப் பெயர்ச்சொற்களையெல்லாம் வடமொழித் தாதுவிலே பொருந்துவன அறிந்து முடிக்க. அவை முடிக்குமாறு. (3)

**தம்மந்திகன்வம் மனமணந்தன்னக னக்கொடியுச்**
**சம்மன்மமையகஞ் சர்திரமாவாயு வல்லில்மியான்**
**கம்மன்றவங்கன் முதலாயினதெய்வத் தாதுவின்கண்**
**விம்மவருங்கா ரகத்தும்வினைக்குறிப் பின்கணுமே.**

*(இ-ள்.) தம் அம் தி கன் வம் அனம் அணம் தன் அகன் அக்கு இ உ சம் மன் மம் ஐ அகம் சர் திரம் ஆ ஆயு அல் இல் மி ஆன் கம் அன் தவம் கல் என்னுமிவைமுதலாய்க் கிடந்த பிரத்தியங்களும் பிறவும் வடமொழித் தாதுவிற் காரகப்பொருளினும் வினைக்குறிப்பினும் வரும்-எ-று. அவைவருமிடத்துத் தாதுப்பெயரனேகமா கையாற் தாதுப்பாடத்திற் கிடந்த பொருண்மேலும், அன்றியே முன்புண்டாய்க்கிடந்த சொல்லை முடித்துக் காட்டுகின்றமையால் அச்சொல்லின்பொருண்மேலும், தக்க பிரத்தியத்தாற் தாதுவிற் பொருளாக்கி முடிக்க. அது தாதுப்படலத்திற்கிடந்த பொருளிலே முடித்தற்கரிதாதலிற் செய்யும்படியறிந்து முன்சொன்ன விகாரங்கள் வேண்டுமிடம் அறிந்தியற்றி முடிக்க. இப்படி முடிக்க எல்லாப்பெயர்ச் சொல்லும் முடிவனவாம். பிராதிபதிகமுஞ் *சாதியும் உடன்பிரத்தியமுந் தாதுவும் முடித்தற்கரிய வென்பாருமுளர். முடிப்பான் பக்கம் வலியுடைத்து. **பிராதியில் அநுராகம் விகாரம் உபகாரம் முதலிய பிராதியிலும் ஓங்காரம் அலங்காரம் முதலிய பிராதியிலும் முடிந்து வடமொழித் தாதுக்கள் கிடந்தனவெனக்கொள்க. பொருடெரியாத தாதுக்களையும் ஒருசொல்லான் முடிக்கவென்றால் இச்சொல்லாக முடிக்கவென்றாய்ந்து, சொன்ன தாதுவிற் பிரத்தியம் வரின் முடியுமென்று கருதி, வேண்டும் விகாரங்களான் முடிக்க. இதற்குக் குணமும் விருத்தியும் வருக்கக்கிடப் பெனக்கொள்க.* **(4)**

**அய்யாயிகராந்த மவ்வாவுகராந்த மாவிமுன்பு**
**நையாதுநிற்கும் பிரத்தியம்பின்வரி னற்குணமும்**
**பொய்யாவிருத்தியு மோரோவிடத்துப் புகர்பெயர்ச்சொல்**
**உய்யாதொழியில் விகாரத்தையோர்ந்துகொளொண்ணுதலே.**

*(இ-ள்.) உயிர் முன்னாகிய பிரத்தியம் பின்புவரில் வடமொழித்தாதுவில் இகாராந்தமான தாதுக்களெல்லாம் அய்*

---

* *ச ஆதியான பிரத்தியத் தொகுதியைச் சாதி யென்றார்.*

** *பிராதி தாதுவின்முன் வரும் உபசர்க்கம்.*

ஆய் என்னும் இரண்டனையும் அந்தமாகவுடையவாம். உகாராந்தமான தாதுக்களெல்லாம் அவ் ஆவ் என்னும் இரண்டனையும் அந்தமாகவுடையவாம். தாதுக்கள் தமக்கொத்த குணமும் விருத்தியும் ஏற்றுவருவனவன்றாயின் வரும் விகாரவேறுபாடுகளை ஓர்ந்துகொள்க. இவை முடிக்குமிடத்து முன்சொன்னவை வைத்து முடிக்கினல்லது பெயர்ச் சொல்லெல்லாம் முடிக்க அடங்கா.-எ-று: *வரலாறு:-பூ-தம், பூதம். தா-மம், தாமம், நீ-தி, நீதி. பா-கன், பாகன். இ-வம், ஏவம் இதில் இகரம் குணமானது. புச-அனம், போசனம். இது உகரம் குணமானது. நி-அனம், நயனம் இது இகாராந்தம் அய்யானது. நி-அகன் நாயகன். இது ஆயானது. சா-அணம், சாணம், விதி-தன் வேந்தன். இது ஈற்றில் நகரவொற்றாதேசமாய் இகரம் குணமானது. கிரு-அன், கருடன், இது இருவினுக்கர் ரானது. துட-அக்கு துடக்கு. சர்-இ, சரி. மத-உ, மாது. இதில் முதலுயிர் நீண்டது. வா-சம், வாசம். வா-மன், வாமன். சா-மம், சாமம். நட-ஐ, நடை நட-அகம், நாடகம். நி-சர், நேசர். இதுகணமானது. பா-திரம்-பாத்திரம். கட-ஆ, கடா. வா-ஆயு, வாயு. பட-அல், படல். புட-இல், புட்டில். பூ-மி, பூமி. வலி-ஆன், வல்லான். கட-கம், கடகம். மத-அன், மதன். கத-தவம், கதவம். இது கடை குறைந்தது. பா-கல், பாகல். அய்யாயிகராந்த மென்பதனால் நி சி இலா என்னும் தாதுக்களின் பின் அனம் அகம் என்னும் பிரத்தியம் வந்து நயனம் நாயகம், சயனம் சாயகம், இலவனம் இலாவகமெனவும் அவ்வாவுகராந்தமென்பதனால் பூ என்னுந் தாது பவனம் பாவகமெனவும் முடிந்தவாறுகாண்க. பிறபிரத்தியங்களானும் விகாரங்கருவி யாகக்கொண்டு முடித்து வினைக்குறிப்பினுங் காரகத்தினும் அடங்க எல்லாப்பெயரும் முடிக்க. விம்மவென்று மிகுத்துச்சொல்லிய வதனால், பொருள்பாராதே சொன்முடிவைப் பார்த்து முடிக்கச் சொன்ன தாதுவெல்லாந் தமிழெழுத்தாற் சொன்னவென்பது. (5)

**ஆட்டாற்றுதீற்றாதி தாதுக்களையடற் காரிதமென்**
**றோட்டாவறிக வுரையின்படியொப்பில் விப்பிபின்பு**
**மூட்டாவறிகா ரிதக்காரிதமுன்பிற் றாதுவின்கட்**
**காட்டாவறியவை காரிதக்காரிதக் காரிதமே.**

---

* இவ்வுதாரணங்கள் எல்லாருக்கும் உடன்பாடன்று.

(இ-ள்.) ஆட்டு ஆற்று தீற்று முதலிய காரிதத் தாதுக்களாம். முன்பிற் கேவலத்தாதுவோடு இவற்றிற்கு வேறுபாடென்னெனின் ஆடு என்பது கேவலத்தாதுவாய் அத்தொழிலையே மற்றொருவனைச் செய்வியென்னும் பொருண்மேல் வினைக்குறிப்பிலே பிரத்தியம் பண்ணி ஆட்டு எனவும், இவ்வண்ணம் ஆறு ஆற்று, தின் தீற்று எனவும் வந்து வேறுபட்டன. இப்படியே ஊட்டு காட்டு மூட்டு வாட்டு ஏற்று நாற்று ஓட்டு கூட்டு சூட்டு எனவரும். ஆடினான் கேவலத்தாது. ஆட்டினான் காரிதத்தாது. இவற்றின் பின்பு வி பி என்னும் பிரத்தியங்கள் வந்தால் அவை காரிதக்காரிதத்தாதுவாய், ஆட்டுவி ஆற்றுவி தீற்றுவி கேட்பிப்பி வார்ப்பிப்பி உண்பிப்பி தின்பிப்பி எனவரும். ஒருசார் கருத்தாவையுங் கருமத்தையும் வேறுபடுக்கு மிடத்துங் கேவலக்கருத்தா காரிதக்கருத்தா காரிதக்காரிதக் கருத்தா வெனவும் கேவலக் கருமம் காரிதக் கருமம் காரிதக்காரிதக்கருமமெனவும் வரும். உதாரணம்- உண்டனன் ஊட்டினன் ஊட்டுவித்தனன் எனவும் உண்டதுசோறு ஊட்டினதுசோறு ஊட்டுவித்ததுசோறு எனவும் கொள்க. முன்பு சொல்லிப்போந்த காரிதக்காரிதத் தாதுவின்மேல் பின்சொன்ன வி பி என்னும் பிரத்தியங்கள் சேர்ந்து காரிதக்காரிதக்காரிதமாம். உதாரணம்-ஆட்டுவிப்பி ஊட்டுவிப்பி எனவரும். கருத்தாக்கருமங்களும் அவ்வாறேகொள்க. **(6)**

**தாதுவின்பின்பு தனயவிறப்பி னிகட்சியின்கண்**
**ஓதுங்கிறசுவ்வொ டாநின்றவாங்கும்மும் மோடுமஃகான்**
**பேதமலியு மெதிரின்கணாகும் பிறவும் வந்தால்**
**ஏதமில் சந்திராந் தம்பிழையாம வியற்றிக்கொள்ளே.**

(இ-ள்.) தாதுக்களின்பின் த ன ய என்னும் மூன்றுபிரத்தியமும் இறந்தகாலத்தைக் குறித்துவரும். நிகழ்காலத்தின்கண் கிற சு ஆ நின்ற என்னும் மூன்று பிரத்தியமுமாம். கும் உம் என்பனவும் மகார வொற்றும் எதிர்காலத்தின்கண்ணாம். பிற பிரத்தியங்களாலும் வரும். அவை *சந்திராந்தமென்று பெயராம். இவை பிழையாமல்

* சம் திரம் முதலிய அந்தப்பிரத்தியத் தொகுதியைச் சந்தி ராந்தமென்றார். இப்பதம் வடநூல் வியாகரணங்களிலிலது. சங்கிராந்தம் சந்திராந்தமென மரீஇயதென்பர் சிலர். சங்கிராந்தப்பதத்தின் பொருளுக்கும் மரூஉமொழிவழக்குக்கும் அது பொருந்தாது.

முடிக்க-எ-று. சந்திராந்தம் வேறுசில பதங்களுக்குறுப்பாய் நிற்பதல்லது தனித்துவரப்பெறாது. வரலாறு:- பிறந்தபிள்ளை கண்டவெருது நின்றபசு எனத் தகாரமும் ஊட்டின தீற்றின போன என னகாரமும் சொல்லிய ஆய என யகாரமும் இறந்தகாலத்திலும், செய்கிற சாத்தன் செய்சாத்தன் செய்யாநின்ற சாத்தனென முறையே கிற சு ஆநின்ற என்பன நிகழ்காலத்திலும், நிற்குஞ்சாத்தன் அறியுஞ்சாத்தன் சாங்கிழவியெனக் கும் உம் மகாரங்கள் எதிர்காலத்திலும் வந்தன. இவையெல்லாம் மூன்றுகாலத்தில் ஒருகாலத்தைக் குறித்தல்லது வாராவென்று கொள்க. பேதமலியுமென்பதனால் எதிர்காலத்துக்குச் சொன்ன பிரத்தியம் மூன்று காலத்துக்குமாம். அது பிரயோகத்திற்காண்க. (7)

மன்னுந்துமந்தம் பொருட்டுக்கப்பான்தற்கு வானவென்று
பன்னுமெழிற்றாது வின்பின்பிலாகும் பகரில் முன்பு
துன்னியதாதுத்தொழிற்பொருட்டாகவென்னுந்தொடர்ச்சி
உன்னியபோதென்று தெய்வப்புலவ ருரைத்தனரே.

(இ-ள்.) பொருட்டு க பான் தற்கு வான் அ என்னும் ஆறுபிரத்தியங்களும் துமந்தப்பெயரால் தாதுக்களின் பின்பு வரும். இவை யாமிடத்து இப்பிரத்தியத்தான் முன்பு நின்ற தாதுவிற் கிரியாபதப் பொருளிற்குத் தொடர்ச்சி கருதினபொழுதாம்-எ-று. உண்ணென்னுந் தாதுவின்பின் துமந்தப் பிரத்தியமா மிடத்து உண்கை யென்னுந் தொழிலே குறித்தா மென்பது. இச்சொல்லப்பட்ட துமந்தப்பிரத்தியாந்த பதங்களும் மற்றொரு பதத்திற்கு உறுப்பாகவன்றி வாரா வென்க. வரலாறு:- உண்ணுதற்பெருட்டுவந்தான், ஊட்டுவித்தற் பொருட்டுப் போனான், நிற்கவேண்டியிருந்தான் கற்கத்தாற்பரியத்தான், அறிதற்குத் துணிந்தான் போதற்கு நினைத்தான், அறிவான்கருத்துண்டு போவான்கருத்தில்லை, உண்ணவல்லன் பேசவல்லன், படிப்பான் வந்தான் கொடுப்பானினைந்தான் எனவரும். கருதினானுண்ண நினைந்தான்சொல்ல எனப் பதங்களின் பின்னும் உண்ணக்கருதினான் சொல்லநினைந்தான் எனநடுவிலும் வருதல்காண்க. துமந்தமாவது நாலாம் வேற்றுமையி னல்லது வாராமையின் அதனையும் இதனோ டொப்பித்தே முடிக்க. இப்பொருள் வடமொழித்தாதுவிற் பாதும் யாதுமெனத் தும்பிரத்தியத்தான் முடிந்தமையில் இதனைத் துமந்தப்பிரத்தியமென்றார். (8)

**ஆவுமிட்டுந்துவ்வு முவ்வினொடிய்யு மரும்புலவர்**
**ஏவுங்கருத்தா விருதொழிற் கொன்றிடின் முன்புநின்று**
**மேவும்பொருட்டாது வின்பின்வருமிக்க தன்பெயரே**
**பாவுந்துவாந்தம தாமென்றுரைப்பர் பனிமொழியே.**

*(இ-ள்.) ஆ இட்டு து உ இ என்னும் ஐந்துபிரத்தியமும் ஒரு கருத்தாவுடையனவாய் இரண்டு தாதுவுள்ளபொழுது முன்புநின்ற தாதுவின்கண்வரும். அவையிற்றின் பெயர் துவாந்தமாம்- எ-று. நீத்துவா பாத்துவா என்னும் வடமொழித்தாது துவாந்தப்பிரத்தியத்தால் வந்தமையிற் துவாந்தமென்றார். வரலாறு:- உண்ணாப் போனான் உண்டிட்டுப்போனான் உண்டுபோனான் எனவும் புகாப்போனான் புக்கிட்டுப்போனான் புகுந்துபோனான் புக்குப்போனான் எனவும் சொல்லாநின்றான் சொல்லிட்டுநின்றான் சொற்றுநின்றான் சொல்லிநின்றான் எனவும் வரும். பல தாது வரும்போது பின்பிலதனைக் குறித்து முன்பி லதனுக்காக்குக. உண்டுதின்றுலாவியிருந்து போனான் எனக்கொள்க.* **(9)**

**இல்லையுண்டாலில் லிவைமுதலாவிடைச்சொற்களுக்கோர்**
**எல்லையுண்டாக வியற்றவொண்ணா விசையும்பொருளும்**
**ஒல்லையுண்டாக நிற்கும்மிடமுந்தேர்ந் திவற்றொடொக்கச்**
**சொல்லையுண்டாக்குக வென்பதுநூலின் றுணிபொருளே.**

*(இ-ள்.) இல்லை உண்டு ஆல் இல் என்னுமிவைமுதலாய்க் கிடந்த இடைச்சொற்கள் இன்னதென்று வரையறுக்கப் படாவாதலால் அவையிற்றினுக்கு இசையும் பொருளும் பொருந்திநிற்கும் இடமும் உலகத்தோடொக்கத் தேர்ந்தறிந்து காட்டின சொல்லோடுமொக்க இடைச்சொற்களையுளவாக்கி முடிக்க என்பது இலக்கண நூல்களின் துணிபாம்-எ-று. சில இடைச்சொல் கடையினிகழும், சில இடைச்சொல் அருகினின்று சொல்லிற்குறுப்பாம். சில தாமே பொருடந்து நிற்கும். சார்வில்லை சோர்வில்லை சார்வுண்டு சோர்வுண்டு எனவும் அறிந்தால் பிரிந்தால் அறியில் பிரியில் எனவும் வரும். பிறவுமன்ன. இல்லை உண்டு ஆல் இல் ஆ ஆன் எனவும் இன்றி இன்னம் போலும் ஆம் ஆக்கும் ஏ ஓடு வாழி சாற்றி நனி ஓங்கு எனவும் பிறவாற்றானும் வரும்.* **(10)**

**ஆனாளாரார்களொ டாதாவிலன்மற் றிலளிவரும்**
**தானாமிலர்க விலதிலதாதுத் தடைப்பொருட்கண்**

**மேனாமுரைத்த மரபேவருமிக்க வாதொழிமுன்
நானாவுளமற்று நற்றடைமன்னும் பிரத்தியமே.**

*(இ-ள்.) ஆன் ஆள் ஆர் ஆர்கள் ஆது ஆ எனவும் இலன் இலள் இலர் இலர்கள் இலது இல எனவும் தடைப்பொருள் விளக்குந் தாதுவின் பின் முன் நாஞ் சொன்ன மரபேவரும். ஆதொழி முதலாக மற்றும் பல பிரத்தியங்களுமுள தடைப்பொருளினிகழ்வன எ-று. மரபேவருமென்றது முன்பு சொல்லப்பட்ட ஒருவன் ஒருத்தி சிறப்பு பலர் ஒன்று பலவென்னும் ஆறுசொல்லடைவே முன்பாறிற்கும் பின்பாறிற்குஞ் சொன்னதாம். முன்னைய ஆறும் எதிர்காலத்தடைப்பிரத்தியம். பின்னைய ஆறும் தகரவொற்றுப்பெற்று இறந்தகாலத்தடைப்பிரத்தியமும், ககரவொற்றுப் பெற்று நிகழ்காலப் பிரத்தியமுமாம். வரலாறு:-நடவான் நடவாள் நடவார் நடவார்கள் நடவாது நடவா எனவும் நடந்திலன் நடந்திலள் நடந்திலர் நடந்திலர்கள் நடந்திலது நடந்தில எனவும் நடக்கிலன் நடக்கிலள் நடக்கிலர் நடக்கிலர்கள் நடக்கிலது நடக்கில எனவும் வரும். ஆதொழி முன்னானாவுள வென்பதனால் நடவாதொழி நில்லாவழி மாயாப்புகழ் இது நடக்குதில்லை இவை நடப்பனவன்று எனவும் பிறவாற்றானும் வருவன கொள்க. தாதுக்கள் பல இணைந்து வரும்போது நில்லாதேபோனான் வாராதேயிருந்தான் என ஆதெனும் பிரத்தியத்தாற் துவாந்தமாக்கி உலகிற்கேற்க முடிக்க*
**(11)**

## தாதுப்படலம் முற்றும்

# கிரியாபதப்படலம்

ஒருவனொருத்தி சிறப்புப்பலரொன் றொடுபலவை
மருவுபடர்க்கை யொடுகாலமூன்றையும் வைத்துறழத்
துருவமலிபதி னெட்டாந்தொழிற்பதந் தொல்கருத்தா
உருவமலியும் பொருண்மேனிகழு மொளியிழையே.

*(இ-ள்.) ஒருவனைக் கருதின சொல்லாதியான ஆறையும் வைத்து இதன்முன் படர்க்கையென்னும் புருடனாயுள்ள பிரதமபுருட னைவைத்து இதனோடு இறப்பெதிர்வுநிகழ்வெனும் முக்காலத்தையும் வைத்துறழப் பதினெட்டுக் கிரியாபதமாம். இவை கருத்தாப்பொருளின் மேனிகழும் உருபுகளெனக் கொள்க. எ-று.* **(1)**

முன்னிலைதன்மை யிடத்தினிற்காலங்கண் மூன்றையும்வைத்து
உன்னுமொருமை சிறப்பொடுபன்மையுமுய்த்துறழ்ந்தாற்
பன்னுந்தொழிற்சொற் பதினெட்டுளகருத்தாப்பொருண்மேன்
மன்னிநிகழ்தொகை முப்பதொடாறும் வகுத்தறியே.

*(இ-ள்.) முன்னிலைதன்மையென்னும் இரண்டிடத்தையும் மூன்றுகாலங்களையும் ஒருமை சிறப்பு பன்மையென்னும் மூவகைச்சொல்லையும் வைத்துறழப் பதினெட்டுக்கிரியாபதமாம், இருதிறமுங்கூடிக் கருத்தாப் பொருண்மேல் முப்பத்தாறு கிரியாபதமாம்-எ-று. இவையிற்றின்கண்ணுஞ் சிறப்பினை மூன்றுவகைப் படுத்திக் கொள்க. ஒருவ னொருத்தி யொன்றென்பதை வேறுபடுக்க வொண்ணாமையில் ஒருமையெனவும் பலர்பல வென்பதனை வேறுபடுக்க வொண்ணாமையிற் பன்மையெனவுங் கொண்டான். சாத்தா நிற்பாய் மரமே நிற்பாய் எனவும் நாங்கணிற்பேமெனவும் பொன்காணிற்பீரெனவும் வரும். இனி இவை முப்பத்தாறு கிரியாபதங்களுக்கும் ஒன்றுக்கிரண்டாக எழுபத்திரண்டு பிரத்தியஞ் சொல்கின்றான்.* **(2)**

தானானுந்தாளாளுந் தாராருந்தார்களொ டார்களென்று
மேனாமுரைத்த பிரத்தியமாகுந் ததுவதுவுந்

**தேனார்குழலி தனவுமனவுந் திகழ்படர்க்கை**
**யானாவிறப்பிற் றொழிற்பதமாறிற்கு மாய்ந்தறியே.**

*(இ-ள்.) தான் ஆன் தாள் ஆள் தார் ஆர் தார்கள் ஆர்கள் தது அது தன அன என்று சொல்லப்பட்ட இவை பன்னிரண்டு பிரத்தியமும் இறந்தகாலப்படர்க்கைக்கிரியாபதம் ஆறிற்கும் ஒன்றிற்கிரண்டாக வரும்-எ-று. வரலாறு:- உண்டான் உண்டாள் உண்டார் உண்டார்கள் உண்டது உண்டன எனவும் உறங்கினான் உறங்கினாள் உறங்கினார் உறங்கினார்கள் உறங்கியது உறங்கியன எனவும் வரும். அனவென்பதற்கு இற்றென்பதாதேசமாய் உறங்கிற்றெனவும் வரும். அனவென்பதின் முன்னின்ற அகாரத்தினுக்குப் பெருகவும் இகரமாதேசமாய் உறங்கினவென முடியும். பிறவும் விகாரத்தாலறிந்து முடிக்க. பிறவுமன்ன.* (3)

**நின்றான்கிறானொடு நின்றாள்கிறாளிவை நின்றார்கிறார்**
**நின்றார்களோடுகின் றார்களுநின்றதுங் கின்றதுவுந்**
**தென்றாதசீர்நின் றனகின்றனவுந் திகழ்படர்க்கைப்**
**பின்றானிகழ்கை தொழிற்பதமாறிற்கும் பேர்த்தறியே.**

*(இ-ள்.) நின்றான் கிறான் நின்றாள் கிறாள் நின்றார் கிறார் நின்றார்கள் கிறார்கள் நின்றது கின்றது நின்றன கின்றன என்னும் இப்பன்னிரண்டு பிரத்தியமும் நிகழ்காலப்படர்க்கைக்கிரியாபதம் ஆறிற்கும் முறையே ஒன்றிற்கிரண்டாகவைத்தறிக-எ-று. நில் என்னுந் தாதுவினின்று இறந்தகாலப்படர்க்கையில் நின்றான் முதலிய பிரத்தியங்கள் முடிந்தாங்குக் கிட இரு என்னுந் தாதுக்களினின்றுங் கிடந்தான் இருந்தான் முதலாய பிரத்தியங்கள் நிகழ்காலப் பொருளில் வரும், இஃது ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல். இவை மூன்றும் உருவத்தாற் பேதப்பட்டும் பொருளொன்றாதல்காண்க. இவற்றைத் துவாந்தமாக்கிமுடித்தாலும் முடியுமெனிற் பொருள் வேறுபடுதல் காண்க. மேலுந் தமக்குமுன் ஆவென்னும் இடைச்சொற் பெற்றல்லதுமுடியா. கிறான் முதலிய பிரத்தியங்கள் நடுவே ஒரு னகாரவொற்றுப் பெற்றுக் கின்றான் கின்றாள் என முடிதலுமாம். வரலாறு:- உண்கின்றான் உண்கின்றாள் உண்கின்றார் உண்கின்றார்கள் உண்கின்றது உண்கின்றன எனவும் உண்ணாநின்றான் உண்ணாநின்றாள் உண்ணாநின்றார் உண்ணாநின்றார்கள் உண்ணாநின்றது உண்ணாநின்றன எனவும் வரும். நில் இரு கிட என்னுந்தாதுக்களை இறந்தகாலப் படர்க்கையில் முடித்துப் பிரத்தியமாக்கிக்கொள்ள வேண்டியது.*

போகாநின்றானென்னும்பதம் நின்றானென்னும் பிரத்தியத்தான் முடியாதே துவாந்தமாக்கிப் போவென்னுந்தாதுவுக்கும் நில்லென்னுந்தாதுவுக்கும் ஒருவனைக்கருத்தாவாக்கி முடிக்கில் அது பொருந்தாது. அவன் போவென்னுந் தாதுவுக்கல்லது நில்லென்னுந் தாதுவுக்குக் கருத்தாவாய் நிற்றலில்லாமையினென்க. அதுபோல உண்ணாவிருந்தானென்னும் பதம் உண்கைமுற்பட்டு இருக்கை பிற்படாமையிற் துவாந்தமாக்கி முடிக்கலாகாது. உறங்காகிடந்தா னென்னும் பதமும் உறங்குகை முற்பட்டுக் கிடக்கை பிற்படாமையிற் துவாந்தமாக்கலாகாது. அதனால் நின்றான் முதலிய பிரத்தியம்போல இருந்தான் முதலிய ஆறும் கிடந்தான் முதலிய ஆறும் பிரத்தியமாக்கி மரபறிந்துமுடிக்க. (4)

**வான்பானும்வாள்பாளும் வார்பாரும்வார்களும் பார்களுஞ்சீர்**
**தான்பாவியவது வும்பதுவுந்தத்தை யத்தைவென்ற**
**தேன்பாவுஞ்சொல்லி வனவும்பனவுந் திகழ்படர்க்கை**
**வான்பான்மலியு மெதிர்விற்றொழிற்பத மாறிற்குமே.**

(இ-ள்.) வான்முதற் பனவீறான பன்னிரண்டு பிரத்தியமும் எதிர்காலப்படர்க்கைக் கிரியாபதம் ஆறிற்கும் ஒன்றற் கிரண்டாகவரும்- எ-று. வரலாறு:- உறங்குவான் உறங்குவாள் உறங்குவார் உறங்குவார்கள் உறங்குவது உறங்குவன எனவும் உண்பான் உண்பாள் உண்பார் உண்பார்கள் உண்பது உண்பன எனவும் வரும். (5)

**தாயாயுந்தீருஞ் சாற்றியதீர்களொ டீர்களுமாஞ்**
**சாயாதமுன்னிலை யின்னிறப்பாந்தன்மை தன்னிறப்பிற்**
**றேயாததேனேனுந் தேமேமுந்தோமோமு மாகுமென்ப**
**வேயார்பொதியத் தகத்தியனார்சொன்ன மெய்த்தமிழ்க்கே.**

(இ-ள்.) தாய் ஆய் தீர் ஈர் தீர்கள் ஈர்கள் என்பன இறந்தகால முன்னிலைக் கிரியாபத மூன்றிற்கும் ஒன்றிற்கிரண்டாகவரும், தேன் ஏன் தேம் ஏம் தோம் ஓம் என்பன இறந்தகாலத்தன்மைக்கிரியாபத மூன்றிற்கும் ஒன்றிற்கிரண்டாக வரும்-எ-று. வரலாறு:- நீ உண்டாய் நீர் உண்டீர் நீங்களுண்டீர்க ளெனவும் உறங்கினாய் உறங்கினீர் உறங்கினீர்களெனவும் நான்உண்டேன் நாமுண்டேம் நாங்களுண்டோ மெனவும் உறங்கினேன் உறங்கினேம் உறங்கினோம் எனவும் வரும். (6)

**கிறாஅய்நின்றாய்கிறீர் நின்றீர்கிறீர்களின் றீர்களுமா**
**யிறாநின்றனமுன் னிலையினிகழ்ச்சி யிதன்கட்டன்மை**
**கிறேஎனின்றேன்கிறேநின்றேங்கிறோமுநின்றோமுமென்றாந்**
**தெறாநின்றகட்பவ ளந்திகழ்வாய்நற் றிருந்திழையே.**

*(இ-ள்.) கிறாய் நின்றாய் கிறீர் நின்றீர் கிறீர்கள் நின்றீர்கள் என இவையாறும் நிகழ்காலமுன்னிலைக்கிரியாபதம் மூன்றிற்கும் ஒன்றிற்கிரண்டாகவரும், கிறேன்நின்றேன்கிறேம் நின்றேம்கிறோம் நின்றோம் என்பவை நிகழ்காலத் தன்மைத் தொழிற் சொன்மூன்றிற்கும் ஒன்றிற்கிரண்டாகவரும்-எ-று. வரலாறு:- உண்கிறாய் உண்கிறீர் உண்கிறீர்களெனவும் உண்ணாநின்றாய் உண்ணாநின்றீர் உண்ணா நின்றீர்களெனவும் உண்கிறேன் உண்கிறேம் உண்கிறோமெனவும் உண்ணாநின்றேன் உண்ணாநின்றேம் உண்ணாநின்றோமெனவும் வரும்* **(7)**

**வாய்பாய்வீர்பீர்வீர்கள் பீர்களிவைமன்னு முன்னிலையிற்**
**சாய்பாய்விடுமெதிர் காலமிதனுழித் தன்மைசொல்லின்**
**வேய்பாவியதோளிவேன்பேன்வேம் பேமொடுவோம்போமுமாஞ்**
**சேய்பாவிய செழும்போதிப்பிரான்றன் றிருந்துரைக்கே.**

*(இ-ள்.) வாய்பாய் வீர்பீர் வீர்கள்பீர்கள் ஆறும் எதிர்கால முன்னிலைக் கிரியாபதம் மூன்றிற்கும் ஒன்றிற்கிரண்டாகவரும். வேன் பேன் வேம்பேம் வோம்போம் ஆறும் எதிர்காலத்தன்மைக் கிரியாபதம் மூன்றிற்கும் ஒன்றிற்கிரண்டாகவரும்-எ-று. வரலாறு: உறங்குவாய் உறங்குவீர் உறங்குவீர்கள் உண்பாய் உண்பீர் உண்பீர்களெனவும் உறங்குவேன் உறங்குவேம் உறங்குவோம் உண்பேன் உண்பேம் உண்போமெனவும் வரும்; வேன் வென் எனவும் பேன் பென் எனவும் ஆதேசமாதலுமுண்டு. பிற விகாரங்களும் அறிந்து முடிக்க.* **(8)**

**ஓங்காதமுன்னிலைப் பாலேவலாங்கா லொருமையிற்சுப்**
**பாங்கார்சிறப்பிலா மேயுமின்கப்பன்மை யாமிடத்து**
**நீங்காதமின்களுங் கள்ளாமிசைவினிற் கவ்வென்பதாந்**
**தாங்காப்பரோக்கத் தினிற்போலுமாமென்பர் தாழ்குழலே.**

*(இ-ள்.) முன்னிலையேவலொருமைப் பொருளின் தாதுக்கள் சு என்னும் பிரத்தியத்தான் முடியும். முன்னிலையேவற்சிறப்பின்கண் ஆமே உம் மின் க என்னும் நாலுபிரத்தியமுமாம். முன்னிலை ஏவற்பன்மையின்கண் மின்கள்*

உம் கள் என்னும் மூன்றுமாம். இசையென்னும் பொருளிற் க வரும். பரோக்கப்பொருளின் முன்பு மூன்றுகாலத்திலும் முடிக்குமாறு முடிக்க. அப்பதத்தின் பின்போலும் ஆம் என்னும் இரண்டு பிரத்தியமும் வரும் -எ-று. வரலாறு:- உண் உறங்கு கிட நட படு அடு நில் இரு என முன்னிலை ஏவலொருமைவந்தது. நாம்போகாமே நாம்நில்லும் நாம்போமின் நாம் நிற்க என நாமென்னும் தன்மையொருமைச் சிறப்புப்பதத்தானும் நீர்போமின் நீருண்ணும் நீருண்ணுமின் என நீரென்னும் முன்னிலையொருமைச் சிறப்புப் பதத்தானும் முன்னிலை ஏவலொருமைச் சிறப்பு வந்தது. நீர் என்னுஞ் சிறப்புப் பதம் உம் மின் என்னும் பிரத்தியங்களான் முடியும். நீங்கள்போமின்கள் *நீங்கணில்லும் நீங்கள்போங்கள் என முன்னிலையேவற் பன்மைவந்தது. நீங்கள் போமினென ஒரோவிடத்துக் கள் அழிந்துமுடியும். அவனென் செய்க இவளென்செய்க செய்காத்தநீயுண்க இவனென் செய்யவுண்டான் நீயறிக என இசைவுப்பொருளில் வந்தது. உண்டான் போலும் உண்டானாமெனப் பரோக்கம் வந்தது. பரோக்கமாவது தன்முகப்பன்றியொழிவது. பிறவுமன்ன. (9)

**தன்மைத்துணிவாமொருமைவன்பன் தஞ்சம்போ மொடுவோம்**
**பன்மைக்கணன்றிப்படர்க்கையின்கண்ணும்மொருமையிலாம்**
**பன்மைக்கண்வர்பர்கள் ளோடாகுமுன்னிலைதன்னொருமைத்**
**தன்மைச்சிவைதிபன் மைக்கிவிசிப்பித்திப் பின்னரவே.**

(இ-ள்.) துணிவுப்பொருளின்கட் தன்மையொருமையில் வன்பன் என்னும் இரண்டு பிரத்தியமுமாம். அப்பொருளிற் தன்மைப்பன்மையை விளக்குதற்குத் தம் சம் போம் வோம் என்னும் நாலு பிரத்தியமுமாம். படர்க்கையொருமையில் உம்மென்னும் பிரத்தியம்வரும். இதனிலுகரம் அழியவும் பெறும். வர் பர் என்பன தனித்துங் கள்ளோடு கூடியும் படர்க்கைப்பன்மையின்கண்ணாம். சி வை தீ என்னும் மூன்றும்

* "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை-யவ்வயின் மூன்று நிகழுங்காலத்துச்-செய்யுமென்னுங் கிளவியொடு கொள்ளா" என்னுந் தொல்காப்பியத்தோடு மாறுபடாதோ வெனின், அற்றன்று. ஈண்டு ஏவற்பொருளாயிற்றென்க. ஏவலில் மின்னொன்றன்றோ ஆண்டும் பிறாண்டுங் கூறியதெனின் புதியன புகுதலென்க.

முன்னிலையொருமைப் பொருளிலாம். கி-வி-சி-தி-பி என்னும் ஐந்தின்பின்பு ரகரவொற்றென்னும் பன்னிரண்டாமெய் பெற்றும் அவ்வெழுத்துக்கணீண்டும் முன்னிலைப் பன்மையின் கண்ணாம்-எ-று. வரலாறு:- அறிவன் கூறுவன் நிற்பன் உண்பன் எனவும் லகரவா தேசம்பெற்று அறிவல் கூறுவல் எனவும் தன்மையொருமைத்துணிவு வந்தது. நாங்கண்டம் நாங்கள்கண்டம் நாமறிசம் நாங்களறிசம் நாம் நிற்போம் நாங்கணிற்போம் நாமறிவோம் நாங்களறிவோம் எனத் தன்மைப் பன்மைத்துணிவுவந்தது. அவனறியும் அவளறியும் எனப் படர்க்கையொருமையில் உம் வந்தது. அவரறிவர் அவர்நிற்பர் அவர் களறிவர்கள் அவர்கணிற்பர்களெனப் படர்க்கைப்பன்மை வந்தது. நீயறிசி நீயறிவை நீயறிதியென முன்னிலையொருமை வந்தது. இச்சூத்திரத்திற் சிறப்பித்தசொல்லையும் பன்மையிலடுக்கினான். மற்றையவும் இடமறிந்தடக்கி முடித்துக்கொள்க. (10)

**வினைக்குறிப்போடு கருமம்படர்க்கையின் மிக்கவொன்றை**
**யனைத்தென்னலாமவ் வொடுபடுத்தாதுபின் னாமியற்கை**
**தனைக்கருமம்பெறுந் தாதுக்கண்மற்றும் படுவினைப்போல்**
**நினைக்கவருமற் றிவையும்பெயர்ச்சொ னிகர்த்திடுமே.**

கருத்தாக் காரகத்தின்முடியுங் கிரியா பதஞ்சொல்லி வினைக்குறிப்புப் பொருளினுங் கருமக்காரகத்தினும் வருங் கிரியாபதம் முடிப்பானெடுத்துக்கொண்டான் அஃதாமாறு சொல்கின்றான். (இ-ள்.) வினைக்குறிப்பினுங் கருமக்காரகத்தினுந் தாதுக்கள் முடியுமிடத்துப் படர்க்கையொன்றினைக் கருதின கிரியாபதம்போல முடியும். கருமக் காரகத்தின்கண்வருங் கிரியாபதம் முடியுமிடத்து முன்பு சில தாதுக்களின் பின்னாகப் படுவென்னுந் தாதுவந்து இடையே யகாரமாகமமாய்க் கருத்தாவில் முடித்த முடிப்பெல்லாம்பெறும். மற்றத் தாதுக்கள் படுவென்னுந்தாதுவைப்போல அகரத்தை முன்பெற்று ஒருதாதுவின் பின்னாய்வந்து கருமக்காரகத்தில் முடிதலுமுண்டு. இச்சொன்ன கிரியாபதமெல்லாம் பெயற்சொற்போலக் காரகபத வேற்றுமையான் முடிகையுண்டு-எ-று. வரலாறு:- உண் உறங்கு என்னுந்தாதுவின்பின் படர்க்கையொன்றினைக் கருதின கிரியாபதம்போல உண்டது உறங்கியது உண்கிறது உறங்குகின்றது உண்ணாநின்றது உறங்காநின்றது உண்பது உறங்குவது என இப்படி மூன்றுகாலத்தினும் முடியும். இவ்விடத்துப்

பிரத்தியங்களின் முன்னின்ற அகரம் இகரமாகையுமுண்டு. வினைக்குறிப்போடு கருமம் படர்க்கையின் மிக்கவொன்றை அனைத்தென்னலாமென்றதனால் வினைக்குறிப்பு முடியுமிடத்து உண்டது உண்ணப்பட்டது உறங்கியது உறங்கப்பட்டது எனவரும். இவ்வாறே அனைத்துங்கொள்க. இகரமாக்கி உண்டியது உறங்கியது உண்கிறியது உறங்குகிறியது உண்கிறிது உறங்குகிறிது உண்பிது உறங்குவிது எனவும் முடியும். இவையும் உண்ணப்பட்டது உறங்கப்பட்டது என்றாம். இவ்வாறே அனைத்துங் கொள்க. அவ்வொடுபடுத் தாதுபின்னாமியற்கைதனைக் கருமம் பெறுமென்றதனால் அறி காண் என்னுந் தாதுவின்பின் அகரமும் அதன்பின்படுவென்னுந் தாதுவும்வைத்து அறியப்படு எனக் கருமத்தாதுவாக்கி இத்தாதுவின்பின் முன் சொன்ன பிரத்தியங்களை வருவித்து அறியப்பட்டான் அறியப்பட்டாள் அறியப்படாநின்றான் அறியப்படாநின்றாள் அறியப்படுவான் அறியப்படுவாள் எனப் பிறவும் முடிக்க. சிறப்புப் பலர் ஒன்று பல முன்னிலை தன்மை அனைத்துமிவ்வாறே முடியும். தாதுக்கள் மற்றும் படு வினைப்போல் நினைக்கவருமென்றதனாற் காணத்தகுவான் அறியத்தகுவான் பாடுண்பான் சொல்லுண்பான் என முடிக்க. இவையும் பெயர்ச்சொனிகர்த்திடுமே யென்றதனாற் கிரியாபதங்களையும் ஒன்றிற்குப் பெயராகக்கருதின பொழுது உண்பான் உண்பானை உண்பானால் உண்பானுக்கு உண்பான்பக்கனின்றும் உண்பானுடைய உண்பான்பக்கல் உண்பானே எனமுடியும். இவையெல்லாம் விகாரங்கள் வருமிடமறிந்து முடிக்க. விகாரமே தலைக்கருவியாக எடுத்துக் கொண்டமையாலென்க. (11)

**ஈரெட்டுமுவைந்து மாமுடறேற்றவு மீற்றுவன்மை**
**தேரிட்டுமூன்றா முடலொடுதேற்றவுஞ் சிந்தைசெய்து**
**நேரிட்டுரைப்ப ரறிவொன்றிலாதவர் நீயவற்றைப்**
**பாரிட்டமாகப் பெரியோர்தமதுரை பார்த்தறியே.**

(இ-ள்.) பதினாறாமுடலாயுள்ள ளகாரமும் பதினைந்தாமுடலா யுள்ள ழகாரமுந் தம்முட் டேற்றவும், ஈற்றுவன்மையாயுள்ள றகாரமும் மூன்றாமுடலாயுள்ள சகாரமுந் தம்முட்டேற்றவும், பிறவாற்றாலுந் தமிழைப்பிழைக்க வழங்குவர் அறிவில்லாதார். அவற்றை யெல்லாமுலகத்தாரோடொக்கத் தேர்ந்து பெரியோருரையே இலக்கியமாக அறிக-எ-று. வரலாறு:- நாளி கோளி மூளை உளக்கு வாளை வளி எனவும் விழக்கு பழிங்கு

தழிகை இழமை எனவும் பதினாறா முடலும் பதினைந்தாமுடலுந் தம்முட்டேற்றக் கருநிலஞ்சுற்றின தேசத்துச் சிலர் வழங்குவர். வெச்சிலை முச்சம் கச்சை எனவும் பதினேழாமுடலும் மூன்றாமுடலுந் தம்முட்டேற்றக் காவிரிபாய்ந்த நிலத்துச் சிலர் வழங்குவர். நெல்லுக்காநின்றது வீட்டுக்காநின்றது என்று பாலாறு பாய்ந்தநிலத்துச் சிலர் வழங்குவர். மற்றும் இவனைப்பாக்க இங்காக்க அங்காக்க எனவும் இப்படிக்கொற்ற அப்படிக்கொற்ற எனவும் சேத்துநிலம் ஆத்துக்கால் எனவும் வாயைப்பயம் கோயிமுட்டை எனவும் உசிர் மசிர் எனவும் பிறவாற்றானும் அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர். இவையெல்லாம் உலகத்தார்க் கொவ்வாவென்று களைக. "உலகமென்பதுயர்ந்தோர் மாட்டே"யென்றறிக. (12)

**மதத்திற்பொலியும் வடசொற்கிடப்புந் தமிழ்மரபு**
**முதத்திற்பொலியேழைசொற்களின்குற்றமுமோங்குவினைப்**
**பதத்திற்சிதைவு மறிந்தேமுடிக்கபன் னூறாயிரம்**
**விதத்திற்பொலியும் புகழவலோகிதன் மெய்த்திமிழே.**

(இ-ள்.) தெய்வமொழிக்கிடப்புந் தென்றமிழ்மரபும் வேண்டினவாறு பகரும் ஏழைச் சொல்லுங் காரகபதக்குற்றமும் அறிந்து வழுவாமல் முடிக்க-எ-று. (13)

## கிரியாபதப்படலம் முற்றும்

### சொல்லாராய்ச்சியிற்பிறமயக்கங்கள் வருமாறு

**வேற்றுமை யெட்டுந் திணையிரண்டும் பாலைந்தும்**
**மாற்றுதற் கொத்த வழுவேழு-மாறொட்டும்**
**ஏற்றமுக் காலமிட மூன்றோ டிரண்டிடத்தால்**
**தோற்ற வுரைப்பதாஞ் சொல்.**

இவ்வண்ணம் எட்டுவகைப்படுத்துச்சொல்லாராய்ந்தார் தொல்காப்பியனார். அவற்றுள் வேற்றுமையெட்டாவன முன்பே சொல்லப்பட்டன. திணையிரண்டாவன உயர்திணையும் அஃறிணையும், "உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே-யஃறிணையென்மனாரவரல பிறவே-யாயிரு திணையினிசைக்குமன சொல்லே. ஆடூஉ வறிசொன் மகடூஉவறிசொற்-பல்லோரறியுஞ்

சொல்லொடு சிவணி-யம்முப்பாற் சொல் லுயர்திணையவ்வே. ஒன்றறிசொல்லே பலவறிசொல்லென்றாயிரு பாற்சொல் லஃறிணையவ்வே" என்பதனாலறிக. பாலைந்தாவன ஆண்பாற் சொல்லும் பெண்பாற்சொல்லும் பலர்பாற்சொல்லும் ஒன்றன்பாற் சொல்லும் பலவின்பாற் சொல்லுமெனக்கொள்க. வழுவேழாவன "திணைபான் மரபு வினாச்செப்புக் கால -மிடனோ டேழாகு மிழுக்கு" என்பதாலறிக. திணைவழுவாவது எருதுகிடந்தான் சாத்தன்வந்தது என உயர்திணையும் அஃறிணையுந் தம்முள்ளே மயங்கச்சொல்லுதல். பால் வழுவாவது கொற்றன் கிடந்தாள் சாத்தி கிடந்தான் என ஐந்து பாலையுந் தம்முண் மயங்கச்சொல்லுதல். மரபு வழுவாவது எருமையிலண்டம் குதிரைச் சாணகம் என மரபு பிழைக்கச்சொல்லுதல். வினாவழுவாவது சந்திரனைப்பாம்பு தீண்டுவது இரவோ பகலோ என வினாவுதல். செப்புவழுவாவது மதுரைக்குப்போக வழியேதென்றாற்குக் குதிரைக்குப் புற்பறிக்கிறேனென்றல். காலவழுவாவது இறந்தகால நிகழ்கால மெதிர்காலம் என்னும் மூன்றுகாலமுந் தம்முண்மயங்கச் சொல்லுதல். அது நாளைப்போனானென்றாற்போலவருவது. இடவழுவாவது தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூன்றிடமுந் தம்முண்மயங்க வருவது. அது நீ உண்டேன் நான்போவாய் அவனறிவேன் எனச்சொல்லுதல். ஆறொட்டாவது ஆறுதொகை. அவை வேற்றுமையழிந்து தொக்க வேற்றுமைத் தொகையும் உம்மையழிந்து தொக்க உம்மைத்தொகையும் வினையழிந்து தொக்க வினைத்தொகையும் பண்புவர்க்கமழிந்து தொக்க பண்புத்தொகையும் உவமைழிந்து தொக்க உவமைத்தொகையும் வந்தமொழியன்றிப் பிறமொழி யழிந்து தொக்க அன்மொழித்தொகையுமாம். மூன்றுகாலமாவன எதிர்கால நிகழ்கால மிறந்தகாலமென இவை. இடமூன்றாவன தன்மை முன்னிலை படர்க்கை. இனியிரண்டிடமாவது வழக்கிடமுஞ் செய்யுளிடமுமென இவை. வழக்கிடமாவது தமிழ்வழங்கிவரும் இடத்து வழங்கிவருகிற வழக்கு. செய்யுளிடமாவது வழக்கிற் சிறுபான்மை யான் வந்து செய்யுட்களினிகழும் நிகழ்ச்சியெனக் கொள்க (1)

**திணைபான் மரபு வினாச்செப் பிடஞ்சொல்**
**இணையா வழுத்தொகையோ டெச்ச-மணையாக்**
**கவினையபார் வேற்றுமையுங் காலமயக் குங்கொண்டு**
**அவினயனா ராராய்ந்தார் சொல்.**

எனப் பதின்மூன்றாலாய்ந்தார் அவினயனார். இவற்றுட் தொல்காப்பியனார் ஆராய்ந்தன நீக்கி மயக்கமுஞ் சொல்லுஞ் செப்பும் வினாவும் எச்சமும் மரபும் ஏற்றமாகச் சொன்னார். மயக்கமாவது வேற்றுமை மயக்கமுங் காலமயக்கமும் முதலியவா மெனக்கொள்க. சொல்லாவன பெயர்ச்சொல்லும் பெயர்த்திரிசொல்லும் தொழிற்சொல்லுந் தொழிற்றிரிசொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமெனக்கொள்க. செப்பும் வினாவுமாவது அறிதல் அறியாமை ஐயப்படுதற் தொடக்கத்தனவும் நேர்தன் மறுத்தற் தொடக்கத்தனவுமாம். எச்சமாவது பெயரெச்சம் தொழிலெச்சமென இரண்டாம். மரபாவது ஆண்மைப்பெயர் வரலாறு பெண்மைப்பெயர் வரலாறு தொழிற்பெயர் வரலாறு உவமைப் பெயர் வரலாறு விரவுப்பெயர் வரலாறு எனக் கிடந்தவெனக் கொள்க. (2)

**சொல்லதிகாரம் முற்றும்**

# மூன்றாவது-பொருளதிகாரம்

## பொருட்படலம்

ஆற்றுமகமே புறமேயகப்புற மன்றிவென்றி
போற்றும்புறப்புற மென்றாம்பொருளளப் பானளவை
யேற்றும்பிரமேய மென்றும் வகுப்ப ரிவையுமன்றிச்
சாற்றும்புலவரு மெண்ணிறந்தாரென்பர் தாழ்குழலே.

(இ-ள்.) பொருளாவது அகப் பொருளும் அகப்புறப்பொருளும் புறப்பொருளும் புறப்புறப்பொருளுமென நான்குவகைப்படும். அளப்பானும் அளவையும் அளக்கப்படும் பொருளுமென மூன்றுவகைப்படுமென்பாருமுளர். மற்றும் பல வேறுபாட்டாலும் வகுப்பாருமுளர்-எ-று. பிரமேயமென்பது அளக்கப்படும் பொருள்.

முல்லைகுறிஞ்சி மருதத்தொடுமுது பாலைநெய்தல்
சொல்லியகாஞ்சி சுரநடைகைக்கிளை பாலைதும்பை
யில்லவண்முல்லை தபுதாரந்தாபத மேய்ந்தவள்ளி
யல்லதுகாந்தள் குறுங்கலிவெட்சி யடல்வஞ்சியே.

குற்றிசைவாகை கரந்தபெருந்திணை கொற்றநொச்சி
பற்றியபாசறை முல்லையுழிஞை யெனப்பகர்ந்த
மற்றிவையையைந்து மாம்பொருணான்கினும் வண்புகட்சி
பற்றியபாடாண் பொதுவியலாதியும் பார்த்தறியே.

(இ-ள்.) முல்லையுங் குறிஞ்சியும் மருதமும் பாலையும் நெய்தலுங் காஞ்சியுஞ் சுரநடையுங் கைக்கிளையும் முதுபாலையுந் தும்பையும் இல்லாண்முல்லையுந் தபுதாரமுந் தாபதமும் வள்ளியுங் காந்தளுங் குறுங்கலியும் வெட்சியும் வஞ்சியும் குற்றிசையும் வாகையுங் கரந்தையும் பெருந்திணையும் நொச்சியும் பாசறை முல்லையும் உழிஞையுமெனச் சொன்ன இருபத் தைந்து நிலத்தினும் முன்சொன்ன நான்கு பொருளும் அடங்குமெனக்கொள்க. பாடாண்பாட்டும் பொதுவியலும் முதலாயுள்ளவும் அறிந்தடக்கிக் கொள்க.-எ-று.

**முல்லைகுறிஞ்சி மருதத்தொடுபாலை நெய்தலைந்துஞ்**
**சொல்லுமகமா மதனுக்குரைதொகு சட்டகமோடு**
**எல்லைநிகழு மிருபதொடேழுள வேனையவற்று**
**ஒல்லைநிகழு முரையுமறிந்துகொ ளொண்ணுதலே.**

*(இ-ள்.) முல்லை குறிஞ்சி மருதம் பாலை நெய்தலென்னும் ஐந்துநிலமும் அகப்பொருளுக்கு அடையாளமெனக்கொள்க. இப்படியுள்ள அகப் பொருளுக்குச் சட்டக முதலாக இருபத்தேழுரையுள. ஒழிந்தமூன்று பொருளின்கணிகழும் உரையும் அறிந்து கொள்க. எ-று.*

**சட்டகமேதிணை கைகோணடைசுட் டிடங்கிளவி**
**யொட்டியகேள்வி மொழிவகைகோளுட் பெறுபொருளென்**
**றிட்டிகச்சொற்பொரு ளெச்சமிறைச்சி பயன்குறிப்புக்**
**கட்டகமெய்ப்பாடு காரணங்காலங் கருத்தியல்பே.**

**ஏற்றும்விளைவொ டுவமமிலக்கண மேய்ந்ததொல்லோர்**
**போற்றும்புடையுரை யேமொழிசேர்தன்மை யேயுமன்றி**
**யாற்றும்பொருளடை வென்றாமுரையல் லவற்றினுக்கு**
**மாற்றுமுரையும் வகுக்குமுரையு மதித்தறியே.**

*(இ-ள்.) சட்டகமுந் திணையுங் கைகோளும் நடையுஞ் சுட்டும் இடனுங் கிளவியுங் கேள்வியும் மொழியுங் கோளும் உட்பெறுபொருளுஞ் சொற்பொருளும் எச்சமும் இறைச்சியும் பயனுங் குறிப்பும் மெய்ப்பாடுங் காரணமுங் காலமுங் கருத்தும் இயல்பும் விளைவும் உவமமும் இலக்கணமும் புடையுரையும் மொழிசேர்தன்மையும் பொருளடைவுமென்னும் இருபத்தேழும் அகப்பொருளினுக் குரையாம் அகப்புறப் பொருளுக்கும் புறப்பொருளுக்கும் ஏற்கும் உரை அறிந்துகொள்க-எ-று.*

*இவற்றுட் சட்டகமாவது இஃதென்னசட்டகமென்றால் யாப்பதிகாரத்திற்கிடந்த முதல் வழி மொழி வகை கோள் உட்பெறு பொருளென்றபடியே செய்யுளைத் தெரிந்து இன்னசட்டகமென்று சொல்வது.*

*திணையாவது எந்நிலம் பற்றி வந்ததென்றாற் குறிஞ்சி பாலை முல்லை மருத நெய்தலென்னும் ஐந்து நிலத்தில் இஃதிந்நிலம் பற்றி வந்ததென்று சொல்வது.*

மலையிருண்முன்பனி கூதிர்வெற்பன்கண மூங்கில்மஞ்ஞை
இலைமலிவேங்கைசெங் காந்தளிலவ மிகன்முருகன்
சிலைமலிகுன்றவர் தேனே புணர்தல் தினைசுனையுங்
கொலைமலியானை குறிஞ்சியென்றின்ன குறிஞ்சியிலே.

ஓதியவேனி லொடுபின்பனியகில் வெம்பரலே
தீதியல்வேடர் கலையொள் விடலைதிண் பாலையத்தங்
கோதியல்செந்நாய் பருந்தொடுகொம்பனை யார்ப்பிரிதல்
வாதியற்கன்னி குறும்பர் வெம்பாலை மடவரலே.

காடுகார்மாலை யிடையர்முதிரைகான் யாறுமுல்லை
நீடுமால்கொன்றை நிரைமேய்த்தலோடு நெடுங்குருந்தங்
கேடில்கார்தோன்றி சிறுபான்கிழத்தி மனையிருத்தல்
வீடுசேர்புன்கு பிறவுமுல்லைத்திணை பெண்கொடியே.

பொற்றாமரையிந் திரன்பொய்கைபூந்தார் பழனஞ்செந்நெல்
வற்றாவெருமை வளர்பனிநீர்நாய் *வடமகன்றில்
தெற்றாமனையூட லூரன்கடைசியர் செங்கழுநீர்
சுற்றாமருதத் திணையிலுண்டாவன தூமொழியே.

மீனேகடல்பனி கொண்கன் றிமிலம் விளரிநிலாக்
கானேதரும்புன்னை கண்டலன்னஞ்சுறாக் காதலுப்பு
வானோர்வருணன் முதலைநுளைய ரிரங்கல்கைதை
தேனேதருமொழி யாயந்திநெய்த றெளிந்தறியே.

*(இ-ள்.) இவையிற்றாலின்ன திணையென்றறிக-எ-று.* "எந்நிலமருங்கிற் பூவும் புள்ளு-மந்நிலம் பொழுதொடு வாராவாயினும் வந்தநிலத்தின் பயத்தவாகும்" எனவும் "மற்றவை தம்முண் மயங்கினுமப்பெயர்-பெற்றதிணையின் பெயர்க்கொடை பெறுமே" எனவும் கூறினாராகலின் அவை மயங்கினும் அறிந்து கொள்க.

*கைகோளாவது களவுங் கற்பும். கற்பாவது காரணமோடியைந்து வருவது, களவாவது கரணமின்றிவருவது. இப்பாட்டுக் கற்பைக் கொண்டதோ களவைக் கொண்டதோவென்று சொல்வது.*

*நடையாவது ஒழுக்கம். இப்பாட்டு எந்நடைபற்றி வந்ததென்றால் இந்நிலத்தினொழுக்கம் பற்றி வந்ததென்றறிவது. அஃதாமாறு:-*

---

* *சில பிரதிகளிற் பிடிவலஞ்சியென்பது பாடம்.*

## குறிஞ்சிநடையியல்

அறிந்தோராய்ந்த வன்புதருவகையிற்
குறிஞ்சி நடைவகை கூறுங்காலை
அரிவைக்காகிய விறைவியை வர்க்கந்
தெரிமணிப் பூணான் றெரியச் செப்பலும்
நன்னலம் புகழ்தலு நாணின மழுங்கலும்
பொன்னவிர்பூவையைப் புணர்ப்பதுரைத்தலும்
பிரிவுநனிகருதலும் பிரிவின்மைபேசலும்
பெருமைசெய்தலும் பெறற்கரிதென்றலும்
ஊழ்வினைவலித்தலு முறுதெய்வம்பேணலும்
தோழனை நினைத்தலு மகறலுமணுகலும்
இடத்தொடுபுலம்பலு மேழையைவினவலும்
மடத்தகுசாயன் மாதரைக்காண்டலும்
வனம்புலம் பகற்றலு மார்வநோக்கமுங்
குவளையுண் கண்புதைத்துத் தலைவியிறைஞ்சலும்
ஆற்றான் மொழிதலு மஞ்சியனோக்கமும்
ஏற்ற வுவகையோ-டினியவண்முறுவலும்
ஆங்கவன் புணர்தலு மவ்வயிற்புணர்ச்சியைப்
பாங்கற்குணர்த்தலும் பழியெனக்கூறலும்
தேங்கமழ்தாரோன் றெரியான் செப்பலுங்
கிளைஞன்கழறலுங் கேடெனக்கூறலும்
இளையவன் வடிவு மிடனுமீதலும்
அண்ணல்கவற்சிக் கவள்வடிவுமிடனுந்
திண்ணிதிற்செப்பலுஞ் சென்றவன் காண்டலும்
வெறிகமழ்கோதை மிகுநலம்புணர்தலும்
அறிவுநிறையு மண்ணலையெய்தலும்
வேறிடங்காட்டலு மிலங்கிழையுணர்தலும்
ஊறன்றாமுடிவிற் றன்பாங்கற்கூட்டமுந்
தையல் தளர்ச்சியை நோக்கித்தோழி
யையுறுநிலைமை யறியவுரைத்தலும்
மனைவிபோல வல்லவைமொழிதலும்
விழுப்பம்பேசலும் வேண்டாவென்றாலும்
பழித்தகவுணர்த்தலும் பார்த்துறவுரைத்தலும்
பொருந்தாவென்றலும் பொய்யுரைபுரிதலும்
வருந்துமென்றலும் வடிவிதுவென்றலும்
நின்குறைநீயே சென்றுரையென்றலும்
சீர்மலர்க்கோதைக்குச் செவ்வியன்றென்றலும்

நீர்மையன்றென்றலு நீங்குமினெனன்றலும்
மூரன் முறுவலொடு முகமலர்ந்துரைத்தலும்
இரங்கிமொழிதலு மேத்தி மொழிதலும்
கலங்கிமொழிதலுங் கழறிமொழிதலும்
வள்ளறளர்ச் சியுமடலேற்றுமொழிதலும்
உள்ளங்குளிர்ப்பித் தொண்டமைழயென்றலும்
நெஞ்சத்தடங்கிய நின்றுகுறையேற்றலும்
இன்சொலிரக்கமும் வன்சொலின் மயக்கமும்
புகழ்தலு மயங்கியுரைத்தலும்
கயற்கண்ணேழையைக் கவற்சி தீர்த்தலும்
பகற்குறி நேர்தலுமக்குறியுரைத்தலும்
பகலிடங்காண்டலுஞ் சொற்பல வுரைத்தலும்
இற்செறிவுரைத்தலும் வரைவுகடாவலும்
இரவரவிசைத்தலும் வரவுவிலக்கலும்
மற்றவடளர்ச்சியு மிரவுக்குறிநேர்தலும்
எய்துகுறி வினவலு மேந்திழைமகிழ்வுடன்
குறியுரைத்தலு மதுகேட்டுணர்த்தலும்
மெய்க்குறியுரைத்தலு மிகுதியில்கொண்டலும்
ஏந்திழையெடுப்பது மிடப்புறத்தகற்றலும்
பூந்தண்சிலம்பன் புணர்ச்சியது குறியுஞ்
செவிலியதுதேறலுஞ் சென்றெதிர்கோடலும்
கவ்வை பெரிதிவட் கண்டறியென்றலும்
அம்பலுமலரு மாயினவென்றலும்
வம்பலர்கோதை வாட்டங் கூறலும்
நற்றாய்செவிலி யென்றிவர்நன்னுதற்
குற்றதையறியாது நற்றிறம்படர்தலும்
கட்டுரைகூட்டலுங் கேட்டவள் கூற்றும்
ஓட்டி வெறியயர்தலு மொண்ணுதலழுங்கலும்
இவ்வியலன்னைக் குணர்த்துகவென்றலும்
அவ்வியலொட்டாண் மொழிதலுமாயிடைப்
பூத்தருபுணர்ச்சியும் புனறருபுணர்ச்சியும்
காப்பெரும்புனத்துக் களிறுதருபுணர்ச்சியும்
தாய்தருபுணர்ச்சியும்-கூறியதாயது குறிப்புவழிமொழிதலும்
வரைந்துநனிபுகுதலும் வரைவவர் மறுத்தலும்
கரைந்ததற்கிரங்கலுங் கவற்சிதீர்த்தலும்
எதிர்கொளன் மொழிதலு மேற்றுமகண் மொழிதலும்
நிரவிய வியற்கையோடின்னவை பொருளே.

## நெய்தனடையியல்

கையறுபுலம்புங் கலவியுந்தலைதரு
நெய்தனடையிய னேருங் காலைக்
கடலுங்கழியுங் கைதையுங்கானலும்
மடலிரும் பெண்ணையும் வான்சிறைப்புள்ளுங்
கழுமியவிருளும் கதிரொளிமதியும்
பொழுதுங்காற்றுமென்றிவைமுதலாம்
எவ்வகைப்பொருளு மிரந்துகுறை யுறுதலும்
அவ்வகைப்பொருளுக் காற்றாதுரைத்தலும்
விரைமலர்த்தாரோன் விழுப்பங்கூறலும்
இரவுக்குறிநேர்தலும் பகற்குறி மறுத்தலும்
இரவிடங்காட்டலும் பகலிடங்காட்டலும்
வரவறிவுறுத்தலும் வான்றுயில்கோடலும்
இறைவளைத்தோளியை யின்றுயி லெடுப்பலும்
துறைவனின்றுயிலெழீஇத் துன்னுதற்பொருட்டால்
ஏதில்கூறலு மிடத்துய்த்தகற்றலும்
மேதகுகிளவியின் மீண்டெதிர் கோடலும்
சிறப்புறக்கிளத்தலும் . . . . . . . .
அம்பலுமலரு மாயினவென்றலும்
வம்பலர்தாரோய் வருந்தினனென்றலும்
குறிவழிப்படுத்தலுங் கொண்கன் றோன்றலும்
அறியக்கூறலு மருங்காப்பு மிகுதலுந்
தரம்பிழைப்பின்மையுந் தலச்செலவருமையும்
வன்பழிக்கஞ்சலும் வாரலையென்றலும்
இரவரலென்றலு மிரவும் பகலும் வாரலென்றலும்
அவ்விருபொழுது மாய்ந்துவாவென்றலும்
கவ்வை யுரைத்தலுங் களவவனுரைத்தலும்
வரைதல் வேட்கையொடு வந்தவும்பிறவும்
உரைதருபெருமையோடுரைத்தனர்பலரே.

## பாலைநடையியல்

நூலியன்முறைமை நுண்ணிதினுணர்ந்தோர்
பாலைநடையது பகருங்காலை
உடன்போக்குணர்த்தலு மப்போக்குரைத்தலும்
மடவோடன்றிறமாண்புறநோக்கலும்
கற்பியல்காட்டலுங் கையுய்த்து மொழிதலும்
வெற்பிடைப்போதலு மெல்லியறளர்தலும்

தளர்ந்தோள் ஓம்பலுந் தம்முடபேரென்றலும்
எதிர்ந்தோர்மொழிதலு மெதிர் கொளத்தவிர்தலும்
கண்டோரேத்திய கற்புடையொழுக்கமும்
தண்டளிர்மாடந் தனக்குரைமாற்றமுந்
தாங்கரும்பூசற் றன்னையரெழுச்சியும்
ஆங்கவள்வலித்தலு மமைந்தோர்திருத்தலும்
பதியுடன்படுத்தலும் பண்பெய்தமொழிதலும்
ஈன்றோளிரங்கலு மெதிர்ந்தோர்கூறலும்
அம்பலுமலரு மாதலுமயலோர்
தோன்றக்கூறிய தோமறுகற்பும்
அன்புறுசெவிலி பின்செலவலித்தலும்
சென்றவள் வினவலுங் கணடோர்தெருட்டலும்
ஒன்றியவுள்ளமொடுவந்தவள் மீண்டலும்
வறுஞ்சுரங்கடந்தவர் வளநாடுபுகுதலும்
பிறங்குபுகழ்ப்புதல்வரைப்பெறுதலும் பெற்றோள்
இருங்கிளை மருங்கின் றூதுவிடுத்தலும்
ஒருங்கவருந்தலு முவந்துடன்சென்றலும்
மாதரைக்கொண்டுதம் வாழ்பதிபுகுதலும்
ஓதியவனைத்து முரியவைபுக்கபின்
பொருள்வயிற்பிரிதலு மப்பிரிவுணர்த்தலும்
இருள்புரிகூந்த லிற்றெனமொழிதலும்
ஆற்றானாதலு மதுகேட்டுமொழிதலும்
கூற்றங்கோளிய வுலகியலுரைத்தலும்
பின்னைப்பிரிதலும் பெருஞ்சுரத்தழுங்கலும்
நனிபகர்பள்ளியி னயந்துசெலவழுங்கலும்
பரத்தையிற்பிரி வொழித்தெல்லாப்பிரிவும்
உரைக்குங்காலை யுணர்ந்தனனோக்கே.

## மருதநடையியல்

கருதற்கமைந்த கற்றோர்பூண்ட
மருதநடையது மாண்புறக்கூறின் விழவுவிரும்புதல்
பொழின்மகிழ்ந்திருத்தல் புனலாட்டயர்தல்
இல்லிடைப்பரத்தைய ரியலிடைப்பரத்தையர்
கல்வியொடுபழகியகாதற்பரத்தையர்
நல்வியனிலைமை நயப்புப்பரத்தையர்
சொல்லியபரத்தையர் நால்வருங்கூற
ஆங்கவர்ப்புணர்த லவர்க்கண்ணகறல்

வீங்குமுலைப்பரத்தைய ருழைநின்றுவிடர்க்குப்
பாங்கன்றோழி பாணனென்னும்
ஆங்கவர்முதலிய ரிரந்துகுறையுறுதல்
அவர்சென்றிரங்க வணியிழைமறுத்தல்
புகரறுகோதை பொறுத்தற்குறையிரத்தல்
ஊரன்புகுத லுவந்தெதிர்கோடல்
பேராச்சீற்றமொடு பெருமுனிவுபேசல்
விருந்தொடுபுகுதல் புதல்வரொடுபுகுதல்
திருந்திழையரிவையைத் திரிந்தெதிர்கோடல்
சென்னிறக்கோலச் சிறுமி புகுதல்
அன்னிறநன்னா ளருங்கவினுறைதல்
உண்ணிறையுவகையோ டொண்ணுதலுவற்றல்
வெண்ணிறக்கோலத்து மேதகவுணர்தல்
பண்ணமைக்கிளவியொடு பள்ளியுண்மகிழ்தல்
அலைபுனலூர னாற்றான்புகுதல்
புலவிகற்பொன்றா னண்ணிச்சீறல்
ஆற்றானாகி யவளெதிருடல்
தேற்றேனென்ற தொழித்துவழிபடுதல்
வளவயலூரன் வதுவைகேட்டுளை
உளநனியடக்கி யுவந்தோள்போறல்
பண்ணிவிடுதல் பான்மையின் மொழிதல்
எண்ணியசிறப்பி னெங்கையென்றிசைத்தல்
மனைச்செல்பரத்தையை மகிழ்ந்தெதிர்கோடல்
முனித்தகவின்மை முயன்றுபண்பெய்தல்
ஆயிடையவர்க ளமர்ந்தெதிர்கோடல்
போயஃதீண்டல் புகழ்தலேத்தல்
பள்ளியுண் மகிழ்தல் பாங்குறப்புணர்தல்
எள்ளருந்தோழி யேற்பக்கூறலெனச்
சொன்னவைபோல வன்னவுமெல்லாம்
பன்னுங்காலை யவ்வயிற் படுமே.

## முல்லைநடையியல்

இறைச்சிப்பெருமையோ டிறைவழிப்பட்டுக்
கற்புக்கடம் பூண்டு கடப்பாடாற்று
முல்லைத்திணைநடை சொல்லுங்காலை
இறைவன்பிரிய வில்லிருந்தாற்றி
நினைவுநனிகாத்த னீர்மையின் மொழிதல்

மாழையங்கண்ணி வருந்தினள் பெரிதெனத்
தோழிகவறல் கவன்றதோழிக்
காற்றுவனென்ற லவன்பயமுரைத்தல்
வேற்றுமைகூறல் வெய்துயிர்த்திரங்கல்
மின்மலிகார்கண்டு மெலிந்தவள் மொழிதல்
தொன்மலிதோழி காலமறுத்தல்
காதல்பெயர்பு காரன் றிருவெனத்
தாதவிழ்கோதை தானேகூறல்
பருவங்காட்டிப் பிரிவொழியென்றல்
வருவர்நமரென வாய்மொழிவலித்தல்
அந்தியுமாம்பலு மாலையுமணியுந்
தென்றலுந்திங்களும் பிறவுமன்னவை
புகன்றறவாற்றா ளகன்றவண்மொழிதல்
என்குறையிதுவென விரந்துகுறைகூறல்
பொருள்வயினிற்ற லவ்வயினிலையும்
இயல்வளி முற்றுதல்
கார்கண்டுரைத்தல் கனவினரற்றல்
போர்வேற்கண்ணி புலம்புமென் றிரங்குதல்
தூதுவிடுதல் தூதெதிர்கோடல்
போதவிழ் கோதை புலம்பு நனிதீர்த்தல்
கோவொருஉமொழிதல் தேரவண் வருதல்
ஆர்மலிதேரை யமர்ந்தவனேறல்
பாகனைக்கடாவெனப் பன்மணிநெடுந்தேர்
வேகநிலைமையின் விரைந்துநனிகடாவுதல்
இல்லியன்மடந்தைய ரியல்புரங்கேட்டல்
நல்லியனெடுங்கொடி நன்னகர்காட்டல்
இறைவன்சேருத லெதிர்சென்று வணங்குதல்
பொறைமலிமடந்தையைப் புல்லித்தலையளித்தல்
பருநாணோக்கிப் பயன் கண்டுமொழிதல்
செருவேற்கண்ணி சேக்கையிற்களித்தல்
முல்லை நல்லியாழ் முறைமையிற் கேட்டலெனச்
சொல்லிய பிறவுஞ் சொன்னதன்பொருளே.

குடவரைக்குறிஞ்சியுங் குணகடனெய்தலுங்
கடவதாகுங் களவிற்குரித்தே.

இருதிணைத்தொழிலு மியன்றுதம்முள்
ஒருதிணைக்கோத லொழிந்தனவியல்பே.

*நன்னிலமருதமுந் தொன்னில முல்லையுந்*
*துன்னருங்கற்பொடு தோன்றுந்தொடர்ந்தே*

*இடைநிலைப்பாலை யிருபாற்கு முரித்தே*
*படர்கொடி முல்லையின் பாற்படு மியற்றே.*

*ஒருவயிற்றணத்தலும் பொருள்வயிற்பிரிதலுங்*
*கருதியகளவிற் குண்மையானே.*

இனிச் சுட்டென்பது இப்பாட்டுத் தன்மையைச்சுட்டிற்று படர்க்கையைச் சுட்டிற்று முன்னிலையைச்சுட்டிற்றென்றறிவது.

இடனாவது அகவிடனும் புறவிடனுமென இரண்டு வகைப்படும். அகவிடனாவது மனையும்வளாகமும் பற்றிவருவது. புறவிடனாவது மலையும் பழனமுஞ் சோலையுங் கடலும் நெறியும் ஆறும் பற்றிவருவது.

இனிக் கிளவியென்பது கூற்றெனக்கொள்க. அது

*நெஞ்சுக் குரைத்தல் கேட்டோர்க்குரைத்தல்*
*அந்தரமருங்கின வறிதரக்கூற லென*
*வந்தவகையின மூவகைக்கூற்றே.*

*தலைமகன் றலைவி தோழிதாயே*
*கலைமருங் காப்பிற் செவிலி பாங்கன்*
*சீறியாட்பாணன் கண்டோர்கட்டு*
*வேலன்விறலி நலத்தகை யூரே*
*சேரியயலோ டின்னன பிறவு*
*மாகுமென்ப வறிந்திசினோரே*

என்றமையால் இப்பாட்டு இன்னார் கூற்றென்பது.

கேள்வியென்பது

*உயர்திணை மருங்கி னிவர்நனிகேட்டோ*
*ரஃறிணை மருங்கி னிதுநனிகேட்டதெனச்*
*சொல்லுதல் கேள்வி யென்மனார்புலவர்*

மொழிவகையென்பது இப்பாட்டுச் செஞ்சொற் திரிசொல் வடசொற் திசைச்சொற்களில் இன்னசொற்பற்றி வந்ததென்பது.

பொருள்கோளாவது

கொழுங்கொடிவள்ளி செழுங் குலைவாழை.
தீங்கரும்பேமலர் திகழ்தருபலவே
தேங்கமழசோகு செருவிற் பூட்டே
பூம்புனலாறெனப் பொருள்கோளேழே.

அவற்றுட்

கொழுங்கொடிவள்ளி கூறுமுற்பொருளே
செழுங்குலை வாழையின் சொற்பொருளீறே
இன்றீங்கரும்பி லிடையதுபொருளே
வன்றாட்பலவுக்கு முதலிடைபொருளே
நற்பூ வசோகுக்கு நடுவதுபொருளே
விற்பூட்டு மேலுங் கீழும்பொருளே
இரும்புனலாற்றினுக் கெங்கும்பொருளே

என்றபடி இன்னபொருள் கோளென்றறிவது.

உட்பெறுபொருளாவது

உட்பெறுபொருளைச் செப்புங் காலைப்
பெற்ற சொற்பொருளைச் செப்புதன்வழியே
மற்றொரு சொற்பொருள் வந்துநிற்பதுவே

என்பதனால் உட்பெறு பொருளையறிவது.

இனிச் சொற்பொருளாவது

சொற்பொருண்மேதகச் சொல்லங்காலைத்
தனிச்சொலெல்லாந் தம்பொருள் விளக்கலும்-
புணர்ச்சொற்புணர்ந்து தம்பொருள் விளக்கலு
முதன் மொழிவிளக்கலுங் கடைமொழிவிளக்கலு
மெனமொழிபொருளை விளக்குதலியல்பே

இதனாற் சொற்பொருளறிக.

எச்சமாவது ஒழிந்தது. அது வினையெச்சம் பெயரெச்சமென் றிருவகைப்படும். வினையெச்சமாவது வினையொழிந்து நிற்பது. பெயரெச்சமாவது பெயரொழிந்து நிற்பது.

இனி

இறைச்சிப்பொருள்வகை திறப்படத்தெரியி
லங்கியற் பொருளே திணைநிலைப்பொருளே
வன்புலப் பொதுப்பொருள் மென்புலப் பொதுப்பொருள்
பெருமைப் பொதுப்பொருள் விருந்துப் பொதுப்பொருளென
இருமூன்றென்பர் தெரிநூற்புலவர்

அவற்றுள், அங்கியற்பொருளாவது அந்நிலத்திலங்கமாம் பொருளெனக் கொள்க. அவையாவன குறிஞ்சிநிலத்துச் சந்தனமும் பொன்னும் வெள்ளியுமுதலிய. நெய்தனிலத்து உப்பும் இப்பியும் நந்தும் அலவனும் வலையுமுதலிய. பாலை நிலத்துச் சீழ்கு நாய் குருவியுஞ் சிள்வீடு மறுபுள்ளியுங் கொம்பியுமுதலாயுள்ளன. மருத நிலத்துக்குக் கரும்பு வாழை தெங்கு முதலாயுள்ளன. முல்லை நிலத்துக்குப் பூவையும் பூனையுந் தும்பியுங் காவளையுங் கார்போகியு முதலாயுள்ளன. திணை நிலைப்பொருள் முன்பே சொல்லப்பட்டன. இனி வன்புலப்பொதுப்பொருளும் மென்புலப்பொதுப்பொருளும் பெருமைப் பொதுப்பொருளும் விருந்துப்பொதுப் பொருளுமாமாறு.

ஆரே புன்கையரசு கிளிஞ்சில்
காரை பருத்தி கரும்பேமுதலா
வன்புலப்பொருளென நன்குரைத்தனரே.

சீரை வழுதுணை கிடையே சணப்பே
வேரிதணக்கந்த மருதமுதலான
மென்புலப்பொருளென நன்குரைத்தனரே.

தாளியும் பூவலு நாவலுங் கழஞ்சும்
வேலியுமாறும் பதடியுங் கோரையுஞ்
சூரையுஞ் சுரையுஞ் சுரும்பும் வண்டுந்
துவரையு மத்தியு மைம்பெரு முதிரையுங்
காணுங்காலைத் திணைதொறுங்காணப்
பேணினரென்மனார் பெருமைப் பொதுப்பொருளே.

ஒருதிணைக்குரியன வொருதிணைச்சேரின்
விரிநூற்புலவர் விருந்தென்றனரே.

இனிப்பயனாவது

பயனெனப்படுவது நயனுறக்கிளப்பின்
வழிபாடன்பே வாய்மை வரைவே
விழையா நிலைமை பெருமை தலைமை
பொறையே போக்கே புணர்வே மயக்கே
நிறையே யெச்ச நேச நீர்மை
யையமகற லார்வங் குணமே
பையப் பகர்தல் பண்பேசீற்றங்
காப்பே வெறியே கட்டு நேர்தல்
பூப்பே புலப்பே புறையே புறைவியெனப்
பாற்பட வின்னவை பயத்தலாகும்

இனிக் குறிப்பாவது

பெண்டிராயினு மைந்தராயினும்
உண்டவேட்கை யுள்ளதுகருதிக்
கொண்டு நனி செய்வது குறிப்பெனப் படுமே.

அதுவே,

உற்றவனொழுக்கமு முறாச்சிறு நோக்கமும்
பற்றி யுரையாடலும் பாங்கிற் கேட்டலும்
ஊடலுமுணர்தலு முவத்தலும் பரிதலும்
பாடலும் பரவலும் பணிதலும் பணித்தலும்
அணங்கு கொண்டகைத்தலு மழுங்குற் றுணர்த்தலுங்
குணம்புகழ்துரைத்தலுங் குற்றங்கூறலுஞ்
செய்தது பொறுத்தலுஞ் செய்வாய் திருத்தலும்
வைத்து மகிழ்தலும் வாட்டங் காண்டலும்
அணிந்தன களைஇ யாடைபெயர்த்துடுத்தலு
நாணலு நகுதலு நயத்தலும் பார்த்தலுங்
கானல் கழியே கடலே காற்றே
பானல் பற்றை பனி மதிப்பருவ
மலையே புனமே மழையே பிறவும்
என்றிவை யிற்றொடு நின்றுரையாடலும்
ஒன்றிய குறிப்பென வுரைக்கல் வேண்டும்.

இனி மெய்ப்பாடாவது

மெய்ப்பாட்டியல்வகை மேதகவிரிப்பின்
மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றஞ்

செவ்விதிற் றெரிந்து செப்பன் மற்றதுவே
சுப்பிரயோகம் விப்பிரயோகஞ்
சோகமோக மரணமென்னு
மைவகைக் கணையு ளாக்கிய காமம்
பையமுறுகிடப் படரு மவற்றுட்
சுப்பிரயோகஞ் சொல்லு நினைப்பும்
விப்பிரயோகம் வெய்துயிர்ப்புறுதல்
சோகம் வெப்புஞ் சோறுண்ணாமையு
மோகமயக்கமு மொழிபல பிதற்றலு
மரண மணங்கலும் வருந்தலு மென்பர்
அரணஞ் சான்ற வறிவினோரே.

பிற்கணை நீக்கி முற்கணை நான்கு
மெய்ப்படப்பட்டு வருந்தி விளம்ப
லகமெய்ப் பாடே புறமெய்ப்பாடெனத்
தக நனி யுணர்ந்தோர் தந்துரைத்தனரே.

அகமெய்ப்பாடே யறியுங்காலை
விளர்ப்பே பசப்பே மெலிவே விதிர்ப்பே
துளக்கந் துயர்த றும்மல் சோர்தல்
வேர்த்தல் வெருவுதல் விம்முதல் விரும்புதல்
ஒப்பிலாமை யுருகுதன் மயங்குதல்
மூரி யுயிர்ப்பு மூர்ச்சனை முறுவல்
காரிகை கடத்தல் கழிகண்ணோட்டம்
இருந்துழியிராமை யிராகமிகழ்தல்
வருந்திக்காட்டுதல் வாய்நனி யுறுதல்
சிந்தனை கூர்தல் சேர்துயி லின்மை
கண்டது மறுத்தல் காட்சிவிரும்பல்
உண்டிவிரும்பாமை யுரைத்ததுமறுத்தல்
கண்ணீர் வழிதல் கனவுநனி காண்டலென
எண்ணாற்றுறையு மென்மனார்புலவர்.

புறமெய்ப்பாடே திறனுளிப்புகலில்
ஆரணங்காயவக் காமந்தானே
காரணம் பற்றிக் கருத்து வேறுபட்டு
மற்றுமொரேழாய் மெய்க்கண்டதனொடும்
எட்டாமென்ப ரியல் புணர்ந்தோரே.

அவைதாம்,

நற்சிருங்கார நகையே வியப்பே
அச்சம்வீர முட்கோளிரக்கம்
இழிப்பெனத் தோன்றின விவையவைதாமே
விழுத்தக வொன்றிற் கொரோ நான்காக
முப்பத்திரண்டென மொழிந்தனர் கண்டே.

அவற்றுள்,

இளமையும் வனப்பும் வளமையுங் கலவியுங்
களனாகத் திரிதருஞ் சிருங்காரம்மே.

மயக்கம் பெயர்ப்பே யிகழ்வேநோக்க
நயப்பத் தோன்று நகையது நலனே.

தறுகண்மை புலமை பொருளே பண்பே
பெறுவழித் தோன்றும் பெருந்தகுவியப்பே.

மாற்றலர் விலங்கல் மற்றவர் சேருத
லாற்றத் தோன்று மச்சத்துவிளைவே.

பகையே செருவே யிகலே முனிவே
மிகுவழித் தோன்றும் வீரத்து விளைவே.

ஐவகைக் குரவர் தேவர் மன்னர்
எய்தா தெய்திய வியல்பவை யுட்கோள்.

வருத்த மிகழ்வே வலியின்மை பெருமை
இரக்கந்தோன்று மிந்நாலிடத்தே.

நாற்றஞ் சுவையே தோற்றமூறென்
றிந்நால் வழித்தா மிழிப்பெனப்படுமே.

இற்றென வகுத்த வெண்ணாற் றுறையினும்—
மற்றுப்பெயர்மயக் காயினும் வாய்ப்ப
தந்நெறிப் பெற்றுழித் துன்னினர் கொளலே.

உட்கோணிலைமை யுணர வுரைப்பின்
மெய்க்கொளத் தோன்றினவை மெய்ப்பாடென்க."

இனிக் காரணமாவது இன்ன காரணம்பற்றி வந்ததிப் பாட்டென்றறிவது.

அதுவே,

காரண மென்பது காலமூன்றின்
ஆரணங் காகியவறிந்த பொருண்மேற்
சீரினிற் செப்புஞ் செந்நெறி பெறுமே.

அதுவே,

இன்னதென் றின்னோ ருரைப்ப வதன்வழிப்
பின்னோ ருரைத்ததிதுவெனக்
கிளவியொடுகெழூஉம் விளைவின்கண்ணே.

காலமாவது

ஆண்டே யயன மிருதுத் திங்கள்
பக்க நாளே கிழமை நாழிகை
அஞ்சுங் கலையே காட்டே முதலா
ஈண்டிதற் கேற்ப திதுவெனவெடுத்துக்
காண்டக வுரைப்பது காலவுரையே.

அன்றியும், இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலமுமாம்.

இனிக் கருத்துரையாவது

கருத்தெனப் படுவது கருத்துறத் தெரியில்
அறிதலறியாமை யையுற லென்னு
முறையுளி நோக்கின் மூவகைப்படுமே

என்றமையாலறிக.

அவைதாம்

அறிந்தறியாமை யறிந்தவை யையுறல்
அறியாதறித லையுற்றிலாமை
யெனநனி வகுத்த வித்திறல் வகைத்தே.

இனி இயல்புரையாவது

இயல்பெனப்படுவ தியல்புழி யெண்ணில்
இன்னுழியா யின்ன தியன்றதிது வென்ன
இன்ன முரைப்ப தென்மனார் புலவர்.

விளைவாவது

அதுதான்,

இடையூ றின்மையு மின்பப் புணர்ச்சியு
நெடுநிலப் படாமையுங்
கற்புங் காவலுங் கடனு நாணு
மிற்செறிந்திருக்கையு மிருஞ்சுரம் போதலும்
பாசறை முடித்தலும் பாத்தலின் விழவுமெனப்
பேசப்பட்டவும் பிறவும் போலப்
பரந்து முன்பேசிய பயன்போற் றோன்றி
விரும்பியது விளைப்பது விளைவெனப்படுமே.

இனி, உவமையாவது

உவம மெனப்படுவ தவமற விரிப்பிற்
புகழே பழியே நன்மை யென்றின்ன
நிகழு மொப்புமை நேர்ந்தன முறையே.

அவைதாம்,

கண்ணே செவியே மூக்கே நாவே
மெய்யேமனமே விளம்பினவாறினும்
ஐயமின்றி யறுமூன்றாமே.

அவற்றுண்,

வடிவே வண்ண மொழிதன்மையென
நொடிவ கண்ணி னோக்கிய வொப்பே.

எழுத்திய லொலியு மெழுத்தி லொலியுமென
விழுத்தகு செவியின் வேண்டொப் பிரண்டே.

இனிய நாற்றமு மின்னா நாற்றமுந்
துன்னிய மூக்கினிற் றோற்றும் பண்பே.

அறுவகைச் சுவையி னாவினொப்பே.

நடுவு நிலைமை தண்மை வெம்மை
அறிவு நிலைமை பன்மை விழுப்ப
நொப்பமு மழுக்குச் செருச்செருப் பென்றிவ்
வொன்பதும்
ஒழிவரும் பெருமை யுடம்பினொப்பே.

வினையும் பயனுங் குலனுங் குணனும்
அளவுநிறமு மெண்ணோடெழுவகை
பொறியி னாட்சியி னாடலின்
எய்திய வகையறிந் திசைப்பதியல்பே.

மொழிந்தவேழு முதலுஞ்சினையும்
பண்பொடுபத்து மைவகை சேர்த்திக்
கொண்டே கூறினர் குறிப்புணர்ந்தோரே.

இல்பொருள் கேள்வி துணிவே யுவமஞ்
சொல்லிய நன்மையிற் சொல்லுந் துணிந்தோர்
கருதப் படுவகை தெரிந்துநனி வேறாமை
பொருளு முறுப்பு முதலாக் கூறினும்
ஏற்புழிநோக்கிய வெச்சமாக
வாய்ப்பக்காட்டுக நூற்பொருள் வழக்கே.

அவைதாம்,

பாட்டின் பொருளொடு கூட்டித் தோன்றியும்
பொருவறு வனப்பிற் புனைந்துரை யாகியும்
இருவகையியல்பு மேற்ப வருமே.

ஒப்பிக்கப்படுவ துவமமும் பொருளு
மொப்புடைக்காதல் புகட்சிதனுயர்பே
அப்பொருளதுவாய்க் கிடப்பினுமதுவே.

இரண்டு மூன்று முதலாக் குணங்கள்
திரண்ட வொப்புவமை திருந்த வுடைத்தே.

முடிக்கப் படுவது மொழிவது மிருகுணம்
அடுக்கவரினே தலைப்பாடொப்பாங்
கிளர்ந்தன வுவமை கேட்போர்க்குத் தகுமென
உளங்கொளும் பெற்றியினுருபு நனிபெற்றுக்
கண்ணுள்ளதுபோற் காட்டுவனாயின்
ஒண்மை யுடையோ ருணர்ந்தனர் கொளலே.

அவ்வகைத் தன்றெனி லாதனும்பித்தனும்
ஒவ்வாவானை யொப்பித்தோனே.

நோக்கிய வொப்பினு மோரோ நோன்பொருள்
ஆக்கியுரைப்ப ததிசயவொப்பே.

ஐயமுந் துணிவு மாக வொப்புமை
செய்யவும் பெறுவர் தெரிந்திசி னோரே.

ஆங்க,

ஒப்புமைச் சொற்களைச் செப்புங்காலை
ஒப்பவுறழ வுணர்ப்ப வுரப்ப
ஏய்ப்ப மெத்த மெய்த்த விளக்கப்
புரையப்பொருந்தப் பொறப்பக்கடுப்பக்
குரையக்கதழக் கருதக்கூட
நிகரமேவ நோக்க வோராங்
கிகலவேம வியைப்ப வொப்ப
மானமருள மறலநீக்க
நீரவனைய நோக்கத்தொடிய
நுணங்கப்படிப துணிப்பவுன்ன
வணங்க வாவ மலையவென்ன
வெப்பத் தொழப்ப விட்டவிருள
வின்னவன்ன வென்றாவியையுந்
துன்னுமென்ப துணிந்திசி னோரே.

உருவமாயி னெஞ்சக் கிளத்தல்
இல்பொருளிடையு மேற்பித் துரைப்பர்
பொருளறு கேள்விப் புலமையோரே.

எல்லாப் பொருட்கு மெல்லா வியல்புஞ்
சொல்லாருவமை யொருபுடைச் சொல்வர்.

உவமைக் குவமை வழுவென மொழிப.
நற்பொருளுவமை தலைமைக் கேற்ப
திப்பொரு ணிற்கும் பகைமைக்குந் திகழ்ந்தே.

அவற்றுள்,

ஈங்குத்தோன்றின வொப்புமை யிதுவெனப்
பாங்கறிந்துரைப்பது பண்பெனப்படுமே.

இனி இலக்கணமாவது சட்டக முதலா உள்ளனவற்றுக் கெல்லாம் இலக்கணஞ் சொல்லிக் காட்டுதல்.

இனிப் புடையுரையாவது

புடையுரை யென்பது நடைவகை தெரியிற்
றிறந்தெரி பாட்டினிற் பொருளன்றியும்
புறம்பெற வரூஉம் பொருள்வகை யுடைத்தே.

இனி மொழிசேர் தன்மையாவது வேற்றுமைத்தொகையும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் உவமைத்தொகையும் அன்மொழித்தொகையு முதலாய்க்கிடந்த பிறவாற்றானுமறிக.

இனிப் பொருணடையாவது

அளைமறி கோடலு மொழிமாற்றுக் கோடலுங்
கொண்டு கூட்டு மிருநிரனிறையுஞ்
சுண்ணங்கோடலு முதலாயினவே.

அவைதாந்

தலைமையு மின்மையுங் கூட்டிப்
பின்னருங் காரணம்பற்றிய
பொருட்டாத் தோன்றும் பொருள்வகை யுடைத்தே.

இனி அகப் புறமும் புறமும் புறப் புறமும் ஆமாறுணர்த்துகின்றான்.

ஏற்றுமுதுபாலை பாசறைமுல்லை யியன்றவள்ளி
தோற்றுஞ்சுரநடை யில்லவண்முல்லைதொல் காந்தளன்றி
மாற்றுங்குறுங்கலி தாபதங்குற்றிசை கைக்கிளையோடு
ஆற்றும்பெருந்திணை யாந்தபுதார மகப்புறமே.

(இ-ள்.) இதனால் அகப்புறமறிக.- எ-று.

ஆய்ந்த வகப்புறம் ஐயிரண்டுமாயுங்காற்
காந்தள் கவிமடமா வேறுதல் காமமிக்
காய்ந்தவர் வள்ளி வெறியாட்டாம் வாய்ந்த
சுரநடைமாதர் வருத்தஞ் சுரனுண்
முதுபாலைதன்னை மொழியின் மதுமலர்த்தார்க்
காவலன் வீயக் கவன்ற ததுவாகும்
பாசறை முல்லை தலைமகன் பாசறைக்கண்
மாசறுமாதரை யுள்ளுதல் மாசற்ற
வில்லவண் முல்லையு மஃதேயாஞ் சொல்லுங்காற்
குற்றிசை கோல்வளை யாளைத் தலைமன்
முற்றத்துறந்த துறவாங்குறுங்கலி
முற்றத்துறந்த தலைமகனை முன்னின்று

பொற்றொடிமாதர் பழிதூற்றாங் குற்றந்தீர்
தாபதங் காதற் றலைமகனை நீங்கிய
மேவருமாதர் நிலையாகும் மேவருஞ்சீர்
நீக்கப்பட்டாளை யுவந்த தலைமகன்
பார்த்துறூஉந் தன்மை யதுவாந்த புதாரம்
பத்தும் அகத்தின் புறம்.

கைக்கிளையாவது ஒருதலைக்காமம். பெருந்திணையென்பது பொருந்தாக்காமம்.

வெட்சி கரந்தை விறல்வஞ்சி காஞ்சி யுழிஞை நொச்சி
யுட்கிய தும்பை யென்றேழும்புறமுயர் வாகைதன்பின்
கொட்கும்பொதுவியல்பாடாண்புறப்புறங்கொண்டிவற்றை
யுட்குமதுவிட் டுரவோருரைப்படி யோர்ந்தறியே.

(இ-ள்.) இதனாற் புறமும் புறப்புறமுமறி.- எ-று. இனிப்புறப் பொருள் ஏழையுஞ் சில விகற்பிக்குமாறு.

ஒருப்பாடுநற்சொற்செலவொற்றுரைப்புப்புகல்பொருதல்
விருப்பாநிரைகொண்டவரைத்தடுத்தல்நெறிசெலுத்தல்
செருப்பாடுகைப்படைகாத்தூர்புகல்திறங்கூறிடுதல்
பருப்பாடுபாலாற்களித்தல்வெட்சித்திறம்பான்மொழியே.

(இ-ள்) இவை ஒருப்பாடுமுதலிய வெட்சி விகற்பமாம். வெட்சியாவது நிரைகவர்தற்பொருட் டொருப்படுதலும் உரைசொல்லாய்தலும் அங்குநோக்கிப் படையெழுதலும் ஒற்றுவினையுரைத்தலும் நிரைநின்றவிண்டுவினைச்சூழ்போதலும் பொருதலும் நிரைகவர்தலும் பூசன்மாற்றுதலும் வழியிடையூறுபடாமைச்செலுத்தலுங் கொண்டநிரையின் செலவு காண்டலும் தம்மூர்மன்றத்துணிறுத்தலும் அவையிற்றைக் கூறிடுதலும் உண்டாடுதலும் உபகரித்தலும் எனப் பதினான்காம். எ-று.

ஒடாப்படையாண்மையுன்னனிரைமீட்டன்மன்னர்வெற்றி
கோடாத்திறங்கூறறன்றிறங்கூறுதல் கொற்றப்பொற்றார்
சூடாப்பொலிகுதலாரமரோட்டறுகளறுகற்
றேடாப்பொறித்தல்கரந்தைத்திறமற்றுந்தேர்ந்தறியே.

(இ-ள்.) இவை ஒடாப்படை ஆண்மைமுதலிய கரந்தை விகற்பமாம் எ-று.

ஓடாப்படை ஆண்மையாவது வருதார் தாங்குதல், அஃதாமாறு,

மானாக முன்னுயர்த்தான் சேனை களமுழுதுந்
தானாவருமதனைத் தாங்கினான்-மேனா
ளருகணையா வண்ண மடற்போரின் வென்று
வருகணையாற் பெற்றமகன்.

உன்னனிலை யாவது வென்றி வினைமுன் வினை முடித்தவன் றிறங்கூறி உன்ன மரத்தை நற்போரினினாட லுன்னக் குறிசெய்கெனக் கிளத்தல். நிரைமீட்டலாவது கொண்டநிரை மீட்டல். மன்னர் கோடாத்திறங் கூறலாவது,

உறையுமிடமன்றே பாரெலாமுன்பா
னெறியு நிலாமுத்த மன்றே-சிறுவாய்க்கா
லற்றன்றே முந்நீ ரகன்றுயர்ந்த மாமேரு
புற்றன்றே நீமுனிந்த போது.

தன்றிறங் கூறலாவது

ஒன்றோவென்னொண்கரத்துப் பட்டானங்குய்யுமே
லொன்றோ வெரிபாய்ந் துலக்கின்றா-ளன்றேயும்
இத்தனையி னொன்றன் றியானிற்க யாரெனின்
மற்றுன்னைப் பற்றிடுவார் வந்து.

கொற்றப் பொற்றார் சூடாப் பொலிகுதல் பனையும் வேம்பும் ஆத்தியும் என்று முக்கோக்களுக்குஞ் சொல்லப்பட்ட மூன்று தாருஞ்சூடிப் போர்ப்புக்கார்க்குப் பாடுதல். ஆரமரோட்டலாவது பூசலிட்டோட்டுவது. துகளறுகற்றேடாப் பொறித்தலாவது போருண்மடிந்தார் பெயர் பொறிக்கக் கற்றேடுதலும் பொறித்தகல் நீருட்குளிப்பித்தலுங் கன்னடுதலுமாம். பெரும்படை என்பது ஒருதனியாள் வாள்வினை செய்து பட்டார்க்கு வினைமுற்றுவித்து அவ்வினைவேறுபடுத்தல். வாழ்த்தலென்பது பல வாள்வினைசெய்து பட்டார் கற்களைப்பார்த்துப் புகழ்ச்சி.

அரவமெடுத்தல் வயங்கியலீகை விலக்கருமை
விரவுதனிச்சே வகம்வென்றிகூறல்வென் றார்விளக்கம்
நிரவும்வழிவொடு சோற்றுநிலைகொற் றவர்மெலிவும்
பரவுதழி ஞ்சியென் றின்னவைவஞ்சியின் பாற்படுமே.

(இ-ள்.) இவை வஞ்சிவிகற்பமாம்-எ-று. அரவமாவது படை எழுச்சி. எடுத்தலாவது படையெடுத்தல். வயங்கியலாவது மேற்செல்வான் துணையரசரால் விளக்கமுற்ற பெருமை. ஈகையாவது மேற்செல்லப்படுவான்தன்சேனைத்தலைவற்குப் பெருங்கொடைத் தண்ணளி நல்குதல். விலக்கருமையாவது மேற்செல்லப்படுவான் தனது விலக்குதற்கரிய வென்றிமிகு செலவு. தனிச்சேவகமாவது வருவிசைப்புனலைக் கற்சிறைபோல ஒருவன்றாங்கிய பெருமை. வென்றி கூறலாவது பத்துத் தலையோனைக் கட்டி உன்பாதத்து மட மொழியை மீளேனல்லேனென வருவது. வென்றார் விளக்கமாவது

**நாழிகையிற் காற்கூறு தாழாது ஞாயிறுபோய்**
**வீழ விதியுடைய வேல் வேந்தே-யேழிசையோ**
**டேகாயோ பைய வயிற்றைக் குளையாகிப்**
**போகாயோ வென்றான் புகன்று.**

எனவருவது. நிரவும் வழிகையாவது நாட்டக நாடு. சோற்று நிலையாவது மேற்செல்லப்படுவான் படையாளர்க்குப் பெறுமுறைமையால் உணாமிகுத்தல். கொற்றவர்மெலிவாவது

**யானை தேர் பாய்மாவென வேந்தருள்ளீட்டீர்**
**சேனையுடையீர் சிலரல்லீர்**

எனவரும். பரவுதழிஞ்சியாவது உடைந்த படைஞர்பின் செல்லாமை.

**நிலையாமைவாழ்த்து மயக்கமுதுமை நிலையினொடுந்**
**தொலையாமகிழ்ச்சி பெருமைதீப்பாய்தல் சுரத்திடைத்தன்**
**தலையார்கணவன் றனையிழத்தல்தனி யேயிரங்கல்**
**கலையார்மனைவிபெய் சூளுறவென்றிவை காஞ்சியென்னே.**

(இ-ள்.) இவை காஞ்சிவிகற்பமாம். எ-று. நிலையாமையாவது அறம்பொருளின்ப மிளமையாக்கையுயிராதி நிலையாமை. வாழ்த்தாவது கடவுள் வாழ்த்து முதலாயின. மயக்கமென்பது பூசன் மயக்கம், அஃது புகழுடையன செய்து துஞ்சிய பெருமக்களைச் சுற்றத்தார் புலம்புதல். முதுமையாவது தவத்தின்கணின்றார்க்கெடுத்துக் காட்டிய உவமைச்சொல்

**அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்**
**கிவ்வுலக மில்லாகி யாங்கு**

எனவரும். நிலையாவது கையறுநிலையுந் தபுதாரநிலையுந் தாங்கிய நிலையுந் தலைமைப்பெயனிலையும் என்ப. அவற்றுட் கையறுநிலையாவது கழிந்தோர்செய்த கழிவழீஇய வொழிந்தோர் புலம்புங் கையறவு. தபுதாரநிலையாவது காதலியை இழந்தார் காதல் நிலையென்பது. தாங்கிய நிலையாவது காதலனை இழந்தோணிலை. தலைமைப் பெயனிலையாவது அவர் பெருஞ்சிறப்பிற் புதல்வரைப் பெறாத் தலைவருந் தலைப்பெயல்நிலை; அது அங்கவனோடு இறந்தோரைப் பற்றி வருவது. மகிழ்ச்சியாவது ஓருயிராவதறிய உளங்கலத்தலென்பது. பெருமையாவது கூற்றமறுத்தற்கரிது செயற்பாலன வல்லே செய்ம்மின் எனப் பெரியோராற் சொல்லப்பட்ட சொற்பெருமை. தீப்பாய்தலாவது கணவனொடு நனியழற் புகல். சுரத்திடைத்தன் தலையார் கணவனை யிழத்தலாவது சுரத்திடைக் கணவனையிழந்த தலைமகள் முதுமை. தனியேயிரங்கலாவது துணையிழந்த தலைமகன் தனியே இருந்திரங்கல். கலையார் மனைவி என்பது களத்தில் வீழ்ந்த தலைமகனைத் தலைமகள் காத்த பெருமை இஃது செருக்களத்துப் பேதையைப் பற்றிப்புணர்தல். சூளுறவாவது

> கருந்தடங்கண் மங்கையரை நோக்குற்ற கண்ணும்
> பெருந்தடந் தோட்பிணித்த கையும்-பருந்தின்
> வளைவாயிற் பெய்யேனேல் வந்திரந்தார் துன்பங்
> களையாது மாற்றுகவென் கை

எனவரும். பிறவுமன்ன.

> வேந்தன்சிறப்பு மதிலேறுதல்வென்றி வாட்சிறப்புக்
> காந்தும்படைமிகை நாட்கோளொடுகாவ லேமுடிகோள்
> ஏந்துந்தொகைநிலைகொற்றநீர்ப்போர்ச்செல்வமூர்ச்செருவே
> போந்தமுதிர்வு குறுமையென்றாமுழி ஞைப்புணர்ப்பே.

(இ-ள்.) இவை உழிஞைவிகற்பமாம். எ-று.

வேந்தன் சிறப்பு

> மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
> பெற்றி கருதுவதென் பேதையர்காண்-மற்றிவன்றன்
> கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
> வண்டா ரரக்கன் வலி.

மதிலேறுதலாவது பகைவர் மதிலை மேற்சென்றோன் சேனையேறுதல். வெற்றி வாட்சிறப்பாவது பொருதவேந்தனது வாட்சிறப்புச் சொல்வது. படைமிகையாவது

ஐயிருபதோசனையு மாங்கோ ரிடமின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்–தையல்
வழிவந்தி ராமன் வடகரை யானென்றான்
விழிவந்து வேறாக மீட்டு.

நாட்கோளாவது கொற்றக் குடையைத்தான் கொற்ற வாளைத்தான் குறித்து நாட் கொள்வது. காவலாவது அகத்தோனாலமைக்கப்பட்ட அரண்காவல். முடி கோளாவது தொக்கிலாரை முடிகொண்ட சிறப்பு. தொகைநிலை யாவது இருவர் சேனையுந் தொக்கநிலை. கொற்றமாவது அரண் சூழ்ந்த வேந்தன் கொற்றச்சிறப்புணர்த்தல். நீர்ப்போராவது வலியாரைப் பெரியோரைத் துணையின்றியே சென்று பொருதல். பிறவுமன்ன. உழிஞையெல்லாம் அரண்பற்றியே வரும்.

**நாற்குலப்பக்கமுக் காலங்களவழி நற்குரவை**
**யாற்றல்வல்லாண்வேட்கை யார்பக்கமேன்மை யரும்பொருளே**
**தோற்றியகாவல் துறவுகொடைபடை யாளர்பக்கம்**
**மாற்றியவொற்றுமை யோடுமற்றும்மிவை வாகையிலே.**

(இ-ள்.) இவை வாகை விகற்பமாம். எ-று. நாற்குலப்பக்கமாவது ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் கோடல் கொடுத்தல் என்னும் அந்தணர் அறுதொழிலும், ஓதல் வேட்டல் கொடுத்தல் படைக்கலத்தின் வாழ்தல் பல்லுயிரோம்பல் என்னும் அரசர் ஐந்தொழிலும், ஓதல் வேட்டல் கொடுத்தல் உழுதல் பசுக்காத்தல் வாணிபம் என்னும் வசியர் அறுதொழிலும், கொடுத்தல் உழுதல் பசுக்காத்தல் வாணிகஞ் சிறப்பித்தல் நரம்புக்கருவி முதலாய கருவிகற்றல் அந்தணர்வழியொழுகல் என்னும் வேளாளர் அறுதொழிலுமாம். முக்காலமாவது மூன்றுகாலம். களவழி களத்தில்ழிவு. குரவையாவது இன்றேர்க்குரவையிட்டாடுதல். ஆற்றலாவது ஆரியரணாத்தன் பகை மிகையை மதியாது பொருமாற்றல். வல்லாண்பக்கமாவது பகைவென்று விளங்கி மதிப்பெருவாகை வண்டாரத்துப் பெறுவான் செங்களத்துப் புலர்ந்து மாய்தல். வேட்கையார் பக்கமாவது விருந்தோம்பலும் அழலோம் பலுமுட்பட எண்வகைத்தாம் பக்கம். மேன்மையாவது பெரும்பகை தாங்கு

மேன்மை. அது அருளொடு புணர்ந்த அகற்சியாம்.

புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனாது
முலைமறாஅக் குழவி வாங்கி வாய்ப்படுத்
திரையெனக் கவர்ந்தது நோக்கியாங்க
வேரிளங்குழவி முன்சென்று காணக்
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் துடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவப்
பாசிலைப் போதி மேவிய பெருந்தகை
யாருயிர் காவல் பூண்ட
பேரருட்புணர்ச்சிப் பெருமைதானே.

பொருளாவது அறம்பொருள் இன்பம் மூன்று பொருளினும் விடாமற் புணர்ப்பது. காவலாவது பிழைத்தோரைத் தாங்குதல். துறவாவது தவத்தினை வென்ற பக்கம். அஃதாவது

வாடாப்போதி மரகதப்பாசடை
மரனிழலமர்ந்தோ னெஞ்சம் யாவர்க்கு
மருளின் றீந்தே னிறைந்து நனி நெகிழ்த்து
மலரினுமெல்லிய ரென்பரதனைக்
காமர் செவ்விமாரன் மகளீர்
நெடுமாமழைக்கண் விலங்கி நிமிர்ந்தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின்
யாதோ மற்றது மெல்லிய வாறே.

கொடையென்பது

பாசடைப்போதிப் பேரருள் வாமன்
வரையா ஈகை போல யாவிருங்
கொடைப்பட்டு வீரக்கொடை வலப்படுமின்
முன்னொருமுறைத் தன்னுழையிரந்த
வன்பிலர்க்கா வேண்டளவும் பருக
வென்புதொறுங் கழிப்பிற்றன் மெய்திறந்து வாக்கிக்
குருதிக் கொழும்பதங் கொடுத்தது மன்றிக்
கருசிமிட்பட்டகள்ளப்புறவின்
மாயயாக்கை சொல்லிய தாற்றன்
னுடம்பு நிறுத்துக் கொடுத்ததுமன்றி

எனவரும். படையாளர்பக்கமாவது கருதியறியும் படையாளர் பக்கம். ஒற்றுமையாவது சிறியோர் நாணப் பெரியோர்கூறிய

கூறுபாட்டிற் கழிமனத்தை ஒற்றுமைகொள்ளல். மற்றும் என்றமையால் எட்டியல் சான்றோர் பக்கமும் உட்படக் கண்டுகொள்க. எட்டியலாவன,

அழுக்காறிலாமை யவாவின்மை தூய்மை
யொழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை-யிழுக்காத
நற்புலமையோடு நடுவுநிலைமையே
பற்புடைய வெட்டுறுப்புக் காண்.

என்றமையாலறிக. சான்றோர் பக்கமாவது பகைவர்கண்ணுந் தன் பாலார்கண்ணும் ஒப்புமையாகப் பாசறையுள்ளாச் சால்புடைமை கூறுதல். அஞ்சாச் சிறப்பென்பதும் அது. பிறவுமன்ன.

**நிலைபாழிகோளொடு வாளாட்டுடைபடை நீள்களிற்றின்**
**தொலையார்மலைவிவை தும்பைவிகற்பங்க டொன்மைமிக்க**
**தலையாயநூலவைதன்னினுங்கண்டிங்கொழிந்தவெல்லாஞ்**
**சிலையாருநன்னுதன் மாதேயறிந்துகொள் செப்பிடவே.**

(இ-ள்.) இவை தும்பை விகற்பமாம். எ-று. நிலையாவன தானை யானை குதிரை தேரிவற்றினிலை. பாழிகோளாவது கைப்படைவிடுத்து மெய்கொண்டு. பொருந்தறுகணாளர் ஏமப்பெருமை. வாளாட்டமாவது முரட்டேர்சூழ்ந்த களிற்றினத்தொடும் பட்ட வேந்தனை அட்டவேந்தர் தாமும் மறவரும் ஆடும் பொலிவு. உடை படையாவது ஒருவர்க்குப் பல படைத்தலைவன் வாளினாலோச்சப் பட்ட உடைபடைத்தொகுதி. அதற்கு நூழிலென்றும் பெயராம். களிற்றின்றொலையார் மலைவாவது களிற்றொடு மலைதலும் படுதலும் எனவிவை. பிறவுமன்ன.

**புகட்சிபரவல் குறிப்புக்கொடிநிலை கந்தழியே**
**யிகட்சிமலிவள்ளி யென்றிவையாறு நெறிமுறையிற்**
**றிகட்சிமலைதரு பாடாண்பகுதி செப்பாதனவும்**
**இகட்சியுண்டாகா வகைதேர்ந்தறிந்த லியல்புடைத்தே.**

(இ-ள்.) புகட்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழி வள்ளி என்றாறும் பாடாண்பகுதி விகற்பம்-எ-று. புகட்சியாவது புகழ். பரவலாவது

எனவாங்கு,
அகலிலாநின் றடியிணை பரவுதும்
பொலிதருசேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே

எனவரும். குறிப்பாவது நன்மை வேண்டிற் தெய்வத்தை வழிபடுமென்பது. கொடிநிலையாவது கொடியது தன்மை கூறுவது. கந்தழியாவது செருவிற்றெட்பமுடைமை. வள்ளியாவது முருகவேளைக் குறித்தது. பிறவுமன்ன.

இனிஒருசாரார் சொல்லுமாறு. அறமும் அறக்காரணமும் பொருளும் பொருட்காரணமும் இன்பமும் இன்பக் காரணமுமென்றிவ்வகைப்படுத்தும், அகப்பொருளும் புறப்பொருளும் அகப்புறப்பொருளுமென மூன்று வகைப்படுத்தும் மொழிவர்.

அறம் பொருளின்ப மறனே காரண
மகமும் புறமு மகப்புறமுமென
விலக்கி லின்னவாகும் பொருட்டெரிவகையே

என்றாராகலின். அறன் முதலாகிய மூன்றுபொருளும் அகவுரையிற் கொள்க.

களவுங்கற்புங் கைகோளாக
வளவினன்பின தகமெனப்படுமே

என்றமையால் அகப்பொருளறிக.

அறத்தினும் பொருளினும் அன்பினுமறத் திறம்
வரைத்த நோக்கத்துப் புறத்திணை யாகும்.

அவைதாம், வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி யுழிஞை தும்பை வாகை
யெச்சப் படலமோடிவை யெனமொழிப
என்றமையாற் புறப்பொருளறிக.

அறனும் வாட்கையு மொருதலைக்காமமும்
பொதுவியல் பாடாணய நிலைப் படலமென்
றிவைக ளனைத்து மகப்புறமாகும்

என்றமையால், அகப்புறப்பொருளை அறனும் வாட்கையும் ஒருதலைக்காமமும் பொதுவியலும் பாடாண்பாட்டுங் கூத்தமார்க்கமுமென அறுவகையாய்ப் பகுதிப்படுத்துவாரெனக் கொள்க. அஃதாமாறு, அறம் மனையறமுந் துறவறமுமென இருவகைத்து. அவற்றிற்,

கொடுத்தலு மளித்தலுங் கோடலு மின்மையும்
ஒழுக்கத்தொடு புணர்தலும் புணர்ந்தோர்ப்
பேணலும்
வழுக்கில் பிறவு மனையற வகையே.
துறவுமடக்கமுந் தூய்மையுந்தவமு
மறவினையோம்பலு மறத்தினைமறுத்தலு
மனையினீங்கிய முனைவர்தமறமே

என்பதனால் இவ்விரண்டும் அறிக.

அறுவகைத்தொழிலினு மைந்துவகைப்பொருளினு
முறுபுகழ்மன்னவ ருறவொடுநிலவ
மறுகில்வாட்கை வாட்சியாகும்

என்றமையால் வாட்கையறிக. அறுவகைத்தொழிலும் வரைவு வாணிகம் விச்சைச் சிறப்பு முதலியவெனக் கொள்க. ஐவகைப்பண்டமாவன நிலங் களங் காலேயம் மெய்பொருண் மெய்ப்பண்டமெனக்கொள்க. ஒருதலைக்காமமாவது ஆண்பாற் கைக்கிளை பெண்பாற்கைக்கிளை என இரண்டுவகைப்படும். ஐந்திணைக்குப் புறனும் ஆனந்தமும் அறநிலைத்திணையுமாவது பொதுவியற்படலமெனக்கொள்க. பரிபாடத்து மெய்வழிச்சியும் பரவலும் புகட்சியும் அன்புறுத்தலும் புகழ்வித்தலும் புனைதலும் அவாவினிலையுந் தெய்வவாழ்த்தும் பூவைவாழ்த்தும் பரிசினிலையும் இயன் மொழியுங் கண்படைநிலையுங் கலவிநிலையும் வெள்ளிநிலையும் நாடு புகழ்நிலையும் களவழி நிலையும் பெருமங்கலமும் மணமங்கலமும் பொலிவுமங்கலமும் பரிசில்கடாநிலையும் ஆள்வினைவேள்வியும் வாயுறையுஞ் செவியறிவுங் குடைமங்கலமும் நாண்மங்கலமும் ஓம்படையும் புறநிலையும் ஆற்றுப்படையும் பாடாண் டுறையெனக் கொள்க. நயநிலைப் படலமாவது நாடகம்; கூத்தமார்க்கமென்பதுமது; அது பெரியோரைத் தலைமக்கள் மேவச்செய்யப்பட்ட மெய்ப்பொருள் பற்றிவருதல். சிறியோரைத் தலைமக்களாக்கி ஒளியும் விருத்தியும் சாதியுஞ் சந்தியுஞ் சுவையு முதலாகப் பல விகற்பத்தானும் வரும். அவற்றுள் *ஒளியாவது சந்தி நிருதையும் அநிருதையுஞ் சந்தியாநிருதையுமென மூன்று. அதுவே, உள்ளோன் றலைமகனாக உள்பொருளும் இகப்பொருளும் இலப்

* ஒளியென்றது கதாப்பிரகாசவஸ்துவை. வடநூலார் அதனைப் பிரக்கியாதம் உற்பாத்தியம் மிசிரம் என வகுப்பர்.

பொருளும் இரவப் பொருளு மென்றும் இல்லோன்றலைமகனாக இல்பொருளென்றும் ஐந்து வகைப்படும். விருத்தியாவது சாத்துவதியும் ஆரவடியும் *கைசிகியும் பாரதியுமென நான்குவகைப்படும். சாத்துவதியாவது தலைமக்களில் அறப்பொருளுபாங்கமாவது. ஆரவடியாவது அதிகெம்பீர சந்தர்ப்பமாய் நிப்பியா பாண்டவாவுரைசுவைத்தலு பாங்கமாவது. கைசிகியாவது காமவிகற்பமுபாங்கமாவது. பாரதியாவது கவுத்தனையே தலை யாகக்கூத்துக் கொடுக்கப்படுவது. சாதியாவது #வீரம் கூச்சம் அர்ப்பாயம் பேய்க்காரம் வியோகம் பாணம் சல்லாபம் வீழிணி உத்தாரமடங்கம் பிராசனமென இவை.

வீரமாவது அங்கமிரண்டு முதலா ஆறிரண்டும் எய்தப்பெற்றுச் சந்தியைந்து முடைத்தாய் வாரங் கண்டம் பெற்றும் பெறாதுந் தலைமகனொருவனாவது.

கூச்சமாவது தலைவரிருவரை இடையிட்டுப் பேசப்பட்டு வாரத்தோடிருக்கும்.

அர்ப்பாயமாவது அருளில்லாதோர் தலைமக்களாய்ப் பெண்ணுடைத்தாய் வாரம்போலியாவது; அர்ப்பீடமெனினும் ஒக்கும்.

பேய்க்காரமாவது தலைமக்கள் தேவகாந்தர்வ பைசாசாதி பதினறுவராய்ப் பெண்ணுடைத்தாய் முன்பின் மூன்றினும் ஒன்றின் பொருள் பெறுதலும் அங்க மொன்றாதலுங் கண்ட மொன்றாதலுமாம்.

வியோகமாவது, தலைமக்க ளொருவரைத்தான் பலரைத்தான் உடைத்தாய்ச் சந்தியைந்துமுடைத்தாய்த் தலைமைக்கண்டம் ஒரு கண்டம் பெறும்.

---

* கௌசிகையென்றும் பாடமுண்டு.

\# வடநூலார் நாடகம் பிரகரணம் பாணம் பிராசனம் இடிமம் வியோகம் சமவாகரம் வீதி அங்கம் ஈகாமிருகம் எனவகுத்துக் கூறுந் தசரூபமும் ஆசிரியர் கூறிய பதின்சாதியும் இலக்கணத்திற் சிறுபான்மையொத்தன. வடமொழி இலக்கணத்தைப் பிரதாபருத்திரீய தசரூபகம் சாகித்திய தருப்பணம் முதலியவற்றில் விரிவாகக்காண்க.

பாணமாவது தூர்த்தனாதல் தலைவனாதல் தானஞ் சொல்லி நின்றார் சொல்லையும் அனுவதித்துச் சொல்லிய ஐவகைச்சந்தியுள்ளுங் கடைக்கண் சந்தியங்கமொன்றாவது.

சல்லாபமாவது ஒருபொருண்மேற் பேசுவார் தலைமக்கள் இருவராய் ஓரங்கமாய் நிருபனைச் சந்தியொன்றாது நின்றசந்தி நான்குடைத்தாவது.

வீழிணியாவது கூத்தன் தலைமகனாய்த் தன்மடந்தைக்கு விடாக்கண்டவாறும் மன்னகரங் கண்டவாறுஞ் சொல்லுதலாய் அங்கமொன்றாய் ஐவகைச் சந்தியுள்ளும் கடைச் சந்தியணையுமாறு சொல்லுவது.

உத்தாரமடங்கமாவது மக்கள் பலரைத்தலைவராகப் பெற்றுப் பெரும்பொல்லாத பேருடைத்தாய்ப் பெண்களா லாற்றப்பட்டுச் சந்தியைந்து முடையது.

*பிராசனச் சந்தியாவது சுத்தமுஞ் சங்கீரணமும் எனவிரண்டாம். சுத்தமாவது தக்காரை யிகழ்ந்துவருவது. சங்கீரணமாவது பாஷண்டன் தலைமகனாய்த் தோழியரே கணிகையரே தூதரே அலிகளே பேடியரேயென்றிவ ரையுடைத்தாய்க் கடைக்கட் சந்தியின்றி அங்கமொன்றாவது. சந்தியாவது சந்தியுஞ்சந்தியங்கமுமென இரண்டு வகைப்படும். அவற்றிற் சந்தி யைந்துவகைப்படும். அவை முகமும் பயிர்முகமுங் கர்ப்பமுகமும் வைரிமுகமும் நிருவாணமும் எனவிவை. சந்தியங்கமாவன அறுபத்துநான்கு. அவற்றுள் உவகேபம் பரிகரம் பரிநியாசம் விலோவணம் யுக்தி பிராத்தி சமாதானம் விதானம் பயுபாவனை **உச்சிரம் உற்பேதங் கரணபேதமென முகத்திலங்கம் பன்னிரண்டு; விலாசம் பரிசர்ப்பம் விதூதம் சமம் நாபம் நமதூதி பிரகமம் நிரோதம் பரியுபாசனம் வச்சிரம் புட்பம் உபநியாசம் வருணசங்காரம் இவை பயிர் முகத்திலங்கம் பதின்மூன்று; ஆபூதாரணம் மார்க்கம் உருவம் உதாயிருதி கிரமம் சங்கிரகம் அநுமானம் தோடகம் அதிபலம் உதேகம் சம்பிரமம் ஆகேவமெனப் பன்னிரண்டுங் கர்ப்பமுகத்தின்பேதம்; அபவாதம்

* வடநூலார் சுத்த வைகிருத சங்கீரணம் என மூவகைப்படுத்தும்.

** உச்சிரநீக்கிக் கரணபேதத்தைப் பேதம் கரணமெனவுங்கூறுப.

சம்பேடம் வித்திரவம் திரவம் சத்தி துதி பிரசங்கம் சலனம் விவசாயம் நிரோதனம் பிரரோசனம் விசலனம் ஆதானம் இவை பதின்மூன்றும் வைரிமுகத்தின் அங்கங்கள்; சந்தி விரோதம் கிரதனம் நிண்ணயம் பரிபாடணம் பிரசாதம் ஆனந்தம் சமயம் கிருதி ஆபாடணம் உபகூகனம் பிரசத்தி பிரசனம் சங்காரம் இவை பதினான்கும் நிருவாணமுகத்தின் அங்கங்கள். முகமாவது உழுப்புப் புத்தீயினின்று முளைத்தாற்போலக் கூத்தின் முகத்தினுள்ளே பொருடோன்றுவது. பயிர்முகமாவது முளைத்தவங்குரமோங்கி மூத்தாற் போலத் தலைமக்கள் சொன்னபொருளைப் பொலியுமாற்றால் விரிவாற்சொல்வது. கருப்பமாவது கலத்திற் கருவு திரண்டோங்கிக் குடைப் போகியவாறுபோல நலந்தரும் பொருளைத் திரளச் சொல்லுவது. விமரிசமாவது தோடுவிரித்துக் கதிர்போந்தாற்போலவும் மேயது வளைத்தாற்போலவும் நாடகப்பொருள் நன்கு விளிக்கப் பயன்படுவது. விமரிசமெனினும் வைரிமுகமெனினும் ஒக்கும் நிருவாணமாவது விளைந்தபோகம் விதிவரையா லறுத்துப் படுத்து வைத்துத் தகளுங் களைந்துகொண்டுண்மகிழ்ந்தாற் போலக் கொள்வது. *சுவையாவன சிங்கார முதலாயுள்ளன வென்றாம். அவையிற்றை வீரக்குறிப்பு பயக்குறிப்பு உக்கிரக்குறிப்பு புகழ்க்குறிப்பு நகைக் குறிப்பு காருணியக்குறிப்பு என்றொன்பதாகவுங் கூறுவர். வீரக் குறிப்பு வெளிமுதலாயினவாம். நகைக்குறிப்பு மென்மை முதலாயினவாம்.

களவுங்கற்புங் கைகோளாக
வளவினன்பின தகமெனப்படுமே.
வெட்சிமுதலாகத் தும்பையீறாகப்
புக்கமர் செய்வது புறத்திணையாகும்.

அவைதாம்,

வெட்சிகரந்தை வஞ்சிகாஞ்சி
யுட்கு வருசிறப்பினு ழிஞைநொச்சி
விறன்மிகுசிறப்பிற் றும்பையுள்ளிட்ட
மறனுடைமரபின வேழெனமொழிப.

வெட்சிநிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேற்செல்வது வஞ்சியாமுட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி

* வடநூலார் இவற்றினை நவரசம் எனக் கூறுவர்.

யதுவளைத்தலாகு முழிஞையதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்துமிக்கார்
செருவென்றது வாகையாம்.

கைக்கிளையேனைப் பெருந்திணையென்றிவை
யக்கரமறிவோ ரகப்புறமென்ப.

காட்சி முதலாக்கலவியினொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளையதுதான்
கேட்போரில்லாக் கிளவிகள் பெறுமே.

இறந்தமூப்பு மெய்தாவிளமையுஞ்
சிறந்த காமத்திற் செய்யுஞ் சிதைவும்
பிறங்குதருமரபிற் பெருந்திணையாகும்.

காந்தள் வள்ளி கரநடை முதுபாலை
தாபதந் தபுதாரங் குற்றிசைகுறுங்கலி
பாசறைமுல்லை யில்லாண்முல்லை
யென்றிவைபத்து மகப்புறமென்ப.
ஆய்ந்தவகப்புற மையிரண்டுமாயுங்காற்
காந்தள் கலிமடமா வேறுதலுள்ளிட்ட
பத்து மகத்தின்புறம்.

வாகைபாடாண் பொதுவியற் றிணையெனப்
போகியமூன்றும் புறப்புறப்பொருளே.

## பொருட்படலம் முற்றும்

## பொருளதிகாரமுற்றும்

# நான்காவது-யாப்பதிகாரம்

# யாப்புப்படலம்

**குறிலுநெடிலு மெனுமிவைநேரசை குற்றெழுத்துப்**
**பெறின்முனிவையேநிரையசையாம் பிழைப்பில்லைபின்பொற்**
**றிறினுமசையிரண் டொன்றின்முற்சீர்மூ வசையொன்றிநேர்**
**இறுவதிடைச்சீர் நிரையிறிற்பிற்சீ ரெனவியம்பே.**

*(இ-ள்.) குற்றெழுத்துத்தான் நெட்டெழுத்துத்தான் தனியேவரின் நேரசையாம். இவையிற்றின் முன்பு ஒரு குற்றெழுத்துப் பெற்றுக் குறிலிணையாயுங் குறினெடிலாயும் வரின் நிரையசையாம். நேரசையின் பின்பும் நிரையசையின் பின்பும் ஒற்றெழுத்து வரவும் பெறும். வாராதொழியவும் பெறும். நேரசை நிரையசையாயுள்ளன விரண்டாயொன்றினபொழுது முதற்சீரெனப்படும். மூன்றசை ஒன்றி அவற்றினீற்றசை நேரசையாய் வரின் அவை இடைச்சீரென்பனவாம். மூன்றசையொன்றி அவற்றினீற்றசை நிரையசையாய் வரிற் கடைச்சீரெனக்கொள்க. எ-று. போதி வேந்தன் சரணலா லரண்புகேம் என்றது நேரசை நான்கிற்கும் நிரையசை நான்கிற்கும் உதாரணமாம். போ என்னுந் தனிநெடிலுந் தி என்னுந் தனிக்குறிலும் வேந் என்னும் நெடிலொற்றுந் தன் என்னுங் குறிலொற்றும் நேரசை நான்கிற்கும் உதாரணம். சர என்னுங் குறிலிணையும் ணலா என்னுங் குறினெடிலும் லரண் என்னுங் குறிலிணையொற்றும் புகேம் என்னுங் குறினெடிலொற்றும் நிரையசை நான்கிற்கும் உதாரணம். முதற்சீரை ஆசிரியச் சீரென்றும் இடைச்சீரை வெண்சீரென்றுங் கடைச்சீரை வஞ்சிச்சீரென்றும் வழங்குவாரும் உளரெனக் கொள்க. வருஞ் செய்யுளில் அவற்றிற் குதாரணஞ் சொல்லுகின்றான்.* (1)

**கருவிளங்கூவிளந் தேமாபுளிமா வெனக்கலந்து**
**மருவியநான்கு முதற்சீர்களாமற் றவற்றினந்தத்**
**துருவமாங்காய்வரி னாமிடைச்சீரொண் கனிவருமேற்**
**செருவமர்வேற்கண்ணினாய்கடைச்சீரெனத்தேர்ந்தறியே.**

*(இ-ள்.) கருவிளம் கூவிளம் தேமா புளிமா என்னும் நான்கும் முதற்சீர்க்குதாரணமாம். இவற்றின்கடைக்கட் காய்*

என்னுஞ் சொற்பெற்றுக் கருவிளங்காய் கூவிளங்காய் தேமாங்காய் புளிமாங்காயென வருவன இடைச்சீர்க் குதாரணமாம். அவற்றினிறுதிக் கட்கனி என்னுஞ் சொற்பெற்றுக் கருவிளங்கனி கூவிளங்கனி தேமாங்கனி புளிமாங்கனி எனவருவன கடைச்சீர்க்குதாரணமாம்- எ-று. (2)

**இருசீருமுச்சீரு நாற்சீருமைஞ்சீரு மைந்தன்மிக்கு**
**வருசீருமந்தரங் காறீப்புனலொடு மண்பெயராற்**
**றிரிசீரடியாங் குறள்சிந்தளவு நெடிற்றகைமை**
**தெரிசீர்க்கழிநெடி லென்றுநிரனிறை செப்புவரே.**

(இ-ள்.) இருசீரால்வந்த அடியும் முச்சீரால் வந்த அடியும் நாற்சீரால்வந்த அடியும் ஐஞ்சீரான்வந்த அடியும் ஐஞ்சீரின் மிக்கு வந்த அடியுமென அடி ஐந்து வகையாம். அவற்றினுக்கடைவே ஆகாயங் காற்று நெருப்பு நீர் மண்ணென்னும் பூதங்களின்பேரே பெயராம். குறள் சிந்து அளவு நெடில் கழிநெடிலென்று நிரனிறை சொல்லுவாருமுளர்- எ-று. இருசீரான்வந்த அடி குறளடி, முச்சீரான்வந்த அடி சிந்தடி, நாற்சீரான்வந்த அடி அளவடி, ஐஞ்சீரான்வந்த அடி நெடிலடி, அறு சீரான்வந்த அடி கழிநெடிலடி என்க. இவ்விடத்திலளவடியெனினும் நேரடியெனினும் ஒக்கும். வரலாறு:

**பொருந்து போதியி**
**லிருந்த மாதவர்**
**திருந்து சேவடி**
**மருந்துமாகுமே.**

இஃது இருசீர்க் குறளடி நான்காய் வந்த செய்யுள்.

**விண்ணவர் நாயகன் வேண்டக்**
**கண்ணினி தளித்தகாதற்**
**புண்ணிய னிருந்த போதி**
**நண்ணிட நோய்நலி யாவே.**

இது முச்சீர்ச்சிந்தடி நான்காய் வந்த செய்யுள்.

**இன்ப மென்னைய லாததி லாதிவன்**
**பின்பு தோறும் பிரிவெனுந் தீயினா**
**லென்பு வேவ விறந்து படுங்கொலோ**
**வன்பு தாங்கரி தாதலி னாலரோ.**

இஃது அளவடி நான்காய் வந்த செய்யுள்.

முன்றான் பெருமைக்க ணின்றான் முடிவெய்து காறு
நன்றே நினைந்தான் குணமொழிந் தான்றனக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதி சூழ்ந்தா
னன்றேயிறைவ னவன்றாள் சரணங்க ளன்றே.

இது நெடிலடியான் வந்த செய்யுள்.

இரவிடை மதிய மென்பா னாடிப்போய் மறையு
மெல்லை
விரியிரு ளெழினி நீக்கி விசும்பெனு மரங்கு தன்மேற்
கரைகடன் முழவ மார்ப்பக் கதிரெனுங் கைகள் வட்டித்
தெரிகதிரென்னுங் கூத்த னாடுவா னெழுந்து போந்தான்.

இஃது அறுசீர்க்கழிநெடிலடியான் வந்தசெய்யுள். தகைமைதெரி சீர்க்கழிநெடி லென்று சிறப்பித்தவதனால் அறுசீர்க்குமேற்பட்டுப் பதினொரு சீரளவுங் கழிநெடிலடி வரப்பெறுமெனக்கொள்க. வரலாறு:

தோடாரிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய
வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை
குணனாக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்தல் நாளு மிலரே.

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான்வந்த செய்யுள்.

எண்டிசையு மாகி யிருளகல நூறி
யெழுதளிர்கள் சோதி முழுதுலக நாறி
வண்டிசைகள் பாடி மதுமலர்கள் வேய்ந்து
மழையருவி போதி யுழைநிழல்கொள் வாமன்
வெண்டிரையின் மீது விரிகதிர்க ணாண
வெளிகழல் கொண்மேனி யறிவனெழின் மேவு
புண்டரிக தாப நமசரண மாகுமென
முனிவர் தீமை புணர்பிறவி காணார்.

இஃதெண்சீர்க் கழிநெடிலடி யான் வந்தசெய்யுள்.

*கூரார் வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட் கொலையுழுவை
காய்பசியாற் கூர்ந்த வென்னோய் நீங்க
வோரா யிரங்கதிர் போல்வாள் விரிந்த மேனியுளம்
விரும்பிச் சென்றாங் கியைந்தனை நீயென்றாற்
காரார் திரைமு ளைத்த செம்பவள மேவுங்
கடிமுகிழ் தண்சினைய காமரு பூம்போதி
யேரார் முனிவரர் வானவர் தங்கோ வேயெந்
தாயரோ நின்னை யேத்தாதார் யாரே.

இஃதொன்பதின் சீர்க்கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

பைங்கண்வா ளெயிற்றினப் பகட்டெருத்தின் வள்ளுகிர்ப்
பரூஉத்திரட் கரூஉக்கொடாஅப் பாலுடைச் செனாவுடைச்
சிங்கவேறு நான்குதாங்க மீதுயர்ந்த சேயொளிச் சித்திரங்
குயிற்றினாளி செம்பொனாசனத் தின்மேற்
கொங்குநாறு போதுசிந்தி வானுளோ ரிறைஞ்சிடக்
கோதிலா வறம்பகர்ந் தமர்ந்தகோன் குளிர்நிழற்
பொங்குதாது கொப்புளித்து வண்டுபாடு தேமலர்ப்
போதியெம் பிரானடிக்கள் போற்றில்வீட தாகுமே.

இஃது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்தசெய்யுள்.

---

* இதுவும் பின்வரு முதாரணச் செய்யுளிரண்டும் உரையிற் பிரித்திருக்குமாறு எண்சீர்க்கழிநெடிலடி விருத்தமென்றே கொள்ளல்வேண்டும். இவற்றை ஒன்பதின் சீர்க்கும் பதின்சீர்க்கும் பதினொருசீர்க்கும் எடுத்துக்காட்டாக ஆசிரியர் கூறியது எவ்வாறோசையூட்டினும் பொருந்திலது. பதின்சீரெனவும் பதினொருசீரெனவும் அவர்காட்டிய செய்யுட்கள் ஒரே சந்தமுடையனவாம். அவற்றைப், பைங்கண் வாளெ யிற்றி னப்ப கட்டெ ருத்தின் வள்ளுகிர்ப் பரூஉத்தி ரட்கு ரூஉக்கொ டாஅட் பாலு டைச்செ னாவுடையெனப் பதினான்கு சீராகவும் வீடு கொண்ட நல்லறம் பகர்ந்த மன்பதைக்கெலாம் விளங்கு திங்க ணீர்மையால் விரிந்தி லங்கும் வன்பினோன் எனப் பன்னிரு சீராகவுங் கொள்வாருமுளர். ஒன்பதின் சீர்முதலியவற்றிற்குதாரணம் வந்துழி வந்துழிக்காண்க. இவை காவியங்களில் அருமையாகவரும்.

*வீடுகொண்ட நல்லறம் பகர்ந்தமன் பதைக்கெலாம்*
*விளங்குதிங்க ணீர்மையால் விரிந்திலங்கும் வன்பினோன்*
*மோடு கொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ்சுடர்*
*முளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்ந்திலங்கு போதிய*
*னாடுகின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமான*
*வைந்தொடங்கொர் மூன்றறுத்த நாதனாண் மலர்த்துணர்ப்*
*பீடுகொண்ட வார்தளிர்ப் பிறங்குபோதி யானையெம்*
*பிரானைநாளு மேத்துவார் பிறப்பிறப்பி லார்களே.*

*இது பதினொருசீர்க் கழிநெடிலடியான் வந்தசெய்யுள். இதின்மேற் பட்டனவெல்லாம் இரட்டை விருத்தமென்க.* *(3)*

**முன்னிரண்டாவியுமீறுமையும்மோனைமுன்னவற்றின்**
**பின்னிரண்டாவியுமேழுமெட்டும்மோனையாறுமைந்தும்**
**பன்னிரண்டாமுயிர்முன்னிரண்டும்மோனைபண்ணுந்தச்சப்**
**பின்னிரண்டாநஞமவ்வும்வவ்வும்மோனை பெண்ணணங்கே.**

*(இ-ள்.) முன்படையநின்ற அ ஆ என்னும் இரண்டுயிரும் ஔ என்னும் இறுதியுயிரும் ஐகாரவுயிருமாக இந்நான்குயிரும் வந்து தம்முளொன்றுக்கொன்று மோனை எனப்படும். முன்பு சொன்ன அ ஆ வின் பின்பு நின்ற இ ஈ என்னும் இரண்டுயிரும் ஏழாமுயிரும் எட்டாமுயிருமாகிய இந்நான்குயிருந் தம்முள் ஒன்றுக்கொன்று மோனை யெனப்படும். ஆறாமுயிரும் ஐந்தாமுயிரும் பன்னிரண்டாமுயிரின் முன்பு நின்ற இரண்டுயிரும் ஒன்றுக்கொன்று மோனை எனப்படும். தகாரமுஞ் சகாரமுந் தம்முள் மோனையாம். ஞகாரமும் நகாரமுந் தம்முண் மோனையாம். மகரமும் வகரமுந் தம்முண் மோனையாம்-எ-று. இஃதுதிவ்விடத்துச் சொல்லவேண்டிய தென்னையெனின், இருசீரான் வந்த குறளடியும் மூச்சீரான் வந்த சிந்தடியும் நாற்சீரான் வந்த அளவடியும் ஐஞ்சீரான் வந்த நெடிலடியும் ஐஞ்சீரின் மிக்குவந்த கழினெடிலடியுமாமாறு சொல்லிய பாதங்களில் ஒன்றையே சிறப்புடைத்தாக்குதற்கு முதலெழுத்துக்கள் மோனையுள்ள எழுத்தே முதலாகவுடைய சொற்களாலியற்றுக என்பதன் பொருட்டுச் சொன்னானென்பது. இவற்றுள் ஒற்றெழுத்து மோனையும் உயிரெழுத்துமோனையும், மரபும் பிழையாமல் வரவேண்டும் என்பது. அஃதாமாறு: தவ்வும் தாவும் தையும் தௌவும் சவ்வும் சாவும் சையும் சௌவும் என்னும் எட்டும் மயங்கும். நவ்வும் நாவும் நையும் நௌவும் ஞவ்வும் ஞாவும் ஞையும் ஞௌவும் மயங்கும். மவ்வும் மாவும் மையும்*

மௌவும் வவ்வும் வாவும் வையும் வௌவும் தம்முண்மயங்கும். பிறவுமன்ன. ஒற்றெழுத்துமோனை இல்லாதன வருமாறு: கவ்வும் காவும் கையும் கௌவும் தம்முண்மயங்கும். கிய்யும் கீயும் கெய்யுங் கேயுந் தம்முண்மயங்கும். குவ்வுங்கூவுங் கொவ்வுங் கோவுந் தம்முண்மயங்கும். பிறவுமன்ன வரலாறு:

கோமதனுக்கொல்க விற்கொண்டவீரன் குடந்தையன்னீர்
போமதனுக்கென் புகுந்ததென்றேற்குப் புருவ மென்னுங்
காமதனுக்குனித் தெய்யக்கருங்கண் சிவந்ததல்லாற்
றாமதனுக்கெதி ரோர்மறு மாற்றமுந் தந்திலரே.

இதனுட் கோவென்னும் எழுத்து முதலாகிய அடியுட் கொண்டவென்னுஞ் சொல்லுங் குடந்தை என்னுஞ் சொல்லும், போஎன்னுமெழுத்து முதலாகிய அடியுட் புகுந்த தென்னுஞ் சொல்லும் புருவமென்னுஞ் சொல்லும், காமதனுவென்னும் அடிக்குக் கருங்கணென்னுஞ் சொல்லுந், தாவென்னுமெழுத்து முதலாகிய அடியுட்தந்திலரென்னுஞ் சொல்லும் வந்தன.

மஞ்சின் மதிகூ டுடையான் மணஞ்செய்யப்
பஞ்சவனம்வாடை படைத்தருளும்-விஞ்சு
புகழா ரளகேசர் பூம்புகாரென்னு
நகராசை யொப்பவரார் நாட்டு.

இதனுள் மஞ்சினென்னுமடியுள் மதியென்றும் மணமென்றும், பஞ்சவனமென்னும் அடியுட் படைத்தென்றும், புகழா ரென்னுமடியுட் புகாரென்றும், நகராரென்னுமடியுள் நாட்டென்றும் வந்தன. பிறவுமன்ன. (4)

**ஏன்றாமுதலள வொத்திரண்டாமெழுத் தொன்றிவரிற்**
**சான்றாரதனை யெதுகையென்றோதுவர் தன்மைகுன்றா**
**மூன்றாவதொன்ற விரண்டடியொன்றன் முழுதுமொன்ற**
**லான்றாவினமுயி ராசிடையாய்வரு மாங்கதுவே.**

(இ-ள்.) அடிதோறும் முதலெழுத்தெல்லாந் தம்முளொத்த அளவினவாய் இரண்டாமெழுத்தொன்றிவரின் அஃது எதுகை யென்று சொல்லப்படும். எதுகை யெனினுந் தொடை யெனினுமொக்கும். அது மூன்றாமெழுத்தொன்றிவந்த எதுகையும் இரண்டடி எதுகையுஞ் சீர் முழுதுமொன்றிவந்த எதுகையும் வல்லினவெதுகையும் மெல்லினவெதுகையும் இடையின வெதுகையும் இரண்டாம் எழுத்தினேறின உயிரெழுத்தொத்தும்

ஒற்றொவ்வாதும் வந்த உயிரெதுகையும் ஆசிடையிட்ட எதுகையுமென்று விகற்பிக்கப்படும்- எ-று.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

இது முதலெழுத்துக்குறிலாய் இரண்டாமெழுத்தொன்றி வந்த எதுகை.

பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
றிகழரும் பீன்றது புன்னை.

மூன்றாமெழுத்தொன்றின எதுகை.

நிறையோத நீர்நின்று நீதவமே செய்யினும் வாழிநீலம்
மறைவரியோ வரிவையரி னெடுங்கணே ரொவ்வாய் வாழிநீலம்
கண்ணொவ்வா யெனினுங் களித்து நகுதிநீ வாழிநீலம்
வண்ண மிதுபோ மதுவுண்டார் சேரியையோ வாழிநீலம்.

இஃதிரண்டடி எதுகை.

வல்லளே போக மலர்மேலு மாட்டாதா
ளல்லளே சொல்லீ ரயலீர்காண்ஞ்-மெல்லலவன்
றோட்டுவரம் பூடாடுஞ் சோணாடு கைவிட்டு
வேட்டுவரம் பூடாடும் வெற்பு.

இஃது இருசீர்முழுதும் ஒன்றிவந்த எதுகை.

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

இது வல்லின எதுகை.

அன்பீனு மார்வ முடைமை யது வீனு
நண்பெனும் நாடாச் சிறப்பு.

இது மெல்லின எதுகை.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இஃதிடையின எதுகை.

மனைக்குப்பாழ் வாணுத லின்மை தான்சென்ற
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக் குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
நல்லறி வில்லாவுடம்பு.

இஃதிரண்டாமெழுத்தின் மேலேறின உயிரெழுத்தொத்தும் ஒற்றொவ்வாதும் வந்தவுயிரெதுகை.

பேய்மையாக்குமிப் பேதைமைக் கள்வனொ டுடனாய்க்
காமுற்றாமதன் பயத்தினிற் காமனைக்கடந்து
நாமரூஉம்புகழ் கொடுப்பதோர் நன்னெறி நண்ணும்
வாமன் வாய்மொழி மறந்திட்டு மறந்தொழிகின்றாம்.

இது யகர ஒற்றுவந்த ஆசிடை எதுகை.

மாக்கொடி மாணெயில் மவ்வற்பந் தருங்
கார்க்கொடி முல்லையுங் கவினு மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் புறவ ஞாழலுந்
தூக்கொடி கமழ்ந்துதான் றுறக்க மொக்குமே.

இது ரகர ஒற்றிடைவந்த ஆசிடை எதுகை.

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்-பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவுபலகொள ளீங்கு.

இது லகரவொற்றிடைவந்த ஆசெதுகை.

அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாட்கை-யந்தரத்து
வாழ்கின்றேமென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூலையே போன்று.

இது ழகர ஒற்றிடைவந்த ஆசிடையெதுகை.

யரலழ வென்னு மீரிரண்டொற்றும்
வரன்முறை பிழையாது வந்திடை யுயிர்ப்பி
னாசிடை யெதுகையென் றறிந்தனர் கொளலே

எனவரும். இவ்வொற்றுக்களை ஒழித்தவழியும் ஏனையெழுத்துக்கள் எதுகை வழுவாது நிற்குங்கால் இவை ஆசிடை எதுகையாம் என்க. பிறவுமன்ன. (5)

**பத்தியங்கத்திய மென்றிரண்டாஞ்செய்யுள் பத்தியமேல்**
**எத்தியபாதங்க ளால்வந்தியலு மெனமொழிந்த**
**கத்தியங்கட்டுரை செய்யுளின்போலி கலந்தவற்றோடு**
**ஒத்தியல்கின்றமை யாலொன்றுதாமு முரைத்தனரே.**

*(இ-ள்.) செய்யுளெல்லாம் பத்தியமென்றுங் கத்தியமென்றும் இரண்டு திறமாயடங்கும். அவற்றுட் பத்தியமாவது பாதங்களால் நடைபெறுவதெனக் கொள்க. கத்தியமாவது கட்டுரைப் போலியுஞ் செய்யுட் போலியுமென இரண்டு வகைப்படும். அவையாவன யானைத்தொழின் முதலாயினவெல்லாங் கட்டுரைப் போலி யென்பனவாம். ஒருபோகு முதலாயினவெல்லாஞ் செய்யுட்போலி என்பனவாம். ஒருசாரார் அவையிற்றையும் பாதத்தால் நடைபெற்றனவாக வழங்கிப் பெயர் வேறுபடுப்பர். அவர் சொல்லுமாறு: வெண்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் எனப் பாக்களை நான்கு வகைப்படுத்துத், தாழிசை துறை விருத்தம் என இனங்களை மூன்றாக்கி, இவ்வின மூன்றினுக்கும் பா நான்கினுக்கும் வெவ்வேறே உரிமையாக்கிப் பன்னிரண்டினமாக வகுத்து, வெண்டாழிசை - வெண்டுறை- வெளிவிருத்தம்- ஆசிரியத் தாழிசை-ஆசிரியத்துறை- ஆசிரியவிருத்தம்- கலித்தாழிசை- கலித்துறை- கலிவிருத்தம்- வஞ்சித்தாழிசை- வஞ்சித்துறை- வஞ்சிவிருத்தம் எனக்கூறுவர். இவையிற்றினும் பலவாகச் சொல்லுவாருமுளர் எனக்கொள்க. அவை வருமாறு:*

*(6)*

**ஒன்றுமிடைச்சீர் வருஞ்சீரொடுமுதற் சீர்கடெற்றும்**
**என்றுமளவடி யீற்றடியல்லன வீற்றடியும்**
**நன்றுமலர்காசு நாள்பிறப்பென்றிற்ற சிந்தடியே**
**துன்றுங்கடைச்சீர்புகாவென்பர்வெள்ளையிற்றூமொழியே.**

*வெண்பாவினுக்குப் பொது இலக்கணங் கூறுகின்றான். (இ-ள்.) வெண்பா என்னுஞ் செய்யுளின்கண் இடைச்சீர் வருஞ் சீரோடு ஒன்றிவரும்; முதற்சீர் வருஞ்சீரோடு தெற்றிவரும். ஈற்றடி அல்லாத அடியெல்லாம் அளவடியாலே வரும். ஈற்றடி மலர் காசு நாள் பிறப்பு என்னும் நான்குதாரணத்தின் ஒன்றிறுதியாய் வந்த சிந்தடியாய்வரும். கடைச்சீர் நான்கும் வெண்பாவிற் புகப்பெறாது- எ-று. வரலாறு:*

**வேலை முகடும் விசும்பகடுங் கைகலந்த**
**காலைநீயெங்கே கரந்தது கொல்–மாலைப்**
**பிறைக்கிறா கண்ணுதலே பெண்பாகா வையா**
**விறைக்கிறா வெங்கட் கிது.**

துன்றுங் கடைச்சீர் என்னும் அதிகவசனத்தால், தேமாபுளிமா- என்னும் இரண்டு முதற் சீருங் கருவிளங்கனி கூவிளங்கனி என்னுமிரண்டு கடைச் சீரும் ஒத்தாழிசைக் கலிப்பாவினுட் புகப்பெறாவெனவும், ஆசிரியப்பாவினுள்ளுங் கருவிளங்கனி கூவிளங்கனி என்னுமிரண்டு கடைச்சீரும் புகப்பெறாவெனவுங் கொள்க. இனி வெண்பாவைப் பலவாகக் கூறுபடுத்துவர். அஃதாமாறு: (7)

**வேண்டியவீரடி யாற்குறளாமிக்க மூவடியால்**
**தூண்டியசிந்தியல் நான்கடிநேரிசை தொக்கதனில்**
**நீண்டியபாதத்துப் பஃறொடையாமித னேரிசையே**
**நீண்டிசையாங்கலி நேரிசைபேதிக்கி லின்னிசையே.**

(இ-ள்.) ஈரடியால் வருவது குறள் வெண்பாவாம். மூவடியால் வருவது சிந்தியல் வெண்பாவாம். நான்கடியால் வருவது நேரிசை வெண்பாவாம். நான்கடியின் மிக்குவருவது பஃறொடை வெண்பாவாம். நேரிசை வெண்பாப் போன்று அதனினீண்டு வருவது கலிவெண்பாவாம் நேரிசைவெண்பா விகற்பிக்க இன்னிசை வெண்பாவாம்-எ-று. விகற்பமாவது, முதலடியிலே தனிச்சொற் பெற்று வேறொரு விகற்பமாய் வருவதுவும் இரண்டாமடி தனிச்சொற் பெற்று வேறொரு விகற்பமாய் வருவதும் மூன்றாமடி தனிச்சொற் பெற்று வேறொரு விகற்பமாய் வருவதுவுந் தனிச்சொலின்றி நான்கடியும் பலவிகற்பமாய் வருவதுவுந் தனிச்சொல்லின்றி நான்கடியு மொருவிகற்பமாய் வருவதுவும் இன்னிசையாம். வரலாறு:

*சாதலி னின்னாத தில்லை யினிததூஉ*
*மீத லியையாக் கடை.*

இது குறள் வெண்பா.

*அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய*
*நூலின்றிக் கோட்டி கொளல்.*

இது விகற்பக் குறள்வெண்பா.

நற்கொற்ற வாயினறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றம் வண்டார்ப்பப் புடைத்தாளே பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்.

இது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
லறநாட்டுப் பெண்டி ரடி.

இஃது இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

ஒன்றைந்தெட்டாக்கியசீர் ஒத்த எதுகையாய்
நின்றபதின் மூன்றொன்பா னேரொத்து-நன்றியலு
நீடுசீர் மூவைந்தா நேரிசைவெண்பாவென்பர்
நாடுசீர் நாப்புலவர் நன்கு.

இது நேரிசைவெண்பாவினுக்கிலக்கணமும் இலக்கியமுமாகக் கண்டு கொள்க.

வஞ்சியே னென்றவன்றன் ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்-வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.

இஃது ஒருவிகற்பநேரிசைவெண்பா.

ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பிலிடிமுரசி னூடுபோமொண்குருதி
கார்ப்பெயல் மொய்ம்பினிற் செங்குளக் கோட்டின்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாட
னாரத்த மரட்ட களத்து.

இது நான்கடியின் மிக்கு வந்தமையாற் பஃறொடை வெண்பாவாமெனக்கொள்க.

சுடர்த்தொடீ கேளாய் தெருவினாமாடு
மணற்சிற்றில் காலிற்சிதையா வடர்ச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ்சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா லில்லீரே
யுண்ணுநீர் வேட்டேன் னெனவந்தாற் கன்னை

யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றாள் எனயானுந்
தன்னையறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத்
தெருமந்திட் டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னையலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

இது நேரிசைவெண்பாவே போன்று அதனினீண்டு வந்தமையாற் கலிவெண்பாவெனக்கொள்க.

ஒன்றும் பலவும் விகற்பாகி நான்கடியாய்
நின்றதனிச் சொற்றாம் பெற்றும் பெறாதொழிந்துந்
தன்னிசைய நேரிசையில் வேறாய் வருமாகில்
இன்னிசை வெண்பாவாம் என்றார்.

இதனை இன்னிசை வெண்பாவிற்கு இலக்கணமும் இலக்கியமுமாய்க் கண்டுகொள்க.

ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படுங்
குன்றிய நீர்மையராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

இது தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

உறுபுனறந்துல கூட்டியறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற் செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலர்ந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பாலவை.

இஃதீற்றடி ஒழிந்து ஏனையடிகள் தனிச்சொற்பெற்றுவந்தது. பிறவுமன்ன.

இனி வெண்பாவை ஓசையூட்டுமாறு:

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

இதனைப்புளிமா-புளிமா- புளிமாங்காய்- தேமா- புளிமா-புளிமா- பிறப்பு என்றோசையூட்டுக.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

இதனைக் கூவிளம்- தேமா-புளிமா-கருவிளங்காய் - தேமா-புளிமா மலர் என்றோசை யூட்டுக.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

இதனைத் தேமா-கருவிளம்-தேமா- புளிமாங்காய்- தேமா-கருவிளம்-காசு என்றோசையூட்டுக.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

இதனைக் கூவிளம்-கூவிளம்-தேமா-கருவிளம்-கூவிளம்-கூவிளம்-நாள் என்றோசையூட்டுக. பிறவுமன்ன. காசு நாண் மலர் பிறப்பென்னும் உதாரணங்கள் வெண்பாவின் ஈற்றின்கணிறுத்தி ஓசையூட்டுதற் பொருட்டுச் சொன்னாரெனக்கொள்க. (8)

**ஈற்றயன்முச்சீர் வரினேரிசையா மிணைக்குறட்பா**
**ஏற்றகுறள்சிந் திடையேவருநிலை மண்டிலப்பாச்**
**சாற்றியதன்னே ரடியாலியலுந் தலைநடுவீறு**
**ஆற்றியபாதத் தகவலடிமறி மண்டிலமே.**

(இ-ள்.) எல்லாவடியும் நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் வருவது நேரிசை ஆசிரியப்பாவாம். ஈற்றடியும் முதலடியும் நாற்சீராய் இடை சிந்தடியுங் குறளடியுமாய் வருவது இணைக்குறள் ஆசிரியப்பாவாம். எல்லாவடியும் நாற்சீராய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாம். எல்லாவடியும் முதனடுவிறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பாவாம்-எ-று. அவைவருமாறு:

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேனி ழைக்கு நாடனொடு நட்பே.

இஃதீற்றயலடி முச்சீரான் வந்தமையான் நேரிசையாசிரியப்பா.

நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத்திருஞ்
சாரனாடன்கேண்மை சாரச்சாரச்சார்ந்து
தீரத்தீரத்திரும் பொல்லாதே.

இஃதிடையே சிந்துங் குறளும் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா.

கொங்கை யிணையெழில் கோர்கரும்பாக
அங்கையணியிதட் டாமரையாக
மணிநிறக் கண்ணிணை குவளையாக
வெண்ணிய நுண்ணிடை வல்லியாக
நண்ணியமுறுவன் முல்லையாக
வீறுமச்செவ்வாய் கொவ்வையாக
வையவிச்சிறடி தளிர்களாகச்
சிறியேமாகங் காய்ந்தவிம்மங்கை
தன்னைக்காத்துமென் றனக்கிரக்கமின்றி
ஓடரிக்கண்ணியை யொளித்தீராயினுங்
காட்டுமினென்று கைதொழுதிறைஞ்சினன்
வாட்டிறத்தடக்கை வத்தவர்கோவே.

இஃதெல்லா அடியும் நாற்சீரான் வந்தமையான் நிலைமண்டில ஆசிரியப்பாவெனக்கொள்க.

மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கண்ணிய லாரா னாவே
ஏறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யாம்வாழு மாறே.

இது நான்கடியுந் தலைதடுமாற உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வந்தமையால் அடிமறிமண்டில ஆசிரியப்பா.

இந்திரனேறக் களிறீந்தனரே
முந்திதழ்ப்பூவின் முடிசூடினரே
மந்திரக்கோடி மனத்தளித்தனரே
சுந்தரக்கோபுரச் சுருதிவாய்மையரே

இதுவுமது.

நெருங்குவளைப் பணைத்தோ ணிறனழிந்தனவே
பெருங்கண் பணியொடு படலொல்லாவே
இருங்கலியிரவே யிறப்பவும் பெரிதே
அரும்பவிழ்கோதைக் காற்றுதலரிதே.

இதுவுமது. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. இனி ஒரு சாரார் ஆசிரியப்பா நான்கினையும் மண்டிலமாக்கிப் பெயர் வேறுபடுப்பர். அவைவருமாறு:

முதுக்குறைந்தனளே முதுக்குறைந்தனளே
மலையி னொள்வேற் கண்ணி
முலையும் வாராமுதுக்குறைந்தனளே.

இது நேரிசைமண்டில ஆசிரியப்பா.

அறனலதுடைத்தே யறனல துடைத்தே
வளமலர்க்குரவும் வழையுமாவு
மிளவண்டார்க்கு மின்னிளவேனி
லின்பச் செவ்விக் கியைந்துங்காதலர்
அன்பிலர் துறத்த லறனல துடைத்தே.

இது நிலைமண்டில ஆசிரியப்பா. மிக்கசொல்லும் மிக்கபுகழும் மிக்கவோசையும் உடைத்தாகலான். நேரிசையென்பது காரணக்குறி. அனைத்தடியும் ஒத்துநின்றிவ்வாறே பொருள்படுதலால் நிலைமண்டிலம் என்பது காரணக்குறி. பிறவுமன்ன. (9)

**தரவொடுதாழிசை சுற்றுமராகமம் போதரங்கம்**
**உரவுடைநற்றனி வாரமென்றாங்கலி யோர்ந்ததனை**
**வரவிசைநேரிசை யம்போதரங்கம்பின் வண்ணகமே**
**விரவியகொச்சகம் வெண்கலியென்று விகற்பிப்பரே.**

(இ-ள்.) தரவுந் தாழிசையும் அராகமும் அம்போதரங்கமுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் என்னும் ஆறுறுப்புமுடையது கலிப்பாவெனக்கொள்க. இனியதனை நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா கொச்சகக்கலிப்பா வெண்கலிப்பா என விகற்பித்துக் கூறுவர்-எ-று.

அளவடியே முதலாக அனைத்தடியினானும்
அழகமர் நான்கடிமுதலா வெட்டடியினளவும்

வளமலியுஞ்சீரராக வுறுப் புவந்தாகும்
மன்னியவீரடியிரண்டு மோரடியானான்கும்
உளமலி சிந்தடியெட்டுங் குறளடி யீரெட்டும்
ஒருங்கியல்பேரெண் சிற்றெண் ணிடையெண்ணோ டளவெண்
தளமலியம் போதரங்க மெனும் பெயரானிலவுந்
தாழிசைக்கீ ரடிசிறுமை பெருமை நான்கடியே.

இதனால் அராக உறுப்பிற்கும் அம்போதரங்க உறுப்பிற்கும் தாழிசைக்கும் இலக்கணமறிக. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் உறுப்பாகிய தரவு அளவடியால் வரும். பிறபாவில் தரவிற்கு அடிவரையறை இல்லை. "தாழிசை தரவிசை தாமளவடியே" என்றாராகலின் அவ்விரண்டும் அளவடியால் வருமென்க. (10)

வண்ணகவொத்தாழிசைக்காறுறுப்பென்ப ரைந்துறுப்பு
நண்ணுவதம்போ தரங்கவொத்தாழிசை நான்குறுப்பாம்
எண்ணியநேரிசை யொத்தாழிசைதா னிறுதிசிந்தாய்த்
திண்ணியநேரடி யால்வரும்வெண்கலி தேமொழியே.

(இ-ள்.) தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச் சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்புமுடையது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. அராக உறுப்பைநீக்கி ஐந்துறுப்பாலும் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா. அராகமும் அம்போதரங்கமும் நீக்கி நான்குறுப்பாலும் வருவது நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா. ஈற்றடிமுச்சீராய் ஏனையடி நாற்சீராய் வருவது வெண்கலிப்பாவாம்- எ-று. வரலாறு:

பூமகனே முதலாகப் புகுந்தமர ரெண்டிசையும்
தூமலராலடிமலரைத் தொழுதிறந்து வினவியநாள்
காமமுங்கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டுரைக்குத் திறற்கருவியாய்க் கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமா றினிதுரைத்துச்
சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமாறருளினையே.

இஃது ஆறடித்தரவு.

தானமேமுதலாகத் தசைபார நிறைத்தருளி
ஊனமொன்றில்லாமை யொழிவின்றி
யியற்றினையே
எண்பத்தொன் பதுசித்தி யியல்பினா லுளவென்று

பண்பொத்த நுண்பொருளைப் பாரறியப்
பகர்ந்தனையே

துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
முப்பதின்மே லிரண்டுகலை முறைமையான்
மொழிந்தனையே

இவை இரண்டடி மூன்றுதாழிசை.

ஆதியுமிடையினோ டிறுதியுமறிகுவ
தமரருமுனிவரு மரிது நின்னிலைமையை
மீதியல் கருடனை விடவர வொடுபகை
விதிமுறை கெடவறம் வெளியுற வருளினை
தீதியல் புலியது பசிகெடு வகைநின
திருவுரு வருளிய திறமலி பெருமையை
போதியினலமலி திருநிழலதுநனி
பொலிவுறவடியவ ரிடர்கெடவருளினை.

இவை நாலடி அராகம்.

திசைமுகன் மருவிய கமலநன்னிறமென
வசையறுமுனிவொடு மலியுநின்னடி

உயர்வுறு பெருமையொ டயரறு மயர்வொடு
புரையறு நலனொடு பொலியுநின்புகழ்.

இவை ஈரடி இரண்டாய்வந்த பேரெண்.

கற்புடை மாரனைக் காய்சினந் தவிர்த்தனை.
பொற்புடை நாகர்தந் துயரம்போக்கினை.
மீனுருவாகி மெய்ம்மையிற் படிந்தனை.
மானுருவாகி வான்குண மியற்றினை.

இவை ஓரடி நான்காய்வந்த சிற்றெண்.

எண்ணிறந்த குணத்தோய் நீ
யாவர்க்கு மரியோய்நீ
உண்ணிறைந்த வருளோய்நீ.
உயர்பார நிறைத்தோய்நீ
மெய்ப்பொருளை யறிந்தோய்நீ
மெய்யறமிங் களித்தோய் நீ
செப்பரிய தவத்தோய் நீ
சேர்வார்க்குச் சார்வுநீ.

இவை முச்சீரினால்வந்த இடையெண்.

நன்மைநீஇ
தின்மைநீஇ
நனவுநீஇ
கனவுநீஇ
வன்மைநீஇ
மென்மைநீஇ
மதியுநீஇ
விதியுநீஇ
இம்மைநீஇ
மறுமைநீஇ
இரவுநீஇ
பகலுநீஇ
செம்மைநீஇ
கருமைநீஇ
சேர்வுநீஇ
சோர்வுநீஇ

இவை இருசீர் பதினாறாய்வந்த அளவெண். எனவாங்கு, தனிச்சொல்.

அகலிலாநின் றடியிணை பரவுதும்
வெல்படைத் தொண்டிமான் விறற்சேனாபதி
சிங்களத்தரையன் வெண்குடையதனொடு
பொங்குபுகழ் வில்லவன்றன் புறக்குடை கொண்டு
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே.

இது சுரிதகம். இது ஆறுறுப்பாலும் வந்தமையால் வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக
வுருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வான்
இவ்வுலகுங் கீழுலகுமிசையுலகு மிருணீங்க
எவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ் சுடரென்ன
விலங்குகதிரோரிரண்டு விலங்கிவலங் கொண்டுலவ
வலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்நீ.

இது தரவு.

மேருகிரி யிரண்டா மெனப்பணைத்த விருபுயங்கண்
மாரனிதையாவேட்டு மன்னுபுர மறுத்தனையே
வேண்டினர்க்கு வேண்டினவே யளிப்பனென மேலைநாள்
பூண்டவருளாளநின் புகழ்புதிதாய்க் காட்டாதோ.

உலகுமிக மனந்தளர்வுற் றுயர்நெறியோர் நெறியழுங்கப்
புலவுநசைப் பெருஞ்சினத்துப் புலிக்குடம்பு கொடுத்தனையே
பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவனீ என்பதற்கோர் மறுதலையாக் காட்டாதோ.

கழலடைந்த வுலகனைத்து மாயிரவாய்க் கடும்பாந்த
அழலடைந்த பணத்திடையிட் டன்று துலையேறினையே
மருள்பாரா வதமொன்றே வாழ்விக்கக் கருதிய நின்
னருள் பாரா வதமுயிர்க ளனைத்திற்கு மொன்றாமோ.

தாழிசை.

அருவினைசிலகெட வொருபெருநரகிடை
யெரிசுடர்மரைமல ரென விடுமடியினை
அகலிடமுழுவது மால்கெடவமிழ்துமிழ்
முகில்புரி யிமிழிசை நிகர்தரு மொழியினை

இது அராகம்.

அன்பென்கோ ஒப்புரவென் கோவொருவன் அயில்கொண்டு
முந்திவிழித் தெறியப்பால் போந்தமுழுக் கருணைய
நாணென்கோ நாகமென் கோநன்றில் லான்பூணுந்
தீயினைப்பாய்படுத்த சிறுதுயில்கொண் டருளினை

இவை ஈரடி இரண்டு அம்போதரங்கம்.

கைநாகத் தார்க்காழி கைகொண்டளித்தனையே
பைநாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே
இரந்தேற்ற படையரக்கர்க் கிழிகுருதி பொழிந்தனையே
பரந்தேற்ற மற்றவர்க்குப் படருநெறி மொழிந்தனையே.

இவை ஓரடி நான்கம்போதரங்கம். எனவாங்கு, தனிச்சொல்.

அருள் வீற்றிருந்த திருநிழற்போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதுந் தொழுதக
ஒருமனமெய்தி யிருவினைப் பிணிவிட
முப்பகை கடந்த நால்வகைப்பொருளுணர்ந்து
ஓங்குநீருலகிடையாவரு
நீங்காவின் பமொடு நீடுவாழ்கெனவே.

சுரிதகம். இஃது ஆறடித்தரவு வந்து அதன் பின் மூன்று தாழிசைவந்து அதன்பின் அராகம்வந்து அதன்பின் அம்போதரங்கம்வந்து அதன்பின் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா. இதனது வேறுபாடறிக.

மண்வாழும் பல்லுயிரும் வான்வாழு மிமையவரும்
கண்வாழு மானாகர் கிளையனைத்துங் களிகூர
அந்தரதுந்துமி யியங்க வமரர்க ணடமாட
இந்திரர்பூ மழைபொழிய விமையவர்சா மரையிரட்ட
முத்தநெடுங் குடைநிழற்கீழ் மூரியாசரியணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொருபெரியோய்.

இது தரவு.

எறும்புகடை யயன்முதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்யோகி
எவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்றா லிடரெய்தில்
அவ்வுடம்பி னுயிர்க் குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம்.

அறங்கூறு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழை முழக்கின்
றிறங்கூற வரைகதிருஞ் செழுக்கமல நனிநாண
ஒருமைக்கணீ ரென்பா னுரைவிரிப்ப வுணர் பொருளா
லருமைக்கண் மலைவின்றி யடைந்தது நின்றிருவார்த்தை.

இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுதலின்றளவு
மதுவொன்றும் மலரடிக்கீழ் வந்தடைந்தோ ரியாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணிய நின்றிருமேனி.

இவை மூன்றுந்தாழிசை.

ஆருயிர்க ளனைத்தினையுங் காப்பதற்கே யருள்பூண்டா
ஒருயிர்க்கேல் யுடம்பளித்தால் ஒப்புரவிங் கென்னாகும்.

தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம் முன்னர்க்
காமனையே முனைந்து;லைந்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்.

இது பேரெண்.

போரரக்க ரோரைவர்க்கறவமிழ்தம் பொழிந்தனையே
ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே
வார்சிறைப்புள் ளரையர்க்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே.

இதுசிற்றெண்.

அருளாழி பயந்தோய்நீஇ
அறவாழி பயந்தோய்நீஇ
மருளாழி துறந்தோய்நீஇ
மறையாழி புரிந்தோய்நீஇ
மாதவரின் மாதவனீஇ
வானவருள் வானவனீஇ
போதனரிற் போதனனீஇ
புண்ணியருட் புண்ணியனீஇ

இவை இடையெண்.

ஆதிநீஇ
அமலனீஇ
அயனுநீஇ
அரியுநீஇ
சோதிநீஇ
நாதனீஇ
துறைவனீஇ
இறைவனீஇ
அருளுநீஇ
பொருளுநீ
அறிவனீஇ
அநகனீஇ
தெருளுநீஇ
திருவுநீஇ
செறிவுநீஇ
செம்மனீஇ

இவை அளவெண். எனவாங்கு, தனிச்சொல்.

பவளச்செழுஞ்சுடர் மரகதப் பாசைடைப்
பசும்பொன்மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுது
மேதகு நந்தி புரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்புந்
திண்மையு முலகிற் சிறந்து வாழ்கெனவே.

சுரிதகம். இஃது ஆறடித்தரவு நான்கடித்தாழிசை ஒத்த பொருண்மெல் மூன்றும் வந்து அளவடி ஈரடியிரண்டும் ஒரடிநான்குஞ் சிந்தடி எட்டுங் குறளடி பதினாறுமாய் அம்போதரங்கம்பெற்று ஆறடி ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ

இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே

சேணுடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவா
னாணுடைய நலந்தொலைய நடப்பரோ நயமிலரே

சிலம்படைந்த வெங்கானஞ் செறுத்தகைய வென்பவாற்
புலம்படைந்து நலந்தொலையப் போவரோ பொருளிலரே.

இது தாழிசை. எனவாங்கு, தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரோடுந் தானையிற்பொலிந்தே.

இது சுரிதகம். தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்று மிரண்டடியாய்த் தனிச்சொற் பெற்று மூன்றடி ஆசிரியச்சுரிதகத்தால் இற்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. தரவு எனினும் எருத்த மெனினுமொக்கும். தாழிசை எனினும் எண்ணெனினும் இடைநிலைப் பாட்டெனினு மொக்கும். அராகமெனினும் அடுக்கியலெனினும் முடுகியலெனினும் வண்ணகமெனினு மொக்கும். அம்போதரங்கமெனினும்

அசையடி யெனினும் பிரிந்திசைக் குறளடியெனினுஞ் சொற்சீரடி யெனினும் எண்ணெனினுமொக்கும். தனிச்சொல்லெனினும் இடைநிலை யெனினுமொக்கும். சுரிதக மெனினும் அடக்கியலெனினும் வாரமெனினும் வைப்பெனினும் போக்கியலெனினுமொக்கும். இனி வெண்கலிப்பா வருமாறு:

ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்துமவென்
றார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்நிறை கொடியிடை சிறந்து.

இஃது ஈற்றடி மூச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்தமையான் வெண்கலிப்பா. (11)

நிலவுந்தரவுந் தரவிணையும்நின்ற தாழிசைகள்
சிலவும்பலவுஞ் சிறந்துமயங்கியுஞ் சீர்விகற்பம்
பலவும்வரினும் பவளமுஞ்சேலும பனிமுல்லையுங்
குலவுந்திருமுகத்தாய்கொண்டவான்பெயர்கொச்சகமே.

(இ-ள்.) தரவு ஒன்றாய் வருவது தரவு கொச்சகக் கலிப்பாவாம். தரவிரண்டாய் வருவதுதரவிணைக் கொச்சகக் கலிப்பாவாம். சிலதாழிசையாய் வருவது சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாம். பலதாழிசையாய் வருவது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாம். ஆறுறுப்புந்தம்முண் மயங்கியும் மிக்குங் குறைந்தும் பிறபாக்களோடு விரவியும் வருவது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாம்- எ-று வரலாறு:

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போ
எல்லைநீர் வியங்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்ல லோங்கெழிலியானைமருமம்பாய்ந்தொளித்ததே.

இது சுரிதகம் இல்லாத தரவுகொச்சகக்கலிப்பா.

குடைநிழலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடைநிலைப் பெருந்தொழுவிற் றகைபெறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு

ஆனொடு புல்லிப் பெரும்புதர் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்றவாறே.

இது தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தாலிற்ற தரவு கொச்சகக்கலிப்பா.

திருந்திலைய விலங்கு வேற்றிகழ் தண்டார்க் கதக்கண்ணன்
விரிந்திலங்கு மவிர்பைம்பூண் தடமார்பன் வியன் களத்து
முருந்திறைஞ்சு முத்திற்கு முட்டியெல்லாந் தனித்தனியே
அருந்திறன்மா மறமன்னர்க் கழுவனவும் போன்றனவே.

அடலழுங் கழற்செவ்வேலலங்குதார்ச் செம்பியன்றன்
கெடலருங் கிளர் வேங்கை யெழுதத்த முயிரோம்பா
துடல்சமத்துக் குத்தெரிந்த வொன்னாப்பல் லரசர்தங்
கடகஞ்சேர் திரண்முன்கை யிற்றோட வைகினவே.

இவையும் முன்னதனோடொக்கும். இவையிற்றைக் கலிவிருத்த மென்றாலு மிழுக்காது.

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங்காவலனாங்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந்
தொடர்புண்டாங்கு
இணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர்
மாறென்று
புனைமலர்த் தடங்கண்ணார் பொருளாகக்கருதாரோ.

அதனாற்,

செவ்வாய்ப்பேதை யிவடிறத்
தெவ்வா றாங்கொலிஃதெண்ணியவாறே.

இது சுரிதகத்தாலிற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே.

தரவு ஆங்கொருசார்.

உச்சியார்க்கிறைவனா யுலகெலாங்காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாய்ப் பாவித்தார்
வச்சிரங்காணாத காரணத்தான் மயங்கினரே
ஆங்கொருசார்,
அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பணிதவிர்ந்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற்சமழ்த்தனரே.

ஆங்கொருசார்,
மால்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே;

இது தாழிசை. அஃதான்று,

கொடித் தேரண்ணல் கொற்கைக்கோமான்
ஈன்ற புகழொருவன் செம்பூட்சேஎ
யென்றுநனியறிந்தனர்பலரே
தானும், ஐவருளொருவ னென் றறியலாகா
மைவரையானை மடங்காவென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

இதுசுரிதகம். இதுநான்கடித் தரவும் மூவடித்தாழிசை மூன்றும் இடையிடை தனிச்சொற்பெற்று நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் சிறிது வேறுபட்டு வந்தமையாற் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

தண்மதியொண் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்கு
உண்மதியு முடனிறைவு முடன்றளர முன்னாட்டக்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்த
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

இது தரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப்பிரிவாயேல்
தளநலமுகை வெண்பற் றாழ்குழ றளர்வாளோ.

தகைநல மிவள்வாடத்தரும் பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.

அணிநல மிவள்வாட அரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசொடு மடிவாளோ.

நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியே மென்றளித்த வுயர் மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியநாள்.
அன்றளித்த வருண்மொழியா லருளுவதும் பழுதாமோ.

சிலபகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பலபகலுந் தலையழித்த பணிமொழியும் பழுதாமோ.

இவை ஆறுந் தாழிசை. அஃதான்று, தனிச்சொல்.

அரும்பெற லமிழ்தினுந் தரும்பொருளதனினும்
பெரும்பெறலரிதிவள் வெறுக்கையுமற்றே.
அதனால்,

விழுமிய தறிமதி யறிவாங்
கழுமிய காதலிற் றரும்பொருள்சிறிதே.

இது நான்கடித் தரவும் இரண்டடித் தாழிசை ஆறும் தனிச்செல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்றுவந்த பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்று
அணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிரந் தவையன்ன நொய்பறைய சிறையன்னம்
இரைநயந் திறைகூரு மேமஞ்சார் துறைவகேள்.

வரையென மழையென மஞ்செனத் திரள் பொங்கிக்
கரையெனக் கடலெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலாது
தெழுமுந்நீர் பரந்தோடு மேமஞ்சார் துறைவகேள்.

இவை இரண்டுந் தரவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக் கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறு புறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் திரியலனே யென்றியால்.

நீர்பூத்த நிரையிதட்க ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.

கனைவரல்யாற் றிருகரைபோற் கைநில்லா கண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்.

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்.

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்;

இவை ஆறுந் தாழிசை. அதனால், தனிச்சொல்.

அடும்பயி லிறும்பிடை நெடும்பனை மிசை தொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரகுடை நிரைபடை விரைசெறி முரசென்
றுரைதரு திரையொடு கரைபொருங்கடல்;

அலங்கொளி யவிர்சுட ரிலங்கெழின் மனைதொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.

ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய் மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமுநிறுப்பாயோ.

மறவாத வன்பினேன் மனநிற்கு மாறருளாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறருளாய்.

காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.

*இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்*
*துணைபிரிந்த தமருடையேன் றுயர் தீரு மாறுரையாய்.*

*இவை ஆறுந் தாழிசை.*

*பகைபோன்றது துறை*
*பரிவாயின குறி*
*நகைஇழந்தது முகம்*
*நனிநாணிற் றுடம்பு*
*தகையிழந்தது தோள்*
*தலைசிறந்தது துயர்*
*புகைபரந்தது மெய்*
*பொறையாயிற் றென்னுயிர்*

*இவை இருசீர் எட்டு அம்போதரங்கம்- எனவாங்கு, தனிச்சொல்.*

*இனையது நிலையா லனையது பொழுதா*
*நினையல் வாழி தோழி தொலையாப்*
*பனியொடு கழிக வுன்கண்*
*என்னொடுங் கழிகவித் துன்னிய நோயே.*

*இது சுரிதகம். தரவு இரட்டித்துத் தாழிசையாறுந் தனிச்சொல்லும் நான்கீரடி அராகமும் பெயர்த்தும் அறுதாழிசையும் எட்டு அம்போதரங்க உறுப்புந் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்றுக் கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் வந்து மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் மயங்கியும் வந்தமையான் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.* *(12)*

**சிந்துங்குறளு மடியென்பர்வஞ்சிக்குச் சீர்தனிச்சொல்**
**வந்தஞ்சுரிதக மாசிரியத்தான் மருவும்வெள்ளை**
**முந்தியிறுதி யகவலதாகி முடியுமென்றா**
**லிந்துநுதன்மடவாய் மருட்பாவென் றியம்புவரே.**

*(இ-ள்.) வஞ்சிப்பா இருசீரடியானும் முச்சீரடியானும் வரும். இப்படி இருசீரடியானும் முச்சீரடியானும் வந்தபின்பு தனிச்சொற் பெற்று அதன்பின் ஒரு சுரிதகம்பெற்று முடியுமெனக்கொள்க. சீர் தனிச்சொல்லென்று சிறப்பித்த அதனால் வெள்ளைச் சுரிதகத்தா லிறாதெனக் கொள்க. வெண்பாமுதலாக ஆசிரியத்தாலிறுவது மருட்பா-எ-று. அதனைப் புறநிலை வாழ்த்து மருட்பா என்றுங் கைக்கிளை மருட்பா*

என்றும் வாயுறைவாழ்த்து மருட்பா என்றுஞ் செவியறிவுறூஉ மருட்பா என்றும் வேறுபடுப்பாருமுளரெனக்கொள்க. வரலாறு:

மிக்ககூன் விதிமுறை வகுத்தலுந்
தக்காசிடை வகையுளி சேர்த்தலு
மளபெடை யலகுநீத்தலும்
வளமலி யசைச்சீர் வகுத்தலும்
வெண்பா வல்லாப் பாவினுட்
பண்பார் நெடிலடி நடத்தலுங்
குறளடி யால்வரும் வஞ்சியைத்
திறமலி சிந்தடி யாக்கலு
மிக்குங் குறைந்தும் வரினு
மொருபுடை யொப்புமை நோக்கி
யொழிந்த செய்யுளுங் கொளலே
அதான்று, குறியீடு மிலக்கண முண்மையிற்
செறிவுடைப் பொதுச்சீர் தரப்பெறாவே.

இது முச்சீரடி வஞ்சிப்பாட்டு.

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக் கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவு
நாளு, மகிழ மகிழ்தூங்கு ஊரன்
புகழ்தலானாப் பெருவண்மையனே.

இஃது இருசீர் வஞ்சிப்பாட்டு. மிக்க கூன் விதிமுறை வகுத்தல் என்னுமுரைச் சூத்திரத்துக்குப் பொருள். கூனாவது பொருளோடடி முதற்கே நிற்பதுவும் இடையிலே நிற்பதுவும் வஞ்சியின் கடையிலே நிற்பதுவுமாம். வஞ்சி அடியினிறுதியும் நடுவுங் கூனாய்வருவது சிறப்புடைத்து. சீர் கூனாய் வரினும் உகரவிறுதியாய் வரப்பெறும். கூனைத் தனிச்சொல் என்பாருமுளர்.

உதுக்காண், சுரந்தானா வண்கைச் சுவர்ணமாப்பூதி
பரந்தானாப் பல்புகழ்பாடி யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருள் நீங்க
மின்னு மெளிதோ மழை;

அவரே,
கேடில் விழுப்பொரு டருமார்பாசிலை
வாடாவள்ளியங் காடிறந்தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழவேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந்திசினே
யன்னளளிய ளென்னாது மாமழை
மின்னும் பெய்யுமுழங்கு
மின்னுந்தோழியெ னின்னுயிர் குறித்தே

இஃது அடியிற் கூன்வந்த ஆசிரியம். உமணர்,

சேர்ந்துகழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம்பெருங்காடு
இன்னா வென்றினி ராயின்
இனிய வோபெரும தமியேற்குமனையே.

இதுவும் அடியிற் கூன்வந்த ஆசிரியம். உலகினுட்,

பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாரே பிறழினு
மிருந்தகைய விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பென்னும் பிறழ்வின்றி
யுறு தகைய வுலகிற்கோ ரொப்பாகித் தோன்றாதே.

எனக் கலியடி முதற் கண்ணே- யுலகினுளென்னுங் கூன்வந்தவாறு. காமர் கடும்புனலென்னுங் கலியினுட் சிறுகுடியீரே என ஓரடியாலே தனிச் சொல் வந்தவாறு.

உலகே,
முற்கொடுத்தார் பிற்கொளவும் பிற்கொடுத்தார் முற்கொளவு
முறுதிவழி யொழுகு மென்பவதனானற்றிற நாடுதனன்மை
பற்றியயாவையும் பிரிவறத்துறந்தே.

இவ் வஞ்சிப்பா அடிமுதற்கண் ணுலகே யெனத் தனிச்சொல்வந்தவாறு. மாவழங்கலின் மயங்குற்றனவழி என வஞ்சியடியின் இறுதிக்கண் வரியென அசைகூனாய் வந்தவாறு. கலங்கழாலித் துறை கலக்குற்றன என்னும் வஞ்சியடியினடு துறையென அசைகூனாய் வந்தவாறு.

தேரோடத்துகள் கெழுமின தெருவு என்னும் வஞ்சியடியி னிறுதிக்கட் தெருவு என்ற இறுதியாகிய இயற்சீர் கூனாய் வந்தவாறு. தக்காசிடைவகையுளி சேர்த்தலும் என்பதனால்

அயற்சீர் தளைகளை நோக்கி ஞ ஓசையூட்டுக. வகையுளியாவது முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகணிற்புழி அறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுப்பது. என்னை-

அருணோக்கு நீரா ரசைசீ ரடிக்கட்
பொருணோக்கா தோசையே நோக்கி-மருணீங்கக்
கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு.

வரலாறு:

கடியார்பூங் கோதை கடாயினான் றிண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து.

இதனுட் கடியார் என்றும் பூங்கோதை என்றுங் கடாயினான் என்றும் அலகிட "ஒன்றும் இடைச்சீர் வருஞ்சீரொடு முதற்சீர்கெடெற்றும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாறுபட்டு வெண்பாத்தன்மை கெடுமாதலாற், கடியார்பூவென்று புளிமாங்கா யாகவுங் கோதையென்று தேமாவாகவுங் கடாயினான் என்று கருவிளமாகவும் அலகிடச் சிதையாதாம்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

இதனுள் நீடு என்றும் வாழ்வாரென்றும் "அலகிடில், ஒன்றும் இடைச்சீர் வருஞ்சீரொடு முதற் சீர்கெடெற்றும்" என்னுஞ் சூத்திரத்துள் நன்று மலர் காசு நாள் பிறப்பு என்றிற்ற சிந்தடியே துன்றுமென்பதனோடு மாறுபடு மாதலால் நிலமிசை என்று கருவிளமாகவும் நீடுவாழ் என்று கூவிளமாகவும் வார் என்று நாளாகவும் அலகிடுக. அளபெடை நீத்தலும் என்பதனால் அலகுபெறாதே வருமாறு:

இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து- கடைகடையி
னுப்போஒ வென வுரைத்து மீள்வா ளொளி முறுவற்
கொப்போநீர் வேலி யுலகு.

உப்போஒ என்புழி அளபெடை அனுகரணம் வந்தது. அன்றேல் இடைச்சீர் தெற்றி ஒன்றுமிடைச்சீர் என்னுஞ் சூத்திரத்து ஒன்றும் என்னும் இலக்கணத்தோடு மாறுபடும். ஆதலான் மிக்ககூன்

விதிமுறை வகுத்தலென்னுஞ் சூத்திரத்து அளபெடை நீத்தலும் என்றபடி நீக்கச்சிதையாதாம்.

> பல்லுக்குத்தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
> சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றினவா—நெல்லுக்கு
> நூறோஒநூ றென்பாணுடங்கிடைக்கு மென்முலைக்கு
> மாறோமா லன்றளந்த மண்.

இதனுள் நூறோஒ நூறென்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடைவந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருக என்னும் இலக்கணம் இன்மையால் அளபெடை அனுகரணமாம். (13)

> **பாமுதனிற்பது கூன்வஞ்சியீற்றினும் பாதத்துள்ளும்**
> **ஆமிரண்டொத்து நிகழடிவெண்செந் துறையிழுகிப்**
> **போமிசைச்செந்துறை சந்தஞ்சிதைகுறள் பூண்பலசீர்**
> **தாமதுவந்தங் குறைநவுமாங்குறட் டாழிசையே.**

(இ-ள்.) பொருளோடு அடிக்கு முதலில் நிற்பது கூனாம். அக்கூன் வஞ்சிப்பாவில் அடி இறுதி நடுவிலும் வரும். இரண்டடி தம்முளொத்து வருவது வெண்செந்துறை எனப்படும். செந்துறை இழிந்து ஒழுகிய ஓசையின்றி வருவதுவும் உதாரண வாய்பாட்டால் ஒரு குறள் வெண்பா ஓசைகெட்டு வருவதுவுஞ் சீர்பலவாய் இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வருவனவுங் குறட்டாழிசையாம்- எ-று. குறைநவும் என்றமையால் இவ்வோசையினிற் குன்றி வருதலே அன்றியும் அழிந்தழிந்து தனித்தனியும் வரப்பெறும் எனக் கொள்க. அதுவென்ற அதிக வசனத்தால் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமின்றிச் செந்துறை சிதைந்தது தாழிசைக் குறளாம். வரலாறு:

> ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம்
> ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

இஃது இரண்டடியும் ஒத்து வந்தமையல் வெண்செந்துறை.

> அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
> மறுவறு பத்தினி போல்கையினிரே.

இது செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள். விழுமியபொருளும் ஒழுகியவோசையும் இல்லாமையாலென்க.

வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.

இது சந்தழி குறட்டாழிசை.

போதிநிழலிற் புனிதன் பொலங்கழல்
ஆதி யுலகிற் காண்.

இது ஈற்றடி குறைந்து தனியேவந்த குறட்டாழிசை. பிறவுமன்ன.
(14)

நான்கொடுமூன்றடிதோறுந்தனிச்சொல்லுநண்ணுமெனிற்
றான்பெயர்வெள்ளைவிருத்தமுப்பாதந்தழுவிவெள்ளை
போன்றிறும்வெண்டாழிசைமூன்றிழிவேழடிபொருந்தி
யான்றவந்தங்குறையின்வெண்டுறையென்பராயிழையே.

(இ-ள்.) வெளி விருத்தமாவது மூன்றடியானும் நான்கடியானும் வந்து அடிதோறும் முடிவிடத்துத் தனிச்சொற்பெற்று முடிவதாம். சிந்தியல்வெண்பா ஓசைகெடில் வெண்டாழிசையாம். நேரிசை வெண்பா ஓசைகெடில் வெண்டுறையாம். அல்லாமலும் மூன்றடிச் சிறுமை ஏழடிப்பெருமையாய்ப் பின்பிற் சில அடி சீர்குறைந்து வருவனவும் வெண்டாழிசை எனக்கொள்க-எ-று. வரலாறு:

கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா
லென்செய் கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா
லென்செய் கோயான்
எண்டிசையுந் தோகை யிசைந்தகவி யேங்கினவா
லென்செய் கோயான்

எனவும்,

மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமா
லென்செய் கோயான்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமால்
என்செய் கோயான்
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக் கண்டிலமா
லென்செய் கோயான்

எனவும் இவை மூன்றடியாய் என்செய்கோயான் எனுந் தனிச்சொற் பெற்று வந்த வெளிவிருத்தம்.

கல்லார்நாவிற் கட்டுரைகொள்வார் புகழெய்தார்
புல்லார்வாயிற் சொற்றெளிவுற்றார் புகழெய்தார்
நல்லார் மேவு நண்புதுறந்தார் புழெய்தார்
இல்லா ராய்நின் றின்ப முவந்தார் புகழெய்தார்.

இது நான்கடியாய்ப் புகழெய்தாரென்னுந் தனிச்சொற் பெற்றுவந்த வெளிவிருத்தம். இனி வெண்டாழிசை வருமாறு:

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்.

இது சிந்தியல் வெண்பாச் சிதைந்து தனியேவந்தது.

அன்னா யறங்கொ ளலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல்.

ஏடீயறங்கொ ளலங்கிளர் சேட்சென்னி
கூடாருடை புறம் போல நலங்கவர்ந்து
வீடான் துறந்து விடல்.

பாவா யறங்கொ ளலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங் கவர்ந்து
காவான் றுறந்து விடல்.

இவை ஒரு பொருண்மேன் மூன்று அடுக்கி வந்தன.

குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு நீர்மணன்மே னின்று-புலாலுணங்கல்
கொள்ளும்புட்காக்கன்ற கோவின்மை யோநீபிறர்
உள்ளம் புக்காப்ப துரை.

இது நேரிசைவெண்பாச் சிதைந்துவந்த வெண்டுறை.

இலைசூழ் செங்காந்த ளெரிவாய் முகையவிழ்த்த வீர்ந்தண்வாடை
கொலைவே னெடுங்கட் கொடிச்சி கதுப்புளரும் குன்றநாட
வுலைவுடை நோயொ டுழக்குமா லந்தோ
முலையிடை நோபவர் நேருமிடமே.

குழலிசைய வண்டினங்கள் சோளிலைய செங்காந்தட் குலை மேற்பாய
வழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல் வாழ்மந்தி
கலுழ்வனபோ னெஞ்சகைந்து கல்லருவி தூஉ
நிழல் வரை நன்னாட னீப்பனோ வல்லன்.

இவை நான்கடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டுசீர் குறைந்த ஓரொலி வெண்டுறை.

ஓதநெடுங் கடல்வலையத் துயிரனைத்து முயக்கொள்வா னுயர்ந்த கொள்கைப்
போதிநிழ லமர்ந்தருளும் புண்ணியநற் றண்ணளியும் பிறிதாம் போலும்
சூதவனங் குயில்கோதச் சுரும்புபரந் திசைபாட
மாதவியுங் கொடிநுடங்க மாருதமு மூடுலவுந்
தாதுபொழிந் தனகுரவுந் தண்ணிளவே னிலும்புகுந்த
வேதிலராகியவன்ப ரின்னருளு மிதுவாயின்.

இஃது ஆறடியாய் ஈற்றடி நான்குங் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னாம்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும் பிலிற்றியாங்கே.

இது மூன்றடியான்வந்த ஓரொலி வெண்டுறை.

வெறியுறு கமழ் கண்ணி வேந்தர்கட் காயினு
முறவுற வரும் வழியுரைப்பன வுரைப்பன்மற்
செறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லன சொல்லன்மின்
பிறபிற நிகழ்வனபின்.

இது ஐந்தடியாய் ஈற்றடி ஒருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலக மேவல்செய முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கிநின் றாரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்து
அலங்கனன் மாலை யவிழ்ந்தாட வாடுமிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்
விலங்கியுள் ளந்தபவிளிந்து வேறாபவே.

இஃது ஏழடியாய் ஈற்றடி இரண்டு சீர் குறைந்து வந்த வேற்றொலி வெண்டுறை. பிறவுமன்ன. முதலடி ஒழித்தெல்லாம் ஈற்றடி எனப்படும். இவ்வினம் எல்லாவற்றுள்ளும் மூன்றடியால் வரும் விருத்தமுந் துறையுந் தாழிசையுஞ் சிந்தியல் வெண்பாவின் இனமென்றும் நான்கடி விருத்தந் தனிச்சொல் லுடைத்தாயின் நேரிசைவெண்பாவின் இனமென்றும் நான்கடியால் வருந்துறை

இன்னிசை வெண்பாவின் இனமென்றும் மிக்குவந்தன பஃறொடை வெண்பாவின் இனமென்றும் வழங்குவாருமுளர். (15)

**மூன்றடியொப்பன தாழிசைநான்காய்க் கடையயற்கண்**
**ஏன்றடிநைந்து மிடைமடக்காயு மிடையிடையே**
**தோன்றடிகுன்றியு மாகுந்துறைதொல் கழிநெடிலா**
**யான்றடிநான்கொத் திடிலாசிரிய விருத்தமன்றே.**

(இ-ள்.) மூன்றடியாய்த் தம்முள் அளவொத்துவரின் ஆசிரியத்தாழிசையாம். அவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கியுந் தனியும் வரும். நான்கடியாய் ஈற்றயல் குறைந்து வருவதுவும் இடைமடக்காய் வருவதுவும் இடைகுறைந்து வருவதுவும் என இவை ஆசிரியத்துறையாம். உம்மையால் இடையடி இரண்டு மிக்கு வருவதுவும் இடையிடை இரண்டு குறைந்து வருவதுவும் முதலடி குறைந்து வருவதுவுங் கழிநெடிலடியாய் வருவதுவும் பலவிகற்பத்தான் வருவதுவுங் கொள்க. கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்துவருவன ஆசிரியவிருத்தமாம்- எ-று. வரலாறு:

வாரமலிபுன்னை மலிசினைமேலிருந்து
நாரை நரலு நயமில் சிறுமாலை
ஓர வருங்கொ லிவ்வூரே யன்னாய்.

பொன்னுதிர் புன்னை பொழிசினை மேலிருந்து
அன்னந்திளைக்கு மருளில்சிறுமாலை
இன்னும் வருங்கொ லிவ்வூரே யன்னாய்.

மன்றணி புன்னை மறிமடன்மேலிருந்து
அன்றி றிளைக்கு மருளில் சிறுமாலை
இன்றுவருங்கொலிவ்வூரே யன்னாய்.

இவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

போதி மேவினை புன்மை யகற்றினை
சோதிவானவர் தொழவெழுந் தருளினை
யாதிநாதநின் அடியிணை பரவுதும்.

இது தனியேவந்தது.

இரங்கு குயின்முழவா வின்னிசை யாழ்தேனா
அரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்

அரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொல் மணந்தகன்றார் நெஞ்ச மென்செய்
திளவேனில்.

இஃது இடை குறைந்து இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

கரைபொரு கான்யாற்றங் கல்அதர் எம்முள்ளி
வருவீராயின்
அரையிருள்யா மத்தடுபுலி ஏறும் அஞ்சி அகன்று போக
நரையுரு மேறு நும்கைவேல் அஞ்சும் நும்மை
வரையர மங்கையர் வவ்வுதல் அக்சுதம் வாரலையே

இஃது ஈற்றயல் அடி குறைந்து வந்த ஆசிரியத்துறை.

கோவித்த மன்னர் குலங்கள் நலம்கெட
வேவித் தகைச்சிலை தொட்ட
மாவித் தகனே மணிமுடி யாயெனைக்
கூவித்த காரணம் கூறே.

இஃது இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை.

மேரு நெடுவரை மீது பொருபுலி
சேரவெழுதிய சோழன்
ஆரமலரணியாளிய னுபமன்
வீர னடுகணை யானே.

இது அளவடியுஞ் சிந்தடியும் உறழ்ந்துவந்த ஆசிரியத்துறை.

பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கழலொருபாற் றேன்றுளி
நீடுகுழ லொருபா னீண்ட சடையொருபால்
வீடியமா னதளொருபான் மேகலைசேர்ந்
தாடு துகிலொருபா லவ்வுரு வாண்பெண்ணென் றறிவார் யாரே.

இஃது இடையிடைகுறைந்து வந்தது.

வரிகொளரவு மதியும்
புரிவுள சடையும்
புரிவுள சடைமேற்புனலும் பிறழுமே.

இதுவும் அவ்வாறே குறைந்து இடையடி மடக்கி வந்தது.

விண்ட முல்லை தாதுதிர்ந்த மீதெலாங்
கொண்டல் பூச்சொரிந் திருண்ட கொன்றை பொன் பொழிந்தவாற்

தெண்டையின் றடங்கண் மாதர் கேள்வர் சொன்னகாலமால்
வண்டுபாட மஞ்ஞையாட வந்ததே.

எனவும்,

மிக்கவுத்தரா பதிக்கு மேவினார்
தொக்க செஞ்சடைப்பரன் றனக்கோர்தூ சளித்தவாய்
மைக்கொள் சோலை சூழநீதி மன்னர் கூடி வாரணம்
புக்கவாசவர்க் கிருக்கை நல்கினார்.

இவை இரண்டும் இடையடிநீண்டு வந்தன. பிறவுமன்ன.

நுங்களையே உறவாக வனம்புகுந்தான் காதலிகா
ணுமக்குந் தாயே
னெங்களையே சரணாக விருநீரல் லாலிங்கோ
ருற்றாரில்லை
தங்களையா னிப்பொழுதே சாரேனே லென்மக்க
ளரியார்கண்டீர்
பொங்குளைமான் றேரிரவி போவதன்முன் யானணையப்
போவன்வாழி.

இது கழிநெடில் நான்கொத்து வந்தமையால் ஆசிரியவிருத்தம். இனி ஒருசாரார் ஆசிரியவிருத்தத்தினை மண்டில விருத்தமென்று கூறுவர். வரலாறு:

புரவுதரு குடியாகிப் புயல்வண்ணன் விரும்பியதுஉம்
பொழில்சூழ் காஞ்சி
கரியசுடர் வீதிதொறு முலாப் போந்து கவர்வதூஉங்
கலைசூழ் காஞ்சி
நிரைவளையிவ் வுலகுய்ய நின்றுதவஞ் செய்வதூஉ
நிழல்சூழ் காஞ்சி
சுரமகளிர் பாடுவதும் பயில்வதூஉஞ் சொன்மாலை
தொடுத்த காஞ்சி.

இஃது ஆசிரிய மண்டில விருத்தம். இதனோடு வெளிவிருத்தத்திற்கு வேறுபாடியாதோ எனின் வெளிவிருத்தம் அளவு அடியான் வரும். இது வேற்றுமை.

அன்றயனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்திகிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கணற மேவுவது மத்திகிரியே

வென்றவன் வணக்குவது மேலில கெயிற்றரிய தானவரையே
தன்றொழின் முருக்குவது தாளில கெயிற்றரிய *தானவரையே.

இதுவுமது.

துனைவருநீர் துடைப்பவராய்த் துவ்ள்கின்றேன்
றுணைவிழிசேர் துயிலைநீக்கி
யினவளைபோ லிளநலஞ்சேர்ந் திடருழப்ப
விகந்தவர்நாட் டில்லை போலுந்
தனியவர்க டளர்வெய்தத் தடங்கமலந்தளை யவிழ்க்குந்
தருணவேனிற்
பனிமலரின் பசுந்தாது பைம்பொழிலிற் பரப்பிவரும்
பருவத் தென்றல்.

இது ஆசிரிய நிலைவிருத்தம். இவ்வினம் அனைத்தினையும் ஓரடிகுறைந்து வந்த துறை நேரிசைத்துறையென்றும் நேரிசையாசிரியப்பாவிற்கு இனமென்றும், இரண்டடி குறைந்து வந்த இணைக்குறட்டுறை இணைக்குறள் ஆசிரியப்பாவிற்கு இனமென்றும், அடிதோறும் பொருள் பெற்று வந்த ஆசிரியவிருத்தம் அடிமறிமண்டில ஆசிரியப்பாவிற்கினமென்றும், நிலைவிருத்தம் நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு இனமென்றும், தாழிசை நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு இனமென்றும் வேண்டுவாருமுளர். இவை எல்லாம் உய்த்துணர்க. இன்னும் பலவாகவுங் கூறுப. (16)

ஈரடியாதி யெனைத்தடியாலும்வந் தீற்றினின்ற
ஓரடிநீளிற் கலித்தாழிசையொலி யோர்விருத்த
நேரடிநான்காய் நிகழுமென்றார்நெடி லென்றுரைத்த
பேரடிநான்கு கலித்துறையாமென்பர் பெய்வளையே.

(இ-ள்.) ஈரடி முதலாக அனைத்தடியாலும்வந்து ஈற்றடி மிகுவது கலித்தாழிசையாம். இவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கவும் பெறும். நாற்சீர் நான்காய் வருவது கலிவிருத்தம். நெடிலடி நான்காய் வருவது கலித்துறையாம்-எ-று. வரலாறு:

கொய்தினை காத்துக் குளவியடுக்கத்துப்
பொய்தற்சிறுகுடி வாரனீயைய நலம்வேண்டின்.

---

* கைம்மலையொப்பத் தானவரை என்றார் குவலயாபீடத்தை.

ஆய்தினைகாத்து மருவியடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீயைய நலம் வேண்டின்.

மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரனீயைய நலம்வேண்டின்.

இவை ஈரடி மூன்றாய் ஈற்றடிமிக்கு ஒருபொருண்மேல் வந்த கலித்தாழிசை.

பூண்ட பறையறையப் பூதமருள
நீண்ட சடையானாடுமே
நீண்ட சடையானாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

இஃது ஈற்றடிமிக்கு ஏனையடியில் இரண்டாமடி குறைந்து முதலடியும் மூன்றா மடியும் ஒத்து வந்த கலித்தாழிசை.

போர்த்தலுடை நீக்குதல் பொடித்துகண்மெய் பூசல்
கூர்த்தபனி யாற்றுக் குளித்தல் புலனன்றே
சார்த்தியிடு பிச்சையர் சடைத்தலையொ டாய்தல்
வார்த்தையிவை செய்தவ மடித்த மனமென்றான்.

இது நாற்சீர் நாலடியான் வந்த கலிவிருத்தம். அடிதோறும் பொருள் பெற்று வந்தன மண்டிலவிருத்தம். ஏனைய நிலைவிருத்தம். முன்றான் பெருமைக் கண்சரணங்களன்றே. இது நெடிலடி நான்காய் வந்த கலித்துறை.

நன்மை மேவுவார் மேவுவார் பெரும்பொரு ணான்கும்
புன்மை மேவுவார் யாவரும் புகழொடு பொருந்தார்
தொன்மை மேவுவார் மேவுவார் தொடர்வறாச் சுற்ற
மின்மை மேவுவார் யாவருமின்ப மொன்றெய்தார்.

இது மண்டிலக் கலித்துறை. பிறவுமன்ன. இவ்வினம் அனைத்தினும் அளவடியின் மிக்குவருவன வெண்கலிப்பாவினம் என்றுங் கலித்தாழிசை ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வருவன நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவினம் என்றுங் கலித்துறையுந் தனித்துவருங் கலித்தாழிசையுந் தம்முளொத்தும் ஒவ்வாதும் வருங் கலிவிருத்தமும் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா வினம் என்றும் வேண்டுவாருமுளர். இனிக் கலித்துறையைக் கோவைக் கலித்துறை என்றுங் காப்பியக் கலித்துறை என்றும் இரண்டாக்குவாரெனக் கொள்க. (17)

**நெடிலடிநான்கவை நேர்ந்துநின்றேபதி னாறெழுத்தாய்**
**முடிவனவாம்பதி னேழுநிரைவரின் முன்மொழிந்த**
**படிவழுவாது நடைபெறுமோசைவண் டேந்திநின்ற**
**கடிகமழ்கோதைக் கயனெடுங்கண்ணி கலித்துறையே.**

*(இ-ள்.) இதனைக் கோவைக் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க. முன்றான் பெருமைகாப்பியக் கலித்துறை.* *(18)*

**துன்னுங்குறளடி நான்குவஞ்சித்துறை சிந்தடிநான்கு**
**உன்னும்விருத்தந் துறைமூன்றொருபொரு டாழிசையாம்**
**இன்னும்வரினு மடக்குகபோலியென் றேற்பமுன்னூல்**
**பன்னுமவர்க்கு முடம்பாடெனவறி பைந்தொடியே.**

*(இ-ள்.) குறளடி நான்காய் வருவது வஞ்சித்துறையாம். சிந்தடிநான்காய் வருவது வஞ்சிவிருத்தமாம். வஞ்சித்துறை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவது வஞ்சித்தாழிசையாம். ஒழிந்த செய்யுட்களையும் ஒப்புமையாக இப்பெயர்களிலேயே வழங்குக என்பது எல்லாப் புலவர்க்குமுடன்பாடு-எ-று. வரலாறு: பொருந்து போதி என்பதிருசீரடி நான்காய் வந்தமையால் வஞ்சித்துறை. விண்ணவர் நாயகன் என்பது சிந்தடி நான்காய் வந்தமையால் வஞ்சிவிருத்தம்.*

***மடப்பிடியை மதவேழந்***
***தடக்கையான் வெயின்மறைக்கு***
***மிடைச்சுர மிறந்தார்க்கே***
***நடக்குமென் மனனேகாண்.***

***பேடையை யிரும்போத்துத்***
***தோகையான் வெயின்மறைக்குங்***
***காடக மிறந்தார்க்கே***
***யோடுமென் மனனேகாண்.***

***இரும்பிடியை இகல் வேழம்***
***பெருங்கையான் வெயின்மறைக்கு***
***மருஞ்சுர மிறந்தார்க்கே***
***விரும்புமென் மனனேகாண்.***

*இதுவஞ்சித்துறை ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையான் வஞ்சித்தாழிசையாம்.*

மன்ன னேரியன்
சென்னி மாதனன்
கன்னி காவலன்
பொன்னி நாயகன்.

இது வஞ்சிமண்டிலத்துறை.

தாதகி நிழலோதா னிரவே
போதலர் பூகஞ்சூழ்பொழிலே
மீதெழு நிலவேவெவ்வெயிலே
ஆதர வகலாளிங் கிவளே.

இதுவஞ்சி மண்டிலவிருத்தம். இவ்வினம் அனைத்தினுங் குறளடியால் வருந் துறையுந் தாழிசையுங் குறளடி வஞ்சிப்பாவின் இனமென்றுஞ் சிந்தடியால்வரும் வஞ்சிவிருத்தஞ் சிந்தடி வஞ்சிப்பாவினினமென்றும் வழங்கப்படுமென்ப. மிக்குங் குறைந்தும் வரினும் ஒருபுடை ஒப்புமை நோக்கி ஒழிந்தவுங் கொளலே என்றார் அமுதசாகரனார்.

உரைத்த பாவினுக்கொத்த அடிகள்
வகுத்துரைபெற்றி யன்றிப்பிறவு
நடக்குமாண நடத்தை யுள்ளே

என்றார் காக்கைபாடினியார்.

ஒத்தவடியினும் ஒவ்வா விகற்பினும்
மிக்க வடிவரினுமப்பாற் படுமே

என்றார் அவினையனார்.

பாவுமினமும் மேவினவன்றியும்
வேறுபடநடந்துங் கூறுபடவரினும்
ஆறறிபுலவ ரறிந்தனர்கொளலே

என்றார் மயேசுவரனாரெனக் கொள்க.

ஒன்று மிடைச்சீர் வருஞ்சீர் முதலென்னுஞ் சூத்திர முதலாகத் துன்னுங்குறளடி நான்கெனுஞ் சூத்திரமீறாய்க் கிடந்த சூத்திரமெல்லாம் ஒருசாராசிரியர் மதமெனக் கொண்டு இவையிற்றுக்குக் குற்றங் காட்டுதற்கு எடுத்தோதினானென்க. குற்றங்காட்டு மாறு- நாலுபாக்களுக்கு நாலோசையென்று

கூறுபடுத்து வெண்பாக்களுக்குச் செப்பலோசை என்றாக்கி அதனை அலகிட்டோசை ஊட்டுக என்று இலக்கணஞ் சொன்னார். ஓசையாவது செவிப்புலனே கருவியாக அறிவதென்பது எல்லார்க்கும் உடம்பாடாதலாம். அஃதறியுமிடத்துக்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

என்று இத்தொடக்கத்தனவற்றைச் செவிப்புலனே கருவியாக ஆராய்ந்தபொழுது ஓசை இனியவாய் இருக்கும். அலகிட்டு ஓசை ஊட்டிலவை ஓசையுண்ணாவென்றால்; அற்றன்று, இவற்றின்கண் அளபெடை யுண்டாகவே ஓசையுண்ணு மெனில்; அளபெடையின்றியேயும் ஓசை இனியனவாக இருந்தன என்க. அன்றியுந் தேமாமுதலாகிய உதாரணங்களால் ஓசையூட்டில் அவ்வோசை வெண்பாவி னோசையன்று, அது உதாரணத்திலோசை என்று கொள்க. வெண்பாவினோசையும் உண்டேயெனின் இரண்டோசை ஓரிடத்து நில்லாவென்க. வெண்பாவினோசை அங்கிருப்பதாகில் வெண்பாத் தன்கணோசை யின்றி இருக்கும். அப்பால் அது வெண்பாவின்கண்ணுங் கண்டோமாதலால் உதாரணத்தால் ஓசை ஊட்டும்பொழுது உதாரணத்தில் ஓசையென்று கொள்க. அன்றியுங்,

கடாஅ வுருவொடு கண்ணஞ்சாதி யாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

இதனை எப்படி ஓசையூட்டுவதெனிற், குற்றிய லிகரம் என்று ஒன்றாக்கி அதனைச்சீருந் தளையுஞ் சிதையிற் சிறியஇ உஅளபோ-டாதுமறிவர் அலகு பெறாமை யென்றிகரம் அலகு பெறாதாக்கி ஓசையூட்டுக என்பர். அதுவும் பிழையென்க. இகரங் குற்றெழுத்தாய் நின்று அலகுகாரியம் பெறுதலல்லது ஒற்றெழுத்தேபோல் அரைமாத்திரைஉடைத்தாயினும் அலகு காரியம் பெறா தொழிதற்குக் காரணமின்மையாலென்க.

அன்றியும், அலகு காரியம் பெறாவிடில் எல்லாவிடத்தும் பெறாதொழிய வேண்டுமென்க. அன்றியுங் குற்றியலிகரம் அரைமாத்திரையாய் முற்றியலிகரம் ஒருமாத்திரையானமை ஓருச்சாரணையினால் வேறுபடுத்திக் காட்ட வொண்ணாவென்க. அன்றியுஞ், சீருந் தளையும் அழிய வந்தவிடத்து அலகுகாரியம் பெறாதெனின் இச்செய்யுளைச் செய்த புராணகவிஞர் சீருந் தளையுஞ் சிதையச் செய்தாராதலால் அலகிட்டவன் திருந்த அலகிட்டானாகையும் பொருந்தாதென்க. அலகிட்டவன் திருந்த அலகிட்டானாகவும் அமையும்; ஒரு நாளலகிட்டபடியே திருந்தக் கிடப்பதாகில் எனமறுக்க.

**குலாவணங்கு வில்லெயினர் கோன்கண் டன்கோழி**
**நிலாவணங்கு நீர்மணன்மே னின்று–புலாலுணங்கல்**
**கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்**
**உள்ளம்புக் காப்ப துரை.**

என்னும் பழம்பாடல் எவ்விலக்கணங்களால் அலகிட்டோசை ஊட்டும் பொழுதும் ஓசை உண்ணாது செவிகருவியாகப் பார்த்த பொழுது ஓசை உண்ணுமாதலால், அவையெல்லாம் பிழைக்குமென்க. ஓசை உண்ணாதபொழுது மற்றொரு பெயர் மாத்திரம்போக்கி அயச்செய்யுளுக்கு வேறொருகுற்றஞ் சொல்லமாட்டாமையாற் பயனுமில்லையென்க. அன்றியும், வடநூற்புலவர்க்கு ஓசை ஊட்டுக என்பதில்லையெனக் கொள்க. மேலும் அவர் பயில்வார்க் கரிதாக நூலைப்பெருக்குவதுவுஞ் செய்து அப்பெருமையில் வாய்ப்புக்களை அடக்கமாட்டாதே மிக்குங் குறைந்தும் வரினும் ஒருபுடை ஒப்புமை நோக்கி ஒழிந்தவுங் கொளலென்று சூத்திரமுஞ் செய்தமையாலே அடங்கவுஞ் செய்திற்றிலர். பயில்வார்க் கெளிதாகச் சுருங்கவுஞ் செய்திற்றிலர். யாப்பதிகாரத்தினாற் பயனுஞ் செய்யுளுக்கு ஒரு பெரிய ஏதுவே ஆதலாற் குற்றமென்க. அன்றியும், யானைத்தொழின் முதலாகிய செய்யுட்களையெல்லாம் அடிவகுத்தற்கு இலக்கணஞ் சொன்னார், அடிவகுத்தும் பயனின்மையாலும் அடிவகுத்தற்குக் கட்டளைப்பட்டு நிரம்பி இருப்பதோரிலக்கணம் இன்மையானும் அதுவும் பிழையென்க. அடிவகுத்தற்குக் கலித்துறை நேரிசைவெண்பா முதலிய செய்யுட்களை எதுகை கருவியாகக் கொண்டு அடிவழங்குவதாகில், திருமன்னி வளரு மிருநில மடந்தையும் போர்ச் செய்யபாவையுஞ் சீர்த்தனிச்செல்வியும் இன்னுஞ்

சிலசெய்யுளும் ஆசிரியப்பா வெண்பாவொடு மாறுகொண்டு போலிவெண்பாவாகும். அன்றியும்,

*போரவுணர்க் கடந்தோய்நீ*
*புணர்மருதம்பிளந் தோய்நீ*
*நீரகலமளந்தோய்நீ*
*நிழறிகழைம் படையோய்நீ*

என்னும் இடையெண்ணே செந்துறையாமெனக் கொள்க. மற்றும் அடிவகுத்தற்கு நிரம்பி இருப்பதொரு கருவி கண்டதின்மையானும் ஆசிரியப்பா முதலாகிய அடி வகுத்துப்பயன் நிரம்பாமையானும் அது பிழையென்க. மற்று மிகைப்படக் கூறுதன்முதலாகப் பல குற்றமு முளவெனக் கொள்க. குடமுடைந்தது மடம்வெந்தது என்றாற் போலச் சிறிதேயாயினுங் குற்றமுடைத்தாயின் அது நூலாய் நிரம்பாதெனக் கொள்க. இந்நூலுடையார் எதுகையே கருவியாக அடி வகுத்தாரென்க. (19)

**மேவுங்குறள்சிந் தொடுதிரிபாதிவெண் பாத்திலதம்**
**மேவும்விருத்தஞ் சவலையென்றேழு மினியவற்றுள்**
**தாவுமிலக்கணந் தப்பிடிலாங்கவை தம்பெயராற்**
**பாவுநிலையுடைப் போலியுமென்றறி பத்தியமே.**

(இ-ள்.) குறளுஞ் சிந்துந் திரிபாதியும் வெண்பாவுந் திலதமும் விருத்தமுஞ் சவலையும் என்றேழுவகைப்படும் பத்தியக் கவியெனக் கொள்க. இனி இவ்வேழுந் தத்தமிலக்கணத்தின் மிக்குங் குறைந்தும் வரிற் போலி யென்பனவாம். குறட்போலி சிந்துப்போலி திரிபாதிப்போலி வெண்பாப்போலி திலதப்போலி விருத்தப்போலி சவலைப்போலி எனவருமெனக்கொள்க-எ-று.
(20)

**எழுசீரடியிரண் டாற்குறளாகு மிரண்டடியொத்**
**தழிசீரிலாதது சிந்தாமடிமூன்று தம்மிலொக்கில்**
**விழுசீரிலாத திரிபாதிநான்கடி மேவிவெண்பாத்**
**தொழுசீர்பதினைந்த தாய்நடுவேதனிச் சொல்வருமே.**

(இ-ள்.) எழுசீரடி இரண்டாய் வருவது குறளாம். அடியிரண்டாய்த் தம்முள் அளவொத்தது சிந்தாம். மூன்றடியாய்த் தம்மிலள வொக்கில் திரிபாதியாம். நான்கடியாய்ப்

பதினைந்துசீராய் நடுவு தனிச்சொல் வருவது வெண்பாவாமெனக் கொள்க. வரலாறு:

**உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்**
**களரனையர் கல்லா தவர்.**

இது முதலடி நாற்சீராய்க் கடையடி முச்சீராய்வந்த குறள். இனிக் குறட்போலியாவது எழுசீரின் மிக்குங் குறைந்தும் இரண்டடியாய் அவ்வடியுந் தம்முளளவொவ்வாது வருவதாம். ஓரடியாலே ஒரு செய்யுளாய் வருவதுவுங் குறட்போலியாம். வரலாறு:

**உற்றவர்க்குறுப் பறுத்தெரியின்கணுய்த்தலையன்ன**
**தீமைசெய்தோர்க்கு மொத்த மனத்ததாய்**
**நற்றவர்க்கிட மாகிநின்றது நாகையே.**

இஃது இரண்டடியாய் ஈறுகுறைந்து வந்த குறட்போலி.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ**
**னற்றா டொழாஅ ரெனின்.**

**கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்**
**படாஅ முலைமேற் றுகில்.**

இவை எல்லாங் குறட்போலியெனக் கொள்க. சிறியகுறள் மாணி செய்குணங்களோதுவன்காண். இது ஓரடியான்வந்த குறட்போலி. இனிச் சிந்தாவது,

**வீசினபம்பர மோய்வதன் முன்னா**
**னாசையறவிளை யாடித்திரிவனே.**

எனவும், இவை இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வந்தமையாற் சிந்தாமெனக்கொள்க.

**மீனாமை காரேனம் வென்றியரி யென்றிவைமுன்**
**னானா ளினைப்பதற் கன்பர்கண் டீர்நன்மை யாள்பவரே.**

எனவும்,

**கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டு**
**முகாஅமை வல்லதே யொற்று.**

எனவும், இவை ஈரடி ஒவ்வாது வந்தமையாற் சிந்துப்போலியா மெனக்கொள்க. திருவள்ளுவப் பயனெல்லாங் குறள்வெண்பா என்றமையால் அஃது குற்றமெனின், அற்றன்று; அவையெல்லாம்

ஒரு பெயராலே வழங்க வேண்டாவோவெனின், குண்டலகேசி விருத்தம் கலிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் முதலாயுள்ளவற்றுட் கலித்துறைகளும் உளவாமாதலாற் குற்றமாகாது. இவை இற்று நாற்சீரடியாய் வருவன சிந்தாகவும் ஒழிந்தன சிந்துப்போலியாகவும் வழங்குபவெனக்கொள்க. தனிவெண்பாவாவது-

> ஒன்றைந்தெட் டாகியசீ ரொத்த எதுகையாய்
> நின்றபதின் மூன்றொன்பா னேரொத்து-நன்றியலு
> நீடுசீர் மூவைந்தா னேரிசை வெண்பாவென்பர்
> நாடுசீர் நாப்புலவர் நன்கு.

இது நாலடியாகிப் பதினைந்து சீராய் நடுவு தனிச்சொற்பெற்று வந்தவாறு கண்டுகொள்க. இதன்பொருள்: முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் எட்டாஞ்சீரும் தம்மிலொத்த எதுகையாய்ப் பதின்மூன்றாஞ்சீரும் ஒன்பதாஞ்சீரும் ஒத்த எதுகையாய்ப் பதினைந்து சீரால்வந்தது வெண்பாவாம். இதனை நேரிசை வெண்பா என்பாருமுளர்.

> நிகரிலிரு விகற்ப நேரிசை வெண்பாவைப்
> பகரிற் பரிசறிவார் மாட்டுப்-புகரிலா
> இன்குறள் வெண்பா விரண்டாய்த் தனிச்சொல்லு
> நன்குறளாய் நிற்கு நடு.

> மூண்டுமலி நேரிசை வெண்பா முதற்குறட்பா
> வேண்டுதனிச் சொல்லோடு விட்டிசைக்கி-லாண்டடியி
> லாசிடையொன் றிரண்டு வந்தமர்ந்தான் மற்றதன்பே
> ராசிடைவெண்பா என்றார்.

இனி வெண்பாப் போலியாவது இவ்விலக்கணங்களான் மிக்குங் குறைந்தும் இதுவே போலவரும். வரலாறு:*

* இதனையுங் கீழ்வருங் கடற்குட்டம் என்பதனையும் முதன் மூன்றடியும் அளவடியாய் ஈற்றடி சிந்தடியாய் இன்னிசைவெண்பா வெனப் பிறர்கொள்ளுப. எதுகை கருவியாகக்கொண்டு அடி வகுப்பார் இன்னிசை வெண்பாவையும் வெண்பாப்போலியின் அமைத் தமையானன்றோ இவ்வாசிரியர் அடிவரையறை நோக்காது ஈற்றில் அளவடியும் இடையில் நெடிலடியும் பொருத்தி இவ்வாறிடர்ப் பட்டது.

வளம்பட வேண்டாதார் யார்யாருமில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்—விளங்காய்
திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

இது நடுவுதனிச்சொலின்றி மூன்றாமடிகுறைந்து நான்கடியாய்ப் பதினைந்து சீராய்வந்தது.

கடற்குட்டம் *போழ்வர் கலவர்
படைக்குட்டம் பாய்மா வுடையா —னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்தும்
அவைக்குட்டங் கற்றான் கடந்து விடும்.

இதுமுதலடியும் மூன்றாமடியுங் குறைந்து ஏனையடிகள் நீண்டு மேலிரண்டடியும் ஒரெதுகையாய்க் கீழ் இரண்டடியும் ஒரெதுகையாய் வந்த வெண்பாப்போலி.

கறைப்பற் பெருமோட்டுக் காடுகிழ வோட்கொத்
தரைத்திருந்த சாந்துகொண் டப்பேய்
மறைக்குமாங் காணாது வன்பேய்தன் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு.

இது தனிச்சொலின்றி வந்த வெண்பாப்போலி. இனி இன்னிசை வெண்பா என்பதொன்றுண்டு. அதுவும் வெண்பாப் போலியிலே அடங்குமென்பது மேலே சொல்லியவற்றாற்றானே விளங்கும்.

ஒன்றும் பலவும் விகற்பாகி நான்கடியாய்
நின்று தனிச்சொற்றாம் பெற்றும் பெறாதொழிந்துந்
தன்னிசைய நேரிசையின் வேறாய் வருமாகி
லின்னிசை வெண்பாவாமென்றார்.

இது இன்னிசை வெண்பாவிற்கு இலக்கணமும் இலக்கியமுமாக்கொள்க. இனித் திலதமாமாறு சொல்லுகின்றான்.

(21)

நேர்முந்துறிற்பதி னாறெழுத்தாகி நிரைமுதலாஞ்
சீர்முந்துறிற்பதி னேழாய் முடிந்துசெப் பாரடிகள்
ஏர்முந்துநான்கொத் திருபதுசீரா லியன்றிடுமேல்
தேர்முந்துபேரல்குன் மாதேயஃது திலதமன்றே.

* போழ்வர் அகல்வர் எனினுமமையும்.

(இ-ள்.) நேரசை முந்திற் பதினா றெழுத்தாய் நிரையசைமுந்திற் பதினேழெழுத்தாய் முடியும் பாதங்கணாலாய்ச் சீரிருபதினால் வருவது * திலதமென்னும் பெயரலே வழங்கப்படும் (எ.று) இந்நூற் சூத்திரம் யாவும் திலதம் ஆதலின் இதனில் ஒன்றையே இலக்கியமாகக் கொண்டாலும் இழுக்காது வரலாறு:

*முருகார் நறுமலர் இண்டை புனைந்துவண் டேமுரலும்*
*பெருகார் சடைமுடிக் கற்றையி னாய்பிணி யான்மிடைய*
*இருகாற் குரம்பை இதுதான் உடையன் இதுபிரிந்தால்*
*தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே.*

*நிணம்செய்த வெண்டலை ஏந்திய நின்மல நேரிழையே*
*மணம்செய்ய வான்துகில் தோன்றுவித் தார்மதி*
*தோய்வரையில்*
*கணம்செய்த காந்தள்பைம் போதோ டுகவினை*
*யேன்மணமோ*
*பணம்செய்த அல்குலும் கொங்கையும் காட்டிப் பறிக்கின்றதே.*

இவை இற்றைக் கலித்துறை என்பாருமுளர். இனித் திலதப்போலியாவத ஓரோஅடியிலொன்றாதல் இரண்டாதல் எழுத்து மிக்குங் குறைந்தும் வருவது. வரலாறு:

---

* கலித்துறை கட்டளைக்கலித்துறை எனவுங் காப்பியக் கலித்துறை எனவும் இருவகைப்படும். அவற்றுட் கட்டளைக்கலித்துறை கோவைக்கலித்துறை எனவுந் திலதக்கலித்துறை எனவும் இரண்டு வகையாகும். இவை தம்முட் பேதமறியாது பெரும்பாலோர் ஒன்றை ஒன்றாக்கி மயங்குப. இவற்றை வேறுபடுத்துவான் தொடங்கி நூலாசிரியர் நெடிலடியென முன்னர்ப் போந்த சூத்திரத்தாற் கோவைக் கலித்துறையையும் இச்சூத்திரத்தாற் திலதக் கலித்துறையையும் உணர்த்தியும் உரையாசிரியர் அவருடைய கருத்துத் தெரியாது ஆண்டுக் குற்றங் காட்டுதற்கெடுத் தோதினார் என மயங்கி நெடிலடி என்னுஞ் சூத்திரத்தையே கோவைக் கலித்துறைக்கிலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க என்றார். அச்சூத்திரமுந் திலதக் கலித்துறையேயாம். அஃது கடிகமழ் கோதை நல்லாய் பன்னுகோவைக் கலித்துறையே என்றிற்ற வழியன்றோ கோவைக் கலித்துறையாகும்! கோவைக்கலித்துறை ஈற்றடி மூன்றாஞ் சீர்ச்சொல் பக்குவிட்டு முற்சீரோடொன்றி ஒழுகிய ஓசைத்தாய்வரும். இதுபேதமறிக. இரண்டாஞ்சீர் நாலாஞ்சீர்களும் அவ்வாறோசை பிரிந்தொழுகின் மிக்க சிறப்புடையதாம். அதனை, "நீரணங்கோ நெஞ்சமே தனியேயிங்கு நின்றவரே" என்னும் பொய்யாமொழிப்புலவர் வாக்கானுணர்க.

*எனவே தனமென் றிராசேந்திர சிங்கனோ டின்றணைந்த*
*கனவே யுடையன் களிப்புக்கண் டாற்கட லேழும்அமைந்*
*தனவே எனஅவன் றான்உதித் தன்றே தொடங்கியென்றும்*
*நனவே புணர்திரு வின்களிக் கேதுகொல் நல்லனவே.*

*இது முதுலடி எழுத்து மிக்கமையாற் றிலதப் போலி. இதனை வடவெழுத்தாய் ஒப்புக்கொளிற் போலி யின்றி விரவியலாகு மென்க.* *(22)*

**அளவோரடிபோ லொருநான்குபேத மிலாதுமெய்ப்ப**
**துளதேலஃது விருத்தமென்றேயறி யுள்ளங்கொள்ளுங்**
**களவேநுழைந்து கயலினுநீண்டு கடுவடுவின்**
**பிளவேயனைய பெருமதர்நாட்டத்துப் பெய்வளையே.**

*(இ-ள்.) தம்மிலொத்தஅடி நான்காய் வருஞ்செய்யுள் விருத்தம் எனப்படும். வரலாறு:*

**பொலங்கலக் குரியவாம் பொருவின்மாமணி**
**இலங்கல தென்னல மீயஞ் சேர்ப்பினுங்**
**குலங்கலந் திவ்வழிக் குரவர் கூட்டினு**
**மங்கலங் குழலிய ரன்றென் கிற்பரோ.**

*இஃது அடிநான்கும் ஒத்தமைகாண்க. குண்டலகேசி முதலான காப்பியம் எல்லாம் விருத்தமாம். விருத்தப்போலியாவது, அடிகளில் எழுத்தாதல் சீராதல் மிக்குங் குறைந்தும் வருவதாகும். அது வந்தவழிக் காண்க.* *(23)*

**இடையுமுதலுங் கடையுங்குறைந்து மிடையிடையே**
**அடையுமடிகுறைந் தும்வரினான்கடி யப்பெயரால்**
**நடைமுந்தியன்ற சவலையென்றோதுவர் நான்கின்மிக்க**
**தொடையுந் திறம்புவ தாய்விடிற்போலி துடியிடையே.**

*(இ-ள்.) முதலடி கடையடி இடையடிகள் குறைந்தும் மிக்கும் வரிற் சவலையாம். முதலடி குறைந்துவரின் முதற்சவலையாம். கடைஅடி குறைந்துவரிற் கடைச்சவலையாம். இடையடி குறைந்துவரின் இடைச் சவலையாம். நான்கடியின் மிக்க அடிகளான் நடைபெற்று அவ்வடிகளொத்தும் ஒவ்வாதும் வரிற் சவலைப் போலியாம்- எ-று. நான்கடியான் வந்த சவலை எதுகையின்றி வரினுஞ் சவலைப்போலி யாமெனக்கொள்க. இதனால் எல்லாச் செய்யுளும் எதுகை யழியினும்*

போலியாகுமென்றாராயிற்று. முடிவிரண்டு மிக்கு முதலிரண்டு நைந்து முடிவிரண்டு குன்றி முதலிரண்டு மிக்கு மிடையிடையஃகியு மிக்கும்வரினும் நடைச்சவலைப் பாதச்சமவிருத்தம் என்பாருமுளர். வரலாறு:

சங்குமுள பறையுமுள தாநல்ல கவரியுள
வெங்குமுள துரவுகிண றெறியுமறி கொடியுமுள
பொங்குபுனல் வந்தலைப்பப் புள்ளினங்க ளார்ப்பப்
பொருகயலோ டினவாளை *புறக்கணித்து நோக்கத்
தெங்குபழம் வீழ்ந்தொழுகுங் காவிரியின் றென்பாற்
றிருவெண்காட் டையவெனிற் றீவினைகள் கெடுமே.

இது முதற்சவலை. பிறவுமொட்டிக் கொள்க. இனிச் சந்தமுந் தண்டகமு மாமாறு சொல்லுகின்றான். (24)

ஒன்றாதியென்ப ரொருசாரவரொரு நான்குமுன்னா
மென்றாலினிதுசந் தத்தினெழுத்தை யிருபதின்மேல்
நன்றாயவாறுயர் வாமென்றுரைப்பர்நற் றண்டகமேற்
பின்றாதகட்டளை நான்குமுன்னாகிப் பெருகிடுமே.

(இ-ள்.) விருத்தஅடிகள் ஓரெழுத்து முதலாக வருமென்பர் ஒருசாரார். நான்கெழுத்து முதலாக வந்தாலல்லது ஓசை யுண்டாகா. விருத்த அடிக்குப் பெருமை* இருபத்தா றெழுத்தெனக் கொள்க. எனவே இருபத்தா றெழுத்தினேறின எல்லாம் விருத்தப் போலியா மென்றாராயிற்று. தண்டகம் நான்கு கட்டளை முதலாகவரும். (25)

ஏறியநெட்டெழுத் தேநெடிலொற்றே யெழில்வடநூற்
கூறியசீர்க்குறி லொற்றேகுருவாங் குறிலதுவே
வேறியல்செய்கை யிலகுவென்றாகும் வியன்குறிலும்
ஈறியலிற்பிறி தாமொருகாலென் றியம்புவரே.

(இ-ள்.) நெட்டெழுத்தும் நெடிலொற்றுங் குறிலொற்றுங் குரு என்பர். அஃது இரண்டு அலகுடைத்தாகி இளம்பிறைபோன்ற குறியினைப்பெறும். குற்றெழுத்து

* இது வடநூற்றுணிபு. தமிழின் முப்பத்துமூன்றெழுத் தீறாக வரும் அடிஇரட்டித்த விருத்தங்களில் அதற்குமேலும் வரப்பெறும்.

இலகுவாம். அஃது ஓர் அலகுடைத் தாய் நேரே கீழ்நோக்கி வலிக்கப்பட்ட ஒரு கீற்றினைப்பெறும். ஈற்றின்கணின்றபொழுது குரு வாகையும் ஒருகாலுண்டு. எ-று. இனிச் சந்தங்களுக்குப் பிரத்தாரமுதல் ஆறுதெளிவுகளுஞ் சொல்லுகின்றான். (26)

**ஒப்பாருறழ்ச்சியுங் கேடுமுத்திட்டமு மொன்றிரண்டென்**
**அப்பாலிலகு குருச்செய்கையுமந்தச் சந்தங்களாற்**
**றுப்பார்தொகையு நிலவளவுமென்று சொல்லிவைத்தார்**
**செப்பார்தெளிவுக ளாறையுஞ்சீறடித் தேமொழியே.**

(இ-ள்.) உறழ்ச்சியுங் கேடும் உத்திட்டமும், ஓரிலகுடையன இன்னதனைச்சந்தம் ஒரு குருவுடையன இன்னதனைச்சந்தம் இரண்டிலகுடையன இன்னதனைச்சந்தம் இரண்டு குருவுடையன இன்னதனைச்சந்தம் என்று இப்படிச் சந்தத்தளவும் ஏறச்சொல்லும் * இலகு குருச்செய்கையும், முதற்சந்தத்துக்கு விரிவு இன்னதனையும், இரண்டாஞ் சந்தத்திற்கு விரிவின்னதனையும் என்றிப்படி இருபத்தாறளவும் ஏற்றிச் சொல்லும் விருத்தத்தொகையும், முதற்சந்தம் இன்னதனை நிலத்திலுறழலாம், இரண்டாஞ்சந்தம் இன்னதனை நிலத்தி லுறழலாம் மூன்றாஞ்சந்தம் இன்னதனை நிலத்திலுறழலாம் என்றிப்படி இருபத்தாறாஞ் சந்தத்தளவும் ஏற்றிச் சொல்லும் நிலஅளவுந் தெளிவுகளாம். உறழ்ச்சி எனினும் பிரத்தாரமெனினு மொக்கும். நட்டம்எனினுங் கேடெனினுமொக்கும். உத்திட்ட மெனினும் நித்திட்டமெனினுமொக்கும் (27)

**ஆதியினிற்குருப் பாதம்வைத்தாதிக் குருவதன்கீழ்**
**ஓதியசீரில குத்தன்னையாக்கி யொழிந்தவற்றை**
**மூதியன்மேற்படிக் கொப்பித்துமுன்புறப் பாழ்கிடக்கில்**
**தீதியலாக்குருக் கொண்டேமறைக்க திறப்படவே.**

(இ-ள்.) சந்தங்களைப் பிரத்தரித்துக் காட்டுதற்கு எடுத்துக்கொண்டான். அது ஆதிமுழுக்குருவைத்துறழ்கையும் ஆதிமுழுவிலகு வைத்துறழ்கையும் என இரண்டு வகைப்படும். அவற்றுள் ஆதி முழுக்குருவைத்துறழ்கையாவது, இன்னதனை ஒரு சந்தமென்றுறழ்ந்து காட்டுகவென்றால் முழுக்குரு அடியை மேல் வைத்து முதற் குருவின்கீழ் ஓரிலகு வைத்து

---

* இதனை வடநூலார் ஏகத்துவியாதிலகக்கிரியை என்பர்.

ஒழிந்தன வெல்லாம் ஒக்கவிட இரண்டாமடியாம். இரண்டாமடியின் முதற் குருவின்கீழிலகுவிட்டுப் பின்பு மேலைப் படியோடொக்கவிட்டு முன்பு குருவிடம் மூன்றாமடியாம். மற்றையவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

குருக்கீழிலகுவா மேனைய தொக்குங்
குருத்தொகையு மாதிக்கட் கூட்டு.

இனி ஆதிமுழு இலகுவைத்துறமுமாறு: அச்சந்தத்தின் முழுவிலகு வைத்து அதன் முதலிலகுவின் கீழ்க் குருவைத்து ஒழிந்தன ஒப்பிக்க இரண்டாமடியாம். பின்னையுமிதன் முதலிலகுவின்கீழ்க் குரு வைத்துப் பின்பு ஒக்கவிட்டு முன்பு இலகுவிட மூன்றாமடியாம். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. மேலும் முழுக்குரு வுறழ்ச்சியோடு மாறுபடாமையுறழ்க.

**இலகுவின் கீழ்க்குருவா மேனைய தொக்கு**
**மிலகு வெழுவா யிடத்து.** (28)

**ஏறுமடியெனைத் தாவதுகெட்டதென் றாலவ்வெண்ணைத்**
**தேறும்படியரை செய்திலகுக்கொள்க சேரினொற்றை**
**வேறுமுருவொன்று பெய்தரைசெய்து வியன்குருவைத்**
**தீறுதிகழு மளவு மியற்றுக விப்படியே.**

(இ-ள்.) நட்டமென்னுந் தெளிவிற்கு இலக்கணஞ் செய்வான் எடுத்துக்கொண்டான். ஆதிமுழுக்குருவின் நட்டமும் ஆதிமுழுவிலகுவின் நட்டமுமென இரண்டு வகைப்படும். அவற்றுள் இது ஆதிமுழுக் குருவி னட்டத்துக்கு இலக்கணமெனக்கொள்க. இன்னசந்தத்தில் இன்னதனையாம் அடியிலிட்டதறியென்றால் அவன்சொன்ன அடித்தொகையைப் பாகஞ்செய்து இலகு வைக்க. பாகஞ்செய்யப் போகாதாகில் ஒன்றிட்டுப் பாகஞ்செய்து குருவைக்க. இப்படி வெறிதே பாகஞ்செய்ய இலகுவாம். ஒன்றிட்டுப் பாகஞ்செய்யிற் குருவாம். அவன் கருதின எழுத்தளவும் இட்டால் அவ்வடி இதுவென வெளிப்படும். ஆதிமுழுவிலகுவின் நட்டம்இலகு சொன்ன இடத்திற் குருவைத்துக் குருச்சொன்ன இடத்திலகுவைத்து அடியிட்டுக் கொள்க.

எனைத்தாவதென்றறிவ னிட்டதறி யென்றா
லனைத்தரை செய்தாண்டிலகு வைக்க-நினைத்ததனை
விள்ளத்தா னாகாதேல் வேறோ ரலகிட்டுக்
கொள்ளத்தா னாகுங் குரு. (29)

**காட்டியவீடெனைத் தாவதென்றாலதன் கண்ணெழுத்திற்
கூட்டியவொன்றாதி கொண்டதிரட்டித்துக் கோப்பியல
நாட்டியசீரில குக்களின்மேனண் ணியவிலக்க
மீட்டியங்கொன்றிட் டுரைக்குமிதனையுத் திட்டமென்னே.**

(இ-ள்.) உத்திட்டமாவது சொல்லுவான் எடுத்துக் கொண்டான். உத்திட்டம் ஆதிமுழுக்குருவினுத்திட்டம் ஆதிமுழுவிலகு வினுத்திட்டம் என இரண்டுவகைப்படும். அவற்றுள் ஆதிமுழுக் குருவினுத்திட்டத்துக்கு இலக்கணமாவது ஓரடியிற் குருலகுவிட்ட தின்னதனையாம் அடியென்று சொல்லென்றால் அவ்வடியில் எழுத்துக்களுக்கொன்று முதலாகக் கொண்டிரட்டியாய் ஈற்றளவும் இலக்கமிட்டு இலகுவின்மேல் எண்ணெலாந் தொகுத்து ஒன்றிட அதற்கு எண்ணாம். எ-று.

**ஒன்றிரண்டு நான்கெட்டென் றுள்ளனவுஞ் சேர்த்திரட்டித்
தென்று மிலகுவின்மே லெண்களோ-டொன்றிட்டு
வைத்திம் முறைமை வழுவாமை கண்டுய்ப்ப
துத்திட்டஞ் சுட்டெனினு மொன்று.**

ஆதிமுழுவிலகுவினுத்திட்டங் குருவின்மேலெண்களில் ஒன்றிட்டுச் சொல்லுக. (30)

**ஓங்கியசந்தத் தெழுத்துக்களைவீ டிரண்டொருமூன்று
ஆங்கியனான்கைந்தொ டாறேழெனவிரண் டாலிசைத்துத்
தாங்கியவீடொன் றொன்றீறொழித்திட்டுத் தமதயலெண்
பாங்கிற்றொகுத்து லகுக்குருப்பெய்து பகர்தொகையே.**

(இ-ள்.) இன்னசந்தத்து ஓரிலகுவுடைய விருத்தம் எத்தனை, இரண்டு இலகுவுடைய விருத்தம் எத்தனை மூன்றிலகுவுடைய விருத்தம் எத்தனை என்றிப்படியேற வினாவினாற் சந்தத்தில் எழுத்துக்களை வீடுவகுத்து இரண்டுமுதல் மூன்று நாலைந்தெனக் கீணின்று மேனிறுத்திப் பின்னையும் இடனின்று வலநோக்கி முன்வைத்த திரள்களே ஈறாக்கி இரண்டின் வீடிசையவிட்டுப் பின்பு ஒவ்வொருபந்தியிலும் ஒருவீடு குறையவகுத்து வீடுதோறும் அதனயல் வீட்டிலக்கங்களைத் தொகுத்துவைத்து மேனின்று கீணோக்கி எண்ண ஓரிலகு முதலாகவுடைய விருத்தங்களாம். அவையெல்லாங் கூட்டி முழுக்குருவிலகுவை இடத் தொகையாம். எ-று:

ஒன்றிரண்டு மூன்றுநா லஞ்சாறே ழெட்டொன்ப
தென்றுகொண்டிச்சை யளவுவரி-யொன்றிலொன்
றிட்டிட் டிறுதி யொழித்தொழிய வேகாதி
யொட்டி யிலகுகொண் டொட்டு. (31)

தொகைநான்கிடமிட் டெழுத்தான் முரணித் தொடருமரை
தகையாதவண்ண நடுவணவாற்றித் தருங்கடையிற்
சிகையாகவிட்டெழுத் தோடிலகுக்களுஞ் சீர்க்குருவு
மிகையாகுமாத்தி ரையுமடைவேறிய மெல்லியலே.

(இ-ள்.) தான் கருதின சந்தத்தொகையை நான்கிடத்து வைத்து அச்சந்தத்தின் எழுத்தால் நான்கிடத்தும் முரணி நடுவிரண்டு படியையும் பாகஞ்செய்து கடைப்படியினோர் பாகங் கூட்டி வைத்தாற்கீழைப் படியின் முதல் அச்சந்தவெழுத்தின் தொகையாம்;இரண்டாவதிலகுவாம்; மூன்றாவது குருவாம்; நான்காவது மாத்திரையாம்.-எ-று.

விருத்த அடியினை வேறைந்தா நாட்டி
விருத்த அடி எழுத்தான் மேனான்கு மாறி
யரைத்தகு நடுவின் மூன்றொடு நான்காய்க் குப்பை
யொருக்கவைந் திரட்டி யெழுத்தொடு முறழ
விருத்த வரியின் விரிவி லெழுத்துக்
குருக்களோ டேனைக் குறைவி லிலகு
விருத்தமாத் திரைமுழு மாத்திரை *யைந்தும்
விரித்து விகற்பித்து வேண்டப் படுமே (32)

எழுத்தளவுமிரண்டே முதலாய்க்கொண்டிரட்டி செய்யக்
குழுத்தவிறுதித் தொகையேதொகைகுலவுந்தொகையை
யழுத்தவிரட்டிசெய் தங்கொன்றுநீக்க வதுவுறழ்வால்
விழுத்தவியன்ற நிலத்தின் விரலென்ப மெல்லியலே.

(இ-ள்) தான்வேண்டின சந்தத்தின் எழுத்தளவாக இரண்டு முதலாக இரட்டித்து ஈற்றளவும் இலக்கமிட்டால் ஈற்றினின்ற தொகை அச்சந்தத்திற்குத் தொகையாம். அத்தொகையை இரட்டித்து ஒன்றுகளைய அச்சந்தம் உறழும் நிலத்திற்கு விரலளவாம். அகலத்திற்கும் அச்சந்தத்தில் எழுத்தை இரட்டித்து ஒன்றை நீக்க அகலம் விரலளவாம் எ-று.

* ஐந்தாவதோர்பயனில் குறியீடு. அஃது ஆசிரியர்க்கு உடன்பாடன்று

இரண்டுநான் கெட்டுப் பதினாறு முப்பத்
திரண்டறுபத் தீரிரண் டேறப்-பொருந்திய
வுத்த முதலாக வுற்கிருதி யீறாக
வைத்துரைப்பார் நாவல் லவர்.

விரித்தவிரி யிரட்டித் தோர்விர னீக்க
விருத்த விறற்களவையாம்.

ஒருவிரற்கு மெய்யுணரின் மூன்றிறந்த சந்தம்
விரிமூன்று தொட்டுமே லேற-விரறுடங்கி
யீறுமுதலாக விவ்வளவு மேய்ந்ததொகை
வேறுபாடின்றி விளம்பு.

ஆதி யிரட்டித் ததனகத் தொன்றிடினும்
வேறுபாடில்லை விரல்.

மூன்றேழு மூவைந்து முப்பதின்மே லொன்றதுவு
மூன்றுடைய மூவிரு பஃது மெனத்தோன்ற
வரற்றொகை வானன்றாகக் காணுமே சந்த
விரற்றொகையா னின்ற விரி.

இவற்றை விரித்துரைத்துக் கொள்க. இனி விரற்குப் பிரமாணமாமாறு:

அணுத்தேர்த் துகள் பஞ்சிற் றூய்மயி ரன்றி
மணற்கடுகு நெல்விரலென் றேற-வணுத் தொடங்கி
யெட்டோடு மன்னுவிரற் பன்னிரண்டாற் சாணாக்கில்
அச்சா ணிரண்டுமுழ மாம்.

முழநான்கு கோலக்கோ லைஞ்ஞூறு கூப்பீ
டவை நான்கு காதத் தளவாம்-பழுதின்
றுளநிறைந்த தொல்லோருரைசெய்த துண்மை
யளவிறந்த தன்மை நிலையாம்.

ஈரைஞ்ஞூ றெண்மூன் றியல்பின் பிரிந்தக்கா
லீரைத்தாஞ் சந்தத்தி லெண்.

எட்டொன் றிருபான்மூன் றென்ன வருமூன்றற்
கொட்டிய சந்த விரி.

மதிலிரண்டு மாமாறும் வாய்ந்த வசுக்கள்
பதினைந்தாஞ் சந்தப் பரப்பு.

இரண்டீ ரிரண்டிரு நான்கிரு நான்கா
மிரண்டென்ப பாதத்திலெண்.

ஒருபாழ் பரவையோ ரெட்டைந்தோ ரேழா
றிருபதாஞ்சந்தத்தி லெண்.

இருநான்கு திக்கிசை யெட்டாறு சுன்னெட்
டிருபான்மேன் மூன்றா மியல்பு.

ஆறே ழுருபுபா ழெட்டோடு மாங்கலை
வீருத்த மாதி விளம்பிருபா—னாறாக
மாறுற் கிருதி மகிழ்வினாற் செய்துலகிற்
கூறுக தேறும் பொருள்.

ஏற்புடைய காதங் குறைந்த வெழுநூறு
நூற்றொருகால் கைவிரலே ழுற்கிருதி—யாற்ற
மொழிந்தவிரு பத்தாறா முன்னிய சந்த
மொழிந்தனவு மிவ்வாறே யொட்டு.

என இவையிற்றை விரித்துரைத்துக் கண்டுகொள்க.

இனி அந்தச் சந்தங்கணின்ற பெயரும் முறையுமாமாறு சொல்லுதும்.

ஒத்தமைந்த சந்தப் பொதுப்பெய ராய்ந்துரைப்பி
னுத்தமதியுத்த மத்திம—மொத்தநிலை
நன்னிலைகாயத் திரியுட னுண்டி
யனுட்டுப் பொடுபகுதி பந்தி—வனப்புச்
சயதி யதிசயதி சக்குவரி மற்றையதி
சக்குவரி யாடியதி யாடி—திருதி
அதிதிருதி யோடு கிருதி பிரகிருதி
யாகிருதி விக்கிருதி சங்கிருதி—மேலும்
அபிகிருதி யுற்கிருதி யாமெழுத்தா லென்றா
ரிருபதின்மே லாறு மிவை.

*உத்தம் அதியுத்தம் மத்திமம் நிலை நன்னிலை காயத்திரி உண்டி

---

* உத்தமாவது ஒற்றொழித்து உயிராவது உயிர்மெய்யாவது பாதமொன்றற்கோரெழுத்தாய் வருவது. மற்றைய நிரலே ஒவ்வொன்றற்கு ஓரெழுத்துக்கூடி ஈற்றினின்ற உற்கிருதி பாதமொன்றற்கிருபத்தாறெழுத்துப் பெற்று முடியும். இது வடமொழி விதி. தென்மொழியார் எழுத்திலக்கங் கொள்ளாது மாத்திரையே கொள்வர். ஆயினும் இரண்டுமொத்து நடப்பதே அதிக சிறப்புடையது. அஃது குண்டலகேசி சிந்தாமணி பாரதமுதலிய காப்பியங்களிற் காண்க.

அனுட்டுப்பு பகுதி பந்தி வனப்பு சயதி அதிசயதி சக்குவரி அதிசக்குவரி ஆடி அதியாடி திருதி அதிதிருதி கிருதி பிரகிருதி ஆகிருதி விக்கிருதி சங்கிருதி அபிகிருதி உற்கிருதி எனச் சந்தம் எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம். வரலாறு: "கார்நோவார்யார்"*

உத்தம். "போதி யாதி பாத மோது",

அதியுத்தம். "வேரம் போய்- மாரன்சீர்- சேருங்கால்- நேர்வன்யான்",

மத்திமம். "போதி நீழற்- சோதி பாதங்- காதலானின்- றோத னன்றே",

நிலை. "மன்னனேரியன்- சென்னி மானதன்-கன்னி
காவலன்- பொன்னி நாயகன்",

நன்னிலை. "கருவி வானமே- வருவர் மாதிரம்-
பொருவி லாமிதே- பருவ மாவதே",

காயத்திரி. "போதுறு புனைகோதாய்-
காதலரயமானா-வேதுறு மனமீதே-யாதர வகலாதே",

உண்டி. அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன்றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார்.

உளர்குழு லிருளாகி
யிளநகை நிலவாக
வளர்குழன் மடமானே
தளர்வது தமியேனே.

அனுட்டுப்பு

இளையார் கனிவா யெனவே
விளையாமதுவே தருநோ.

---

* தமிழ் நூலாருள் ஒருசாரார் மாத்திரையே நோக்கித் துதிமதி அதிபதியென வருவதனையும் இதன்பாலாக்குப. உரையாசிரியர் சந்தங்களுக்கெடுத்துக் காட்டிய உதாரணச் செய்யுள்களிற் சில எழுத்தைச் சந்தத் தொகைக்கேற்ப மாற்றியிருக்கின்றனர் போலும்.

தளர்வார் நிறைசேர் கவரு
ளுளையே லளியே யுரையாய்.

தாதகி மலர்சூ டியைநேர்
போதனர் புகழே புகலே

மீதெழு நிலவே வெயிலே
யாதர வகலா ளிவளே.

பகுதி

பயக்குறு பிறவி தவிர்த்த
கயக்குறு மொழியைக் கயத்த
வியப்புறு கமல மலைத்த
மயக்குறு மொழிவ தனத்தை.

குறியா ரெனவே புனலின்மீ
துறுதா மரைமே லுறைவார்தா
நெறியார் சடையாய் நின்பாத
மறிவா ரினியா ரறிவாரே.

பந்தி

பற்றொன் றோவில ராகி யொழுகுத
லற்றன் றேலறி விற்றெளிந் தாற்றுத
லொற்றொன் றானு மிலர்தார் பிரிவரே
மற்றொன் றென்னை மயக்குவ தேகொலோ.

வனப்பு

உருண்ட தேர்மேற் செலவுந்த னுள்ளமா
மருண்ட தேர்மிசை மாதர்கண் மீட்சியுங்
கருண்ட வாளுடைக் காள னொருவனே
யிருண்ட தேர்மிசை யெவ்வா றியங்கினான்.

சயதி

பரிசில வெம்மொடுபோது மம்பு மென்றாங்
கரிசில வேந்தி யகன்று நீண்ட கண்மேற்
குரிசிலை யன்று கனற்றி வெந்த காமன்
கருசிலை போற்புரு வத்தாள் காட்சி மிக்காள்.

அதிசயதி

சந்த நீழ லுலாவித் தண்ணென் றமருந் தெண்ணீர்
சிந்துதுவலை வீசித் தெண்ணி லாவூ டுலாவு
மந்த வலைய மேன வல்லி தகர வாசந்
தந்த பொழுது வாழ்வார் தமைவைத் தேக நண்பர்.

சக்குவரி

அருண கிரண மேபோ லங்க ராகங் குலவுந்
தருண கலவி மாரன் றயங்கு சிந்தை யென்னோய்
தெருண முழைய தென்றா லதுவோ சேலாய்
கண்ணார்
கருணை சிறிது பெய்யுங்காலை யுண்டேலினிதாம்.

அதிசக்குவரி

தேனுட னாடுஞ் சிலைபொழி மலினச் செயலாட
ஆனுட னாடுங் கவரிதழாயத் தயில்விழியென்
மானுட னாடும் மயிலனசாயன் மதர்விழியார்
வானுடனாடும் மதிதரு துனிநோய் மதியாரோ.

ஆடி

தேனார் பொழுதிற் றிருந்தா தேநீ
சிந்தை கொண்டே வேறூரிற்
போனார் தேரூர் சுவடு புதையில்
வாழிபொங் கோத மேலை
வானூர்மாவுங் கிரியு முதவா
வாரல் கொடுவாய் மேவிக்
கானார் சோலைத் தருவிலுலாவுங்
காவல் யாவருளரே.

அதியாடி

கூரெயிற்றி னேர்தோற்ற முகைவென்று சீர்கொண்டு
கொல்லை முல்லை
நேரிடைக்கு முன்றோற்ற பகைகொண்டு வந்துத
னீல மேவுங்
காரளக்கு நாளென்று கடனீந்துவார்சொன்ன
கால மன்றாற்
பேரமர்க் கற்றமன மேகுகின்ற வாறென்னை
பேதை மாதர்.

திருதி

பாராவார மருங்குலாவு மொலியினோடு
பரவை கொண்டே
சாராவார மனைந்து தங்குந் தொன்னுமர் தெள்ளுபுகார்
மன்னவர்
வீராவார மணிந்தவாழி வலவர் மென்பூங் கரும்பினறுங்
காராவார மருளராய கவின்பூ மலரொண் சூடாமணி.

அதிதிருதி

ஒருவேனின் றுயிரன்ன தோகையுரை
யுள்ளங் கிழித்தூடுபோஞ்
செருவேநின் றசோகதரு வின்செழுந்
தாதுதிரப் போது கொண்டு
பொருவே நின்றான் கொடிய வேனிலான்
மதுவுணவுங் கொண்டானன்னோ
வருவேனென் றார்பிரிந்த வஞ்சருரை
யிற்கொடிது வானிலாவும்.

கிருதி

கந்தாரம் பாடியாடுங் கரன்மது கரமுங்
கன்னிகா ரமுஞ்செருந்துங்
கொந்தாருங் குரவமுங் கான்மலிதருங்
கோகிலமுந் தாதுகோதுஞ்
சந்தாரங் கோவையார முந்தருணன் தடகடஞ்
சாரனங்கெள்ளிப்பார்
வந்தார்தந் தேர்மிசையால் வரவுதனை யறிகுதி
வண்டோகை யன்னாய்.

*பிரகிருதி

தளைய விருட்புது நறைவிரி யும்பொழில்
தடமலி துறைமாடே

---

* கன்னியிவள்பிறர்பன்னி யெனதிரு
கண்ணின் மணிநிகர் சன்மனு
மன்னு குலமுதல் பின்னை யொருவரு
மண்ணி லுறுதுணை யின்மையா
லின்னல் பெரிதுள தென்ன புரிகுவ
தென்ன வறிகில னன்னைகேண்
முன்னை மனைநிகழ் தன்மமுனிவனை
முன்னின் மனமிடர் துன்னுமால்.

இப்பாரதச்செய்யுள் பிரகிருதிச் சந்தத்திற்கு இனிய ஓசையொடு கூடிய உதாரணமாதல் காண்க.

வளைமொழி நித்தில மளநில வைத்தரு
மயிலையி லெழுகாரே
யளவி யழற்கலி மழைபொழி யச்செயு
மடறிகழ் புயல்வீரா
விளைய மடக்கொடி யிடரொழி யப்புனை
மலரித ளருளாயே.

அதிகிருதி

காவி யோவிட மோமது கரமோ
கண்ணிணை யவனிமே லரியாய் கழறே.

*விக்கிருதி

உடைய தானவ ருடையவென்றவ
ருடைய தாணம சரண மாகுமே

சங்கிருதி

அங்குலிய மொன்றுபுன லாழ்தரு கிணற்றில்விழ
வந்த முனி தேடுமினெனாப்
புங்கமொடு புங்கமுற வெய்தவ னெடுத்தமை
புகன்றருகு நின்றவரைநீ

* விக்கிருதி, சங்கிருதிகளுக்கு உதாரணமாக ஒரோரடியே காட்டினர். பின்வருவனவற்றால் முழுச் செய்யுள் வருமாறுணர்க.

வன்போர்புரி வெங்கணை யங்கர்பிரான்
மறனாலுயர் பேரறனார் குமரன்
றன்போல விளங்கின னாதலினென்
றனுவுங்குனி யாது சரங்கள்செலா
வன்போடிய துள்ள மெனக்கினிமே
லவனோடமர் செய்தலு மிங்கரிதால்
வென்போகுவ னென்றலு மேயிறைவன்
விசையோடிர தத்தினை மீளவிடா.

அண்டர்குலபதி யாம்விடை வாகன னம்பொ
னடிமலர் நாறிடு சேகர
னெண்டி சையுமனு நீதிசெய் கோலின
னெங்கு மொருகுடை யாலிடு நீழலன்
மண்டு கிரணசி காமணி மௌலியன்
வண்டு மதுநுகர் தாதகி மாலையன்
மிண்டுமுதுபுலி யேறுப தாகையன்
வென்றி வளவனை யார்நிக ராவரே.

ரிங்கித னிலைத்தொகைகள் யாவு முருவப் பகழி
யேவுமி னெனாமுன்விசயன்
றுங்கவில் வளைத்தொரு கணத்தினில் வடத்திலை
துளைத்தன னிலக்கி றொடையால்.

*அபிதிருதி

பரிதி

தொழுவடிய ரிதயமல ரொருபொழுதும் பிரிவரிய
துணைவ னெனலா
மெழுமிரவி கிரணநிக ரிலகுதுகில் புனைசெய்தரு
நிறைவ ரிடமாங்
குழுவுமறை யவருமுனி வரருமரி பிரமருர
கவனுமெவருந்
தொழுதகைய விமையவரு மறமருவு துதிசெய்தொழு
துடித புரமே.

மணியிலகு செறிதளிரொ டலரொளிய நிழலரசி
மருவியறவோர்
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட வுரையருளும்
பெரியவருளோன்
றுணியிலகு சுடருடைய வரசரொடு பிரமர்தொழு
தலைமையவர்மா
வணியிலகு கமலமல ரனையவெழி லறிவனிணை
யடிகடொழுவாம்.

உற்கிருதி

இனி விருத்த பேதஞ் சொல்லுதும். முன்பு சொல்லிப் போந்த பத்தியங் கத்திய மென்பனவாறு விகற்பமெனக் கொள்க.

பத்திய நான்கடிச் சாதி விருத்தமது
மற்றவற்று மாத்திரை யானறிப–ஒத்தமைந்த

---

* ஆசிரியர் உதாரணமாகக் காட்டிய "தொழுதவ முனிவரு மருளுறு மலருறை" என்னுஞ் செய்யுள் காலாந்தரத்திற் பாடாந்தரந் தாறுமாறாகி ஒரடிக்கோரடி மிகவிகாரப்பட்டுக் கிடந்தமையானும் பலதேசத்துப் பிரதிகளைக்கொண்டு பரிசோதித்தும் யதார்த்தரூபம் நிச்சயப் படாமையானும் மூலகிரந்தத்தைப் பார்ப்பதற்குப் புராணகவி யாவரென்பது வெளிப்படாமையானும், அதனை ஒழித்துப் பாரத விருத்தத்தி லொன்றை அதற்குப் பதிலாகச் சேர்த்தனன்.

சாதி விருத்தந் தனைமாத் திரையுடனே
நீதி லெழுத்தாற் றெளி.

ஆதிநூற் காரியைவை தாளியை யென்றிரண்டாஞ்
சாதிசமம் பாதிச் சமம்வியம-மோதுஞ்
செருத்தகைய பேரமர்க்கட் சிற்றிடையாய் சொன்ன
விருத்தமொரு மூன்றா விளம்பு.

என்றதனால் ஆரியை வைதாளியையென்றிரண்டாஞ் சாதி. அவற்றுட் சமம் *பாதிச்சமம் **வியமமென மூன்றாம் விருத்தமென்க.

ஓரடிபோ னான்கு மெழுத்தல கொத்தனவும்
ஈரடி தம்முளொத் தெய்தனவு-மோரடியும்
ஒவ்வா தனவுஞ் சமமும் வியமமுமென்
றெய்தா விருத்தத் தியல்பு.

இதனால் ஓரடிபோல நான்கடியு மெழுத்தும் அலகுமொத்த விருத்தஞ் சமமென்றும் இவ்விரண்டடியாய்த் தம்முளெழுத்தும் அலகுமொத்து வருவன பாதிச்சமமென்றும் ஓரடியுந் தம்மிலெழுத்து மலகும் ஒவ்வாது வருவன வியமமென்றுஞ் சொல்லப்படும்.

பாத மிரண்டிரண் டொத்துக் குறைந்தன கொள்
பாதிச் சமமாப் பகுத்து.

இரண்டிரண்டடியாகக் குறைந்து வருவனவுமிவ்வாறே. அடி ஒத்துமொவ்வாதும் வருவனவும் பாதிச் சம விருத்தத்தின்பாற் சார்த்தி வழங்குப. அவை வருமாறு:

உழைபிரி வறியா தானந்த நாதநிற்
றழையார் தங்கு காவலர்
விழைநகு வேளு மணங்கு மேனியார்
குழைவொடு கலைகெட்டுக் குன்ற வாணரே.

இது முதலடியும் நான்காமடியுந் தம்முள் அளவொத்தும் ஏனைய குறைந்தும் வந்தது.

* வடநூலார் அர்த்தசமமென்று சொல்லுவர்.

** விஷமம் என்னும் வடமொழிப்பதம் வியமமெனத்திரிந்தது.

*கனங்கழுவு கார்வா னுழுதகையும்*
*வனங்குலவு கோட்டு மலரும்*
*புனங்குலவு பூந்தாது*
*மனங்கசர மானாதல்.*

இது நான்கடியும் எழுத்திடையிட்டு மாத்திரை குறைந்து வந்தது.

*காவியோ கயலோ கழுநீர்களோ*
*ஆவியோ துணைவா வரவிந்தமோ*
*வாவியினன் மலரருந்தார் நறு*
*நாவிவார்குழ னீள நயனமே.*

இது நான்கடியும் எழுத்தொத்து முன்னிரண்டடியும் மாத்திரை மிக்கு ஏனையடி மாத்திரை குறைந்து வந்தது.

*கொண்ட லெங்கு நிரந்தன கோபுரந்*
*தண்டுளக் கரும் பீன்றதளவமே*
*வண்டு பாட நடித்தன மஞ்ஞையே*
*பண்டு போனவர் சொன்ன பருவமே.*

இது நான்கடியுந் தம்முளெழுத்தொத்து முன்னிரண்டடியுந் தம்முளெழுத்தும் ஒத்து மாத்திரையுமொத்து முதலடியும் மூன்றாமடியுந் தம்முளலகுநிலை ஒத்து வேறுபட்டு வந்தது. இவ்வாறு வருவனவற்றுள் வேறுபாடு அறிந்து பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இனி விருத்தமாவன,

*எழுத்தினா லொத்த லியையாதுந் தம்மி*
*லெழுத்து மலகு மியையா – வழுத்து*
*மனைத்து மளவா மடிநான்காய்ச் சாற்றில்*
*அனைத்தும் வியமமென்றா ராய்ந்து*

என்பதனால் நான்கடியும் எழுத்தொத்து அலகுநிலை ஒவ்வாது வருவனவும் எழுத்து மலகுந் தம்முளியையாது வருவனவும் அளவடி விருத்தம் எனப்படும். அளவடி யெனினும் வியமமெனினு மொக்கும். அவற்றுட் சிலவருமாறு:

*கொள்ளுங் கூற்றி னினைந் துணர்வுசிறி*
*துள்ள நிற்க வொழிந்திடு மாறுபோல்*
*வள்ளல்தரள வனவலையுளக்*
*கள்வரைவரு மென்றே கரந்திட்டார்.*

இது நான்கடியுந் தம்மிலெழுத்தொத்து அலகொவ்வாது வந்தன.

சொற்றவா வளவினுளவா வெனுந்தடத்
திற்றவா யில்ல தெஞ்ஞான்று முள்ளது
சொற்ற வாண் மனத்தினாலுறுவிப்பின்னரே
மற்றவானோக்கினான் மடங்கல் மொய்ம்பினான்;

இது நான்கடியுந் தம்மிலெழுத்துமலகும் ஒவ்வாது வந்தது. பிறவுமன்ன. இனிமேலே கூறிய ஆரியை வைதாளியை என்பனவற்றின் விகற்பம் வருமாறு சொல்லுதும்.

அவற்றுள் ஆரியை வருமாறு:

குறில்போல் ஐ இ உக் குறுக்கல் நெடில்போ
லுறுநீட் டிலகுகுரு வென்றும்-பொறையளந்தா
னீச னெனவு மிவையிரண்டு மிம்முறையால்
பேசப் பெறுவ பெயர்.

மூவுயிர்க் குறுக்கங்களைக் குறில்போலவும் புலுதத்தை நெடில் போலவுங் கொள்ளப்படும். இவற்றுள் இலகுவை மாலென்றுங் குருவை ஈசனென்றும் பெயரிட்டு வழங்குப.

*குருவிலகு மும்மையு முற்றாய வாதி
மருவுடை யீற்று வருவ-நிரையே
நிலனிய மானன் மதிநீ ரிரவி
கனல்கால் வெளியென்று காட்டு.

---

* தமிழ்யாப்புடையார்,

ஆதி யிடையிறுதி முற்றுநே ராநிரை யென்
றோதுவர்நீர் தீமாக மொண்சுவர்க்கந்-தீதிலோர்
சொற்றார் மதிபரிதி கானிலமா நீர்மதியு
முற்றா யவுமுன் மொழிக்கு

எனக் கணலக்கணங் கூறுவர். மேலும் நேரசை ஓரலகு நிரையசை ஈரலகுமுடைய என்பர். ஆதலால் இருகூற்றினரும் மாத்திரை வகையாற் பெயர்முறை ஒப்புமையுடையர். ஆயினும் இந்நூலுடையார்க்குத் தனிக்குறில் தவிர்ந்த மற்றைய நேரசையாவும் குருவின் பாற்பட்டீரலகு பெறுதலின் இருவரும் வழக்கின்கண் முரணுவர் என்றறிக.

அசை மும்மூன்றாகக் குருவில் உறழ்ந்து வருங்காற் கணமென்றும் மற்றக் குருவரின் இலமென்றும் இலகு முற்ற வரின் *இயமான னென்றுந் தானம் பெறும். முதலிற் குருவரின் மதியென்றும் இலகுவரின் நீரென்றும், இடையிற்குருவரின் இரவியென்றும், இலகு வரின்கனலென்றுங், கடையிற் குருவரிற் காலென்றும் இலகுவரின் வெளியென்றும் உரைக்கப்படும். இவைமுன் வருஞ்செய்யுளும் அக்கண வகையாலறியப்படும். மாத்திரையால் விருத்த விரிசார்த்தி உணர்வாகும் என்பதனா லறிக. இரண்டெழுத்து முதனான்கு இலகு கூடிய கணந் திரண்ட ஏழிறுதியோர் குருவரிற் பாதமாம். பிற்பாகத்தாறாமிடத்து ஓரிலகுவே வரும். ஒற்றித்த இடக்கணத்து இடைக்குரு வரின் வழுவாம். வரலாறு:

**அம்பொற் கயிலைக்கிறைவர்**
**வலங்காரம் பெறாதநோதகவினால்**
**வெம்பித் திரிவர் மதியான்**
**மேவினள்வார்வதி யாவிகாவாயால்.**

எனவும்,

**இசைமிகு மொழியா ரனையே**
**அசைவுறு மனமொழி மதுமொழியா ரனையே**
**நசைவுறநீ பேதுறலே**
**பசையொடு சேருகவாழிய பேதுறலே.**

எனவும்,

**அனுபம பண்டித சோழ**
**மனுவவனா குலமொழி வளவா வருளே**
**யெனவரு வரதாமிகவே**
**யனவரதமுமுனது தோகை வேறுறுமால்.**

எனவும், இவையனைத்தும் முதலடியும் மூன்றாமடியும் பன்னிரண்டு மாத்திரையாய் இரண்டாமடியும் நான்காமடியும் நன்னான்கு கணமாயிறுதி குருவருவதென மாத்திரையாற் கண்டுகொள்க. இவ்வாறன்றிப் பிறவாறு வருவனவும் ஆய்ந்தறிக.

இனி வைதாளியை வருமாறு:

---

* இயமானனைத் துறக்கமென்றும் பெயர் கூறுவர்.

ஆறலகு தீமா லடலேற் றிறை முதன்மூன்
றீறு மிரண்டு மெனுமடிகள்-வேறுமுத
லீர்மாத்திரையா மிரண்டடை வொத்தநடை
சேர்வதுவை தாளியையாச் செப்பு.

ஒற்றித்த முதலடியும் மூன்றாமடியும் முன் ஆறு மாத்திரையாய்ப் பின்னிடை இலகுவான கணமொன்றும் ஓரிலகும் ஒரு குருவும் வருவது. இரட்டித்த அடியான இரண்டாமடியும் நான்காமடியும் முன்னெட்டு மாத்திரையாய்ப் பின்னிடை இலகுவான கணமொன்றும் ஓரிலகுவும் ஒருகுருவும் வருவது. இது வைதாளியைக்கு இலக்கணமாம். அவை வருமாறு:

கருவேயே றூர்வனாளிலே
வருவேனென்றே போந்த மன்னவன்
றிருவேறாய்த்தூர வெய்தினார்
மருவா ரெனினென் னின்னுயிர் நிலா

எனவும்,

கொன்றைப் புதுவேரி கொண்டிதோ
மன்றற் றண்ணிள வாடை வந்ததா
லொன்றிப்பல கோபமுள்ளினான்
வென்றிக் கார்முக வேந்த மாரவேள்.

எனவும்,

கானத்தண் கொன்றைமாலைதா
மானத்தின்றென் கொம்பு வாடுமால்
வானத்திங்கட்கு மாறுகொல்
நானித்தாற்றில னாரிபாகனே.

எனவும்,

இவ்வாறன்றிப் பிறவாறு வருவனவுங் கண்டுகொள்க.

இனிக்

குருலகுமுற் றாயுங் குருலகு மாறி
வரினுமது மைகாச மானங்-குருலகுவின்
பின்றான் வரிற்பிர மாணம் விதானமா
மென்றா ரிரண்டா மெனின்.

நான்கடியு முற்றக் குருவே வரினு முற்றலகுவே வரினுங் குருவுமிலகுவுமாய் முறையே மாறி வரினு மைகாசமான மென்று பெயராம். இலகுவின்பின் குருவாய் முற்றவரிற் பிரமாணமாம். இரண்டிலகுவும் இரண்டு குருவுமாய்முற்றவரின் விதானமாம் என்றாரெனக்கொள்க. அவை வருமாறு:

காரார் தோகைக் கண்ணார் சாயற்
றேரா ரல்குற்றேனார் தீஞ்சொற்
போரார் வேற்கட் பொன்னேயின்னே
வாரா ரானார் போனார் தாமே.

இது முற்றக்குருவே வந்த மைகாசமானம்.

வேரி சேரு மீது லாவு
மாரி கூரு மீரவாளி
வீர மார னேவி னாலு
நாதி சோர மேவு நோவு.

இது குருவும் இலகுவும் முறையே வந்த மைகாசமானம்.

இணங்குமாத ரேசவே யிரங்கி மோத வேலைமா
னணங்குலாவு வாளியா னணிந்த சாபமாயமா
லுணங்கி மேனிவாடுமா லுறந்தை யாளு மானதா
வணங்கினாவி காவனீ யணிந்தவார மாகுலம்.

இது பிரமாணம்.

மதுவாய் சேர் மலரானே மயறாவா முறையானே
முதுவானோர் தொழுதாளாய் முரணாவாய் மொழியானே
கதுவார் சேர்மதியானே கழியாநோ வொழியாவா
றிதுவானா லிறையோனே யினியாழே நினையாளே.

இது இரண்டு இலகுவும் இரண்டு குருவும் முறையானே வந்த விதானம்.

இவை எல்லாஞ் சந்தக்கூறுபாட்டான் வந்தன. மற்றுஞ் சந்தங்கட்குமிப்படியே வருவன அறிந்து பெயரிட்டு வழங்குக.

ஒரெழுத்துக் குன்றினனி சாத்தாம் விராட்டாகு
மீரெழுத்துக் குன்றி னியமான–னேராப்போ
யோரெழுத்து மிக்க புரிக்காஞ் சுராட்டென்ப
வீரெழுத்து மிக்க வெனின்.

இதன்பொருள் மேற்சொன்ன விருத்தங்கள் ஒரேழுத்துக் குன்றில் அனிசாத்தென்றும், ஈரெழுத்துக் குன்றின் விராட்டென்றும், ஒரெழுத்துமிகிற் புரிக்கென்றும், இரண்டெழுத்து மிகிற் சுராட்டென்றும், இப்படிப் பெயரிட்டு வழங்கப்படும். அவை வந்தவழிக்கண்டுகொள்க. முதலடியும் ஈற்றடியும் ஒரெழுத்துக் குறைந்து இடை இரண்டடியும் மிக்குவந்தன பவமத்திமமென்றும், இவை இரண்டடியுங் குறைந்து முதலடியும் ஈற்றடியும் மிக்குவந்தன பீலிகாமத்திமமென்றும், பெயரிட்டு வழங்கப்படும். இவையும் வந்தவழிக் கண்டுகொள்க. மேற்போன விருத்தங்கட்கு எழுத்தும் அலகும் இன்னதுணை எனவும் நான்கடிக்கு இன்னதுணை எனவும் அறிதற்கிலக்கணம்.

**சந்த வெழுத்தலகிற் றள்ளி யரைசெய்து**
**சந்த வெழுத்தி னரைகூட்ட—முந்துகுருப்**
**பாதத்தளவாகும் பாதமே மாறிவர**
**வேதந்தீர் நான்கடிக்கு மெண்.**

என்பதனாலறிக. இனித் தண்டக மாமாறு சொல்லுதும்.
(33)

**மருவுநெடில்குறில் வல்லொற்றுமெல்லொற் றிடையிலொற்றென்று**
**உருவந்திகழ்ந்தவை யுய்க்குங்குறிக ளொப்பார்நிரைநேர்**
**துருவமலிபுள்ளி வட்டம்விலகென்பர்தொன்மைகுன்றாத்**
**திருவுமழகும் புகழுந்திகழ்தரு தேமொழியே.**

(இ-ள்.) தண்டகத்திற்கு இலக்கணஞ் சொல்லுவானெடுத்துக் கொண்டான். அஃதாமாறு: நெடிலுக்கு நிரையசையுங் குறிலுக்கு நேரசையும் வல்லொற்றுக்குப் புள்ளியும் மெல்லொற்றுக்கு வட்டமும் இடைஒற்றுக்கு விலகு மைந்து குறியாம் எ-று. இதனுள் நெடிலிரண்டுமாத்திரை உடைமையின் முன்வைத்தார். குறில் ஒருமாத்திரையுடைமையிற் பின்வைத்தார். வல்லொற்றுத் தனக்குச்சொல்லிய குறி எவ்விடத்துந் தவிராது பெறுதலின் அதற்குப் பின் வைத்தார். மெல்லொற்றுத் தனக்குச்சொல்லிய குறில்நெடிற் பின்மிகப் பெறாதொழிதலானுங் குறிற்பின்பு ஒரோவழிப் பெறுதலானும் அதன்பின் வைத்தார். இடைஒற்றிற் பதின்மூன்றாம் ஒற்றும் பதினாறாம் ஒற்றும் என்னும் இரண்டுந் தவிர ஒழிந்த ஒற்றுச் சிறுபான்மையாற் பெறுதலானும் மெல்லொற்றோடு மயங்கி வருதலானும் பின்படைய வைத்தார். இவை குறிபெறுகையும் பெறா தொழிகையும் உச்சாரணையாற்

கண்டுகொள்க. இவ்விடத்து ஐகாரமும் ஔகாரமுங் குற்றெழுத்தாமென்க. வரலாறு:

துற்றுற் றன்றி வெம்போர் செய்த விற்கைப் பன்மன்முன்
போடவோர் தத்திற்றுன்றுவன் பாய்பரி
யுய்த்துத் தன்மை கொண்டோடிய
வெற்றிச் செம்பியன் பார்புகழ் கொற்கைக் கண்டன்
வன்பாரதம் வெற்புக் கொண்டுதிண்
போர்புரி கொப்பத் தன்றெதிர்ந்தோர்வெறு
கொற்றத் தொங்கல்சிங் காசனமொற்றைச் சங்குவெண்
சாய்மரை குத்துப்பந்தர்முன் பாவிய
முத்துப்பந்தி முன்றான்மகி

ழொற்றைப் பெண்டிர் பண்டாரமொ டொற்றைத்
தன்பெருஞ் சேனையு மிட்டிட்டன்றுடைந்
தான்வசைப் பட்டுக்கண்ட வங்காரனே.

இது குற்றெழுத்து. நெட்டெழுத்துக்களும் வல்லொற்று மெல்லொற்றுக்களும் குறிமுறையே பெற்று இடை ஒற்றுக்கள் குறி பெறாது வந்த துண்டம் பதினாறாய் நான்கடியாய் வந்த தண்டகம். இதனுள் ஐகாரமுங் குற்றெழுத்தாய் வந்தது. இடை ஒற்றுக் குறிபெறாமை உச்சாரணையே கருவியாக அறிக. (34)

**இப்படிக்கட்டளைத் துண்டமொன்றாக்கிய தீரிரண்டில்**
**ஒப்புடையெட்டிற் பதினாறினின் முப்பத்தோரிரண்டில்**
**செப்பிடவாக்குக தண்டகம்வல்லொற்றல் லாதவொற்றுத்**
**துப்புடனுச்சாரணை யினல்லான்மிகத் தோன்றரிதே.**

(இ-ள்.) முன்பு சொன்ன குறிகளாலொரு கட்டளைத் துண்டத்தையிட்டு அத்துண்டம் நாலாற்றான் எட்டாற்றான் பதினாறாற்றான் முப்பத்திரண்டாற்றான் முடிக்க அது தண்டகமாம். அதன்கண் வல்லொற்றல்லாத ஒற்று உச்சாரணை இல்லாது குறிபெறுகை அரிது. எ-று. முன்சொன்ன தண்டகம் பதினாறு துண்டத்தால் வந்தது. பிறவுமன்ன. இக்கட்டளை பிழைக்கில் அது தண்ட கப்போலியாம். இனி வண்ணம் இருபதாவது சொல்லுதும். (35)

**மெல்லிசையேந்த லொழுகுருட்டெண்ணொரு வேமுடுகு**
**வல்லியல்பாவகப் பாட்டுநலிவகைப் போடியைபு**
**சொல்லியசித்திரந் தாவுபுறப்பாட் டளபெடையும்**
**வல்லிசைதூங்க னெடுஞ்சீர் குறுஞ்சீ ரிவைவண்ணமே.**

*(இ-ள்.) மெல்லிசை வண்ணம் முதற் குறுஞ்சீர் வண்ணம் ஈறாகக் கூறியன இருபதும் வண்ணமாம் எ-று. மெல்லிசை வண்ணமாவது மெல்லெழுத்து மிகுவது. ஏந்தல் வண்ணமாவது சொன்னசொல்லே சிறந்து வருவது. ஒழுகு வண்ணமாவது ஓசையினொழுகுவது. உருட்டு வண்ணமாவது அராகந் தொடுப்பது. எண்ணுவண்ணமாவது எண்பெயர் மிக்குவருவது. ஒரூஉ வண்ணமாவது அடியடிதோறும் ஒன்றாய்த்தொடை உடைத்தாவது. முடுகு வண்ணமாவது அடியிற்ற தறிய லாகாததாய் நீண்டவடித்தாய் அராகத்தோடு கூடிவருவது. பாவுவண்ணமாவது நூற்பாப் பயிலவருவது. அகப்பாட்டு வண்ணமாவது முடியாதது போல முடிவது. நலிவு வண்ணமாவது ஆய்தமுடைத்தாய் வருவது. அகைப்பு வண்ணமாவது அறுத்தறுத் தொழுகுவது. இயைபு வண்ணமாவது இடையெழுத்து மிகுவது. சித்திர வண்ணமாவது குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் விரவி வருவது. தாவு வண்ணமாவது இடையிட்டு வந்த எதுகைத்தாவது. புறப்பாட்டு வண்ணமாவது முடிந்தது போன்று முடியாதது. அளபெடை வண்ணமாவது அளபெடையில் வருவது. வல்லிசை வண்ணமாவது வல்லெழுத்து மிகுவது. தூங்கல் வண்ணமாவது வஞ்சிபயிலவருவது. நெடுஞ்சீர் வண்ணமாவது நெட்டெழுத்துப் பயில வருவது. குறுஞ்சீர் வண்ணமாவது குற்றெழுத்துப் பயிலவருவது. எனக்கொள்க. வண்ணம்* நூறென்பாருமுளர். அவை வந்தவழிக் கண்டுகொள்க.* *(36)*

---

* *வண்ணந் தொகையானைந்தும் வசையா னிருபதும் விரியானூறு மென்ப. தொல்காப்பியர் முதலானோர் இருபதென வகுத்தனர். கையனார் அவினையனார் முதலானோர் நூறென விரித்தனர். நூறாமாறு:*

> **தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை சொற்றவற்றைப்**
> **பாங்கே யகவ லொழுகல் வலிமெலி பாற்படுத்தி**
> **ஓங்கோர் குறினெடில் வல்லினமெல்லின மோடிடையைத்**
> **தாங்கா துறழ்தரத் தாம்வண்ணநூறுந் தலைப்படுமே.**

## யாப்பதிகாரம் முற்றும்

# யாப்புப்படலம் முற்றும்

# ஐந்தாவது-அலங்காரம்
# அலங்காரப்படலம்

**உரையுடலாக வுயிர்பொருளாக வுரைத்தவண்ண**
**நிரைநிறமாநடையே செலவாநின்ற செய்யுட்களாந்**
**தரைமலிமானிடர் தம்மலங்காரங்க டண்டிசொன்ன**
**கரைமலிநூலின் படியேயுரைப்பன் கனங்குழையே.**

*(இ-ள்.) சொல்லே உடலாகவும் பொருளே உயிராகவும் வண்ணங்களே நிறமாகவும் நடையே செலவாகவும் நின்ற செய்யுட்களென்னும் மானிடவர் ஆபரணங்களைப் பெயர் வேறுபாடுணர்த்துதற்குத் தண்டியார் சொன்னபடியே இலக்கணஞ் சொல்லுவன்- எ-று. இவ்விடத்து மானிட வடிவம் முன்பேயுண்டாம். ஆபரணங்கள் பின்னை வேறொருவனாற் செய்து பூட்டப்படுவன. அதுபோலச் செய்யுட்கண் முன்பே உளவாய் அலங்காரம் பின்பு ஒருவனாற் செய்திவற்றிற் பூட்டப்படுவன அல்ல. செய்யுளுள்ள பொழுதே இவையு முளவாதலில் ஆடை ஆபர ணாதிகளால் அலங்கரிக்கப்படா நின்ற ஒருமானிட வடிவிற் கேற்ப உருவகஞ்செய்தாரெனக் கொள்க. அலங்காரமெனவே ஆடை ஆபர ணாதியென எல்லாமடங்கும். அது என் போலவெனின், இவனை அலங்கரிக்க என்றபொழுதே எல்லா மடங்கினாற் போல என்க. ஒருத்தி எல்லா ஆபரணங்களும் பூண்டு நின்றாளேயாயினும் அவற்றின் மிக்கிருந்ததொன்றாலாரம் பூண்டு நின்றாளென்றதுபோல ஒருசெய்யுட்குப் பல அலங்காரமாயினும் மிக்கதொன்றால் வழங்குக. இரண்டு ஒத்திருந்ததாகில் அதனை அவ்விரண்டின் பெயரானும் வழங்கினுமிழுக்காது. இரண்டுக்கு மேற்பட்டிருக்கில் விரவியலாமென்க. சொல்லே உடலாக என்பதினாற் சொல்லாவன செய்யுட்குறுப்பாகிய சீர் பன்னிரண்டையும் எனக் கொள்க. ஒருசொல்லே ஒருசீராய் வருவது சிறப்புடைத்து. எழுத்தும் அசையுஞ் சீருந் தளையும் அடியுந் தொடையும் அல்லவே யாப்பினுக்குறுப்பாவன எனில் அது பொருந்தாது. எழுத்துக்களை*

அசைக்குறுப்பென்றமையால் அவையெல்லாம் ஒன்றுக்கொன்று உறுப்பாய் யாப்புக்கு உறுப்பாவனவாம். அன்றியுந் தொடைகளையும் ஆதாரமாகச் சொன்னமையாலது பொருந்தாதென்க. (1)

**சார்ந்தவழக்கொடு தப்பாவடவெழுத் தைத்தவிர்ந்து**
**தேர்ந்துணர்வார்க்கு மினிமையைத்தந்துசெய் யுட்களினும்**
**நேர்ந்துசொலப்பட் டுயர்ந்தவரானிர லேபொருளை**
**ஓர்ந்துகொளப்படுஞ் சொற்குற்றமற்றவுறுப்பென்பரே.**

(இ-ள்.) வழக்கதிகாரத்தோடும் பொருந்தித் தமிழினோடுங்கூடி வடவெழுத்தைத் தவிர்ந்து பெரிதும் இன்பந்தந்து பெரியோராற் செய்யப்பட்ட செய்யுட்களினும் வந்து திரிதற் பொருட்கோளின்றியே நிரலே பொருள்விளங்க இருக்குஞ் சொல்லுக்கள் குற்றமற்ற உறுப்பாவன-எ-று. அப்படியே குற்றமற்ற உறுப்புக்களால் நிரம்பிய உடலே குற்றமற்ற உடலாவதாம்; மணிப்பிரவாளத்தினுக்கும் விரவியல் செய்யுட்களுக்கும் வடவெழுத்து வருகவென்று சிறப்பிலக்கண உண்மையாலவற்றில் வடவெழுத்து வருவது குற்றமன்றென்க. (2)

**தெற்றிவழக்கொடுதேர்ந்துணர்வார்க்கின்பஞ்செய்யலின்றிப்**
**பற்றிவடநூ லெழுத்துக்களோடு பயின்றுரையின்**
**மற்றிவையில்லென்றுவாங்கவும்பட்டுப்பொருண்மருண்டிப்**
**பெற்றியுடைச்சொற்பழித்தவுறுப்பென்றுபேசுவரே.**

(இ-ள்.) இப்படிப்பட்ட சொற்கள் பழிக்கப்பட்ட உறுப்பாவன எ-று. எனவே அவ்வுறுப்புக்களால் நிரம்பின உடல் குற்றப்பட்டதாயிற்று என்பது. ஆயின் மணிப்பிரவாளத்துக்கும் விரவியலுக்கும் வடஎழுத்துளவெனில் அவையிற்றுக்கன்று. இவ்விலக்கணங் கீழ்க்கணக்கு முதலாகிய செய்யுட்களுக்கே என்றறிக. அவையிற்றுக்கு வேறே இலக்கணமுண்டென்பது. அன்றியும் அருணனும் வெள்ளியுமுதலான பெரியோர்க்கும் உறுப்புக்குற்றமுள என்பது. உறுப்புக்குற்றங் காரணமாக யாப்புக்களைப் பழிக்கப்படா வோவெனின் யாப்புக்களின் வேறு சிறப்புடைய பயனுளவாகில் அப் பயனோக்கிக் கொண்டாடப்படும். ஆயினுங் குற்றங் குற்றமேயென்பது. அவைகள் அன்றுள்ளானொருகுரிசிலைப் புகழ்ந்து செய்யுங் கவியுண்மறந்தேயும் வரப்பெறாவெனக் கொள்க. ஆகாமைக்குக் காரணம்யாதெனின் தச்சநூலில் இப்படிப்பட்ட மனைதனை

எடுக்கிற்குடிபுக இன்னநன்மை தரும் இன்னதீமை தருமென்று சொல்லுமென்பது. மற்றுமிப்படிப்பட்ட யானை குதிரை ஆயுதமுடை யானுக்குப் பொல்லாங்கைத் தரும் நன்மையைத் தருமென்று நூலுண்மை யானென்பது. ஆகிற் பகைவராயுள்ளாரைச் சாவவுங் கெடவும் பாடலாகாதோவெனின் அற்றன்று. பாடினகவி பாட்டுண்டான் கொள்ளினல்லது பயன்கொடாதென்பது. என்போலவோவெனின் குதிரை இலக்கணமறிவான் குதிரை கொள்ளுமிடத்து இக்குதிரை கொள்ளின் எனக்குப் பொல்லாதென்று தவிரும். மற்றும் இவ்வியானை கொள்ளிற் பொல்லாது இவ்வீட்டிலிருக்கிற் பொல்லாது என்னும் இலக்கணமறியான் பயன்கொள்ளான். பாட்டுண்பானும் இலக்கணந் தானறிதலின்றேற் பிறரை இட்டாராய்தல் செய்து கைக்கொள்ளும்அறியாதும் ஆராயாதுங் கொள்ளிற் பயன்கொடாதென்பது. அற்றன்று. ஆராயாது கைக்கொண்டாருஞ் சாவவுங் கெடவும் பழையோர் பாடினாரெனின் அது பாட்டின் பயனால் வந்ததன்று; அவர்கள் சொற்பழுது ஆகாமையி லெனக்கொள்க. (3)

ஆக்குதல்கேட்டவர்க் கின்பத்தினையன்றி யவ்வவரே
போக்குதல்செய்த கருத்திற்பொருளாய்ப் புராதனரால்
நீக்குதல்செய்தகுற் றத்தைக்கடத்த னெறிமுறையே
தாக்குதல்செய்த பொருள்காண்சிறப்புயிர் தாழ்குழலே.

(இ-ள்.) இப்படிப்பட்ட பொருள் சிறப்புயிராவது எ-று. உயிருக்குச் சிறப்பாவது வலியுடைமை. வலியில்லானை ஆவியில்லாதான் என்பரெனக் கொள்க. சொற்குற்றத்தாற் பாட்டுண்ட தலைமக னுடலுக் கூனம் பொருட் குற்றத்தா லுயிர்க்கூன மென்பதனாற் பொருட் குற்றந் தவிர்தல் சிறப்புடைத் தென்பது. குண்டலகேசியும் உதையன்கதையும் முதலாகவுடையவற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தனவெனின் அகலக்கவி செய்வானுக்கு அப்படி யல்லதாகாதென்பது. அன்றியும் அவை செய்தகாலத்து அச்சொற்களும் பொருள்களும் விளங்கி இருக்குமென்றாலும் அமையும் எனக்கொள்க. (4)

**தெரிவானரிது பொருளெனப்போதல் சிதைவுசொல்லப்**
**புரிவான்பொருளுக்குமேறுதன்மற்றும்பொருளுண்டென்று**
**பரிவானுடன்சொல்லவேண்டுதறென்றிந்தப்பாட்டில்வைத்த**
**விரிவாம்பொருளென்னு மாவியின்குற்றம் விளங்கிழையே**

(இ-ள்.) பொருள் தெரியாதெனப்படுதல் குற்றஞ்சொல்லக் கருதினான் சொன்னபொருளுக்குமேறியிருத்தல் ஒருவர் இப்பாட்டின் பொருண்மேல் எதிர்த்தாலஃது கைக்கொளப் படாதொழிதலென இவைமுதன் மற்றும் இப்படிப்பட்ட எல்லாம் உயிர்க்குற்றமாம்- எ-று. இனிச் சொல்லே உடலாகப் பொருளே உயிராகநின்ற செய்யுளின் நிறமென்று சொல்லப்பட்ட வண்ணம் முன்னை யாப்புக்களிலே சொல்லப்பட்டதெனக் கொள்க. இனி நடையாவது தளர்நடையும் இன்னியநடையும் என இரண்டு. தளர்நடையாவது தண்டக நடை, இன்னிய நடையாவது பிறசெய்யுளின் நடையெனக் கொள்க. (5)

**ஈண்டுஞ்சிலீட்ட முதாரதை காந்தி புலன்சமதை**
**தூண்டுஞ்சமாதி பொருட்டெளிவோகஞ் சுகுமாரதை**
**ஈண்டுமின்பத்தொடு பத்தாவியென்னும் விதர்ப்பன்கௌடன்**
**வேண்டுமிவற்றை விபரீதமாக விளங்கிழையே.**

(இ-ள்.) சிலீட்டமும் உதாரதையுங் காந்தியும் புலனுஞ் சமதையுஞ் சமாதியும் பொருட்டெளிவும் ஓகமுஞ் சுகுமாரதையும் இன்பமும் என ஆவி பத்தென்று விதர்ப்பக்கவிகள் வேண்டுவர் இவையிற்றையே மாறாகவேண்டுவர் கவுடரென்னும் புலவர்-எ-று. (6)

**ஒப்பார்பொருளே யுயிரானமையி னுரைத்தவற்றைத்**
**துப்பாரலங்கார மாகத்தொகுக்கச்சொல் லும்பொருளுஞ்**
**செப்பார்தரமுற்றி லேயலங்காரந் திகழ்வதன்றேற்**
**தப்பார்தருமென்று கண்டுரைத்தார்பண்டு தண்டிகளே.**

(இ-ள்.) பொருளையே பிராணனாகக் கொண்டாராகலின் மேற் சொல்லப்பட்ட பிராணன்களையே அலங்காரம் என்பதிந்நூ லுடையார்க்குத் துணிவு. இது தண்டியார் சொன்னபடியே சொல்லுவனென்றெடுத்துக் கொண்ட மேற்கோளொடு மாறுகொள்ளும் எனில் அலங்காரங்களை அல்லாது பிராணன்களை அவர்சொன்னபடி சொல்லுவன் என்னாமையான் மாறுகொள்ளாதென மறுக்க. இனி இளகியிருந்த சொல்லும் இளகியிருந்த பொருளும் இன்றி முற்றியபொழுதே அலங்காரங்கள் விளங்குவ தென்பது தண்டியார்க்கு முடன்பாடாம் எ-று. என்போலவெனின் உயிர்க்கண்ணும் உடற்கண்ணுங் குற்றமுடையாளொருத்தி ஆபரணம் பூண்டால் விளங்காதவாறுபோல என்பது. அது மூக்குங் கண்ணும் முதலிய

உறுப்புக்குறைந்தாளுஞ் சாகைக்கண்ணு மையமும் முதலாகிய உயிர்நோவுகளை உடையாளும் ஆபரணங்களால் விளங்காத வாறுபோலவெனக்கொள்க. வரலாறு:

**தம்மோக மில்லெனினுந் தம்மைமோ கிந்தவர்க**
**டம்மோகந் தீர்ப்பதுவுந் தன்மைக்கண்**

என முற்றாத சொல்லானுமிளகியிருந்த பொருளானும் வந்தமையாற் குற்றமாயிற்றெனக் கொள்க. (7)

**செறிவார்சிலீட்டந்தொகைமிகையாமோகஞ்சீர்ச்சமதை**
**அறிவாரடியொப்ப தாகுஞ்சமாதி யவனிக்கொப்பப்**
**பிறிவார்குணமொன் றதொன்றிக்கிடப்பன மென்மையொன்றின்**
**நெறிவார்குழலி சுகுமாரதையென்று நேர்ந்துரையே.**

(இ-ள்.) சிலீட்டமென்னும் உயிர் சொற்செறிபுடைத்தாம். ஓகம் என்னுமுயிர் முழுதும் ஒருமதமாகத் தொகுத்த தொகையினை உடைய தென்பது. சமதையென்னும் உயிரொத்திருந்த பதங்களை உடையது. சமாதி என்னும் உயிர் ஒன்றின் பக்கலுள்ளதொரு பண்பையே உலகுக்கொத்திருக்கும் வண்ணம் அப்பண்பு குன்றி இருப்பதொன்றின்கணுண்டாகப் புணர்ப்பது. சுகுமாரதையாவது வல்லொற்று நீங்கியுள்ள சொற்களால் ஆக்கப்பட்டு மெல்லிதாயிருப்பது.- எ-று. (8)

*** ஆனாவழகினைக் காந்தியென்கின்ற தநுதமிழில்**
**நானாவிதமாய் நடைபெற்றியலு நனிபுகட்சி**
**தானாமிடத்தினும் வார்த்தையின்கண்ணுந் தலைசிறந்து**
**தேனாய்விதர்ப்பருக்குங் கவுடர்க்குந் திறப்படுமே.**

(இ-ள்) காந்தியென்னும் அலங்காரம் யாப்பு வனப்பெனக் கொள்க. அது தமிழிற் பல கூறுபாடுபெற்றுப் புகட்சியினும்

---

* ஆனாவுலகிற் கரும்புகழ்காந்தி கொடைப்புகட்சி
தான்ஆம் உதாரம்; பொருள் விளக்கும் செய்யுள் தான் புலன்ஆம்
தேன்ஆர் சொல் அன்றிப் பொருளால் தெளியில் பொருள்தெளிவு ஆம்
தானாடுசொற்பொரு ளிற்சுவைதோன்றிற் றகுமின்பமே.

என எஞ்சியவற்றையுஞ் சேர்த்துப் பிற்காலத்துச் செய்யப்பட்ட சூத்திரமொன்று மதுரைநாட்டுப் பிரதிகளிலுளது.

வார்த்தையினும் உலகிறந்த நன்பொருட் பொலிவானின்று விதர்ப்பர்க்குங் கௌடர்க்கும் நெறிப்பட்டியலும்-எ-று. ஒழிந்த அலங்காரங்களோவெனின் அவ்வப்பெயராலே தம்பொருள் விளங்கியிருக்கும் எனக்கொள்க. வரலாறு:

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

இது சொற்செறிவுடைமையாற் சிலீட்டமென்னுமுயிராயிற்று. இது சிலீட்டையெனவு மமையும்.

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

இது தொகைமிக்கு வந்தமையால் ஒகமென்னுமுயிராயிற்று. தொகைமிகையாலோகமென்பர். அது எண்ணில்வந்தசொற்களை ஒன்றாகத் தொகுத்தலின்.

வேரிக் கமழ்தாரரசன் விடுகின்ற போதுஞ்
சோரிக்கலத்தின் வகையாற் கொலைசூழ்ந்த போதும்
பூரித்தல் வாட லிவற்றாற் பொலியாது விட்டான்
பாரித்த வெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்.

இது நான்கடியும் எழுத்தொத்து வந்தமையாற் சமதையென்னும் உயிராயிற்று.

கடுங்கை வயலுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலந்-தடஞ்சோர
நீளரிமேற் கண்படுக்கு நீணீ ரவந்தியார்
கோளரியே றிவ்விருந்த கோ.

என்றதனுட் கண்ணுடையவற்றின் பக்கலுள்ள உறங்குதற் றொழிலைக் கண்ணில்லாத குவளையின் கண்ணு முலகிற்கொக்கப் புணர்த்தமையாற் சமாதியென்னும் உயிராயிற்று.

யானையால் யானையு மேவுவான் யானை
வினையான் வினைமையு மாம்.

இது வல்லெழுத்து நீங்கலாய் மெல்லிதாகிய ஓசையொடு வந்தமையாற் சுகுமாரதை என்னும் உயிராயிற்று. இதனை இழையெனவும் அமையும்.

மானே யுனது வளர்கொங்கை வீக்கத்தைத்
தானேது மெண்ணாது தாமரையோன்-மீனேயும்
வானத்தை யித்தனையு மந்தமா கப்படைத்தான்
ஞானத்தை யில்லான்போ னன்கு.

இஃது உலகிறந்த நன் பொருட்பொலிவு வரவு புகட்சியின்கண் வந்தமையாற் காந்தியென்னும் உயிராயிற்று. வரைதோள் தாமரை புரை தொடையென்றித் தொடக்கத்தன எல்லாங் காந்தியாமெனக்கொள்க. இச்செய்யுள் தண்டியார் இலக்கியப்படி பொருளெனக்கொள்க. இனி உதாரதையாவதுதலையென்றும் இடையென்றுங் கடையென்றும் முத்திறமாகச் சொல்லப்பட்ட வள்ளல்களுட் டலையாகுவள்ளல் கொடையினைப்புகழ்ந்து செய்வது.

தண்பனி முகிறகைத் தலையாகு வள்ளல்
ஒண்புகழ் கிளப்ப துதாரதை யாகும்.

காலையும்வந்த கவைஞர் கதிர்கரந்த
மாலையும் வாராதே யென்செய்வார்-நீலம்
புனிற்றா நிரைமேயும் புள்வேளூர்ப்பூதா
கனிற்றாகா ணம்மறையார் கை

எனக்கொள்க. புலனாவது பொருள் விளங்கியிருப்பது.

சொலப்படும் பொருளும் அச்சொல்லும் வண்ணமும்
புலப்படக் கிடப்பது புலனெனப் படுமே.

வரலாறு:

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லா
தன்றே மறப்பது நன்று.

இது பொருள் விளங்க இருத்தலாற் புலனாயிற்று. பொருட்டெளிவாவது.

தெருள்படு மொழிவயிற் றெரியாததற்குப் பொருளாற்
றெரிவது பொருட்டெளி வாகும்.

வரலாறு:

குளம்பின் மடிநாகர் புண்ணீரிற்செம்மை
வளந்திகழு மால்கடல்வாய் நின்று-விளங்கொளிசேர்

மாலாய் முனிந்தெடுக்கப் பட்டாளிம் மண்மகளாஞ்
சேலாருங்கண்மயிலே சென்று.

இதனுட் குளம்பென்ற பொழுது மாலுருவாய்நின்ற பன்றியின் குளம்பென்பது. இது பொருளாற் றெளிதலாற் பொருட்டெளிவெனப்பட்டது. இனி இன்பமென்னும் உயிரலங்காரமாவது:

சொல்லின் கண்ணும் பொருளின் கண்ணுஞ் சுவையுடைத்தாவது. அதுதான் முன்னைப் பிறப்பினுங் கவிப்பொருத்தமுடை யானுக்கல்லாது தெளியாது.

நவையறு மொழியினு நயத்தினும் பொருளினுஞ்
சுவைவரத் தொடுக்குந் தூக்கே யின்பம்

என்பதாகலின்.

வரலாறு:

கதிர்த்தாரகையும் வெண்டிங்களு மாகவெய் யோனைக் கையாற்
பிதிர்த்தா ருளர்பெரும் பாலுடன் றாங்கிற் பின்றாக்கவியோ
டெதிர்த்தாரை வென்றண்ட மூடுநின் றானருள் போலுந்தன்மை
யுதிர்த்தா ரழல்கங்கு லாயெங்கும் பெற்ற தொளிவிசும்பே.

இது நான்கடியும் எதுகையும் வழிமொழியும் பொருட் பொலிவும் பெற்று நயனொப்ப முடிந்தமையால் இன்பமென்னும் உயிரலங்காரமாய் நின்றது. இதனைத் தண்டியார் மாதுரியமென்பர். காந்தியென்னும் உயிர் சிறப்புடைமை யாற்றனித்திலக்கணஞ் சொன்னாரெனக் கொள்க. அவைபத்துந் தண்டியுளுயிராயின. இந்நூலுடையார் அலங்காரமாய் நிறுவலால் உயிரலங்காரமாயிற் றென்க. இனித் தன்மை முதலிய அலங்காரமாமாறு சொல்லுகின்றான். (9)

திரப்பியஞ்சாதி தொழில்குணமாந் தன்மைசீருவமை
பரப்பியவொப்பா முருவகமாவ ததன்றிருவு
கரப்பியசொல்லெங்கு மொன்றேயுபகார மேல்விளக்கு
நிரப்பியமீட்சியு மற்றதன்போலி நிரைவளையே.

(இ-ள் திரப்பியத் தன்மையுஞ் சாதித் தன்மையுந் தொழிற் றன்மையுங் குணத்தன்மையுமெனத் தன்மை என்னும் அலங்காரம் நான்கு வகைப்படும். தன்மையாவது இயல்பெனக்கொள்க. உவமையென்னும் அலங்காரமாவது பழித்துத்தான் பட்டாங்கு சொல்லித்தான் ஒன்றோடொன்றுவமிக்கும் இடத்து 'உவமைக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் பொதுவாய் நின்றதொரு பண்புபற்றி வருமெனக்கொள்க. கடல்போன்றது படையென்றது உவமையாம். கடற்படை என்று படையைக் கடலாக வியந்துவரின் உருவகமாமெனக் கொள்க. ஒருசொல்லே கவிக்கெங்கும் உபகாரமாய் நின்றது தீபகமாம்-எ-று. வரலாறு:

கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்றாழ் சடையர்-பொறிவிரவு
நாகத்தர் சூலத்தர் நன்னுதலா டானிருந்த
பாகத்த ரென்றே பரசு.

இது திரப்பியத்தின் தன்மையைச் சொன்னமையால் திரப்பியத்தின் தன்மையென்னும் அலங்காரமாயிற்று.

உருப்பெறக்கிடந்த வுண்மைசான் மரபிற்
றிரப்பியம் பகர்வது திரப்பியத்தன்மை

எனக் கொள்க.

துண்டஞ் சிவந்திறகும் பச்சையாய்த் தொன்மைத்தார்
கண்டம் பொலியக் கவின்பெற் றனகிளியே

என்றும் "பசுங்காய் கருங்காக்கை" என்றுஞ் "செம்பவளம் வெண்குருகு" என்றும் இன்னவையெல்லாஞ் சாதியினுடைய தன்மையைச் சொன்னமையாற் சாதித்தன்மை என்னு மலங்காரமாயிற்று. பிறவு மன்ன.

இன்மை யிகழா தினத்திற் கொத்த
தன்மையிட் டுரைப்பது சாதித்தன்மை

எனக்கொள்க.

முற்குளம்பி னாற்கிளறி மோந்தங்கோர் முக்காலும்
பொற்சுண்ண மாடிப் புரண்டெழுந்து-நற்சென்னி
நேர்நிறுத்தி நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே
பானி றத்தமால்வெண் பரி.

இது தொழிலின் தன்மையைச் சொன்னமையாற்றொழிற்றன்மை என்னுமலங்காரமாயிற்று.

> **பழுதில் செய்வினை பதந்தொறும் வருவது**
> **தொழிலின் றன்மை யென்மனார் புலவர்**

எனக்கொள்க.

> **எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்**
> **நினைக்க வருவதொன் *றுண்டு**

இது காமக்குணத்தின் தன்மையைச் சொன்னமையாற் குணத்தன்மை என்னுமலங்கார மாயிற்று.

> **மனத்தின் வாய்மையிற் றொழிலின் வருமெனக்**
> **குணத்தினைக் கிளப்பது குணத்தின் றன்மை**

எனக்கொள்க. இனி உவமை என்னுமலங்காரமாமாறு:

> **கடலன்ன காம முழந்து மடலேறாப்**
> **பெண்ணிற் பெருந்தக்க தில்.**

இஃதுவமையான கடலுக்கும் உவமிக்கப்பட்ட பொருளாயுள்ள காமத்துக்குங் கரையேற வொண்ணாமை என்னும் பண்பு பொதுவாய் நிற்றலால் உவமை என்னுமலங்காரமாயிற்று. உவமானத்தோடு உவமேயத்தினுக்குரிய பண்புறுத்துவது உவமையாகுமெனக்கொள்க. இனி உருவகமாவது:

> **பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா**
> **ரிறைவனடி சேரா தவர்.**

இது பிறவிக்குங் கடலுக்கு நீந்துதற்கருமை என்னும் பண்பு பொதுவாகிப் பின்னை உவமிக்கப்பட்ட பொருளையே

---

* இல் என்று பாடமோதித் துன்பம் எதிர்நிலை எழுவாயாகக் கொண்டார் பரிமேலழகர். இனிதேயென முன்னர் நிறுத்தினமையானுந் துன்பமில்லாவழி யெல்லாம் இன்பமேயுளதென்பது சாத்தியமாகாமை யானும் புணர்ந்துழியும் பிரிந்துழியும் இனிமையுண்மை கூறலே நாயனார் கருத்தாதலானும் அஃது சிறப்பன்றென மறுக்க. அன்றியும் உண்டென்பதே பழம் பிரதிகளின் பாடமுமாம்.

உவமையாகச் சொன்னமையாலுருவகமாயிற்று. போலுமென முன்னுவமைப் பண்பெய்திப் பின் ஆவது அது என்று தானேயதுவாகச் சொல்லுதலுருவகமாம். உவமை போலப் பண்பொடு மிசைந்து தானே யதுவாவ துருவக மாகும் எனக்கொள்க. இனி விளக்கென்னு மலங்காரமாவது:

**துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு**
**மில்வாழ்வா னென்பான் றுணை.**

இதனுட்டுணை யென்னு மிறுதிச்சொன் மூன்றிடத்தும் பொருள்கொள்ள நின்றமையால் இறுதிவிளக்காயிற்று.

***இளங்கடை யிடைதலை யென்னும் மூன்றினும்**
**விளங்காநின்றது விளக்கெனப்படுமே.**

இதனைத் தண்டியார் தீபகமென்று சொல்லுவர். அது ஆதியந்த மத்திய மூன்றிடத்தும் வரும். ஆதி தீபகமாவது முதலின்கணின்றசொல் எல்லாவிடத்தும் பொருள்கொள நிற்பது. மத்தியதீபகமாவது நடுவுநின்ற சொல் எல்லாவிடத்தும் பொருள்கொளநிற்பது.

**தொல்காப்பியப் புலவர் தோன்ற விரிதுரைத்தார்**
**பல்காயனார் வகுத்துப் பன்னினார்-நல்யாப்புக்**
**கற்றார் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்**
**சொற்றார்தன் னூலிற் றொகுத்து.**

இதிலுரைத்தார் பன்னினார் சொற்றாரென மீண்டு வந்தசொன் மூன்றுஞ் சொன்னாரென்னும் பொரு ளொன்றையே விளக்கினமையாற் பொருண்மீட்சி என்னு மலங்காரமாயிற்று.

இந்திரனேறக் கரியளித்தார்பரி யேழளித்தார்
செந்திருமேனித் தினகரற்குச்சிவ னார்மணத்துப்
பைந்துகிலேறப்பல் லக்களித்தார்பழை யாறைநகர்ச்
சுந்தரச் சோழரை யவரொப் பார்களித் தொன்னிலத்தே

என வருவது பதமீட்சி.

பொருளேமீள்வது பொருளின் மீட்சி பதமே மீள்வது பதத்தின் மீட்சி இரண்டு மீள்வ திருகை மீட்சி எனக் கொள்க.

---

* மீட்சியே முதுமையதாதலின் இளமையென்றார்.

**வீரர்களிறேற வெல்வேந்தர் தேரேறப்**
**போர்கெழு வெஞ்சிலைநாண் பூட்டேற-வார்முரச**
**மார்ப்பேற வேலிளைஞர் மாவேற வெஞ்சுடர்வாள்**
**கூர்ப்பேற வேறினான் குன்று.**

இதில் ஏறவென்று ஒருபதமே மீளவந்தமையாற் பதமீட்சி என்னுமலங்காரமாயிற்று. இருமைமீட்சி வந்தவழிக் கண்டுகொள்க. (10)

**கூறும்பிறபொருள்வைப்புத்தடைமொழி கொள்பொருளில்**
**ஏறுமிரண்டிலொன் றேறும்விதிரேக மேதுவின்மை**
**தேறும்விபாவளை யன்றித்திகழ்சுருக் கேபெருக்கே**
**ஈறுமிகுநோக்க மேதுநுணுக்க மிலேசுமென்னே.**

(இ-ள்) பிறபொருள்வைப்புந் தடைமொழியும் பெயரினால் இலக்கணமறிக. தடைமொழியெனினும் உட்கோளெனினுமொக்கும். இரண்டுபொருளை ஒக்கச்சொல்லி ஒன்றிற்கொருகுணமேற உண்டாக்குதல் இரண்டுக்கும் வெவ்வேறே இரண்டுகுணமாற உண்டாக்குதல் விதிரேகம் என்னுமலங்காரமாம். இதனை வேற்றுமை நிலையென்பாருமுளர். யாதானுமாக வென்று வந்தகாரணம் இன்றியே நிகழ்வதெனின் அது விபாவனையாம். இதனை வெளிப்பாட்டு நிலை யென்பாருமுளர். இனிச் சுருக்கும் பெருக்கு மீறு நோக்கு மேதுவு நுணுக்கமு மிலேசும் என்பன சிலவலங்காரமுள-எ-று. சுருக்கம் பெருக்கங்களைத் தொகைமொழி மிகைமொழி என்பாருமுளர். வரலாறு:

**மன்னன் றசரதற்குவாய்த்த மருமகளாய்**
**மன்னன் சனகன் மகளாகி-மன்னனிரா**
**மன்றார மாகியபொன் மாதகன்றாண் மீண்டெய்தா**
**ளென்றாலார் துன்புறா ரீங்கு**

எனவிதனுள் என்றா லார் துன்புறா ரீங்கென்று முன்பிற்பொருள்களுக் கேற்பப் பிறிதொரு பொருள் வைத்தமையாற் பிறபொருள் வைப்பாயிற்று. இதனை அருத்தாந்த நியாயமென்பர் தண்டியார். துறையினிற் பிறக்கப் பொருள்கள் கடியப் பிறபொருள் வைப்பது பிறபொருள்வைப்பே எனக்கொள்க.

**செல்லாம லுண்டே லெனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**

இது விலக்குதலை உட்கொண்டு சொன்னமை யால் தடைமொழியாயிற்று. தண்டியாரிதனை யாக்கேபம் என்பர். இழுக்குரை தழீஇ விலக்குதற்பொருளை முற்கொண்டுரைக்கு முரையேதடைமொழி.

புணர்ந்தகன்றார் பொன்னிறம் பூத்தற்குத் தந்து
துணர்ந்தகன்ற கொன்றையே சொல்லா-யுணர்ந்தொருவர்
வாட்டா நெடுஞ்சுட ரேந்து மலர்த்தோன்றி
காட்டாவோ காதலர்க்குக் கார்.

இதனுட் பொன்னிறம் பூத்தற்குப் புணர்ந்தகன்றாரையும் பயனாகிய பொன்னிறம் பெய்தலையும் விளக்கினமையால் விபாவனையாயிற்று. இதனை வெளிப்படை யெனினு மிழுக்காது. முயற்சியின்றி முடியும் பொருண்மாட்டு வியப்புறவருமெனின் விபாவனையாமே எனக்கொள்க.

வேட்டொழிவ தல்லால் விளைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுநந்து-மோட்டாமை
வன்புற்றத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
யின்புறுத்த வல்லாமோ யாம்.

இதனுட் சிறப்புடையளாகிய தலைமகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர்மாட்டு நிகழா நின்றமையில் நாட்டுக் கடைஞருள்ளார் சிறப்பில்லாத நந்தை ஊன்றுப்புடைய ஆமையின்புறத் துடைத்துத் தின்பரென்னுமிதனால் தொகுத்து விளங்கச் சொன்னமையாற்றொகை மொழியாயிற்று. வச்சத்-தொள்ளாயிர முழுவதுந் தொகைமொழி எனக்கொள்க. தொகைமொழி எனினுஞ் சுருக்கமெனினும் ஒக்கும். இதனைத் தண்டியார் சமாசமென்பர். நெஞ்சினிற்பொருளை நிரப்ப வேறொரு செஞ்சொலிற் காட்டுந் திறமே தொகைமொழி. இனிப் பெருக்காவது: உலகத்தார்க் கேற்றிரீஇ வண்ணமிகச் சொல்லுத லெனக்கொள்க.

பேணு குமுத மலரப் பெரும்பகலே
வாணிலவதாகி மலியுமே-பூண்முலையார்
பண்களகத் தோதாப் பரந்தெழுந்து மாளிகைமேல்
வெண்களபத் தாலே விரிந்து.

இதனோடுங் காந்திக்கு வேறுபாடென்னே எனின் காந்தியென்னு முயிர் புகழ்ச்சிக் கண்ணும் பலவார்த்தையின் கண்ணுமல்லால்

வாராது. இஃதெல்லாவிடத்தினும் வரப் பெறுமெனக்கொள்க. இதனை மிகைமொழி யெனவுமமையும். தண்டியார் அதிசயாலங்காரம் என்பர்.

**உரையினும் புகழினு மன்றி வேறுயர்ச்சியிற்**
**பெருகச் சொல்லுதல் பெருக்கெனப்படுமே**

எனக்கொள்க.

**குலவார் மருங்கோர் கொலை யுருவங் கொண்டு**
**நிலவார் மதிநேர் நிழற்றும்-புலவார்**
**முகனாறு வேல்வேந்த னாசரிதன் செம்பொ**
**னிகனாறு நீண்முடிமே லின்று.**

இதனுள் உவமையாகிய மதியைப் பொருளாகிய குடையாக்கிக் குணனாட்டிச் சொன்னமையான் நோக்காயிற்று.

**மெய்ப்பொரு ணிற்ப வேறொன் றாக்கி**
**யப்படியாக வியப்புத னோக்கே**

எனக் கொள்க. ஏது என்னு மலங்காரமாவது கூறிய பொருளுக்குக் காரக ஞாபகமாதியான ஏதுச் சொல்லுதல். அஃதாமாறு:

**சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**

இதனுட் சூழ்வார்கண்ணாக வொழுகலே பொருளாகச் சூழ்வாரைச் சூழ்ந்துகொளல் என்றேது நாட்டிச் சொன்னமையால் ஏதுவலங்காரமாயிற்று. இப்படியாதலின் இப்படியாயிற்றென்னக் கிளப்பதேதுவாகுமெனக் கொள்க.

**கணவர்க்கு வந்தெய்துங் காலமலாமுன்**
**னுணர்வுசெய மாட்டா துணர்ந்து-துணர்மலிந்த**
**தாளார் முளரித் தடமலரைக் கூப்பினாள்**
**வாளார் திருநெடுங்கண் மாது.**

இது காதலர்க்கிரவுக்குறி அறியாமையை உணர்த்தினமையான் நுணுக்கமென்னு மலங்காரமாயிற்று.

**இங்கிதா காரத் தியல்குறி குறிப்பி**
**னுணர்த்துத னுணுக்க மென்மனார் புலவர்**

எனக்கொள்க.

உன்னுயி ரோம்பு புளகத்தா லோங்கரசர்
கன்னிமேற் காதலுள னென்னாமல்-முன்னீர்க்
குளிர்காற்று வந்தசைப்பக் கூசினானென்றா
ரளியாற்றுந் தண்டாரா னாங்கு.

இது ஒன்றினாலொன்றை மறைத்தமையால் இலேசென்னு மலங்காரமாயிற்று. இதனை இலேயமெனினுமமையும். மறைந்த பொருண்மற் றொன்றினிலக வியம்புதலிலேசி னிலக்கண மாகும் எனக் கொள்க. (11)

அடைவுமகிழ்ச்சி சுவையூக்கமாம்பரி யாயமொழி
யடைவுமலிதுணைப் பேறொடுதாத்த மவநுதியும்
உடைவுநிகழுஞ் சிலேடைசிறப்பொ டுடனிலைச்சொற்
புடையின்முரணுவ லாச்சொற்புரிவில் புகழ்ச்சிசுட்டே.

(இ-ள்.) அடைவும் மகிழ்ச்சியுஞ் சுவையும் ஊக்கமும் பரியாய மொழியுந் துணைப்பேறும் உதாத்தமும் அவநுதியுஞ் சிலேடையுஞ் சிறப்பும் உடனிலைச்சொல்லும் முரணும் நுவலாச்சொல்லுந் தெரிவில் புகழ்ச்சியுஞ் சுட்டும் எனக்கிடந்த அலங்காரங்களுமுள-எ-று. அகலமுரையிற் கண்டுகொள்க. வரலாறு:

செவ்வாய் புகர்புந்தி திங்கட் கதிர்புந்தி
செவ்வாய் பொன் காரிசனி மந்த்ரிசெவ்வா யெவ்வாயு
மேடமுத லீராறு வீட்டுக்கிறை யென்று
நீடாய்ந்து சொன்னார் நிலத்து.

இது செவ்வாய் முதலிய கோட்களைப் பன்னி ரண்டிராசிக்கு நாயகராக அடைவேவைத்துச் சொன்னமையால் அடைவாயிற்று. இதனை நிரனிறையெனினுமாம். இதனைப் பெயர் நிரனிறை வினைநிரனிறை எதிர்நிரனிறை மயக்கநிரனிறை உய்த்துணர்நிரனிறைஎன்று பலவிகற்பங்களாலும் வேறுபடுப்பாருமுளர் எனக்கொள்க.

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.

இது மகிழ்ந்து சொன்னமையால் மகிழ்ச்சியாயிற்று.

அடைவே நிரனிறை யாகுமாங்குத்
திடமுற மகிழ்ந்து செப்புதன் மகிழ்ச்சி

எனக்கொள்க. இனிச் சுவையாவது சிருங்கார முதலாகவுடைய நாடகச்சுவை ஒன்பதுமெனக்கொள்க. வரலாறு:

> ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
> நீடுக மன்னோ விரா.

இது சிருங்காரம்.

> கைவேல் களிற்றொடும் போக்கி வருபவன்
> மெய்வேல் பறியா நகும்.

இது வீரம்.

> கலைகாளெழுந்து குழலுஞ் சரிந்து வளைகழல
> முலைகால் பசந்துமுன் போலாலிவண் முனை வெம்பணைக்கைச்
> சிலைகால்வளைவித்த மாறன்றெவ் வேந்திற் செவ்வேளுறையு
> மலைகாலருவிசென் றாடினளோமற்றிவ்வாயிழையே.

இது *விகாரம். பிறவுமன்ன.

> நவைதீ ரொன்ப தாகுமுட் பொருள்
> சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப.

எனக்கொள்க. ஊக்கமாவது

> மலைகரந்து போகாதோ வற்றாதோ பௌவ
> மலர்கதிரோன் வீழானோ வஞ்சி-நிலையெனக்குப்
> பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்
> போர்வேந்தே யான்முனிந்த போது.

எனவரும்.

---

* இது சிங்காரம் ஆசியம் கருணை இரவுத்திரம் வீரம் பயானகம் குச்சை அற்புதம் சாந்தமென இலக்கணநூலாரால் வகுக்கப்பட்ட ஒன்பது சுவையிலொன்றன்றாயினும், விபாவமெனவும் அனுபாவமெனவும் சஞ்சரிபாவமெனவுங் காரணகாரிய உடனிகழ்வியை யுள்ள மெய்ப்பாடுகளாற் பிறந்து வெளிப்பட்டுச் சந்தர்ப்பித்து நடைபெறுவதே சுவையாதலின் மெய்ப்பாட்டின் பாலதாகிய விகாரத்தைச் சுவையென்றெடுத்துக் கூறியது குற்றமன்று. அன்றியுங் காரணவாகுபெயராகக் கொள்ளினும் அமையுமெனக் கொள்க.

தாக்கிய விடத்தெனைத் தடுப்பா ரியாரென
வூக்கங் கூறுத லூக்க மாகும்.

எனக்கொள்க.

இவ்வயிற்கேட்டதோர்
பசுங்கதிர்த் திங்கணாடிய செல்வ
னென்றி யெனக்குரை யின்றி யிரங்கென
மருளுந் தெருளும் வரம்பில பயிற்றி.

என இதனுள் வத்தவனை வணக்குற்றார் மன்மதிக் குலத்தனாதலிற் சந்திரனைத் தேடிப் போகின்றேனென்று வேறொரு பரியாயத்தாற் சொன்னமையாற் பரியாய மொழியாயிற்று.

பொருளினைப் புலப்பட் டிராமல் வேறொரு
பரிசினிற் கூறுதல் பரியா யம்மே.

எனக்கொள்க.

வான்குணத் தெம்பிக்கு மன்னு பெருஞ்செல்வம்
யான்கொடுப்பேற் கெங்கோனு மிக்களித்தா-னான்போய்க்
கரும்பேறு நாட்டார்தங் காவலன்றன் றேவி
தரும்பேறு மற்றுண்டோ சாற்று.

எனவிதனுள் நான் கொடுப்பானிருந்தவர்க்குத் தானுமுடன் பட்டான் என்றமையால் துணைப்பேறென்னு மலங்காரமாயிற்று.

நினைவுடைப் பொருளினை நிரப்புதற் கிதுவுந்
துணையெனப் படுவது துணைப்பே றென்ப.

இனி உதாத்தம் என்னுமலங்காரமாவது ஒருவனிடவகையைத்தான் செல்வத்தைத்தான் பெருமை கூறுதல். வரலாறு:

திருக்கிளர் தாமரையின் றேனொழுகச் சாலி
பருக்கு மிலந்தைப்பதியே-யிருக்கென்னு
நாமாலை யிட்டு நலங்கிளர்தார் மூவேந்தர்
பாமாலை யிட்டார் பதி

எனவுந்,

தென்றலுலவச் சிலைமாரன் போர்செய்ய
மன்றல் கமழு மருதூரே–கொன்றையினின்

மட்டாடுந் தொங்கலினார் வந்து மணஞ்செய்யப்
பட்டாரையிட்டார் பதி.

எனவும் இவை இடவகையைப்புகழ்ந்த உதாத்தம்.

அருமொழிதன் கோயி லடலரசர் மிண்டித்
திருமகட் குக்கொடிக டேய்த்த-பருமணிக
ளோதத் தமுதனைய வொண்ணுதலார் மென்மலராம்
பாதத்தி னூன்றும் பரல்.

இது செல்வத்தைப் புகழ்ந்த உதாத்தம்.

செல்வ மாயினும் பதியே யாயினும்
வல்லிதிற் புகழும் வாய்மைய உதாத்தம்

எனக்கொள்க. அவனுதி என்னு மலங்காரமாவது ஒன்றை நாட்டி அஃததுவன்று இன்னது போல் நிகழ்வதென்பது.

மாலைநீ யல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது

எனவரும்.

அதுவோ வதுவன் றாயுங் காலை
யிதுபோ னிகழ்ந்த தெனுமவ னுதியே

எனக்கொள்க. சிலேடையாவது:

செம்மை யுடையார் சிறியார்மேற் சொல்லுஞ்சொல்
வெம்மையுடைய விறற்பகழி-தம்வன்மை
காலிட்டா னென்னாது காய்ந்தவர்மேற் பாய்ந்தனவே
மேலிட் டுயிர்போக மிக்கு.

இது செம்மையுடையார் சொல்லை அம்போடொக்கச் சிலேடித்தமையாற் சிலேடையாயிற்று.

மெய்ப்பொரு ளேற வியம்பிய விரண்டையுந்
திட்பங் கூறுதல் சிலேடை யாகும்

எனக்கொள்க. இனிச் சிறப்பென்னுமலங்காரமாவது குணமுஞ் சாதியுமுடையவற்றால் வேறுபடுத்துச் சிறப்பித்தல்.

கரும்பேதன் கைச்சிலையுங் காமர் கணையு
மரும்பே கரும்பேநா ணன்றாற்-பெரும்பேய்க்

கணத்தானைப் போர்வென்று காரிகையா ரோடு
மணத்தான மேற்றுவித்தான் வந்து.

என விது இப்படி உள்ளானாகிலும் இப்படிச் செய்தானென்று சிறப்பித்தலாற் சிறப்பாயிற்று.

சாதியுங் குணமுங் கிரியையும் பொருந்த
மேதகு சிறப்பின் விளம்புதல் சிறப்பே

எனக்கொள்க.

உள்ளிய வுள்ளியாங் கீயு முயர்விற்றாங்
கள்ளவிழ் பூஞ்சோலைக் கற்பகமும்—வள்ளல்
வளையாய் புனனாடன் மானவே னின்று
முளவாக வாடா துலகு.

இது கருதின குணங்களை உடன்கூட்டி ஒப்பித்தலால் உடனிலைக் கூட்டமாயிற்று. பெரியதனோடு செயலாலிழிந்ததை உரியதாக்குதல் உடனிலைக் கூட்டமெனக்கொள்க.

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

என இதனுட்டீதென்றும் நன்றென்றும் வந்தமையான் முரணென்னுமலங்காரமாயிற்று. இதனையே சொல்லுஞ் சொல்லு மறுதலிக்கு முரணும் பொருளும் பொருளு மறுதலிக்கு முரணும் என வேறுபடுப்பாமுளர்.

பொருளினு மொழியினும் பொருந்தக் காட்சியின்
முரணக் கூறுதல் முரணென மொழிப.

எனக்கொள்க.

தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

இது நாணுத் துறவுரைத்தல் என்னு மதிகாரத்ததாயினும் அவ்வதிகாரத்துக்குரித் தல்லாத பொருளை உணர்த்தி அவ்வதிகாரச் சொல்லையும் விளக்குதலால் நுவலாச் சொல்லாயிற்று. இதனை நுவலா நுவற்சி என்றாலுமமையும்.

அடைநின் றியம்பி யறிபொருள் விளக்குதல்
நுவலாச் சொல்லென நுவன்றனர் புலவர்

எனக்கொள்க.

மன்னிய பெண்ணை வதைசெய்தவாள்வலியுங்
கன்னியை யெய்திக் கலந்ததுவும்-பொன்னிக்
குலமங்கை தன்னைக் கொலைசெய் ததுவு
மலர்மங்கை கோற்கோர் வடு.

இது பழித்தாற்போலப் புகழ்தலாற் தெளிவில் புகழ்ச்சியாயிற்று. பழிமொழி மொழிந்து பல்புகழ் விளக்குதல் தெளிவில் புகழ்ச்சி யென்மனார் புலவர் எனக்கொள்க.

அண்ட முதற்பரிதி யாக்கிப் பெயரடைவாம்
புண்டரிகப் பொய்கை பொலிவுக்கு-மண்டலத்தி
னுற்றாரை நோக்கி யுபகரித்த லேயன்றோ
பற்றான வாழ்வாற் பயன்.

இது முன்பொன்றைச் சுட்டிக்கூறுதலாற் சுட்டாயிற்று. இதனை நிதரிசனமெனவு மமையும்.

ஒட்டிய பொருள்வர வொன்றைமுன் வைத்துச்
சுட்டிக் கூறுதல் சுட்டென மொழிப

எனக்கொள்க. (12)

ஆக்குமொருங்கிய லேபரிமாற்றத்தொ டாசிவிராத்
தாக்குமொழிப்பா விகமிவையேழைந்துந்தண்டி சொன்ன
வாக்குமலியலங் காரமெனவறி மற்றுமின்னம்
நோக்குமெனிற் பலவாமலங்கார நுடங்கிடையே.

(இ-ள்.) ஒருங்கியலும் பரிமாற்றமும் ஆசியும் விராவும் பாவிகமும் எனக்கிடந்த அலங்காரமும் முன்பு தன்மை முதலாகச் சொன்ன அலங்காரமுமாக முப்பத்தைந்தலங்காரமுந் தண்டியாரால் விகற்பிக்கப் பட்டனவாம். இன்னமும் விகற்பிப்பார்க்கு மற்றும் பலவாய் வேறுபடும்-எ-று.

பூக்கால் புனைந்த புனவர் மடமக
ணோக்காநோக் குண்டாரை நோவதென்-நோக்காதே
கள்ளநிறையுங் கருங்கண்ணாற் கட்டழித்தா
ளுள்ள நிறையோ டொருங்கு.

என இதனுள் உள்ளங்கட்டழித்தா ணிறையோடு ஒருங்கென்றமையாலொருங்கிய லென்னும் அலங்காரமாயிற்று.

மறுவில் கூட்டம் பொருந்தி யொருங்கே
வருவ தொருங்கிய லென்மனார் புலவர்

எனக்கொள்க.

சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து

என இவையிற்றைக்கொண்டிவை தந்தாரென்றமையாற் பரிமாற்ற மாயிற்று. இதனை மாறாட்டெனவுமமையும். இவை கொண்டிவையெனக் கீந்தனரென்று நவைதீர மொழிவது நவில்பரி மாற்றமெனக்கொள்க. ஆசியாமாறு:

மிகைசேர்ந்த நாகமும் வெண்மதியுந் தம்மிற்
பகைதீர்ந்த மால்சடையோன்காப்ப—முகைமலரக்
கோழி யனுபமனன் கோரம் புலிவாழி
வாழிய மண்டலத்து வான்.

இஃதாசிப் பொரு ளுணர்த்தினமையாலாசியென்க.

அறநிலை மருங்கி னாசியென்பது
புறநிலை வாழ்த்தெனப் புகன்றனர் புலவர்

எனக்கொள்க. விராவாவது பலவலங்காரமும் படுவது.

வெய்யசுட ரானும் வீரை வெறாதானுஞ்
செய்ய வொளியர் திறலுடையர்—வெய்யசுட
ராழியான் கங்குல் விளக்கா னனையனோ
கோழியனோ கூடலார் கோ.

என இதனுள் ஞாயிற்றோடொக்க வவன்வழியரசனையும் விதந்து வேற்றுமை காட்டலில் விரவியலாயிற்று.

பரவியல் பல்லலங் காரம்பட்டன
விரவிய லென்று வேண்டுவரென்ப

எனக்கொள்க. விராவெனினும் வரவிய லெனினுமொக்கும். இனிப் பாவிகமாவது அகலக்கவிப்புலவன் கருத்து. அஃது குண்டலகேசி உதையன்கதை முதலாயினவற்றுட் கண்டுகொள்க. (13)

புகழ்ச்சிபழிப்பு விரோதங்கருத்திசை யுண்மையையம்
இகழ்ச்சி யெதிர்ப்பொரு ளற்புதநோக்கித ரேதரந்தான்
இகழ்ச்சிமிகைபண் புயர்வுநியம மநியமமுந்
திகழ்ச்சிமலிதடை தெற்றுச்சிலேடை துணிவென்பரே.

**உம்மைபொருளினொ டொப்புமைகூட்ட மபூதத்தொடு**
**செம்மைதிகழ்வாக் கியப்பொருள்கோவைதிண் காரணமும்**
**வெம்மைமயக்கம் பலவியல்விக்கிரி யத்தினொடு**
**மெய்ம்மையிற்சந்தா னமுமென்றுவமை விகற்பிப்பரே.**

*(இ-ள்.) இஃதியல்புப் புகழ்ச்சியுவமையும் பழிப்புவமையும் விரோதவுவமையுங் கருத்துவமையும் இசையுவமையும் உண்மை யுவமையும் ஐயவுவமையும் இகழ்ச்சியுவமையும் எதிர்ப் பொருளுவமையும் அற்புதவுவமையும் நோக்குவமையும் இதரேதரவுவமையும் மிகையுவமையும் பண்புவமையும் உயர்வுவமையும் நியமவுவமையும் அனியமவுவமையுந் தடையுவமையுந் தெற்றுவமையுஞ் சிலேடை யுவமையுந் துணிவுவமையும் உம்மையுவமையும் பொருளுவமையும் ஒப்புவமையுங் கூட்டவுவமையும் அபூதவுவமையும் வாக்கியப் பொருளுவமையுங் கோவையுவமையுங் காரணவுவமையும் மயக்க வுவமையும் பலவியலுவமையும் விக்கிரியவுவமையுஞ் சந்தானவுவமையும் என உவமை என்னுமலங்காரத்தை முப்பத்து மூன்றாக விகற்பிப்பர்-எ-று. வரலாறு:*

*நான்முகன் றோன்றிய தாமரை நின்னுடை*
*வாண்முகந் தன்னொடு மாறு.*

*இது உவமையைப் புகழ்தலாற் புகழ்ச்சியுவமையாயிற்று.*

போது நற்புகழ்ச்சி பொருளைப்புகழா
தேதுவைப் புகழ்த லென்மனார் புலவர்

*எனக்கொள்க.*

*அறுவாய் நிறைந்த வகன்மதிக்குப் போல*
*மறுவுண்டோ மாதர் முகத்து.*

*இஃதுவமையைப் பழித்தலாற் பழிப்புவமை.*

இழுக்கில் பொருளை உயர்த்தி யுவமையைப்
பழிக்கப் படுவது பழிப்பெனப்-படுமே

*எனக்கொள்க.*

*நின்முகம் பங்கயந் திங்க ளிவைமூன்றுந்*
*தம்மின் மறுதலிக்குஞ் சார்ந்து.*

இவை ஒன்றிற்கொன்று தம்மின் மறுதலித்தமையான் விரோதவுவமை.

> புகழ்பெறு பொருளும் பொருவு மொன்றையொன்
> றிகழ்வது விரோத மென்மனார் புலவர்

எனக்கொள்க.

> நின்முகந் திங்களோ டொக்கு மெனவுரைத்தே
> நன்மையோ தீமையோ நாடு.

இது புலவன் கருதலாற் கருத்துவமை.

> பொருந்திய பொருட்கிது பொருளெனக் கருதுதல்
> கருத்தினுவமை யென்மனார் புலவர்

எனக்கொள்க.

> மான்விழி நின்முகத்த வாண்மதியின் கண்ணதுமா
> னாகிலு மொக்கு மமர்ந்து.

இஃதுவமைக்கொரு விசேடஞ் சொல்லி அஃதப்படித் தாயினுமொக்கு மென்றமையால் இசையுவமை.

> பொருத்த மின்மைப் பொருவையும் பொருளையு
> மிருத்தியு மிசைவ திசையுவமை யாகும்

எனக்கொள்க.

> பங்கய மன்று முகமே யிதுவிவையும்
> வண்டல்ல வாட்கண் களே.

இஃதுண்மையுவமை.

> பொருளையுஞ் சினையையும் பொருவன் றென்னு
> முரையினிற் கோட லுண்மை யுவமை

எனக்கொள்க.

> அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
> மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

இஃது ஐயப்படுதலால் ஐயவுவமை.

> பொய்யறு பொருளையும் பொருவையுங்கருதி
> யையப் படுவ தைய வுவமை

எனக்கொள்க.

*திங்களிற் றோன்றிய நஞ்சேநின் சீர்முகத்து*
*நின்றெழுந்த வெவ்வுரைக்கு நேர்.*

இஃதிகழப்படுமுவமையோடுவமித்தலால் இகழ்ச்சி உவமை.

*இகழப்ப படுபொரு ளியம்பிய பொருவை*
*நிகர்க்கு மென்பது நிரம்பிய விகழ்ச்சி*

எனக்கொள்க.

*நின்னொக்கு மன்ன ருளரல்லர் கற்பகந்*
*தன்னொக்கும் பாதவமு மில்.*

இஃதெதிர்ப்பொருளுவமை.

இது பொருளுவமையின்றி துபொருடனிமையி னிதுவே நன்றெனி னெதிர்ப்பொருளுவமை எனக்கொள்க.

*வாட்டடங் கண்ணும் வளைந்த புருவமுந்*
*தாட்டாமரையிற் றலைசிறப்பி-னாட்டலா*
*மின்முகத்தைக் காட்டி விளங்கு நுடங்கிடையாய்*
*நின்முகத்திற் கொப்பாகு நேர்.*

இது அற்புதவுவமை.

*இப்படியென்ப தியம்பிய துடைமையி*
*லப்பொரு வாமெனு மற்புத வுவமை*

எனக்கொள்க.

*நானோ விவண்முகத்துக் கொப்பெனு நன்மதியுங்*
*கான்மலி பங்கயமுங் காண்.*

இது புலவன் குறிப்பாதலினோக்குவமை.

*சாலும் பொருட்கெதிர் பொருவெனும் பொருண்மொழி*
*நூலோர் நோக்குத னோக்கெனப்படுமே*

எனக்கொள்க.

*பங்கயத்தோ டொக்குநின் கைத்தலம் பங்கய*
*நின்கையோ டொப்பனவு மாம்.*

இஃது ஒன்றோடொன்றுவமித்தலால் இதரேதரவுவமை.

மேதகு வெதிரெதிர் விளம்பிய பொருளு
மெதிரும் பொருவுத லிதரேதரமே

எனக்கொள்க.

நின்முகங் கண்டதுவு நின்கண்ணே திங்களையும்
விண்மிசையே கண்டதுவு மிக்கு.

இது மிகைவுவமை.

இவ்வயிற் கண்டது பொருளையும் பொருவையு
மிவ்வயிற் கண்டதென் பதுமிகை யுவமை.

எனக்கொள்க. இதனைத் தண்டியாரதிசயவுவமை என்று சொல்லுவர்.

தாமரையே போற்செய்ய தாமக் கருங்குழலி
காமருவு நின்கைத் தலம்.

இஃதொத்த பண்புசொல்லி உவமித்தமையாற் பண்புவமை.

ஒண்பொருள் வரவவ் வுவமையோ டொன்றிய
பண்பொடுவருதல் பண்பெனப் படுமே

எனக்கொள்க.

நின்முகந் திங்களையுந் தாமரையையுங் கடந்து
தன்னையே யொத்தது தான்.

இஃதுயரச்சொன்னமையாலுயர்புவமை.

ஏனோர் மொழிபொரு விகந்தொரு தனக்குத்
தானேபொருவெனத் தருமொழியுயர்பே.

எனக்கொள்க.

மதியே நின்வாண் முகத்திற்கொப்ப திதனான்
மற்றொன்றுண் டென்கை மயக்கு.

எனவிது நியமித்தமையான் நியமவுவமை.

வேறுரைப் பதுபிழை யுவமையிதுவெனத்
தேறிய பொருவுடைத் திறத்தது நியமம்

எனக்கொள்க.

தாமரைக் கொப்பாநின் வாண்முகமே நின்கரத்து
காமற்றொப் புண்டாயி னாங்கு.

இது அனியமவுவமை.

உரியவுவமை யொண்பொருட்கிது கீழ்க்குப்
பொருவே றெனினாம நியம வுவமை

எனக்கொள்க.

ஏடலர் தார்ச்சந் திரன்றன் இனிருங்கொடைக்கு
நீடுமழையே நிகரென்னிற்
கோடை
மறுக்கையினும் வக்கிரக்கோ ளுள்ளுந்தாம் பெய்யா
வொறுக்கையினு மாட்டாவே யொப்பு.

இஃதுவமையைத் தடுத்தலாற் தடையுவமை.

ஒப்பார் பொருவுக் கொருபிழை காட்டித்
தப்புமென்பது தடைமொழியுவமை.

நின்முகம் போல மலர்ந்த தரவிந்த
மன்னமே பாரா யது.

இஃது தெற்ற உவமித்தலாற் தெற்றுவமை.

பொருள்போ லமைந்த பொருவிது வென்னு
மரபொடு தெற்றி வருவது தெற்றே

எனக்கொள்க.

திருமேவிக் கடிகமழ்ந்து திங்களொடும் பகைத்தமையா
னுருமேவுந் தாமரையோ டொக்கு நின்னொளி முகமே.

இஃதிரண்டுஞ் சிலேடித்து வந்தமையாற் சிலேடை உவமையாயிற்று.

புரந்தசொற் பொருவையும் பொருளையு மொன்ற
விரண்டையுஞ் சிலேடித்து இசைப்பது சிலேடை

எனக்கொள்க.

திங்க ளனையதாற் றிங்களை யஞ்சவிக்குந்
தங்குசெயல் தாமரைக்க ணுண்டென்று—செங்கட்

கருங்குழலி வாண்முகமே யென்னுங் கருத்தா
லொருங்கரிய லாகும் உணர்ந்து.

இது துணிவுவமை.

அன்னது பொருவன் றெனவடை விளம்பி
யின்னது மெய்ப்பொரு ளென்பது துணிவே

எனக்கொள்க.

இனி உம்மை உவமையாவது இக்குணத்தாலே யன்றி இக்குணத்தாலுமொக்குமென உம்மையிட்டு வருவது.

செம்மையினாற் செந்தா மரையொக்கு நின்முகந்
தண்மையி னானுந் தனக்கு.

இக்குறியதனாலன்றி இதனாலுமொக்குமென்று இசைப்பதும்மை உவமையென்பதனாலறிக.

தாமரைபோலுநின் வாண்முகங் கண்ணிணைக
ணீலோற் பலத்துக்கு நேர்.

இது பொருளுவமை.

கருதியபொருட்குக் காரணந் தவிர்த்துப்
பொருவை யியம்புதல் பொருளெனப்படுமே

எனக்கொள்க.

மண்ணாடு காத்தற்கு நீ யுறங்காய் வானவர்கோன்
விண்ணாடு காத்தற்கு மேலுறங்கான்-நண்ணாதா
ரானவரைக் கொன்றா யனபமனா நீயவனுந்
தானவரைக் கொன்றான் றடிந்து.

இது ஒப்புமையொக்கச் சொன்னமையான் ஒப்புமைக் கூட்டவுவமை.

இப்படி யெனப்பொருளிரண்டுநற் பொருவுத
லொப்புமைக் கூட்டமென் றோதினர்புலவர்

எனக் கொள்க.

வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

இஃதில்லாதது சொன்னமையான் அபூதவுவமை.

**விடாதவப் பொருட்கு விதிசேருவமை**
**யடாத தியம்புதலபூத வுவமை**

எனக்கொள்க. வாக்கியப்பொருளுவமையாவது வாக்கியப் பொருளானுவமை விளக்குதல். வாக்கியமாவது பலபதங் கூடியிருப்பது. இதனைத் தொடர் மொழியெனவுமமையும். அது வருமாறு:

**வெண்ணிலவுந் தண்ணளியு மென்மையுஞ் சேருமா**
**லண்ண லதுவெண் குடை.**

**பழுதி லுவமைப் பலபதஞ் சேர்மொழிப்**
**பொருளில் விளக்கம் புணர்ப்பது வாக்கியம்**

எனக்கொள்க.

**வேலொப் பனவெங் கணையொப் பனதடஞ்**
**சேலொப்பன மங்கையர்சே யரிக்கணே.**

இது நிரையிற் சொன்னமையாற் கோவையுவமை. பண்டை யோருரை பலபொருடமக்குக்கொண்டு கூறுதல் கோவை யென்றனரே எனக்கொள்க.

**வீரியத்தால் வெய்யோன் வெகுளியா னூழித்தீக்**
**காரியத்தாற் சாணிக் கன்.**

இது எதுக்காட்டி இவற்றாலென்றமையால் எதுவுவமை. இதனைக் காரணவுவமை எனினுமமையும். இதனாலிப் பொருளொக்கு மெனக்குணந் துதியாற் சொல்லுத லேதுவுவமை எனக்கொள்க.

**மதியுமடந்தை முகனு மறியாப்**
**பதியிற் கலங்கிய மீன்.**

இது மயக்கவுவமை.

**இதுபொரு ளதுபொரு வென்றுணர்த்திலமென**
**வுவமையின் மலைவினை யுரைப்பது மயக்கே**

எனக்கொள்க.

**காவி கணைசெங் கயல்கதிர் வாளிவைநின்**
**வாள்விழிக் கொப்புரைக்க லாம்.**

இது பலவியலுவமை.

உயர்பொரு ளொன்றை யொக்கு முவமை
பலவுடன் கூறுதல் பலவிய லாகும்

எனக்கொள்க.

சந்திரனிற் றோன்றிற்றுப் போலுந்தண் டாமரையின்
வந்ததுபோ னின்வாண் முகம்.

இது விக்கிரியவுவமை. இத்துணைப் பொருவில்வந் தெதிர்ந்தது பொருளென வத்துணை மொழிவரி னதுவிக் கிரியம் எனக்கொள்க. இனிச் *சந்தானவுவமை யாவது உவமையும் பொருளுந் தொடர்ந்து சொற்சலிப்பது. (14,15)

கோபத்தின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடி
லாபத்தைச் செய்யு மனங்கன்போற் றாவாது
கோபத்தின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடி
லாபத்தைச் செய்யு மணிவா யணிமயிலே.

தொலைப்பரும் பொருவையும் பொருளையுந் தொடர்ந்து சொற் சலிப்பது பொருளுறிற் சந்தானம்மே எனக்கொள்க.

பட்டாங்குரைத்தல் புகழ்தல் பழித்தலிற் பண்புபயன்
சிட்டார்தொழில்வடி வாதியுவமை செறிந்துறுப்புத்
தட்டாதியலும் பொருளுமுவமையுஞ் சார்பொதுவாய்
முட்டாமலேநிகழ் காரணமும்பெறு மொய்குழலே.

இதனான் மேல்விரித்துக்கூறிய உவமையின் பொது இலக்கணந் தொகுத்துரைக்கின்றான். (இ-ள்.) ஒருபொருளை ஒன்றோடுவமிக்குமிடத்துப் பட்டாங்கால் உவமித்தலும் புகழ்தலால் உவமித்தலும் பழித்தலா லுவமித்தலுமென மூன்றுபகுதியாம். அப்படி உவமிக்குமிடத்துப் பண்பும் பயனுந் தொழிலும் வடிவுமுதலாகிய காரணங்களாலுவமிக்கப்படும். அதற்குறுப்பாக உவமிக்கப்படும் பொருளுமுவமையு இவ்விரண்டுக்கும் பொதுவாய்நின்ற பண்பு முதலாகிய காரணமுமென மூன்றுவரும்-எ-று. வரலாறு: ஆபோலு மாமா என்பது பட்டாங்குரைத்தலுவமை.

* இதனோடு தமிழ்த்தண்டியலங்காரத்தார் மதம் மாறுபடும். அவர் கூறிய உதாரணம் கோவை யுவமையாம் என மறுக்க.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொப்ப தென்று.

இது புகழ்தலுவமை.

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துணர்த்த லால்.

இது பழித்தலுவமை. இதுவே தொழிலுவமையுமாம்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

இது பண்புவமை.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

இது பயனுவமை.

மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

இது வடிவுவமை. ஆதி என்றதனால் நிறங் குணஞ் சுவை முதலியனவுங் கொள்க. (16)

**ஒப்பிலுவமை யிழிவுயர்வோடு முயரிழிவு
துப்பில்சமமே தலைப்பெயல்கூற்றுத் தொகைவிரிவு
தப்பிலுறழ்ந்து வரலோடொருவழி யோர்பொருண்மேற்
செப்புசினைமுத லொப்புமறையென்று தேர்ந்தறியே.**

இதனால் உவமை அலங்காரத்தைப் பிறவாற்றினால் விரித்து விகற்பிப்பதாவதோர் கூற்றினைச் சொல்லுகின்றான். (இ-ள்.) ஒப்பிலுவமையும் இழிவுயர்வுப்புகழ்ச்சியுவமையும் உயர்விழிவுப் புகழ்ச்சி யுவமையுஞ் சமவுவமையுந் தலைப்பெயன்மரபிற் சார்ந்துவருமுவ மையுங் கூற்றுவமையுந் தொகையுவமையும் விரியுவமையுந் உறழ்ந்துவரலுவமையும் ஒருவழியொப்பினொரு பொருண் மொழிதலுவமையுஞ் சினைமுதலொப்புவமையும் ஒப்புமறையுவமையும் என உவமையை இன்னும் பிறவாற்றான் விகற்பிப்பர்-எ-று. இப்பெயர்களிற் செய்யுட் சுவை நோக்கிக் கடைகுறைந்தனவு முறையிற் கோடலென்னுந் தந்திரவுத்தியாற்கொள்க. ஒப்பிலுவமை வருமாறு:

செங்குவளை போலா கருநிறத்த சேயரிக்க
ணங்குவளைக் காரிதழு மாங்கொவ்வா-செங்குவளைத்
தண்மலரே நாறுந் தமனியப்பூங் கோதாய்நின்
கண்மலரே போலுமுன் கண்.

இது மற்றோருவமை இல்லாமையாலொப்பிலுவமையாயிற்று.

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

இது இழிந்தவுவமையி னுயர்ந்ததனைப் புகழ்ந்தமையா லிழிவுயர்ப்புப் புகழ்ச்சியுவமையாயிற்று. "மலையொக்கும் யானை" என்பது உயர்ந்தவுவமையை இழிந்ததனோ டொப்பித்துப் புகழ்ந்தமையால் உயர்விழிவுப் புகழ்ச்சி யாயிற்று. "தந்தையையொக்கு மக"னென்பது சமவுவமையாயிற்று. தலைப்பெயன் மரபிற் சார்ந்து வருமுவமை வருமாறு:

தாமருவு கின்றாரிப் பைங்கிளியார் தாமிருந்து
காமருபூந் தாதுதிர்க்குங் காரெருமை தாமருகே
பொன்னுரைகற் போற்றோன்றும் பூம்புனனீர் நாடன்பே
ரென்னுரைகற் பார்போ லிருந்து.

இதனுண் மற்றொன்று தலைப்பெய்ய உவமை உரைத்தமையால் தலைப்பெயன்மரபிற் சார்ந்துவரு முவமையாயிற்று. கூற்றுவமை வருமாறு:

செங்கோல னெங்கோன் கொடுந் தொழிலாற் றெவ்வேந்தர்
தங்கோ னிகலரியன் றாமெளிய-னெங்கோமா
னெவ்வகைய னேந்திய தொல்குணத்தா லேனோரு
மவ்வகைய ராமிவற்றி னால்.

பவளவாயென்பது தொகையுவமை. பவளம்போன்ற செவ்வாயென்பது விரியுவமை.

அன்ன நடை பயின்றா யாயிழைநீ யன்னமு
நின்னடை யேபயின்று நின்னொக்கு-நின்னை
யுழைக்கண்ணார் மான்பிணை யொப்பாரிதென்ன
மழைக்கண்ணாய் நின்போன்ற மான்.

இஃதுறழ்ந்துவரலுவமை.

**எழிறரு ஞாயிற் றெழில்போ னிறைந்து**
**பொழிதருவான் றிங்களே போல-முழுவுலகுந்**
**தன்புகழி னானிறைந்த தார்வேந்தன் சேந்தன்பாட்**
**டென்புகழ்த லாவ தினி.**

இஃதொருவழி யொப்பி னொருபொருண்மொழித லுவமை. இஃதெல்லா விடத்தும் எல்லாக் காலம் ஒத்தும் ஒவ்வாப்பொருளை ஓரிடமாயினும் ஒருகாலமாயினும் பற்றிச்சொல்லவரும்.

**அன்னமே யென்ன வணிமயிலே யாமென்ன**
**மன்னு மடமான் பிணையென்ன-மின்னு**
**மிளவஞ்சியென்ன வருமேயெங் கோமான்**
**வளவஞ்சி மன்னன் மகள்.**

இதனுள் அன்னமே யென்ன அணிமயிலே யென்ன வென்று முதலுஞ் சினையுமே யுவமையும் பொருளுமாகப் புணர்ந்தமையான் முதல்சினையொப்பு உவமை.

**காலம் வரைந்திடுங் கைகோள் வழிச்செறி**
**மாலுமுழங்கி வளர்ந்தொழுகிச்-சாலவும்**
**பெய்கோவா யென்றும் பெருமய மாவினைத்தான்**
**கைபோவாய் வாழிநீ கார்.**

இஃதொப்புமறையுவமை. தேர்ந்தென்று மிகுத்துச் சொல்லியவதனால் எடுத்துக் காட்டுவமைபான் மாறுவமை முதலியனவுங்கொள்க.

இனி ஒருசாரார் வார்த்தை அந்நியவுவமை வழிநிலை உயர்பு உருவகம் ஒற்றுமைமொழி முதலாயவுள்ளிட்டுப் பலவாகச் சொல்லுவர். அவையெல்லாம் மேலை விகற்பங்களிலே அகப்பட்டடங்குமென்க. அவர் சொல்லுமாறு:

**காலமுமிடனும் வாலிதிற் புகழ்வா**
**ராகியதடுப்பி னதுவார்த்தை யாகும்**

என்று வார்த்தைக் கிலக்கணங்கூறுப. காலமாவது பொழுதும் பருவமுமெனக்கொள்க. இடமாவது பாலை குறிஞ்சி நெய்தன் முல்லை மருதமென்னுமைந்து நிலமுமாம்.

**வேலை மடற்றாழை வெண்டோட் டிடைக்கிடந்து-**
**மாலைத் துயின்ற மணிவண்டு-காலைத்**

துளிநறவந் தாதெதிரத் தோன்றிற்றே காமர்த்
தெளிநிற வெங்கதிரோன் றேர்.

இது காலவார்த்தை.

மழலைக் கனிவாய் மணிவண்டு வருடி மருங்கு பாராட்ட
வழலைக் கலந்த வரவிந்தத் தமளிசேர்ந்த விளவன்னங்
கழனிச்செந்நெற் கதிரென்னுங் கவரி வீசக் கண்படுக்கும்
பழனக்குவளை நீர்நாட பாவை வார்த்தை பகர்வுற்றாள்.

இது இடவார்த்தை.

மதிபோன் மறுவில்லை வண்டா மரைபோற்
புதுவிரி புல்லிதழீண் டில்லை-யிதுவெல்லா
மெய்யுணர்வி னார்தமக்கு மெய்தருமா லொக்குமே
மொய்யிணர்ப்பூங் கோதை முகம்.

கற்பகம்போ லொக்குங் கணுவில்லைக் காவேரி
மற்புனல்போ லாமொரு கால்வற்றாது-நற்புகழ்சேர்
நந்திகை மன்னு புலவோர் நவைதீரக்
கந்தகோன் வந்துதவுங்கை.

இவையிரண்டும் அந்நியவுவமை நிலை.

இதுவெனி னிதுவிதற் கில்லென்று சொல்லலந்நிய
வுவமை நிலையாகும்மே.

தவளையுகளுந் தடம்புனநீர் நாட
னிவளை வளைகரந்தா னென்றாற்-றவளத்
தனிக்காவல் வெண்குடையான் றண்ணளியு மஃதே
யினிக்காவ லாமோ வெமக்கு.

இஃதெழுத்து வழிநிலை.

மாதரான் மாதர்நோக் குண்ட மடநெஞ்சங்
காதலார் காதன்மை காணாதே-யேதிலார்
வன்சொல்லான் வன்பொறை சொல்லி லெழின்மானோக்கி
யின்சொல்லா லின்புறுமோ வீங்கு.

இது மொழிவழிநிலை. வழிமொழியணியே வகுக்குங்காலை
எழுத்துஞ் சொல்லு மிசைபலவாகி வழிதொடர்ந் தொலிப்ப

வகுத்தலாகும். எழுத்தின் வழிநிலை யிசைதொடர்ந்திசைக்கு மொழியின் வழிநிலை மொழிவயினிலையே.

விண்ணிடை யிழிந்துவந்த விண்ணவர் கிழவனொப்பான்
மண்ணிடையொல்லை யிங்கோர் பொருளென வருந்தி வந்த
தெண்ணிடையுணருமந்தா ரத்திடை கடுநே ரன்றாற்
கண்ணிடையுமிழுஞ் செந்தீக் கடாக்களிற் றுழல்வ வென்றான்.

இஃதுயரக் கூறினமையா லுயர்பாயிற்று.

மன்ன ரொளிமுடிமேன் மாணிக்கங் கால்சாய்த்து
மின்னி விரிந்த வெயிற்கதிர்க-டுன்னி
யடிமலர்மேற் சென்றெறிப்ப நின்றா னவிரொண்
கொடிமலர்வேய் நீண்முடியெங் கோ.

இது மாணிக்கச் சிறப்புரைத்தமையா அருங்கலவுயர்வாயிற்று.

இயன்ற செய்யுட் கிசைந்த நடையா லுயரக்கூறல்
அருங்கல மொழிதலென் றுயர்பிரண்டென்ப
ரயர்ந்தோர் தாமே.

செந்தா மரையா ளமர்ந்தாடுஞ் செய்குன்ற
மந்தாரப் பூஞ்சோலை மங்கையர்க்கு-கொந்தா
ரிலையாரந் தாதுறைக்கு மின்பொதியிற் கோமான்
மலையாரந் தாமலைத்த மார்பு.

இஃது மார்பினது தன்மையச் செய்குன்றினாலு மந்தாரச்சோலையானுங் காட்டினமையாகச் சொன்னமையால் உவமையுருவகமாயிற்று. பொருளின் மெய்மை காட்டிப் பொருளை யுருவி னுவலின துவமை யுருவகம். இனி யொற்றுமைமொழி வருமாறு:

அருங்கல முலகின் மிக்க வரசற்கே யுரிய வன்றிப்
பெருங்கல முடையரேனும் பிறர்க்கவை செய்கலாகா
இருங்கலி முழவுத் தோளா யெரிமணிப் பலகை மேலோர்
நெருங்கொலி யுருவங் கண்டு நின்னையா னினைந்து
வந்தேன்.

இது அரசர்க்குரிமை நிகழும் பொருண்மேற்றாதலால் ஒற்றுமை மொழிதலாயிற்று. (17)

தெற்றுத்தொகையவ் வியமேதுப்பண்பு விரியுவமை
மற்றுச்சிலேடை சகலமியைபு வரப்புணர்ந்த

முற்றுத்தொகைவிரி தன்னோடவயவி முந்துறுப்புப்
பெற்றுப்பயிறத்து வாபனந்தன்னோ டியைபிலியே.

தாக்குஞ்சமாதான மேவிதிரேகந் தடைமொழியும்
ஊக்குமுருவகத் தோடொன்றுருவக மேகாங்கமென்று
ஆக்குமுருவக மைந்நான்கொன்றாம்பிற வந்தனவும்
நீக்குவனவிட்டுத் தொல்லோருரைப்படி நேர்ந்தறியே.

*(இ-ள்.) தெற்றுருவகந் தொகையுருவகம் அவ்வியவுருவகம் ஏதுருவகம்பண்புருவகம் விரியுருவகம் உவமையுருவகஞ் சிலேடை யுருவகஞ் சகலவுருவகம் இயைபுருவகம் முற்றுருவகந் தொகைவிரி யுருவகம் அவயவியுருவகம் உறுப்புருவகந் தத்துவாபனவுருவகம் இயைபிலியுருவகஞ் சமாதானவுருவகம் விதிரேகவுருவகந் தடை மொழியுருவகம் உருவகவுருவகம் ஏகாங்கவுருவக மென இருபத்தோருருவகமுள. மற்றும் வருவனவுமறிந்து கொள்க-எ-று. வரலாறு:*

*தாமரையைக் குவியாது தாட்குமுத மலர்த்தாது*
*தீமை செயு மென்னுயிர்க்குன் றிருமுகமாந் திங்களே.*

*இது சந்திரன் றொழிலைத் தெற்றினமையாற் தெற்றுருவகம். இதனை விரோத உருவகமெனினுமமையும்.*

*எஞ்சிய பண்பி லியையினு மொழிதொழில்*
*செஞ்சொலாற் கிளப்பது தெற்றுருவகமே*

*எனக்கொள்க.*

*பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா*
*ரிறைவனடி சேராதவர்.*

*இது பிறவியென்னா நின்ற பெருங்கடலென்னுஞ் சொற்றொக்கு நின்றமையாற் றொகையுருவகம்.*

*மிக்க வுவமை விரியா துரையிற்*
*றொக்கு நிற்பது தொகையுரு வகமே*

*எனக்கொள்க.*

*காலன் மதத்தாற் சிவந்தகபோ லத்தழகு*
*கோலிக் குனித்த புருவக் கொடியிடையாய்*
*சீல மலிநின் முகமென்னுந் திங்களா*
*னாலுல குங்காம னலியக் கெடுக்கலுற்றான்.*

இது ஒவ்வாக் கிரியையைக் கூறினமையால் அவ்வியவுருவகம். கூறியபொருள்வயிற் கொளுத்திய கிரியை வேறாயிருப்பதவ் வியவுரு வகமே எனக்கொள்க.

ஆழ முடைமையினா லாழியா மந்தரத்து
வாழ நிமிர்தலான் மந்தரமா—மேழுலகுந்
தந்தளிக்கும் வண்ணத்தாற் றாயாஞ்செந் தாமரைக்கட்
பைந்தெரியன் மாயோன் பதி.

இது ஏதுகாட்டி யுருவகஞ் சொன்னமையா லேதுருவகம்.

மரபுடைப் பொருளைமற் றதுவா லதுவெனு
முரைபெறி லேதுரு வகமா மென்ப

எனக்கொள்க.

தலையிலமர் கங்கைத்துகிலுடையன் றன்கைச்
சிலையினமர்செங் கண்மால் பாக—னிலையினமர்
தானவரைக்கொன்று விழவுகெடுத் தான்றனியே
வானவரெல் லாமதிக்க வந்து.

இது பண்புப்பதத்தாற் பொருளேற்றமையாற் பண்புருவகம்.

ஒண்பொருட்பெற்றி யுற்றதற்குரிய
பண்பொடு கிளப்பது பண்புருவகமே

எனக்கொள்க.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

இது விரியுருவகம்.

கருதிய பொருளைக் கலையிற் றொகாமல்
விரியத் தொடுப்பது விரியுரு வகமே

எனக்கொள்க.

மதர்த்துச் சிவந்தநின் வாண்முகத் திங்கட்
பதத்திலெழுஞ் செம்மை வளம்பாரின்—வதைத்தெனுடல்
வெந்துமத ராக மிகுக்க வொளிமாறாய்த்
தந்து மிகைத்தியலுந் தான்.

இது உவமையே உருவகமாக வந்தமையாலுவமையுருவகம்.

ஒண்டரு பொருளை யுருவக மாக்குத
லுண்டெனி னுவமை யுருவக மாகும்

எனக்கொள்க.

சோதி மேவியி கரத்தொடு தோன்றிய
மாத ராயினோர் வாண்முகத் திங்களே.

இது சிலேடை உருவகம்.

நயம்படு சிறப்பி னவைதீ ரிருபொருட்
கியம்புதல் சிலேடை யெனுமுரு வகமே

எனக்கொள்க.

பெண்ணைப் பறவைக் குரன்முழக் காய்ப்பிறை
வாளுருவி
வண்ணக் கருங்கடல் வட்டத்தை யேந்தி மதிபுலியூ
ரண்ணற் சிவன்கொன்றை யந்தார் நினைந்த
வெனாருயிரை
யுண்ணத் திரிதரு மந்தியென்னாநின்ற யோகினியே.

இது சகலவுருவகம்.

ஒருபொருட் கேற வுருவகம் பலமொழி
தருமெனி லுருவகஞ் சகல மாகும்

எனக்கொள்க.

காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.

இது பொருந்துமென்பதனால் இயைபுருவகம்.

அசைவில் கருவி யவற்றாற் றொழிலி
லிசையு மென்ப தியைபுரு வகமே

எனக்கொள்க.

இதுவே காமக் கடும்புனலென்னுந் தொகையுருவகமும் நாணொடு நல்லாண்மை புணை- என்னும் விரியுருவகமும் வந்தமையாற் தொகை விரியுருவகமாயிற்று.

தொகையும் விரியுந் தொக்குடன் கிளப்பது
தொகைவிரி யென்று சொல்லினர் புலவர்

எனக்கொள்க.

விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல்-பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து.

இது முற்றுருவகம்.

சொற்ற வவயவ வவயவி யிடம்பிற
முற்ற வுரைப்பது முற்றுருவகமே

எனக்கொள்க.

மாதராய் நின்றண் முகக்கமலத் துள்வளைந்த
கோதில் புருவமுங் கூனுதலும்-தீதி
லுருக்குறி ஒப்புமீண் டோடி யிமைக்குஞ்சே
யரிக்கண்ணு நோய்செய்தன.

இஃது உறுப்புக்களை வேறுபடுத்துருவகஞ் செய்யா தவ்வுறுப்புக்களையுடைய அவயவியை வேறு சொன்னமையால் அவயவி உருவகமாயிற்று.

இயையு முறுப்பொழித் துறுப்புடைப் பொருளை
யமைய வுரைத்த லவயவி யுருவகம்

எனக்கொள்க.

புருவச் சிலை குனித்துக் கண்ணம்பென் னுள்ள
முருவத் துரந்தா ரொருவ-ரருவி
பொருங்கற் சிலம்பிற் புனையல்குற் றேர்மேன்
மருங்குற் கொடிநுடங்க வந்து.

இது அவயவியைச் சொல்லாதே அதனுறுப்புக்களை வேறுபடுத்துருவகஞ் செய்தமையாலுறுப்பு உருவகமாயிற்று.

அவயவி யொழிய வவயவந் தன்னை
யுருவகஞ் செய்வது உறுப்புறுவகமே

எனக்கொள்க.

பொங்களக மல்லப் புயலே யிவை யிவையுங்
கொங்கை யிணையல்லக் கோங்கரும்பு-மங்கைநின்
மையரிக் கணல்ல மதர்வண் டிவையிவையுங்
கையல்லக் காந்தண் மலர்.

இது உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளையுடன் பட்டமையாற் தத்துவாபனவுருவகம்.

> உண்மைப் பொருண்மறுத் தொப்புமைப் பொருண்மேற்
> றன்மை செயுருவகந் தத்துவா பனமே

எனக்கொள்க.

> தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
> கூனற்பவளக் கொடியாகத்-தான
> மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
> புழையார் தடக்கைப் பொருப்பு.

இது பலபொருளுந் தம்மிலியையாமல் உருவகஞ்செய்தமையால் இயைபிலியுருவகம்.

> பலபொருளி யையாப் பண்பின் வருவ
> தியைபிலி யுருவக மென்மனார் புலவர்

எனக்கொள்க.

> கார்குழை சேர்ந்த கதிர்வாண் மதிமுகமு
> மேர்கெழுதென்றலு மென்னிடையே-சேரத்
> துயர்விளைப்ப வாயினாற் றீவினையால் வந்த
> மயனினைப்ப தாமளவோ மற்று.

இது எல்லார்க்குமினிய நின்முகமுமிளந் தென்றலும் எனக்குத்துயர் விளைப்பவென்றுகூறிப் பின்னர்ச் சமாதானங் கற்பித்தமையாற் சமாதானவுருவகம்.

> கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையே
> மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கென்-
> றிவ்வனைத்தும்
> வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்
> றின்மையா லன்றோ விவர்க்கு.

இதுவுமது.

> சீரியவுருவகஞ் செப்பிற் பயன்றரக்
> காரணங் கற்பித்தல் சமாதான மாகும்

எனக்கொள்க.

வையம் புரக்குமான் மன்னவநின் கையிரண்டும்
பொய்யின்றி வானீர் பொழிகாருங்-கையா
மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கு
மொருகார் பருவ முடைத்து.

இது உருவகங் கூறிப் பின் வேற்றுமையைச் சொல்லுதலால் விதிரேகவுருவகம்.

ஏற்றிய பொருள்க ளிரண்டினு மியல்பாம்
வேற்றுமை கூறிலது விதிரே கம்மே

எனக்கொள்க.

மாதரா யுன்றனது வாண்முகமாந் திங்களுக்குந்
தீதிலா மானின் றிருவிழிக்கு-மோதிலிருங்
காதலுளாரைக் கடுந்துயரஞ் செய்வதே
பாதியமையும் பரிசு.

இது தனக்குத் துயர்செய்த லுட்கொண்டு நின்று சந்திரனு மான்விழியுந் தங்குணத்தைத் தடுத்த தன்மையாற் தடைமொழி யுருவகம்.

இணங்கிய பொருள்க ளியையுங் குணத்தை
விலங்க விளம்புந் தடைமொழி யுருவகம்

எனக்கொள்க.

அத்தகு நின்றன் முகக்கமல வாளரங்கில்
ஒத்தபுரு வக்கொடிமுன் னோங்குமே-வித்தகஞ்சேர்
ஆடல்புரிந் தாளென் றுரைத்தா னவனியெல்லாங்
கோடல்புரிந் தானுறந்தைக் கோ.

இது உருவகத்தை உருவகஞ் செய்தமையால் உருவகவுருவகம்.

உருவகந் தன்னை யுருவகஞ் செய்வ
துருவக வுருவக மென்மனார் புலவர்

எனக்கொள்க.

காலன் மதத்தாற் சிவந்துகயல் போன்றவிழி
நீலோற் பலமு முடையநின்-கோலமுகத்
தாடவர்கள் சால வருந்துயர மெய்துவரே
யூடலெளி தன்றென் றுணர்ந்து.

இது பல உறுப்புக்களுள்ளு மொன்றையே உருவகஞ் செய்தமையால் ஏகாங்கவுருவகம்.

ஒன்றி னுறுப்புப் பலவற்றி னுள்ளு
மொன்றினை யுருவக முரைப்ப தேகாங்கம்

எனக்கொள்க. "பிறவந்தனவு நேர்ந்தறியே" என்றமையால்

இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
அரங்கமணி பொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்கமணி பொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்மென்செய்
திளவேனில்

எனக் குயின் முழவாகவுந் தேன் யாழாகவும் பொழி லரங்கமாகவு முருவகஞ் செய்திளவேனில் என்னுங் கூத்த னென்றெடுத்த உருவகத்தை முற்றுவியாது வரும் ஏகதேச வுருவக முதலியனவுங் கொள்க. (18,19)

தேரும்பொதுவே சிறப்புநிலையே சிலேடையன்றி
ஏரும்முரணியை போடியைபின்மை யியைபுதம்மிற்
பேரும்விரவிய லேநற்பிறபொருள் வைப்புத்தண்டி
சீரும்பொலிவு மலியுந் தன்னூலினிற் செப்பியதே.

(இ-ள்.) *பொதுப் பிறபொருள் வைப்புஞ், சிறப்புநிலைப் பிற பொருள் வைப்புஞ் சிலேடைப் பிறபொருள் வைப்பும் முரண் பிற பொருள் வைப்பும் இயைபுப் பிறபொருள் வைப்பும் இயைபிலிப் பிற பொருள் வைப்பும் விரவியற் பிறபொருள் வைப்பும் என விகற்பித்தார் தண்டியார்-எ-று. வரலாறு:

விண்ணவரின் மிக்கு விளங்கொளியான் மேம்பட்டு
மண்ணவர்க்குக் கண்ணாய வான்கதிர்கள்-கண்ணெதிரே
பந்தித் திருளடையும் பாரிலென்றா லானவினைப்
பந்தத்தை யாவர்கடப் பார்.

இது எல்லாருக்கும் பொதுவாதலாற் பொதுப் பிறபொருள் வைப்பு.

---

* பொதுப் பிறபொருள்வைப்பையும் சிறப்புநிலைப் பிறபொருள்வைப்பையும் முறையே முழுதுஞ்சேறல் என்றும், ஒருவழிச் சேரல் என்றும் பெயரிட்டு வழங்குவாருமுளர்.

எண்ணும் பயன்றூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந்
தண்ணறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றோ கடன்.

இது பொதுவின்றிப் புகழாளரையே குறித்தமையாற் சிறப்புநிலைப் பிறபொருள் வைப்பு.

எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் பாட முறுவலிக்கு-முற்ற
முடியப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியர்க்கு முண்டோ குணம்.

இது சிலேடைப் பொருண்மேல் வந்தமையாற் சிலேடைப் பிறபொருள்வைப்பு.

காதன் மதியங் களங்கமுடைத் தானாலும்
பூதலத்தை யெல்லாம் பொலிவிக்கு-மோதுசில
குற்ற முடையா ரெனினுங் குவலயத்து
நற்றகையார் நல்லரென்றே நாடு.

வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட் கொளினும்
பெய்யு மழைமுகிலைப் பேணுவரால்-வையத்
திருள்பொழியுங் குற்ற மிருப்பினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்.

இவை தெற்றுங் குணமுடைய வாதலான் முரண் பிற பொருள்வைப்பு.

அத்தகு திங்கண் முகமய மானாலு
மெத்தனையும் வான்றுயர மெய்துவிக்கு
மொய்த்தவர்க்
கெய்தாது தானதுபோ னல்லோ ரியாவர்க்கும்
வெய்தாவ தாகாது வேறு.

இது இயையும் இயைபிலியும் வந்தமையால் விரவியற் பிறபொருள்வைப்பு.

ஆர வடமு மதிசித சந்தனமும்
ஈர நிலவு மெரிவிரியும்-பாரில்

*துதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்*
*விதிவகையால் வேறு படும்.*

*இது பொருந்தாவியற்கை சொல்லுதலாற் கூடாவியற்கைப் பிறபொருள்வைப்பு.*

*பொய்யுரையா நண்பர் புகுந்த நெறிநோக்கிக்*
*கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவார்-மெய்வெதுப்பப்*
*பூத்தமையிற் காந்தள் பொலங்கிரியை நீத்தகன்றாற்*
*நீத்தகையார்க் கஃதே செயல்.*

*இது கூடுவானைக் கூடுவதாக மொழிந்தமையாற் கூடுமியற்கைப் பிறபொருள்வைப்பு.*

*தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்*
*கொலைபுரிந்தான் குற்றங்க டீர்ந்தா-னுலகிற்*
*றனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற் றப்பாம்*
*வினையும் விபரீத மாம்.*

*இது விபரீதப்பட வந்தமையான் விபரீதப் பிறபொருள்வைப் பாயிற்று.*

*கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலுங்*
*கூவித் தமியோரைக் கொல்லுமாற்-பாவாய்*
*பெரியோரும் பேணாது செய்வரோ தம்மிற்*
*சிறியார் பிறர்க்கியற்றுந் தீங்கு.*

*இது கூடாததனையுங் கூடுவதனையுங் கூடச் சொன்னமையா லிருமையியற்கைப் பிறபொருள் வைப்பு.* *(20)*

ஆசியனாதரங் காரணங்காரிய மையமேதுப்
பேசுமுபாயஞ் சிலேடைமுயற்சி பிறபொருள்வைப்பு
ஏசில்கருணைநட் போடுகரும மிகழ்ச்சிவன்சொல்
தேசினிரக்கந் தலைமையனுசயஞ் செற்றமென்னே.

வெப்பந்தருமம் பரவசத்தோடு வியன்குணமற்று
ஒப்புப்பொருளின் றடைமொழிதன்னை யுரைத்துணர்ந்து
செப்பமுடையவர் காலங்கண்மூன்றிற் றிருத்திப்பின்னு
மெப்பண்புகொண்ட விகற்பம்வரினு மியற்றுவரே.

*(இ-ள்.) ஆசித்தடை மொழியும் அனாதரத் தடைமொழியுங் காரணத்தடை மொழியுங் காரியத்*

தடைமொழியும் ஐயத்தடைமொழியும் ஏதுத்தடைமொழியும் உபாயத்தடை மொழியுஞ் சிலேடைத் தடைமொழியுங் முயற்சித் தடைமொழியும் பிறபொருள்வைப்புத் தடைமொழியுங் கருணைத் தடைமொழியும் நட்புத்தடை மொழியுங் கருமத்தடை மொழியும் இகழ்ச்சித் தடைமொழியும் வன்சொற்றடை மொழியும் இரக்கத்தடைமொழியுந் தலைமைத் தடைமொழியும் அனுசயத்தடைமொழியுஞ் செற்றத் தடைமொழியும் வெப்பத் தடைமொழியுந் தருமத்தடைமொழியும் பரவசத்தடை மொழியுங் குணத் தடைமொழியும் உடன்பாட்டுத்தடைமொழியும் பொருட்டடை மொழியும் என விகற்பிக்கப்படா நின்ற தடைமொழி யலங்காரத்தை மூன்றுகாலத்தினோடும் பொருந்துவித்துக் கூறுவர். இது நெறியாகப் பிறவாற்றான் வந்தனவும் அமைத்துக் கொள்வர்- எ-று. வரலாறு:

**ஏகுக வன்ப ரெளிதாகச் சென்னெறிக்கண்**
**யானு மினிதிருக்க வீண்டு.**

இது ஆசிசொன்னமையாலாசித்தடைமொழி.

**ஆசை பொருட்கில்லை யன்பர்க்கின் றென்பக்க**
**லேகுக நிற்க வினி.**

இது அனாதரத்தடைமொழி.

**கண்விற் புருவத்தா னேர்தர நீசீறி**
**யென்னாம் பிறரிதறிந் தென்னாகும்-பண்ணிய**
**குற்றமொன் றென்பக்க லின்மையாற் கூர்ந்திரு**
**மச்சஞ் சிறிதுமுள தன்று.**

இது அச்சத்திற்குக் காரணமாகத் தன்பாற் குற்றமின்மை கூறினமையாற் காரணத்தடைமொழி.

**அன்ப ரகன்றா ரவர்குறித்த கார்ப்பருவம்**
**வந்த துயிர்த்திலண் மாது.**

இது சாகைக்குக் காரணங்கூறி அதன்காரியமாயுள்ள சாகையை விலக்கியமையாற் காரியத் தடைமொழியாயிற்று.

**மின்னோ பொழிலின் விளையாடு மிவ்வுருவம்**
**பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ-வென்னோ**
**திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளின்**
**மிசையிருளுந் தாங்குவதோ மின்.**

இது ஐயுற்றதனை விலக்குதலால் ஐயத்தடைமொழி.

எம்மி திதுவென் றிரப்பவரிற் கொள்ளுதலாற்
செம்மைமலி வள்ளலென்று செப்பத் தகாய்நீயே.

இது ஏதுத் தடைமொழி.

காலனெனைக் காணா தொழியும் வகையருளி
ஞாலத் தகலுதியேல் யானதற் காற்றுவனே.

இஃதுபாயத்தடைமொழி.

மன்னுதனுச் சோதி மகரமீ னஞ்செவ்வாய்
பன்னுமிவற் றோடொன்றிப் பார்திகழ்ந்த-நின்னுடைய
ஊனமிலா வாண்முக மா மொண்மதியொன் றுண்டாகில்
ஏனைமதி தன்னாலிங் கென்.

இது சந்திரனோடொக்கச் சிலேடை செய்ததனைமறுத்தலாற் சிலேடைத்தடைமொழி.

ஏகென்று சொல்ல முயலுவ தேகலென்
றாகுமென் வாய்சொல் வது.

இது முயற்சித்தடைமொழி.

நூலெலாங் கற்றவனே யானாலு நோக்கறா
வாலியநின் காதலே மாவியப்புச்-சாலவு
மாராது மால்கடலுக் காறெலா மெந்நாளுந்
தீராது பாய்ந்தாலுஞ் சென்று.

இது பிறபொருள் வைப்புத் தடைமொழி.

இரியன் மகளி ரிலஞெமலி யீன்ற
வரிவிரவு செங்காற் குழவி-யருகிருந்தங்
கூமன்பா ராட்ட வுறங்குமே செம்பியன்ற
னாமம்பா ராட்டாதார் நாடு.

இது கருணைத்தடைமொழி.

ஏகுக வேகுதியே லேரா வுரைபிறக்குங்
காலத்தின் முன்னே கடிது.

இஃதுறுதி சொன்னமையான் நட்புத்தடைமொழி. கருமத்தடைமொழியாவது ஒருபொருளின் பக்கத்துள்ள கருமத்தைத் தடையாக்குதல். கருமமாவது ஆதேயம், கருமியாவதாதாரம்.

குடை நின்றதுசெம்மை கோலொடு சென்றது
கோமனுவி
னடைநின் றதுகலி ஞாலங்கடந்தது நன்மை யன்றி
யிடைநின்ற தொன்றுண் டியாதெனி னிராசகண்
டீரவநின்
றொடைநின்ற தார்புனை வார்மட வார்படுந்
துன்புறவே.

இவ்விடத்துக் கருமியாயினானரசன். கருமமாயினது தீமை. அதனைத்தடுத்தமையாற் கருமத்தடைமொழி யாயிற்று.

ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மே
லாசை சிறிது மடைகிலமாற்-றேசு
வழுவா நெறியின் வரும்பொருண்மேல் வள்ளா
லெழுவா யொழிவா யினி.

இது ஏதுவை இகழ்ந்து விலக்கினமையா லிகழ்ச்சித் தடைமொழியாயிற்று.

மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலார் நாட்டந் தகுநினக்கு-நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாணாளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று.

இது வலிதாகச் சொன்னமையால் வன்சொற்றடைமொழி.

ஊசறொழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே-தேசு
பொழிலிழக்கு நாளையே பூங்குழலி நீங்க
வெழிலிழக்கு மந்தோவி தண்.

இது இரக்கந் தோன்றத் தடுத்தமையாலிரக்கத் தடைமொழி.

என்னுயிர்க்குத் தீங்கில்லை யின்பந்தரும் வழியும்-
பொன்னும் பெறலாமங் கானாலும் போக்கொழியே.

இது தலைமைத்தடை மொழி.

செய்த தவமில்லைத் தேடிய மாடில்லை
யெய்திய நூலொடியை பில்லை-மெய்யன்பு

மேயநண்பர் தாமில்லை மேதினியின் மெல்லவே
போயிற் றிளமை புலர்ந்து.

இது அனுசயத்தடை மொழி. இதனைக் கையறவெனினுமமையும்.

ஏகுவ னியானென்றெடுத்துரைத்த நீயினிப்
போகிலென் போகாக்கா லென்.

இது செற்றத்தடைமொழி.

தேடித் தந்திட மாடிற் போக்குற
நாடித்திசை மிசையோடுநம் மிறையே.

இது வெப்பத்தடைமொழி.

பைங்குழலும் பாரப் பணைமுலையு முண்மையா
லிங்கிவளுக் குண்டோ விடை.

இது தருமத்தடைமொழி. தருமமாவதாதேயம். இவ்விடத்துத் தருமமாயுண்மைக்காதாரமாய் நின்றவிடையைத் தடுத்தமையாற் றருமத் தடைமொழி.

செல்க திருவுளமேல் யானறியேன் றேங்கமட
மல்லமது தாங்கு மதர்விழியின்–மெல்லிமை
நோக்கு விலங்குமேல் நோமிடவன் காதலைநீ
போக்கி யகல்வாய் பொருட்கு.

இது தன்வச மல்லாமையயைக் கூறிவிலக்கினமையாற் பரவசத்தடைமொழி.

மாதர் துவரிதழ்வாய் மைந்த ருயிர்கவருஞ்
சீதமுறுவல் செயலழிக்கு–மீதுலவா
நீண்ட மதர்விழிக ணெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு.

இது குணத்தை விலக்குதலாற் குணத்தடைமொழி.

அப்போ தடுப்ப தறியே னருள்செய்த
திப்போ திவளு மிசைகின்றாள்–தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
யிருளோ நிலவோ வெழும்.

இது உடன்பட்டாற் போலத் தடுத்தமையால் உடன்பாட்டுத் தடைமொழி.

கண்ணு மனமுங் கவர்ந்தவ ளாடிடமென்
றெண்ண லருளு மடையாளந்-தண்ணிழலின்
சுற்றெல்லை கொண்டு சுழல் சோதித் திரளல்லான்
மற்றில்லை காணும் வடிவு.

இது பொருடோன்றத் தடுத்தமையாற் பொருட்டடைமொழி. பின்னு மெப்பண்பு கொண்டவிகற்பமென்றமையாற்

செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க-வெல்லு
மடற்றேர் விடலா யகன்றுறையினாங்கோ
ரிடத்தே பிறக்க வியாம்

எனவரும் வாழ்த்துத் தடைமொழியும்

விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கிளையழுகை கேட்பதற்கு முன்னம்-விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு தோன்றாமு னேகு

எனவருந் துணைச்செயற்றடை மொழியும் முதலாயின கொள்க.

பாலன் றனதுருவாய்ப் பாருலகுண் டாலிலையின்
மேலன்று நீதுயின்றாய் மெய்யென்ப-ராலன்று
வேலைசேர் நீரதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்.

இது இறந்தகாலத்தடைமொழி.

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

இது நிகழ்காலத்தடைமொழி.

முல்லைக் கொடி நுடங்க மொய்காந்தள் கையெடுப்ப
மெல்ல வினவண்டு வீழ்ந்திரங்க-மெல்லியர்மேற்
றீவாய் நெடுவாடை சேர்ந்தாற் செயலறியேன்
போவா யொழிவாய் பொருட்கு.

இது எதிர்காலத் தடைமொழி. பிறவுமன்ன. (21,22)

ஒருமையிருமை சிலேடையுயர்பினோ டேதுவன்றிப்
பெருமைமலிசாதி யொப்பாம்விதிரேகம் பேசுதொழில்

**அருமைமலிகுணஞ் சாதியென்றாகுமவ் வேதுவுமற்று**
**இருமைநிகழ்ஞா பகங்காரகமா மிலங்கிழையே.**

*(இ-ள்.) ஒருமைவிதிரேகம் இருமைவிதிரேகஞ் சிலேடை விதிரேகம் உயர்புவிதிரேகம் ஏதுவிதிரேகஞ் சாதிவிதிரேகம் ஒப்புவிதிரேகம் என விதிரேகத்தைக் கூறுபடுப்பர். அது தொழில் குணஞ் சாதி பற்றிக் கூற்றினானுங் குறிப்பினானும் வரும். ஏதுவிதி ரேகத்தை ஞாபகவேதுவுங் காரகவேதுவும் எனக் கூறுபடுப்பர்- எ-று. வரலாறு:*

*அனைத்துலகுஞ் சேய்போ யருநிதியங் கைக்கொண்*
*டினைத்தளவே யென்றற் கரிதாய்ப்-பனிக்கடன்*
*மன்னவநின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்*
*றென்னுமிதுவொன்றே வேறு.*

*இது ஒன்றற்கொரு பேதஞ்சொன்னமையால் ஒருமைவிதி ரேகம்.*

**வேங்கைவள நாடன் விசயன்வா டைக்கதிப*
*னோங்கு புகழுதயா தித்தனுக்குத்-தாங்குகட*
*னேராமென் றாலு நிறத்தா லவன் செய்யன்*
*காரார் நிறமக் கடல்.*

*இதனுளிரண்டுக்கு மிரண்டுபேதஞ் சொன்னமையாலிருமை விதிரேகம்.*

*ஏறடர்த்து வின் முருக்கி எவ்வுலகுங் கைக்கொண்டு*
*மாறடர்த்த வாழி வலவனைக்-காறொழுதற்*

---

* *ஒருமை விதிரேகமும் ஒன்றின் எதிர்நிலைப் பொருளை மற்றையதன் பாற்படுத்து இரண்டிற்கும் இரண்டுபேதந் தருமாற்றான் ஈண்டெடுத்துக்காட்டிய இருமைவிதிரேக மெனக்கொண்டு,*

*ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்று-மாங்கவற்றுண்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்;*
*சென்று செவியளக்குஞ் செம்மைவாய்ச் சிந்தையுள்ளே*
*நின்றளவி லின்ப நிறைப்பவற்று-ளொன்று*
*மலரிவருங் கூந்தலார் மான்மதர்நோக் கொன்று*
*மலரிவருங் கூத்தன்றன் வாக்கு;*
*என வருவனவற்றையே இருமைவிதிரேக மென்பாருமுளர்.*

கெஞ்சினா ரில்லெனினு மாய னிகனெடுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன்.

இது சிலேடை விதிரேகம்.

மலிதேரான் கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.

இது உயர்பு விதிரேகம்.

வன்மை யுயர்பு நிரைப்பேறு வான்புக
ழென்னு மியைபிலுண்டாகிலு-மன்னவரைக்
காசினியைச் சூழ்ந்துங் கடனேர மாட்டாது
மாசொன்ற லாலலையின் வாய்.

இது செயற்கை ஏதுசொன்னமையாற் காரகவேதுவிதிரேகம்.

உளதென் றனங்க ளுடலைத் திருகில்
வெளியன்றி வேறோ ரிடை.

இது இயற்கை ஏதுசொன்னமையால் ஞாபகவேது விதிரேகம்.

கல்லாதார் வாயிற் கடுஞ்சொல்லாங் காரரவு
நல்லாரைச் சென்று நனிகடிக்குஞ்-சொல்லாலோர்
மந்திரமு மில்லை மகிதலத்தே மற்றுமொரு
தந்திரமு மில்லையதன் சால்பு.

இது பாம்பாக உருவகஞ் செய்து மதன்சாதியினுள்ள குணத்தை வேறு படுத்தலாற் சாதிவிதிரேகம்.

மாதராய் நின்வதனந் தாமரையென்றிவ்விரண்டன்
மேதகுபேதம் விரித்துரைப்பிற்-கோதிலா
நின்கண் ணதுநின்ற நின்முக நீடுபுனற்
றன்கண் ணதுகமலந் தான்.

இது ஒப்பு விதிரேகம். பிறவுமன்ன. இவையனைத்துங் கூற்றினானுங் குறிப்பினானும் வருமாறு உய்த்துணர்ந்து கொள்க.

(23)

பாவும்விபாவனை பல்லோரறியும் பரிசொழித்து
மேவுமியல்பு குறிப்பேதுநீக்கி விளைவுரையாம்
வீவில்கவிதான் கருதுபொருளை வெளிப்படுத்தற்கு
ஓவியமேசுருக் காமறைசொல்லி னுரைத்திடினே.

(இ-ள்.) நிறுத்த முறையானே விபாவனை யென்னு மலங்காரமுஞ் சுருக்கென்னு மலங்காரமுங் கூறுகின்றான். விபாவனையாவது ஒன்றின் விளைவுரைக்குங்காற் பலருமறிய நிகழுங் காரண மொழித்துப் பிறிதொரு காரணங் கற்பிப்பது. அது குறிப்புவிபாவனையும் இயல்பு விபாவனையுங் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்தும் விபாவனையுமென வரும். *சுருக்கென்னுமலங்காரங் கவி தன்னாற் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றினைச் சொல்லுவது -எ-று. வீவிலென்று மிகுத்துச் சொல்லியவதனால் அது அடையும் பொருளும் அயல்படமொழிதலும் அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபடமொழிதலும் அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதலும் அடை விபரீதப்பட்டுப் பொருள் வேறுபடமொழிதலும் என்று நாலு வகையான் வரும். வரலாறு:

தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும்-வாயிலா
ரின்றிச் சிலரூட நீர்ந்தா ரிகலின்றிக்
கன்றிச் சிலைவளைக்குங் கார்.

இதுஇயல்பு விபாவனை.

கடையாமே கூர்த்த கருநெடுங்கண் டேடிப்
படையாமே யெய்ந்ததனம் பாவாய்-கடைஞெமிரக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
றாட்டாமே சேந்தவடி.

இது குறிப்பு விபாவனை.

பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலோங்குந்
தீட்டாத வம்பு சிதறுமா-லீட்டமாய்க்
காணாத கண்பரப்புந் தோகை கடும்பழிக்கு
நாணா தயர்த்தார் நமர்.

இது காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்தும் விபாவனை. இன்னுங்,

* இதனைப் பிறர் ஒட்டெனவுந் தொகைமொழியெனவுமொழிவர்.

காரண மின்றி மலயா நிலங்கனலு
மீரமதி வெதும்பற்கென் னிமித்தங்-காரிகையார்க்
கியாமே தளர வியல்பாக நீண்டனகண்
தாமே திரண்ட தனம்

எனவும்,

பாயாத வேங்கை மலரப் படுமதமா
பூவாத புண்டரிக மென்றெண்ணி-மேவிப்
பிடிதழுவி நின்றுறங்குங் கானிற் பிழையாம்
வடிதழுவும் வேலோய் வரல்.

எனவும் வருவனவற்றையும் விபாவனையின்பாற் படுத்துக்கொள்க.

வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிற்
குறைபடுதேன் வேட்டுங் குறுகு-நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதொரு
வண்டா மரைபிரிந்த வண்டு.

இது அடையும்பொருளும் அயல்பட மொழிதல்.

உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்-கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கிங்
கோங்கிய சோலை யுளது.

இது வள்ளலைக் கொள்ளநின்றடை பொதுவாய்ப் பொருள் வேறுபடவந்தது.

தண்ணளிசேர்ந் தின்சொன்மருவுந் தகைமைத்தா
யெண்ணியவெப்பொருளு மெந்நாளு-மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்தது முன்னைத் தவம்.

இதுவும் ஒருவள்ளலைக்கொள்ள நின்றடை விரவிப் பொருள் வேறுபடவந்தது.

கடைபோ லுலகியற்கை காலத்தின் நீங்கா
லடைய வறிதாயிற் றன்றே-யடைவோர்க்
கருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்.

இது வறுமையுற்றானோர் வள்ளலைக் கொள்ள நின்று பொருள் வேறுபட்டு அடை விபரீதப்பட வந்தது. (24)

அருளுமதிசய மான்றோர்வியப்ப துலகிறவாப்
பொருள்குணமையந் துணிவுதிரிவெனப் போற்றுவரால்
பெருகியநோக்கதுதற்குறிப்பேற்றம் பெயர்பொருளாய்
வருவதும்பேராப் பொருளதுமாக வகுத்தனரே.

(இ-ள்.) அதிசயமாவ தான்றோர்க்கு வியப்புடைத்தாக வருவது. அது உலகநடை யிறவாது பொருளதிசயமுங் குணவதிசயமும் ஐயவதிசயமுந் துணிவதிசயமுந் திரிவதிசயமு மென்னுங் கூறுபாட்டால் வரும். நோக்கென்னுமலங்காரந் *தற்குறிப்பேற்றமாம். அஃது இயங்கு பொருளு மியங்காப் பொருளுமென வரும்-எ-று. அதிசயமெனினும் பெருக்கெனினு மிகைமொழி யெனினுமொக்கும். வரலாறு:

பண்டு புரமெரித்த தீயே படர்ந்தின்று
மண்ட முகடு நெருப்பறா-தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.

இதுபொருள்திசயம்.

மாலை நிலவொளிப்ப மாதரிழை புனைந்த
நீல மணிக ணிழலுமிழ-மேல்விரும்பிச்
செல்லு மிவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளாகின்ற மறுகு.

இது குணவதிசயம்.

உள்ளம் புகுந்தே யுலாவு மொருகாலென்
னுள்ள முழுது முடன் பருகு-மொள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வே
னுள்ளம் பெரிதோ வுரை.

இது ஐயவதிசயம்.

ஆளுங் கரியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுளித்தெறிந்து-நீள்குடையும்

---

* தற்குறிப்பேற்றமாவது ஒருபொருள் உலகினிடத்தே இயல்பாகநிகழுந் தன்மையையொழித்துக் கவிசெய்வான் தான்கருதிய வேறொரு காரணத்தினை அதின்கண் ணேற்றி மொழிவது.

வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வொள்வா ளுறைகழித்தான் வேந்து.

இது துணிவதிசயம். இதனைத் தொழிலதிசயமென்பாருமுளர்.

திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுப்ப-வங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரா
லேந்திழையார் பூந்துகிலா மென்று.

இது திரிபதிசயம். பிறவுமன்ன.

மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்-
விண்டொடர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியுந் தன்னுருவந்
தேயுந் தெளிவிசும்பி னின்று.

இது இயங்குபொருணோக்கு.

வேனில் வெயிற்குடைந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானில் வளமருளும் வண்புயற்குத்-தானுமெதிர்
தாதுமேதக்க மதுவுந் தடஞ்சினைக்கைப்
போதுமீ தேந்தும் பொழில்.

இது இயங்காப்பொருணோக்கு. (25)

ஏதுவுரைப்பி னிதுவிதுவின்விளை வென்றுரைத்த
லோதியகாரக ஞாபகமுள்ளதொ டொன்றினொன்றும்
ஆதியபாவ மழிவுபாடென்று மபாவமின்மை
தீதிலொருங்குடன் றோற்றம்யுத் தாயுத்தஞ்செப்புவரே.

(இ-ள்.) ஏதுவென்னுமலங்கார மொன்றினிடத்தொன்று விளைந்ததாகச் சொல்லுவது. அது காரகவேதுவும் ஞாபகவேதுவும் உள்ளதனபாவமும் ஒன்றினொன்றபாவமும் அழிவுபாட்டபாவமும் என்றுமபாவமும் இன்மையபாவமும் ஒருங்குடன் றோற்றமும் யுத்தமும் அயுத்தமு மென விகற்பிக்கப்படும்-எ-று. வரலாறு:

மலையி லலைகடலில் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தாற்-றலைமைசேர்
பொன்மாது புல்லுபுகழ்ச் சோழன் புயம் புணர
வென்மா தவத்தோமி யாம்.

இது காரகவேது.

காதலன்மே லூடல் கரையிறத்தல் காட்டுமான்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப-மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து.

இது ஞாபகவேது.

கரவோடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவோடு நிற்பித்த தெம்மை -யரவோடு
மோட்டாமை பூண்ட முதலவனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.

இது உள்ளதனபாவம்.

பொய்ம்மை யுடன்புணரார் மேலானார் பொய்ம்மையு
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவா-மிம்முறையாற்
பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன்.

இது ஒன்றினொன்றபாவம்.

கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கஞ்-சுழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம்.

இது அழிவுபாட்டபாவம்.

யாண்டு மொழி திறம்பார் சான்றவ ரெம்மருங்கு
மீண்டு மயில்க ளினமினமாய்-மூண்டெழுந்த
காலையே கார்முழங்கு மென்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்.

இது என்றுமபாவம்.

காரார் கொடி முல்லை நின்குழன்மேற் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர்-போர்கடந்த
வாளையேர் கண்ணி நுதன்மேல் வரும்பசலை
நாளையே நீங்கு நமக்கு.

இது இன்மையபாவம்.

விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்-பிரிந்தோர்

நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போது.

இது ஒருங்குடன்றோற்றம்.

பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்ன ரசைந்து முகுளிக்குந்-தன்னேர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
யரவிந்த நூறா யிரம்.

இது யுத்தம்.

இகன் மதமால் யானை யிணைவரா வெங்கோன்
முகமதியின் மூர னிலவா-னகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல.

இது அயுத்தம். பிறவுமன்ன. (26)

திகழுநுணுக்கங் குறிப்பிற் றொழிலிற் றிறமுணர்த்தல்
நிகழுமிலேசமெய்ச் சத்துவம்வேறு நெறியினுய்த்தல்
இகழுமொழியிற் புகழ்தலுமேத்திய வின்னுரையிற்
புகழுநடையிற் பழித்தலும் போற்றுவர் பொற்றொடியே.

(இ-ள்.) நுணுக்கமென்னுமலங்காரங் காரியங்களை மரபாற் சொல்லாதே யுணர்த்தல். அது குறிப்புநுணுக்கந் தொழினுணுக்கம் மென இரண்டு வகையாம். இலேச மென்னு மலங்காரங் கண்ணினீர் வார்தல் மெய்சிலித்தன்முதலான *சத்துவங்கட்கு வேறுகாரணஞ் சொல்வது. இகழ்வதுபோலப் புகழ்தலும் புகழ்வது போலிகழ்வதும் இதன்பாற்படுமென்று கூறுவாருமுளர்-எ-று. வரலாறு:

காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததாற்
பேதைய ராயம் பிரியாத-மாதர்
படரிருள்கால் சீய்க்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு.

இது குறிப்பினாலே யிரவுக்குறி நேர்ந்தமையாற் குறிப்பு நுணுக்கம்.

பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோட்
கூட லவாவாற் குறிப்புணர்த்து-மாடவற்கு

> வென்றீந் தொடையாழின் மெல்லவிர றைவந்தா
> ளின்றீங் குறிஞ்சி யிசை.

இது இடையாமத்தை யக்காலத்திற்குரிய குறிஞ்சி யிசையைப்பாடிக் குறித்தலாற் றொழினுணுக்கம்.

> கல்லுயர்தோட்கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
> மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று-சொல்லுவராற்
> பொங்கும் படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்சேர்ந்த
> தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.

> மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்டு
> விதிர்ப்ப மயிரரும்ப மெய்யிற்-புதைத்தாள்
> வளவா ரணநெடுங்கை வண்டிவலை வாய்ந்த
> விளவாடை கூர்ந்த தென.

இவை கண்ணீரரும்பல் மெய்ம்மயிர் சிலிர்த்தலென்னுஞ் சத்துவங்களை வேறு நெறியிற் புணர்த்தலா லிலேசமாம்.

> ஆடன் மயிலியலி யன்ப னணியாகங்
> கூடுங்கான் மெல்லென் குறிப்பறியா-னூட
> லிளிவந்த செய்கை யிரவாளன் யாண்டும்
> விளிவந்த வேட்கை யிலன்.

> மன்னிய பெண்ணை வதைசெய்த வாள்வலியுங்
> கன்னியை யெய்திக் கலந்ததுவும்-பொன்னிக்
> குலமங்கை தன்னைக் கொலைசெய்ததுவு
> மலர்மங்கை கோற்கோர் வடு.

இவை புகழாப்புகழ்ச்சியிலேசம்.

> மேய கலவி விளைபோது மெல்லியநம்
> சாயல் தளராமல் தாங்குமால்-சேயிழையாய்
> போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
> தார்வேட்ட தோள்விடலை தான்.

இது புகழ்ந்தாற்போலப் பழித்த விலேசம். (27)

நிரனிறையாவது சொல்லும்பொருளு நிரனிறுத்தல்
விரவுமகிழ்ச்சி யுளநிகழார்வம் விளம்புமொழி
உரியசுவைதா னிரதமேம்பாட்டுரை யூக்கமென்ப
பரியாயமோர்பொரு டோன்றப்பிறிது பகர்தலென்னே.

(இ-ள்.) சொல்லையாவது பொருளையாவது நிரையேநிறுத்தல் நிரனிறையென்னு மலங்காரமாம். உளநிகழ் ஆர்வங் கூறுமொழி மகிழ்ச்சியாம். இரதவசனஞ் சுவையாம். ஊக்கமாவது தன்மேம் பாட்டுரையாம். பரியாயந் தான் கருதியபொருளைப் பிறமொழியாற் பகர்தலாம் எ-று. வரலாறு:

காரிகை மென்மொழியா னோக்காற்கதிர்முலையால்
வார்புருவத் தாலிடயால் வையகத்தி-னேர்தொலைந்த
கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி தமியேன் மனத்து.

இது சொல்லைநிறுத்தி யடைவே பொருளாலே கண்ணழித்தலால் நிரனிறையென்னு மலங்காரமாம்.

பொருள்களிற் சொன்ன நிரனிறை விகற்பமெல்லாம் வந்தவழிக் கண்டுரைத்துக்கொள்க.

சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த் தோள்
புல்ல விருதோள் புடைபெயரா-மெல்ல
நினைவே மெனினெஞ் சிடம்போதா தெம்பால்
வனைதாராய் வந்ததற்கு மாறு.

இது நெஞ்சுணிகழ்ந்த வார்வத்தைப் புலப்படவுரைத்தலால் மகிழ்ச்சியென்னுமலங்காரம். உண்ணிகழ் மகிழ்ச்சி புலப்பட வுரைத்த றிண்ணிய வார்வ மொழியெனச் செப்புவர். மகிழ்ச்சி யெனினு மார்வமொழி யெனினு மொக்கும். இனிச் சுவையொன்பது மாமாறு:

ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.

இது சிருங்காரம்.

சேர்ந்த பிறவி னிறைதன் றிருமேனி
யீர்ந்திட் டுயர்துலைதா னேறினா-னேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வங்கட்
படைவீர மோவவன் ஃபண்பு.

இதுவீரம்.

கையில் விரனெறித்துக் காறளர்ந்து வாய்புலர்ந்து
மெய்பனிப்பத் தாளில் விழுமிவனோ-வுய்யக்

களிவேக மாறாக் கரிபுரளச் செங்கை
யொளிவே லுகைப்பா னினி.

இது அச்சம்.

குடருங் கொழுப்புங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு–மிடையிடையே
வைத்த தடியு முடம்புமா மற்றிவற்றா
லெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

இஃதிழிப்பு.

முத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின்
றொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங்–
கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்காவிரிநாடன்
றன்னேர் பொழியுந் தரு.

இது வியப்பு.

கழல் சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டு
மழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்–குழல்சேர்ந்த
தாமந் தரியா தசையுந் தளிர்மேனி
யீமந் தரிக்குமோ வென்று.

இது அவலம்.

கைபிசையா வாய்மடியாக் கண்சிவவாத் தீவிழியா
மெய்குலையா வேரா வெகுண் டெழுந்தான்–
வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர்வேந்தன் றூதிசைத்த போது.

இது உருத்திரம்.

பள்ளியுள் வாழும் பறியறு மாதவர்
பிள்ளைகளெல்லாம் பெரியர் முதிர்ந்தவர்
வெள்ளைகள் போல விலாவிற நக்குநக்
குள்ளவ ரெல்லா மொருங்குடன் மாய்ந்தார்.

இது பு றுகியநகை.

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

இது சாந்தம்.

நவைதீ ரொன்பஃ தாகு முட்பொருள்
சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப.

மலைகரந்து போகாதோ வற்றாதோ பவ்வ
மலர் கதிரோன் வீழானோ வஞ்சி-நிலையெனக்குப்
பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்
போர்வேந்தே யான்முனிந்தபோது.

இது தன்வலி மிகுத்துச்சொன்னமையாற் றன்மேம்பாட்டுரை.

தாக்கிய விடத்தெனைத் தடுப்பவர் யாரென
வூக்கங் கூறுத லூக்க மாகும்.

மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்கீழ் நின்றருளுந்-தன்னிகராச்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
யிந்தீ வரங்கொணர்வல் யான்.

இது குறித்த பொருளைப் பிறிதொரு வழியாற் சொல்லினமையாற் பரியாயமொழியாயிற்று. உதையன்காதை முதலாயினவற்றுள்ளுறை பொருளாகச் சொல்லிய வெல்லாம் பரியாயம். குறித்தபொருளைப் பிறிதொரு வழியாற் புலப்பட வுரைத்தல் பரியாய மொழியே. (28)

**தாங்குஞ்சமாயிதந் தான்முயல்செய்தி தனதுபயன்**
**ஆங்கதனாலன்றி மற்றொன்றினால்வந்த தாகச்சொல்லல்**
**தீங்கிலுதாரதை செல்வமுமுள்ளமுஞ் சீர்மைசெப்பல்**
**ஓங்குமனுவதி யுண்மைதவிர வுரைத்திடலே.**

(இ-ள்.) தாமுயல்கின்ற காரியத்திற்குப் பிறிதொன்று துணைச்செய்ததாகச் சொல்லல் சமாயிதமாம். உதாரதையென்னு மலங்காரஞ் செல்வ மிகுதியு முள்ளமிகுதியுஞ் சொல்லுதலாம். உண்மை மறுத்து வேறுசொல்லுதல் அவனுதியாம். அது சிறப்பவனுதியும் பொருளவனுதியுங் குணவவனுதியுமென மூன்றாகச் சொல்லுவர்-எ-று. வரலாறு:

வான்குணத் தெம்பிக்கு மன்னு பெருஞ்செல்வம்
யான்கொடுப்பேற் கெங்கோனுமிக்களித்தா-னான்போய்க்
கரும்பேறு நாட்டார்தங் காவலன்றன் றேவி
தரும்பேறு மற்றுண்டோ சாற்று.

இதனுட் டான்கொடுப்பானாக விருந்தவரசுக்குத் தசரதனு முடன்பட்டா னென்றமையாற் சமாயித மென்னு மலங்காரமாயிற்று.

நினைவுடைப் பொருளை நிரப்புதற்கதுவுந்
துணையெனப்படுவது துணைப்பேறென்ப.

சமாயிதமெனினுந் துணைப்பேறெனினுமொக்கும்.

கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்து
மென்றும் வறியோ ரினங்கவர்ந்து-மொன்று
மறிவரிதாய் நிற்கு மளவினதாற் சோரி
செறிகதிர்வேற் சென்னி திரு.

இது செல்வமிகுதி சொன்னமையாற் செல்வமிகுதியுதாரதை.

மண்ணகன்று தன்கிளையு நீங்கி வனமடைந்து
பண்ணுந் தவமுயலும் பார்த்தனார்-விண்ணிறந்து
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு.

இது உள்ளமிகுதி சொன்னமையா லுள்ளமிகுதியுதார்த்தம்.

செல்வமு முள்ளமுஞ் சீர்மைசெப் பிடுத
லொள்ளிய வுதார்த்தமென் றுரைத்தனர் கொளலே.

நறைகமழ்தார் வேட்டார் நலநீத்து நாணு
நிறையு நிலைதளரா நீர்மை-யறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.

இது ஒருவனைச் சிறப்பித்து வருதலாற் சிறப்பவனுதி.

நிலனாம் விசும்பா நிமிர்புனலாந் தீயா
மலர்கதிராம் வான்மதியா மன்றி-யலர்கொன்றை
யொண்ண றுந்தாரா னொருவ னுயிர்க்குயிரா
யெண்ணிறந்த வெப்பொருளு மாம்.

இது பொருளிடத்து வந்தமையாற் பொருளவனுதி.

மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கும் ஆரப்
பனித்தொடையற் பார்த்திபர்கோ னெங்கோன்-றனிக்கவிகை

**தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு**
**வெம்மை நிழற்றாய் மிகும்.**

*இது குணத்தினிடத்து வந்தமையாற் குணவவனுதி.*

**சிறப்பினுங் குணத்தினுந் திருவினுந் சீர்மையை**
**மறுத்துடன் மொழிவ தவனுதி வழக்கே.**

*இது பிறவலங்காரங்களோடு கூடியும் வரும்.*

**நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா**
**மறவேந்தன் வஞ்சியா னல்லன்-றுறையின்**
**விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்**
**குலங்காவல் கொண்டொழுகுங் கோ.**

*இது சிலேடைப் பொருள்மேல் வந்தமையாற் சிலேடையவனுதி. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.* *(29)*

**செப்புஞ்சிலேடை யொருதிறஞ்சேர்சொற் பலபொருளை**
**ஒப்பவுணர்த்த லொருவினைபல்வினை யோங்குமுரண்**
**துப்புறழ்வாயின் சொலாய்நியமத்தோ டநியமமுந்**
**தப்பில்விரோதத் துடனவிரோதமுஞ் சாற்றினரே.**

*(இ-ள்.) சிலேடை யென்னுமலங்காரமொருவகையாக நின்ற சொற் பலபொருள் தெரிய நிற்பது. அது ஒருவினைச் சிலேடையும் பலவினைச் சிலேடையும் முரண்சிலேடையும் நியமச்சி லேடையும் அநியமச்சிலேடையும் விரோதச் சிலேடையும் அவிரோதச் சிலேடையும் எனவரும். எ-று. வரலாறு:*

*அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்*
**வம்புற்ற வோடை மலர்ந்திலங்க-வும்பர்**
**நவம்புரியு நாண்மதியுங் கங்கையு நண்ணித்**
**தவம்புரிவார்க் கின்பந் தரும்.**

*இது ஒருவினையிலே சிலேடித்தமையினாலொருவினைச் சிலேடை.*

*தவிர்வில் மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு*
*செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக்-குயிலிசையு*
*மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலா*
*ரின்னுயிரை யீர்கின் றன.*

*இது பலவினைகொண்டு நிற்றலாற் பலவினைச் சிலேடை.*

ஒருவினை முடித்தலும் பலவினை முடித்தலு மொருவினை பலவினைச் சிலேடையாகும்.

*மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்*
*காலைத்துணைமேவ லார்கடிய—வேலைமேன்*
*மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்*
*புக்கார் கலியடங்கும் புள்.*

இது முரணத்தொடுத்தமையால் முரண்வினைச்சிலேடை. முரணவருவது முரண்வினைச்சிலேடை.

*வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்*
*கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர்மை*
*மென்கோ லியாழே யிரங்குவன வேல்வேந்தே*
*நின்கோ னிலவு நிலத்து.*

இது சிலேடித்தவற்றை நியமித்துச் சொன்னமையா னியமச்சிலேடை இன்னு மிதனை யிருபொருணியமச் சிலேடை முப்பொருணியமச் சிலேடையெனப் பல விகற்பங்களாலு முரைப்பாருமுளர். அவை வந்தவழிக் கண்டுகொள்க.

*சிறைபயில்வ புட்குலமோ தீம்புனலு மன்ன*
*விறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையிற்*
*கொடியன மாளிகையின் குன்றமே யன்றிக்*
*கடியவிழ்பூங் காவு முள.*

இது சிலேடித்த பொருணியமஞ் செய்யாதே மற்றுமொரு பொருள் சொல்லுதலா லநியமச்சிலேடை

*விச்சாதரனேனு மந்தரத்து மேவானா*
*லச்சுத னாயினுமம் மாயனலன்—நிச்ச*
*நிறைவான் கலையா னகளங்க னீதி*
*யிறையா னநகனெங் கோன்.*

இது சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதிப்பச் சிலேடித்தமையால் விரோதச்சிலேடை

*சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கு*
*மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கு—மீதா*
*மநகமதி தோற்றிக்குமுத மளிக்குந்*
*தாதனிரு நிதிக்கோன் றான்.*

இது முன்னர்ச் சிலேடித்த பொருளைப் பின்னரும் விரோதியாமற் சிலேடித்தமையால் அவிரோதச் சிலேடை. இவ்வனைத்துச் சிலேடையுஞ் செம்மொழிச்சிலேடையும் பிரிமொழிச்சிலேடையு மென விரண்டு கூறுபடுமெனக்கொள்க. வரலாறு:

**செங்கரங்க ளாலிரவு நீக்குந் திறம்புரிந்து**
**பங்கய மாதர் நலம்பயிலப்-பொங்குதயத்**
**தோராழி வெய்யோ னுயர்ந்த நெறி யொழுகு**
**நீராழி நீணிலத்து மேல்.**

இது ஒருவழிநின்றசொல் வேறுபடாது பலபொருடந்தமையாற் செம்மொழிச் சிலேடை.

**தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய**
**வெள்ளா வரிமானிடர் மிகுப்ப-வுள்வாழ்தேஞ்**
**சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ள**
**நந்துந் தொழில்புரிந்தார் நாடு.**

இது ஒருவழி நின்ற சொல் பிரிந்து தொகைவேறுபட்டுப் பலபொருள் கொண்டமையாற் பிரிமொழிச் சிலேடை. (30)

**செல்லுஞ்சிறப்புத் தொழில்குணமங்கஞ் சிதைந்திடினும்**
**நல்லபயன்பட நாட்டலுடனிலைச் சொன்னயந்து**
**சொல்லுங்குணமுத லொத்ததொகுத்தல் சொலும்பொருளும்**
**புல்லும்விரோதம் புணரின்முரணென்ப பொற்றொடியே.**

(இ-ள்.) சிறப்பென்னு மலங்காரங் குறையுடனே மேம்பாடு தோன்றச் சொல்லுவது. அது குணக்குறைவிசேடமுந் தொழிற் குறைவிசேடமுஞ் சாதிக்குறைவிசேடமும் பொருட்குறை விசேடமும் உறுப்புக்குறைவிசேடமுமென விகற்பிக்கப்படும். உடனிலைச் சொல்லென்னுமலங்காரம் பொருள்கடம்மில் ஒப்பாயினவற்றை ஒருங்கு கூட்டிச் சொல்லுதலாம். அது புகழ்தற்கண்ணும் பழித்தற்கண்ணும் வரும். முரணென்னு மலங்காரஞ் சொல்லும் பொருளு மாறுபட வைத்தலாம்-எ-று. சிறப்பெனினும் விசேடமெனினு மொக்கும். ஒப்புமைக் கூட்டமெனினுமுடனிலைச் சொல்லெனினு மொக்கும். முரணெனினும் விரோதமெனினுமொக்கும். வரலாறு:

**கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்**
**கோட்டம் புரிந்த கொடைச்சென்னி-நாட்டஞ்**

சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற.

இது குணத்திலே குறைவு கூறிக் காரியத்திலே மேம்பாடுதோன்றச் சொன்னமையாற் குணக் குறைவிசேடம்.

ஏங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா–நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டாமரை.

இது தொழிற் குறைவிசேடம்.

மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட
வாயனார் மாறேற்ற மார்புரிந்தார்–தூய
பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார்
விண்மேற்
புரந்தரனும் வானோரும் போல்.

இது சாதிக்குறைவிசேடம்.

தொல்லை மறைதேர் துணைவன்பா லாண்டுவரை
யெல்லை யிருநாழி நெற்கொண்டோர்–மெல்லியலா
ளோங்குலகில் வாழுமுயிரனைத்து மூட்டுமா
லேங்கொலி நீர்க்கச்சி யிடம்.

இது பொருட்குறைவிசேடம்.

யானை யிரதம் பரியா ளிவையில்லைத்
தானுமனங்கன் றனுக்கரும்பு–தேனார்
மலரைந்தினால்வென்றடிப் படுத்தான்–மார
னுலகங்கண் மூன்று மொருங்கு.

இது உறுப்புக்குறை விசேடம்.

பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்புந்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கு–நாண்டாகுங்
வண்மைசால் சான்ற வருங்காஞ்சி வண்பதியு
முண்மையா லுண்டிவ் வுலகு.

இது புகழுடனிலை.

கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும்வேந்தனு
முள்ளது சொல்லாச் சலமொழி மாந்தரு
மில்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையறுக்குங் கோள்.

இது பழிப்புடனிலை. பிறவுமன்ன.

சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க
வாலு மயிலினங்க ளார்த்தெழுந்த–ஞாலங்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணை பிரிந்தார் மெய்.

காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாங்–கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.

இவை முரண்.

மொழியினும் பொருளினு முரணுதல் முரணே

இது பிறவலங்காரங்களோடும் வரும்.

இனமா னிகல வெளியவா மேனும்
வனமேவு புண்டரிகம் வாட்டும்–வனமார்
கரியுருவங் கொண்டு மரிசிதறக் காட்டும்
விரிமலர் மென் கூந்தல் விழி.

இது சிலேடை முரண். பிறவுமன்ன. (31)

மாறியிகழ்மொழி வண்புகழாய்நுவ லாச்சொல்வருந்
தேறுந்தெரிவில் புகழ்ச்சியொன்றைப் பழிக்கப்பிறிது
கூறிப்புகழுதல் சுட்டாநிகழ்பயன் கொள்பொருளில்
வேறுபடநன்மைதீமை வெளிப்படன் மெல்லணங்கே.

(இ-ள்.) நுவலாச் சொல்லென்னு மலங்காரம் ஒரு பொருளைப் பழித்தாற் போலப் புகழ்தலாம். புகழாப்புகழ்ச்சியெனினு நுவலாச் சொல்லெனினு மொக்கும். தெரிவில் புகழ்ச்சியாவது ஒன்றைப் பழித்தற்கு வேறொன்றைப் புகழ்தலாம். சுட்டென்னுமலங்கார மொருவகையால் நிகழ்பொருளிடத்தே வரும்பயனைப் பிறிதொன்றற்கு

நன்மையாவது தீமையாவது தோன்றச் சொல்லுதலாம்-எ-று. நிதரிசனமெனினுஞ் சுட்டெனினு மொக்கும். வரலாறு:

நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோ
ரனைவரையும் புல்லினா ளன்றே-மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியநீ யிந்நாண்
மணந்த தடமலர்மேன் மாது.

இது புகழாப்புகழ்ச்சி.

இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லு-மொருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான்-பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்.

இது தெரிவில் புகழ்ச்சி.

பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொறாத திறமு-மறிவுறீஇச்
செங்கமல மெய்மலர்ந்த தேங்குமுத மேபசந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது.

இது நன்மை வெளிப்படச் சொல்லிய சுட்டு.

பெரியோருழையும் பிழைசிறிதுண்டாகி
லிருநிலத்தில் யாரு மறியத்-தெரிவிக்குந்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு.

(32)

இது தீமைதோன்றச் சொல்லிய சுட்டு.

துப்பாரொருங்கிய றூயவினைபண் பிரண்டுபொருட்கு
ஒப்பாவொருசொல்லு வைப்பதுயர்பரி மாற்றமது
செப்பார்பொருண்மா றிடறிகழாசியின் சீர்மைசொலிற்
றப்பாதவாசீர் வசனமெனவுணர் தாழ்குழலே.

(இ-ள்.) ஒருங்கியலலங்காரமிரண்டு பொருட்குப் பொருந்த ஒருசொற் புணர்வது. அது வினைபுணர்நிலையும் பண்பு புணர்நிலையுமென இரண்டுவகைப்பட்டு மூன்றாம் வேற்றுமையான் வரும். புணர்நிலை யெனினுமொருங்கிய லெனினுமொக்கும். பரிமாற்றமாவது பொருள்கொடுத்துப் பொருள்கொள்வதாகக் கூறுதல். பரிவர்த்தனையெனினும்

பரிமாற்றமெனினுமொக்கும். ஆசி யென்னுமலங்காரம் ஆசீர்வசனஞ் சொல்லுதலாம்-எ-று. வரலாறு:

பூக்கால் புனைந்த புனவர் மடமக
ணோக்காநோக்குண்டா ரைநோவதெவன்–நோக்காதே
கள்ள நிறையுங் கருங்கண்ணாற் கட்டழித்தா
ளுள்ள நிறையோ டொருங்கு.

இது வினைபுணர்நிலை.

பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே
நீங்காதவெம்மைவாய் நீண்டனவாற்–றாங்காதல்
வைக்குந்துணைவர் வருமவதி பார்த்தாவி
யுய்க்குந் தமியா ருயிர்.

இது பண்பு புணர் நிலை.

காமனை வென்றான் சடைமதியுங் கங்கையுந்
தாம நிழலொன்று தாங்கொடுத்து–நாமப்
பருவா ளரவின் பணமணிகடோறு
முருவா யிரம்பெற் றுள

சாயலு நாணு மவர் கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து.

இவை பரிமாற்றம்.

மிகை சேர்ந்த நாகமும் வெண்மதியுந் தம்மிற்
பகைதீர்ந்த மால்சடையோன் காப்ப–முகைமலரக்
கோழி யனுபமனன் கோறம் புலிவாழி
வாழிய மண்டலத்து வான்.

இது ஆசிமொழி. வாழ்த்தெனினுமமையும். (33)

பண்புதரும்பல் லலங்காரஞ்சேர்ந்து பயிலுவது
நண்புதரும்விரா வாம்பாவிகமது நற்கவியின்
ஒண்பொருளின்றொடர் காப்பியமுற்றி னுரைபெறுமால்
விண்புடைநின்றிடை யைச்சீரியமுலை மெல்லியலே.

(இ-ள்.) விராவலங்காரம் பலவலங்காரங்கூடி நிற்பது. பாவிகமென்பது முழுக்காப்பியமுமொருங்கு பொருந்திய குணமாம்-எ-று. வரலாறு:

*தண்டுறைநீர் நின்ற தவத்தா லளிமருவு*
*புண்டரிக நின்வதனம்போன்றதா–லுண்டோ*
*பயின்றா ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேன்*
*முயன்றான் முடியாப் பொருள்.*

இது *பலவலங்காரமுமருவி நின்றமையால் விராவலங்காரமாம். விராவெனினும் விரவியலெனினுஞ் சங்கீரணமெனினு மொக்கும். பாவிகங் காப்பியத்தன்மையாதலிற் றனிச் செய்யுளா லெடுத்துக் காட்டவமைவதன் று. (34)

**ஈண்டியமுற்றேக தேசவுவமை யுருவகமென்று**
**ஓண்டொருமூன்றா வுருவகமோதுவர் காரணமுந்**
**தூண்டுமகார ணமுமாமிகைமொழி சொல்வரெல்லாம்**
**வேண்டியவேண்டிய வாறுவிகற்பிப்ப மெல்லியலே.**

மேல்வகுத்த அலங்காரமனைத்திற்கு மாவதோர் புறநடை கூறுகின்றான். (இ-ள்.) முற்றுருவகம் ஏகதேசவுருவகம் உவமையுருவக மென உருவகத்தை மூன்றாகவும் அகாரண மிகைமொழி காரண மிகைமொழியென மிகைமொழியை இரண்டாகவும் விகற்பிப்பர். ஏனைய அலங்காரங்களையும் வேண்டிய வேண்டியபடிக் கெல்லாம் விகற்பிப்பர்-எ-று. சூத்திரத்தி லுவமை யுருவகமென்றானாயினும் மொழிமாற்றி உருவகவுவமையென்று கொள்க.

*மின்னிருக்கச் சாடி விழுத்துவலை மும்மதமா*
*முன்னுருமிக் கோசை முழக்காகப்–பெண்ணுருவ*
*வார்மென் முலையார் மனக்கோட்டை மேல்வருமே*
*கார்மேக மென்னுங் களிறு.*

இது முற்றுருவகம்.

*இரங்கு குயின்முழவா வின்னிசையார் தேனா*
*வரங்க மணிபொழிலா வாடும் போலு மிளவேனி*
*லரங்க மணிபொழிலா வாடுமாயின்*
*மரங்கொான் மணந்தகன்றார் நெஞ்சமென்செய் திளவேனில்.*

இது ஏகதேசவுருவகம்.

---

* இதிற் தற்குறிப்பேற்றங் கரும காரக வேது சிலேடை உவமை வேற்றுப்பொருள்வைப்பு சுவைமுதலிய பலவும் விரவியமை காண்க.

**வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க**
**சொல்லே ருழவர் பகை.**

இது வில்லினை ஏராகவுடைய உழவ ரென்றுஞ் சொல்லினை ஏராகவுடைய வுழவரென்று முருவகமாக்கி இருவரையும் பொருட்டெளிவாலுவமித்தலினால் உருவகவுவமை.

**பைத்தலைப்பண நாகமழன்றிட**
**மொய்த்தலைக்கிளை முன்னியபோரெனக்**
**கைத்தலத்து முகிழ்த்தது கார்முக**
**மெத்தலைச் சிலம் பாயர வெய்துமே.**

இது காரணமிகைமொழி. அகாரண மிகைமொழி வந்தவழிக்காண்க. (35)

**யாப்பையியம்பிடின் முத்தகமோடு குளகந்தொகை**
**காப்பியமாமுத் தகந்தன்பொருளோர் கவியின்முற்றும்**
**வாய்ப்பிற்குளகம் பலபாட்டொருவினை மன்னுதொகை**
**கோப்பிற்பொருளன காப்பியமாநூல் கொடியிடையே.**

(இ-ள்.) செய்யுள் முத்தகமுங் குளகமுந் தொகைநிலையுங் காப்பியமுமென நால்வகைப்படும். முத்தகமாவது ஒருகவியிலே வினைமுடிவது. குளகமாவது பலகவியொருவினையால் முடிவது. தொகைநிலையாவது பொருளிடங் காலந் தொழிலாதியவற்றிற் பலபாட்டொருங்கு தொக்கது. காப்பியமாவது பெருநூலாம்-எ-று. பொருளாற்றொக்கது புறநானூறு. இடத்தாற்றொக்கது களவழிநாற்பது. காலத்தாற் றொக்கது கார்நாற்பது. தொழிலாற்றொக்க தைந்திணை. பாட்டாற்றொக்கது கலித்தொகை. அளவாற்றொக்கது குறுந்தொகை. (36)

**ஆதியுமீறு மிடையுமடியொன்றி லேமடக்கும்**
**ஓதியபாதங்க ணான்கினுமாமொரு பாதமுற்றுந்**
**தீதியலாமைமடக்கலுமுண்டு தெரிந்தவற்றைக்**
**கோதியலாமை விகற்பத்தினிலறி கோல்வளையே.**

(இ-ள்.) ஓரடியின்கண்ணே தலைமடக்காய் வருதலிடைமடக் காய்வருதல் கடைமடக்காய்வருதல் மடக்கலங்காரமாம். உம்மை யான் மூன்றிடத்துமிரண்டிடத்து மடக்குதலுமுண்டு. பல பாதத்தின் முதலிடைகடை மடக்கிவருதலும் மூன்றிடத்து மடக்கிவருதலுமுண்டு. பாதமுற்று மடக்கியும் வரும். ஒத்தவெழுத்திற் பொருள்வேறாக வைத்து மொழி மடக்கினது மடக்கெனப்படுமேயெனக்கொள்க.

பண்ணைக்கு நன்மருங்கிற் பாரித்துப் பாட்டயரும்
பண்ணைக் குவளையங்கட் பான்மொழியார்-பண்ணைக்
கொடியா டுயர்மாடக் குன்றினவே யென்றிக்
கொடியா டுயர்மாடக்குன்று.

இது முதன்மடக்கு. இடைமடக்கினவு மீறுமடக்கினவும் வந்தவழிக் கண்டு கொள்க. மடக்கெனினும் யமகமெனினு மொக்கும்.

மணிமருங் குடையன வயிரக்கோட்டன
வணிமருங் கருவியவா லவாயின
மணிமருங்குடையன வயிரக்கோட்டன
வணிமருங்கரு வியவரச வேழமே.

இஃதடிமடக்கு. பிறவுமன்ன. (37)

தந்திரவுத்தி குணமதமேயுரை தர்க்கந்தன்னில்
வந்தியலெண்கோண் முதலாயுளமாலை மாற்றுமுன்னா
வந்தியல்சித்திர மென்றின்னவுமலங் காரமென்றே
தந்தியலச்சிலர் சொன்னாரவற்றையுஞ் சார்ந்தறியே.

(இ-ள்.) தந்திரவுத்தியுந் தந்திரகுணமும் ஆசிரியமதமுந் தந்திரவுரையுந், தர்க்கநூலிற்சொன்ன எண்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் பிரமாணமும் முதலியனவும், மாலைமாற்று முதலிய சித்திரச் செய்யுளுமலங்கார மென்பாருமுளர். அவையெல்லா மாராயந்தறிக. முதலாயுளவென்றதனால் நிரனிறை முதலிய பொருள் கோளணியும் அந்தாதி முரண்முதலிய தொடையணியும் மோனை முதலிய யாப்படியணியுந் தொடர்நிலைச்செய்யுட்கு வல்லோர் வகுத்த மெய்ம்மகிழ்வாகிய செய்யுளினணியு மறிந்து கொள்க.-எ-று. தந்திரவுத்தியாவன நுதலிப்புகுதல் ஒத்துமுறைவைத்தல் தொகுத்துச்சுட்டல் வகுத்துக்காட்டல் முடித்துக்காட்டல் முடிவிடங்கூறல் தானெடுத்துமொழிதல் பிறன்கோட்கூறல் சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற்புணர்த்தல் இரட்டுறமொழிதல் ஏதுவின் முடித்தல் ஒப்பின்முடித்தல் மாட்டெறிந்தொழுகல் ஒழிந்தது விலக்கல் எதிரதுபோற்றல் முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல் விகற்பத்தின்முடித்தல் முடிந்ததுமுடித்தல் உரைத்து மென்றல் உரைத்தாமென்றல் ஒருதலைதுணிதல் எடுத்துக்காட்டல் எடுத்தமொழியினெய்தவைத்தல் அன்னதல்லதிதுவென மொழிதல் எஞ்சிய சொல்லினெய்தக்கூறல் பிறநூன் முடிந்தது தானுடன்

படுதல் தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல் சொல்லின்முடிவினப் பொருண்முடித்தல் ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல் உய்த்துணரவைத்தலென முப்பத்திரண்டாம். தந்திரகுணமாவன சுருங்கவைத்தல் விளங்கச்சொல்லல் நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல் ஓசையுடைமை ஆழமுடைமை உலகமலையாமை முறையின்வைத்தல் விழுமியதுபயத்தல் விளங்குதாரணந் தரலெனப் பத்தாமென்க. ஆசிரியமதமாவன மறுத்தல் உடன்படுதல் பிறர்தம் மதமேற்கொண்டு களைதல் தாஅனாட்டித்தனாஅது நிறுத்தல் இருவர் மாறுகோ ளொருதலை துணிவு பிறநூற்குற்றங் காட்டல் பிறிதொடுபடா அன்றன் மதம் வகுத்தலென ஏழு மெனக்கொள்க. தந்திர உரையாவன சூத்திரந்தோற்றல் சொல்வகுத்தல் சொற்பொருளுணர்த்தல் வினாதல் விடுத்தல் விசேடங்காட்டல் உதாரணங் காட்டல் ஆசிரிய வசனங் காட்டல் அதிகாரவசனங்காட்டல் தொகுத்து முடித்தல் விரித்துக்காட்டல் துணிவுகூறல் பயனொடு புணர்த்தல் கருத்துரைத்தலெனப் பதினான்கென்ப. இவற்றுட்சில வருமாறு:

**நல்லா றெனினுங் கொளறீது மேலுலக**
**மில்லெனினு மீதலே நன்று.**

இஃதிரட்டுறமொழிதல்.

**இலர்பல ராகிய காரண நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்.**

இது ஏதுவின்முடித்தல்.

**தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை.**

இது மறுத்தல்.

**அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணுமுள.**

இஃதன்னதல்ல திதுவென மொழிதல்.

**மிகினுங் குறையினும் நோய்செய்யு மேலோர்**
**வளிமுதல வெண்ணிய மூன்று.**

இதுமாட்டெறிந்தொழுகல்.

பிரிவுரைக்கும் வன்கண்ண ராகி லரிதவர்
நல்கவ ரென்னு நசை.

இது எதிர்மறுத்தல்.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

இது தொகுத்துக்காட்டல்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

இது விளங்கச்சொல்லுதல்.

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

இது நவின்றோர்க்கினிமை.

வீணாள் படாமைநன் றாற்றி னஃதொருவன்
வாணாள் வழியடைக்குங் கல்.

இஃது உய்த்துணரவைத்தல்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

இது வினாதல்.

எப்பொரு ளெத்தன்மைத் தாகிலு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இது விழுமியது பயத்தல்.

தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

இவை தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப்போலி.

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

இது காண்டல்.

**சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்**
**கலத்துணீர் பெய்திரீஇ யற்று.**

*இஃதனுமானம்.*

**பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா**
**பிற்பகற் றானே வரும்.**

*இது பிற நூன்முடிந்தது தானுடன்படுதல். இனிச் சித்திரக்கவியாமாறு சொல்லுகின்றான்.* *(38)*

**ஏறியமாலைமாற் றேசக்கரமினத் தாலெழுத்தாற்**
**கூறியபாட்டு வினாவுத்தரமேக பாதமன்றித்**
**தேறியகாதை கரப்புச்சுழிகுளஞ் சித்திரப்பா**
**வீறியல்கோமூத் திரியும்பிறவும் விரித்துரையே.**

*(இ-ள்.) மாலைமாற்றுமுதற் கோமூத்திரியீறாகக்கூறிய அனைத்துஞ் சித்திரக்கவியாம்-எ-று. மாலைமாற்றாவது மீள வாசித்தாலும் அதுவே யாவது. சக்கரமாவது நான்காரைச்சக்கரம் ஆறாரைச்சக்கரம் எட்டாரைச்சக்கர முதலிய சக்கரமாக வாசிக்கலாவது. இனத்தாலும் எழுத்தாலுங் கூறிய பாட்டாவன வல்லினம் மெல்லினம் இடையினத்தொன்றாலே வருதல் செய்யின் ஓரினப்பாட்டாம். ஒரெழுத்தாலே முற்றும் வருவன ஒரெழுத்துப்பாட்டாம். வினாவுத்தரமாவது வினாவினுக்குச் சொன்ன உத்தரமெல்லாம் ஒன்றாகத் தொகுக்க ஒருபொருள் பயப்பது. ஏகபாதம் நாற்காலுச்சரிக்கப் பொருள் வேறாவது. வரலாறு:*

*காணிமா பூவரே ரேவபூ மாணிகா*
*நீவாத மாதவா தாமோக ராகமோ தாவாத மாதவா நீ.*

*இவை இறுதிமுதலாக வாசித்தாலும் அவையேயாதலான் மாலைமாற்றாம். சக்கரக்கவி வருமாறு:*

*மாதவா போதி வரதா வருளமலா*
*பாதமே யோது சுரரைநீ தீதகல*
*மாயா நெறியளிப்பாய் வாரன் பகலாச்சீர்த்*
*தாயா லலகிலரு டான்.*

*இஃதார்தோறு நான்கெழுத்துநின்று கொப்பூழில் ரகாரம்பெற்றுக் குறட்டின் வசுதாரையென்னும் பெயர்வந்து சக்கரத்திலிருபத் தெட்டெழுத்தாய் முடிந்த நான்காரைச்சக்கரம்.*

**தண்மலர் வில்லிதன் போரா னமக்குத் தயையளித்த**
**கண்மலர்க் காவிக் கெதிரா வனவன்று கைப்பொலிந்த**
**பண்மலர் யாழ்பயில் வாரார்வு சேர்பதி நாகைமிக்க**
**தண்மை யகத்துப் பதுமத்த மாதர் தடங்கண்களே.**

இஃதார்தோறும் ஒன்பதெழுத்து நின்று கொப்பூழின்கண் ரகரவாகாரம் பெற்றுக் குறட்டிற் போதிவானவரென்றுவந்து சக்கரத்திலிருபத்து நான்கெழுத்தாய் முடிந்த ஆறாரைச் சக்கரம். *மாலவனமுதலியவிமைய (வாதிபவானவ) (பதிபகவானபுமி) (பதிபவானபுமி) ரெவணமிககாலனெழி (னலல) (லவ) (லல) னகாரியலங்கிதன வெசெடனின்னுருவாந்தெவாகரங்கதுவா (ண) (ன) (ன) ஙகமிகாலசிலரெனறபொனறிவுளனெதிரிபவன மசா முரணவா சொனனமனகா (லனும) (லுனு) (லனு) னறுவெதவாலென (னான) (றான) (னான) சழகுநாடனமிலகனறுனனியவென்றுகந்து சொரி (யிரெயிலெப) யமிரொயிலெய) யயிரெயிலெய) தாயயொ விெனொங்கூர்நதம ரொங்கூழவாமமா (வு) ணடாரநதவினாகலொலப பூணமாலை (ச) சா (பி) (பி) (ம) னமகிமடி (ததொ) (கசொ) (ததொ) னறியசசடையெதபூணடினியுயிரமெறபொறபொடெண ணியலாரநன்னெடு (மாலையிடத்தி) (யிடக்கினு) (யிடககினு) னுயத தமாலகொளாயவிணணினனலலார (மணந) (மனன) (மனன) லலாரவிழததனாசிற (ா) பபூககூறா (விச) (விசி) பணணொகரொ (ப) (ம) (ப) பெண்ணாநது (நிததலு) (நிககலு) (நிககலு) வாயததார ஙகொளகையினொயதிரததாரலி (வி) (வி)

---

* இக்கவியும் இதன்கீழ் உரைத்த சித்திரத் தொகுதியும் பெரும்பான்மையும் பிரதிகளில்லை. உள்ள பிரதிகளிலுங் காலாந்தரத்திற் கரலிகிதவழுக்களான் மிகமாறுபட்டுக் கிடக்கின்றன. கவியின் பிரத்தார இலக்கணத்தால் அஃதோர் பேரருஞ் செய்யுளென்று தோன்றுவதானும், ஏதாவதொரு வகையாய் நாம் அதனைத்திருத்தி அச்சிடுவது தகுதியன்றாதலானும், அதன் நிச்சயரூபங்கண்டு சக்கரத்தமைத்துக் காட்ட வல்ல சித்திரங்கவிகள் எவ்விடத்தாயினு மிருத்தல் கூடுமாதலானும், சித்திரக் கவிகளுட் தனக்கிணையில்லாத பெருமாற்ற லுடையதோர் நூதனக்கவியை இறந்துபோகவிட மனமொவ்வாமையானுந் தென்னாட்டிலும் யாழ்ப்பாணத்தினுஞ் சென்னையிலுந் தமிழில் மிகப்பிரபல வித்துவான்களாயிருந்தோர் மூவருடைய பிரதிகளிற் கண்டரூபமாக இதனையிவ்விடம் பதிப்பித்திருக்கின்றோம். பிரதியில் ஒன்றற்கொன்று பேதப்பட்டனவற்றை இருதலைப்பிறைனுள்ளுங் காட்டி யிருக்கின்றோம்.

(வி) லொயயெனவெத (து) (த) (து) து (நி) (னி) (னி) னை (யா) வெலகெனறுவளவன பாரமிகுசிரே. இது எட்டாரைச்சக்கரம். இதற்குப் பிரத்தாரவிலக்கணமாவது:

எட்டாராய் நேமி பதினேழா யார்தோறும்
பட்டபதி னேமுழுத் ததாய்ச்-சுட்டிய
கொப்பூழி னீற்றெழுத்தாய்க் கொண்டபுறத் துண்டத்துத்
தப்பா விருபத் திரண்டெழுத்தாய்த்
துப்பேறவீரெட் டடியு மெழிற்சக் கரக்கவியை
நேரிட் டெழுதி நிறுத்துங்காற்-சீரிட்ட
நவ்வு மனநடையி னன்கண்ணி னொத்தியலுஞ்
செவ்விதனை யீங்கியலச் செப்பிடுவ-னெவ்வாயு
மொன்றுவிட் டொன்றா மொளிநேமி யெட்டின்க
ணின்றபுகழ் வீரன் றிருநாமம்-பின்றாமை
மன்னியவோ ரெட்டாகு மாலைமாற்றாமதுவு
முன்னு சுழிகுளமு மோரடியாந்-துன்னிய
வீரடியுங் கோமூத் திரியாந் தமிழ்க்கூட்டுக்
கூரிய கூட சதுக்கமாஞ்-சீரிய
விற்பூட்டு மேது வெனுமிவையா மிந்நூலிற்
கற்பார் கருத்தாக்களையுரைத்த-பொற்பார்
கவியென்றும் வள்ளுவன்பா மூன்றினு மூன்று
செவியென்றும் வந்து சிறக்கும்-புவியின்க
ணொன்றுக்கொன்றுள்ளாப் பதினெட்டு வட்டமிட
நின்றபதி னேழு நிலத்து.

ஒன்றுக்கொன்றுள்ளாகப் பதினெட்டுவட்டங்கீறப் பதினேழு நேமியுளவாம். அதன்கண் இச்சக்கரக்கவியைப் புறத்துநின்றும் வலமாகக் கடலாகவு மெழுதிப் போதவு மெழுதி இவ்வண்ண முறையானே எட்டடியு மெழுதுவது. எட்டாமடியினிறுதி தொடங்கிப் புறநேமித்துண்ட மெட்டினும் ஒருதுண்டத்துக் கோரடியாக எழுதுவது. இவ்வண்ணமெழுத முன்பிலெட்டடியின் துண்டவெழுத்துப் பின்பிலெட்டடிக் கீற்றெழுத்தாம். இதன்கணிரண்டாநேமியிற் கயிலகுல கரனும் நான்காநேமியிற் காவேரிவல்லவனும் ஆறாநேமியிற் கண்ணுமுனறிவானும் எட்டாநேமியிற் கரிகாலகன்னனும் பத்தாநேமியில் விக்கிரமசோழனும் பன்னிரண்டாநேமியில் வளவநாராயணனும் பதினாலாநேமியில் வீரராசேந்திரனும் பதினாறாநேமியிற் பரநிருபகாலனுமென எட்டுப்பெயரும் புலப்படும். இதன்கண்

"வினைதேர்வீர சோழ னலர்வனம் வானரிமாரனாலையோ மணிவீர நாராயணனோவது" என்னுந் தமிழ்க் கூடசதுக்கமும்,

வீரத்தால் விண்ணாதல் மெய்த்தவத்தால் வீடாத
லாரத்தா லாள்வதெவர் தாடேறச்-சீரொத்த
மின்னார் படைத்தடக்கை வீரரா சேந்திரனுக்
கொன்னாராய் வாழ்வ துறின்;

விண்கூ டலசங்க மத்துடைந்தவேல் வடுக
ரெண்கூ டலறு மிருங்கானிற்-கண்கூடப்
பண்ணினான் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினார் சேரு மிடம்;

ஈண்டுநூல்

கண்டா னெழின்மா லைக்கூற் றத்துப்
பூண்டபுகட் பொன்பற்றி காவலனே-மூண்டவரை
வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை மாறன்றண்
சொல்லின் படியே தொகுத்து;

மின்னார் வடிவேற்கை வீரரா சேந்திரன்றன்
பொன்னார் பதயுகளம் போற்றாது-கன்னாடர்
புன்கூடலசங்க மத்திினொடும் போருடைந்தார்
நன்கூ டலசங்க மத்து.

என்னும் வெண்பாக்களுங் காதைகரப்பாய் வந்தன. இவற்றினிறுதி வெண்பாவின் நாலாமடிக் கெழுத்து முன்னின்ற மூன்றடியும் பெருக்கிக் கொள்ள வந்தமையாற் கூடசதுக்கமுமாயிற்று. மாலைமாற்றின் முன்பு சொன்னதும் இதனுள் அடங்கிய தெனக்காண்க.

"கய(லி) (லி) வி) யலகொவளவனறனைச (ச) (ச) சா) ததிரம்".

இது ஏகபாதம். இதனை நாற்காலுச்சரித்துப் பொருளை வேறாக்கிக் கண்டுகொள்க.

"பாரினனகு டையினகணடங்கவெ
சிரி (நிர) (னிந) (னிர) தறகிருந (த) (த) (தி) மா (லி) (ா) (ா) னெ".

இது இருபாதம். இதனை இருகாலுச்சரித்துப் பொருள்வேறாக்கிக் கண்டுகொள்க.

*கொவனைமாலை (ம) (ப) (ப) ராவாநொ (ந) (ா) (ந)*
*தாவாரமாலை (வ) (ம) (ம) ரனமாச்சு.*

இதனை இரண்டு வரியாக எழுதிக் கோமூத்திரியாக வாசித்துக்கொள்க.

*காதமதநிநிடதுலககண்ணினமாணபெநதுமானி*
*தாது மாண்டதனதுகுறுகுமாநி.*

இதனை நெட்டெழுத்தியன்ற நாலுவரியாக எழுதிச் சுழிகுளமாக வாசித்துக்கொள்க. இதனையே சதுரங்கவறையின்கட் தலைதடுமாறாகத் திரட்டியெழுதித் துவாசியாய் வருமாறு கண்டுகொள்க.

*"புவிதானிடதுலவிணடா (ா) (ந) (ா) ாடடயதுநாடா (ா) ளா (ளி) கிமுடடவிராசெந்திரநி".*

இதனை முன்பிற் காதைகரப்பிற் சுழிகுளமாக வாசிக்க. இச்சொன்ன சித்திரக்கவிகளோடுங்கூடத் "தானந்தவமிரண்டுஞ்" "செவிக்குணாவு" "முப்பமைந்தற்றாற் புலவியும்" என்னுங் குறள் மூன்றும் எட்டறைச் சதுக்கத்துட் காதைகரப்பாய் வந்தன.

பிறவுமென்றதனால்,

*மாலைமாற்றே சக்கரஞ்சுழிகுள*
*மேகபாத மெழுகூற்றிருக்கை*
*காதைகரப்பே கரந்துறைபாட்டே*
*தூசங்கொளலே வாவன்ஞாற்றுக்*
*கூடசதுக்கங் கோமூத்திரியே*
*யோரெழுத்தினத்தா லுயர்ந்தபாட்டே*
*பாதமயக்கே பாவிற் புணர்ப்பே*
*யொற்றுப்பெயர்த்த லொருபொருட்பாட்டே*
*சித்திரப்பாவே விசித்திரப்பாவே*
*விகற்பநடையே வினாவுத்தரமே*
*சருப்பதோ பத்திரஞ் சார்ந்த வெழுத்து*
*வருத்தனைமற்றும் வடநூற்கடலு*
*ளொருங்குடன் வைத்த வுதாரணநோக்கி*
*விரித்துமுடிக்கு மிறைக்கவிப்பாட்டே*
*யுருவகமாதி விராவியலீறாய்*
*வருமலங்காரமும் வாழ்த்தும்வசையுங்*
*கவியேகமகன் வாதிவாக்கியென்*

றவர்கடம் மையு மவையி னமைதியும்
பாடுதன்மரபுந் தாரணைப்பகுதியு
மானந்தமுதலிய வூனமுஞ் செய்யுளும்
விளம்பினதியற்கையு நரம்புவிகற்பமும்
பண்ணுந்திறனும் பாலையுங்கூட்டமு
மெண்ணியதிணையு மிருதுவுங்காலமு
மெண்வகை மணமு மெழுத்துஞ் சொல்லுஞ்
செந்துறைமார்க்கமும் வெண்டுறைமார்க்கமுந்
தந்திரவுத்தியுந் தருக்கமுட்டியு
முந்துநூன் முடிந்த முறைமையின் வழாமை
வந்தனபிறவும் வகுத்தினத்து ரைப்பா
னந்தமில்கேள்வி யாசிரியன்னே

என்றமிர்தசாகரனார் கூறியனகொள்க.

எழுகூற்றிருக்கையாவது

ஏழுவரி மூன்றறை முதல் ஒன்றற்கொன்றிரண்டறை மேற்பட முறையாகக்கீறி முறையே மக்கள் போக்கும் போந்துமீள்வும் ஆடும்பெற்றியின் "வழுவாமல் ஒன்று முதலாகப் பாடுவது.

கரந்துறைபாட்டாவது

ஒருபாட்டைச் செவ்வேயெழுதினால் ஈற்றுமொழிக்கு முதலாமெழுத்துத் தொடங்கி ஒன்றுவிட்டுவாசிக்க மற்றொரு பாட்டாவது.

தூசங்கொளலாவது

"ஒருவன் ஒரு வெண்பாச்சொன்னால் அதனீறே முதலெழுத்தாக" மற்றொரு வெண்பாப்பாடுவது.

வாவன் ஞாற்றாவது

"முந்துறக்கொடுத்த வெழுத்துக்கீறுபாடிப் பின்னைக் கொடுத்த எழுத்துக்கீற்றயல்பாடி அதன்பின்புகொடுத்த எழுத்துக் கிரண்டாமடிபாடி அதன்பின்பு கொடுத்த எழுத்திற் பாடிமுடிப்பது".

பாதமயக்கமாவது

"மூவர் மூன்றாசிரியவடி சொன்னாற் தானோரடிசொல்லிக் கிரியைகொளுத்துவது".

பாவிற்புணர்ப்பாவது

"நால்வர் நான்கடிக் கீற்றுரைசொன்னால் இவன் நாலடிக்கும் முதல்பாடிப் பொருண்முடிப்பது".

ஒற்றுப்பெயர்த்தலென்பது

"ஒருமொழியைப்பாடி நிறுத்திவைத்துப் பிறிதொரு பொருள் படப் பாடுவதும் பலபெயர்க்கூட்டம் ஒருபொருள்வரப்பாடுவது மென இரண்டு வகைப்படும். ஒரு பொருட்பாட்டாவது "ஒன்றினையே துணித்துப்பாடுவது".

சித்திரப்பாவாவது

"நான்குகூடினவெல்லாம் பத்தாகவும் மூன்றுகூடினவெல்லாம் பதினைந்தாகவும் பிறவாற்றானுமெண்வழுவாமற் பாடுவது".

**இருவ ரெழுநாள் மாறமர்ந்தான் கோயி**
**லொருவனை யெட்டா வுவந்தேன்–பொருவிலா**
**நந்தியான் முக்கண்ணா னாற்கதி யொன்பானோ**
**டைந்துகலை தந்தா னறி.**

இதனை ஒன்பதறையாகக் கீறிக்கண்டுகொள்க.

இனி விசித்திரப் பாவாவது

எங்கும் ஏழறையாகக் கீறி மேலொழுகு நுண்மொழி முதலாகியவெழுத்து ஒருபொருள் பயக்க நிறுவி அவ்வெழுத்துக்களே எங்குமொழுகுங் கண்ணறையும் பாடமும்நிறுவி ஓரெழுத்துக் கோரடிவரப் பாடுவது.

விகற்பநடையாவது

வேறுபட்ட நடையுடைத்தாவது.

சருப்பதோபத்திரமாவது

"எட்டெட்டெழுத்தின் அறை அறுபத்துநான்குவரக்கீறி அவை மாலைமாற்றுஞ் சுழிகுளமுமாய் வரப்பாடுவது".

ஓரெழுத்துமுதலாக ஒவ்வொன்று கலை சிறந்தேறிய எழுத்தின்முறையே பிறிது பொருள் பயக்கப் பாடுவது"

எழுத்துவருத்தனை.

**மரத்தினை யோரெழுத்துச் சொல்லு மற்றொன்று**
**நிரப்பிட நீரிற்பூ வொன்றா–நிரப்பிய**
**வேறோரெழுத்துய்க்க வீரரா சேந்திரனாட்**
**டாறா மெனவுரைக்க லாம்.**

மெய்வாழ்த்தும் இருபுறவாழ்த்து மென வாழ்த்திரண்டு வகைப்படும்.

மெய்வசையும் இருபுறவசையுமென வசையுமிரண்டு வகைப்படும்.

ஆசுகவியு மதுரகவியுஞ் சித்திரகவியும் வித்தாரக வியுமெனக் கவிகள் நால்வகையராவர்.

கடுங்கவி இன்பகவி அருங்கவி பெருங்கவி யெனவுமமையும்.

கமகனாவான் வல்ல நூலறிவினாலும் மதியினது பெருமையாலுங் கல்லாத நூல்களையுங் கற்றோர் வியப்பத் தந்துரைக்கும் புலவனெனக்கொள்க.

வாதியாவான் "காரணமும் மேற்கோளு மெடுத்துக்காட்டிப் பிறன்கோள்மறுத்துத் தன்மத நிறுத்திப் பாடுவோன்".

வாக்கியாவான் "அறம்பொருளின்பம் வீடென்னு நான்கையும் விரித்துச்சொல்லுமாசிரியன்".

அவையினமைதியாவது "நல்லோரிருந்த நல்லவையுந் தீயோரிருந்த தீயவையுமெனக்கொள்க".

பாடுதன் மரபுந் தாரணைப் பகுதியும் வன்ன மரபுள்ளுந் தாரணை நூலுள்ளுங் கண்டுகொள்க.

*ஆனந்தமுதலிய ஊனஞ் செய்யுளின் குற்றமாமெனக் கொள்க.

செய்யுளாவன தனிநிலைச்செய்யுளுந் தொடர்நிலைச் செய்யுளுந் தனிப்பாதச் செய்யுளுமெனக்கொள்க.

விளம்பினதியற்கை விரிக்குங்காலை
யாரியந் தமிழினொடு நேரிதி னடக்கி
யுலகின் றோற்றமு மூழியி னிறுதியு
மலகிறொண்ணூற் றறுவரதியற்கையும்

---

* ஆனந்தம் எழுத்தானந்தஞ்சொல்லானந்தம் பொருளானந்தம் தூக்கானந்தந் தொடையானந்தமெனப் பாட்டுடைத் தலைவனைப் பற்றி வரும். முதலிய என்றதனால் ஒன்பதுவழுவும் ஆறுமலைவுங் கொள்க.

வேதநாலும் வேதியரொழுக்கமு
மாதிகாலத் தரசு செயியற்கையு
மப்பா னாட்டா ரறியும் வகையா
லாடியும் பாடியு மமைவரக் கிளத்தல்.

நரம்பாவன

குரலேதுத்தங் கைக்கிளை யுழையிளி
விளரிதாரமென வேழுநரம்பே.

பண்ணாவன

பாலையாழ் குறிஞ்சியாழ் மருதயாழ் செவ்வழியாழென நான்கு.

திறனாவன

அராகம் நேர்திறம் வற்புக் குறுங்கலி
யாகநான்கும் பாலை யாட்டிறனே.

நைவளங்காந்தராம் பஞ்சுரம்படுமலை
மருளொடு செந்திறங் குறிஞ்சியாட்டிறனே.

நவிரேவடுகு குறிஞ்சியேதிறமென்
றிவைநான்காகு மருதயாட்டிறனே.

நேர்திறம்பியாதிறம் யாமயாழ்சாதாரி
யென்றிவைநான்குசெவ் வழியாட்டிறனே.

பாலையாவன

"செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை கொட்டிப்பாலை இனப்பாலை விளரிப்பாலையென" ஏழுமென்ப.

கூட்டமாவன

எழுவகையகத்திற் கண்டுகொள்க.

திணையாவன

"அகமே அகப்புறமே புறமே புறப்புறமே" என நான்கென்ப.

திணையின் பகுதியாவும் பொருளதிகாரத்திற் கண்டுகொள்க.

இருதுவாவன

காரே கூதிர் முன்பனிபின்பனி சீரிளவேனிலொடு முதுவேனிலென ஆறாம்.

காலமாவன

நற்காலமுந்தீக்காலமுமென்பன.

மணமெட்டாவன

ஒப்பானுக் கொப்பாளோர் பூப்பு நிகழ்ந்தபி
னிப்பான் மதி தோன்றா வெல்லைக்க-
ணப்பாற்
றருமமே போற்றீமுன் றக்கானுக் கீதல்
பிரமமே யென்ப பெயர்;

என்பதனாற் பிரமமறிக.

கொடுப்பான் கொடுத்துழிக் கொண்டபொழுது
மடுப்பாங் கடுத்தற் கமைந்தார்-மடுப்பா
னிரண்டா மடங்குபே தித்தலே மாய
னிரண்டா மணத்தி னியல்பு

என்றமையாற் பிரசாபத்தியமறிக.

இற்குரம்போ லொப்பவருக் கொப்பவ ரென்றொட்டாப்
பொற்குளம்பி னூடு புனலினிடை-முற்கொணர்ந்த
வாரொடுங்கு மென்முலையை வாழ்க்கைக்
கமைப்பரே
லாரிடம்பே ராகு மதற்கு

என்றமையால் ஆரிடமறிக.

தெய்வந் தொழுதுபெற்ற சேயிழையை யொப்புமையா
னெய்வந்த தீமுன்னா நேர்வதூஉங்-கைவந்த
வேள்வி யகத்து வினையான் விழைபொருளா
யாள்வதூஉந் தெய்வமண மாம்

இதனாற் தெய்வமணமறிக.

முன்னை வினையின் முறையாற் களவியலாற்
கன்னியைக் கண்டுடன் காதலித்துப்-பின்னருள
நிகழார்வ முறைத்தொத் துறுதல்
வளமிகுகாந் தர்ப்ப மணம்

என்றமையாற் காந்தர்வ மணமறிக.

வில்லேற்றல் வேழமட றன்மெய் மதவலியாற்
கொல்லேற்றை நண்ணியே கொள்ளுதல்பொன்-னல்லாட்

கரியன வீத லசுர மசுர
ரரியன வாற்று மணம்

என்றமையால் அசுரமணமறிக.

பூந்துகிலான் வன்மைமே லிட்டுப் புதவடைந்து
பாய்ந்து வலித்துக்கைப் பற்றிக்கொண்-டேந்திழையை
யெய்தப் படுத லிராக்கதமா மென்பரே
மைதீர்ந்தார் சொன்ன மணம்

என்றமையால் இராக்கதமணமறிக.

மஞ்சிற் களித்தல் மயங்கதல் மாழாத்த லஞ்ச
லறிவிழத்தல் சாவுதலிற்-றுஞ்சின
மின்னை மறத்தால் விழைந்தகடு செய்வதே
பின்னைப் பிசாச மணம்

என்பதனாற் பிசாசமணமறிக.

எழுத்துஞ்சொல்லும் அவ்வதிகாரங்களாலறிக.

செந்துறைமார்க்கமும் வெண்டுறை மார்க்கமுமாவன:

நாற்பெரும் பண்ணு மதினெழு திறனுந்
தோற்றிய வின்னிசை செந்துறை யாகும்.

ஏனையவெல்லாம் வெண்டுறை யாகுமென்பதனாலறிக. தந்திரவுத்தி முன்பேசொல்லியன. தருக்கமாவது நியாயசூடாமணி புதியாநுட்பமாதியவற்றுட் கண்டு கொள்க (39)

இடையேவடவெழுத் தெய்தில்விரவிய லீண்டெதுகை
நடையேதுமில்லா மணிப்பிரவாளநற்றெய்வச் சொல்லின்
கிடையேமுடியும் பதமுடைத்தாங்கிள விக்கவியின்
றொடையேதுறைநற் பிரளிகையாதி துணிந்தறியே.

(இ-ள்.) வடவெழுத்து விரவுவது விரவியலாம். வடமொழி விரவின் மணிப்பிரவாளமாம். அதற்கெதுகையில்லை. கிளவிக்கவியுந் துறைக்கவியும் பிரளிகைமுதலியவினாவிக்கவியும் அறிக. எ-று. (40)

மறங்களிதாது வயிரபஞ்சம்பிர தந்தவசு
குறங்கணிகம்முத லாந்துறையாகுங் குவலயத்தே
திறம்பலபோக்குங் கிளவிக்கவிசெய் யுளின்பயனே
அறம்பொருளின்ப மொடுவீடெனவறி யாரணங்கே.

(இ-ள்.) மறங் களி தாது வயிரபஞ்சம் பிரதந் தவசு குறங்கணிக முதலான வெல்லாந் துறைக்கவியாம். திறம் பலபோக்குங் கிளவிக்கவி. செய்யுளின்பயன் தர்மார்த்த காமமோக்ஷ மென்ப-எ-று. (41)

## அலங்கார முற்றும்

### அந்தச் சிறப்பு

தடமார்தருபொழிற் பொன்பற்றிகாவலன் றான்மொழிந்த
படிவீரசோழியக் காரிகைநூற்றெண் பஃதொடொன்றின்
திடமார்பொழிப்புரை யைப்பெருந்தேவன்செகம்பழிச்சக்
கடனாகவேநவின் றான்றமிழ் காதலிற் கற்பவர்க்கே.

ஓராதெழுதினே னோருரையை யொண்பொருளை
யாராய்ந்து கொள்வ தறிவுடைமை-சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

# செய்யுளகராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகரம்வகரத்தி | 2 |
| அச்சியொடாட்டி | 43 |
| அடைவுமகிழ்ச்சி | 185 |
| அய்யாயிகராந்த | 50 |
| அரவமெடுத்தல் | 87 |
| அருளுமதிசய | 223 |
| அளவோரடிபோ | 148 |
| அறிந்தவெழுத்தம்முன் | 1 |
| அன்மொழிநற்றொகை | 39 |
| அன்னியனீன | 41 |
| **ஆ** | |
| ஆக்குதல்கேட்டவர்க் | 173 |
| ஆக்குமொருங்கிய | 190 |
| ஆசியனாதரங் | 213 |
| ஆட்டாற்றுதீற்றாதி | 51 |
| ஆதியதான்றெரி | 29 |
| ஆதியிலாண்பெ | 17 |
| ஆதியினிற்குருப் | 150 |
| ஆதியுமீறு | 240 |
| ஆயாளீயேயவ்வொ | 22 |
| ஆயுங்குணத்தவ | xxxviii |
| ஆவிக்குறிற்பின் | 12 |
| ஆவிபின்றோன்றக் | 10 |
| ஆவியனைத்துங் | 4 |
| ஆவுமகரக் | 6 |
| ஆவுமிட்டுந்துவ்வு | 54 |
| ஆறாமுடலின்பின் | 7 |
| ஆற்றுமகமே | 66 |
| ஆனாவழகினைக் | 175 |
| ஆனாவுலகிற் | 175 |
| ஆனாளாரார்களது | 20 |
| ஆனாளாரார்களொ | 54 |
| ஆன்றாமுலோபத்தொ | 5 |
| **இ** | |
| இடையுமுதலுங் | 148 |
| இடையேவடவெழுத் | 254 |
| இப்படிக்கட்டளைத் | 169 |
| இருசீருமுச்சீரு | 100 |
| இருமொழிபன்மொழி | 33 |
| இல்லையுண்டாலில் | 54 |
| இறுதிமெய்நீங்கிய | 1 |
| **ஈ** | |
| ஈண்டியமுற்றேக | 239 |
| ஈண்டுஞ்சிலீட்ட | 174 |
| ஈரடியாதி | 137 |
| ஈரெட்டுமூவைந்து | 62 |
| ஈறாம்லகார | 11 |
| ஈறுமகர | 4 |
| ஈற்றயன்மூச்சீர் | 111 |
| ஈற்றின்பின்னவ்வரி | 10 |
| **உ** | |
| உண்ணுமிதனா | 41 |
| உந்திமுதலெழுங் | 3 |
| உம்மைபொருளினொ | 192 |
| உரையுடலாக | 171 |
| உன்னுமென்னுந்தன்னு | 23 |
| **எ** | |
| எட்டாமெழுவாய் | 15 |
| எண்ணிரண்டாமொற்றுப்பன் | 13 |
| எண்ணிரணடாமொற்றுவன்மை | 8 |
| எழுசீரடியிரண் | 143 |
| எழுத்தளவுமிரண் | 153 |
| எழுவாய்முதலெழு | 32 |
| **ஏ** | |
| ஏதுவுரைப்பி | 224 |
| ஏயாஎச்சொன்முன் | 2 |
| ஏறியநெட்டெழுத் | 149 |
| ஏறியமாலைமாற் | 244 |
| ஏறுமடியெனைத் | 151 |
| ஏற்றுமுதுபாலை | 85 |
| ஏற்றும்விளைவொ | 67 |
| ஏன்றாமுதலள | 104 |

ஐ

ஐம்மூன்றதாமுடல் 9
ஐயென்பதுகரு 18

ஒ

ஒப்பார்பொருளே 174
ஒப்பாருறழ்ச்சியுங் 150
ஒப்பிலுவமை 200
ஒருப்பாடுநற்சொற் 86
ஒருமையிருமை 218
ஒருவனொருத்திசிறப்பு 56
ஒருவனொருத்திபல 16
ஒருவனொருத்தியொன் 15
ஒன்றாதியென்ப 149
ஒன் றுக்கொருவோ 11
ஒன் றுமிடைச்சீர் 107

ஓ

ஓங்காதமுன்னிலைப் 59
ஓங்கியசந்தத் 152
ஓடாப்படையாண்மை 86
ஓதியவேனி 68
ஓராதெழுதினே xxxiv

க

கருவிளங்கூவிளந் 99

கா

காடுகார்மாலை 68
காட்டியவீடெனைத் 152
காரணந்தான்றெரி 26

கி

கிறாஅய்நின்றாய்கிறீர் 59

கு

குறிலுநெடிலு 99
குற்றிசைவாகை 66
குற்றெழுத்தொன்றொன் 3

கூ

கூட்டெழுத்தின்பின் 46
கூறியசுட்டின்பின் 13
கூறியசொற்பின் 17
கூறும்பிறபொருள் 182

ச

சட்டகமேதிணை 67

சா

சார்ந்தவழக்கொடு 172

சி

சிந்துங்குறளு 126

செ

செப்புஞ்சிலேடை 232
செல்லுஞ்சிறப்புத் 234
செறிவார்சிலீட்டந் 175

சொ

சொன்னமொழிப்பொரு 5

த

தடமார்தருபொழிற் 255
தந்திரவுத்தி 241
தம்மந்திகன்வம் 50
தரவொடுதாழிசை 113
தற்புருடன்பல 32
தன்மைத்துணிவா 60

தா

தாக்குஞ்சமாதான 205
தாங்குஞ்சமாயிதந் 230
தாதுவின்பின்பு 52
தாயாயுந்தீருஞ் 58
தானானுந்தாளாளுந் 56

தி

திகழுநுணுக்கங் 226
திணைபான்மரபு 64
திரப்பியஞ்சாதி 178

து

துப்பாரொருங்கிய 237
துப்பார்பெயர்வேற் 13
துன்னுங்குறளடி 139

தூ

தூங்கேந்தடுக்கல் 170

தெ

தெரிவானரிது 173
தெற்றிவழக்கொடு 172
தெற்றுத்தொகையவ் 204

தே

தேரும்பொதுவே 211

தொ

தொகைநான்கிடமிட் 153

ந

நடவடுசெய்பண்ணு 48

நா

நாமங்களிற்பொருந் 31
நாமேவெழுத்துச்சொ xxxviii
நாற்குலப்பக்கமுக் 90
நான்கொடுமூன்றடி 131
நான்கொடுமூன்றொன்ப 7

நி

நிரனிறையாவது 227
நிலவுந்தரவுந் 121
நிலைபாழிகோளொடு 92
நிலையாமைவாழ்த்து 88
நின்றசொல்லீறும் 4
நின்றசொல்லீற்றுமெய்ம் 12
நின்றான்கிறானொடு 57

நெ

நெடிலடிநான்கவை 139

நே

நேர்முந்துறிற்பதி 146

ப

பட்டாங்குரைத்தல் 199
பண்புதரும்பல் 238
பத்தியங்கத்திய 107
பற்றொடுவீடே 26
பன்மூன்றதாமுட 8

பா

பாமுதனிற்பது 130
பாவும்விபாவனை 220

பு

புகட்சிபரவல் 92
புகழ்ச்சிபழிப்பு 191

பொ

பொற்றாமரையிந் 68

ம

மகனிவனுக்கிவ 41
மதத்திற்பொலியும் 63
மருவுநெடில்குறில் 168
மலையிருண்முன்பனி 68
மறங்களிதாது 254
மன்னியசீர்வட 47
மன்னுந்துமந்தம் 53

மா

மாறியிகழ்மொழி 236

மி

மிக்கவன்போதியின் xxxviii

மீ

மீனேகடல்பனி 68

மு

முதலொற்றிரட்டிக்கு 45
முந்தியவர்க்கங்க 44
முல்லைகுறிஞ்சிமருதத்தொடு பாலை 67
முல்லைகுறிஞ்சிமருதத்தொடு முது 66
முன்மொழிப்பண்பு 35
முன்மொழியவ்வியஞ்சேர் 36
முன்னிரண்டாவியு 103
முன்னிலைதன்மை 56

மூ

மூன்றடியொப்பன 134
மூன்றைந்தொடாறு 29
மூன்றொடுநான்கொன்ப 6

மெ

மெல்லிசையேந்த 169

மே

மேதகுநற்றொழில் 25
மேவுங்குறள்சிந் 143

மை

மையம்புதுவுகம் 43

யா

யாப்பையியம்பிடின் 240

வ

வண்ணகவொத்தாழிசைக் 114
வரைநின்றிழிந்தங்கொர் 25
வன்மைவந்தாற்பின்பு 9

வா

வாய்பாய்வீர்பீர்வீர்கள் 59
வானுமையம்புகை 48
வான்பானும்வாள்பாளும் 58

வி

வினைக்குறிப்போடு 61

வெ

வெட்சிகரந்தை 86
வெப்பந்தருமம் 213

வே

வேண்டியவீரடி 108
வேந்தன்சிறப்பு 89
வேற்றுமையும்மை 37
வேற்றுமையெட்டுந் 63

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின் | 40.00 |
| பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை | 45.00 |
| பெண்ணியப் படைப்பிலக்கியம் | 75.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே | 75.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை | 80.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |

---

**588 வீரசோழியம் 85.00**